# வியாழக்கிழமை

★

மூல ஆசிரியை:

ஜேன். மாக் இல்வெய்ன்

மொழிபெயர்ப்பு:

எம். எஸ். சிவஸ்வாமி

UNIVERSITY EXTENSION LIBRARY
18 OCT 1963
★ MADURAI ★

★

தமிழ்ச் சுடர் நிலையம்
2/28, அருணாசல ஆசாரித் தெரு.
திருவல்லிக்கேணி : : சென்னை - 5

முதற் பதிப்பு : 1957

விலை ரூ. 1-50

Tamil translation of "It Happens Every Thursday" by Jane S. Mc Ilvaine. Copyright 1951 by Jane S. Mc Ilvaine. Copyright 1950 by the Curtis Publishing Company. Abridged from the book and reproduced by permission of the author and the publisher.

அச்சிட்டோர்; காமன்வெல்த் அச்சகம், மயிலாப்பூர், சென்னை - 4

# முன்னுரை

இப்புத்தகத்தில் விவரித்துள்ளது ஒரு அமெரிக்கத் தம்பதிகளின் வாழ்க்கைச் சித்திரம். யுத்தத்தின்போது ஒருவரையொருவர் விட்டுப் பிரிந்திருந்தனர். ஆனாலும், அவர்களுக்கென்று தனியாக ஒரு வாழ்க்கைப் பாதையை வகுத்துக்கொண்டனர். மிகவும் கடுமையான வாழ்க்கை தான் ; ஆனல், இன்பம் நிறைந்தது. ஏவ்வாறெனில், இத் துறையில் அவர்கள் வெற்றி கண்டபோது, அவர்கள் வாழ்க்கையே உபயோக முள்ளதாக அமைந்த தென்பதை உணர்ந்தனர். மேலும், மனிதனுடைய தன்மை எப்படிப் பட்டது என்பதையும் உணர்ந்தனர்.

ஜேன் மாக் இல்வெயினும் ராபின்ஸன் மாக் இல்வெயி னும்—இதுதான் அத்தம்பதிகளின் பெயர்—இதைக்காட்டி லும் சுலபமான வாழ்க்கையைப் பின்பற்றியிருக்கலாம். அவர்கள் பிறந்த அந்த இன்பகரமான வீட்டிலிருந்து கொண்டே அதிகக் கஷ்டப்படாமல் தங்களிச்சைப்படி வாழ்க்கைத்துறையைத் தேர்ந்தெடுக்கும் வசதி யிருந்தது. ஆனல், அருகாமையி லிருந்த இரண்டாந்தர நகரத்தில் மிகவும் க்ஷீணதசை யடைந்திருந்த ஒரு வாரப் பத்திரிகையை வெற்றிகரமாக நடத்த அவர்கள் முடிவு செய்தார்கள். மிகவும் சிறிய நகரம்தான் அது. பெரும் பட்டணங்களில் முன்னணியிலுள்ள தினசரிப் பத்திரிகைகள் அச்சடிக்கப்படும் யந்திரங்களின் ஓசைகூட இந்த நகரத்தில் கேட்கும். அவ்வளவு அருகாமையி லிருந்தது. இந்தப் பணியில் அவர்கள் ஒருவகை திருப்தியைக் கண்டனர். எடுத்த காரியம் வெற்றிகரமாக நிறைவேறினல் ஏற்படும் திருப்தி அது. பணத்தினலும் புகழினலும் அந்தத் திருப்தியை அளவிட முடியாது. இந்தத் திருப்திக்காக இந்தத் தம்பதிகள் ஆயுள்

பூராவும் கஷ்டப்படும் வாழ்க்கைப் பாதையை மிக மகிழ்வுடன் ஏற்றனர்.

"ஒரு கிராமாந்திரப் பத்திரிகையை வாங்க முடிந்து, வாங்கியும்விட்டால், நான் இப்போது பார்த்துவரும் வேலையை உதறித் தள்ளப்போகிறேன்"—பத்திரிகையை வெளிக்கொணர்வதற்கு முன் ஏற்படும் கஷ்டங்களையும் ஏமாற்றங்களையும் கண்டு இம்மாதிரி எண்ணம் ஒவ்வொரு இரவும் ஆயிரந் தடவையாவது பத்திரிகைக் காரியாலயத்தில் கனவுபோல உண்டாகும். பத்திராதிபரின் அறையில் இவ்வெண்ணம் பீறிட்டெழும்; அச்சகத்திற்குப் பிரதிகள் தயாராகு மிடத்தில் இது நிரந்தரமாக நிலவும்; நிருபர்களின் அறைகளில் அப்போதைக்கப்போது உண்டாகும். ஆனால், மாக் இல்வெயினின் அனுபவத்தை உற்று நோக்கின், மேற்கூறிய கனவுகள் நனவாகவேண்டுமானால், மிகவும் அவசியமாகத் தேவைப்படுவது ஆசை மட்டுமல்ல; வாலிபமும், வாலிபப் பருவத்தில் காணப்படும் மன உறுதியும்தான் என்ற உண்மை விளங்கும்.

டௌனிங்டவுனி (Downingtown) லுள்ள 'ஆர்க்கைவ் (The Archive) என்ற வாரப் பத்திரிகையின் இந்தச் சரித்திரம் மிகவும் விநோதம். ராபின்ஸன் மாக் இல்வெயின் கைக்கு இந்தப் பத்திரிகை வந்தபோது, பணமாக ஒன்றும் இல்லாவிட்டாலும் எதிர்காலத்தில் பத்திரிகை மேன்மை யடைய அறிகுறிகள் பல உள்ளன என்ற நம்பிக்கை நிறைய இருந்தது. இதையே மூலதனமாகக் கொண்டு பத்திரிகையை வெற்றிகரமாக நடத்தவேண்டுமானால், துணிவுள்ள உள்ளமும், ஹாஸ்ய உணர்ச்சி இயற்கையிலேயே நிரம்பப்பெற்ற தன்மையும், தோல்விக்குமேல் தோல்வியுற்றாலும் அவற்றை துச்சமாக எண்ணும் சுபாவமும் படைத்த மனிதர்களால்தான் முடியும். மிகவும் துர்லபமாகவே காணப்படும் அப்படிப்பட்ட சில மனிதர்களின் சரித்திரங்களில் 'ஆர்க்கைவ்' பத்திரிகை ஆசிரியரின் சரித்திரமும் ஒன்று.

"நம்முள் பெரும்பாலோருக்கு உண்மை வாழ்க்கை என்பது நாம் சாதாரணமாகப் பின்பற்றும் வாழ்க்கை முறை அல்ல" என்று ஆஸ்கர் ஒயில்டு (Oscar wilde) என்னும் பிரபல ஆசிரியர் சொல்லியுள்ளது, பத்திரிகை யுலகில் ஈடுபட்டுள்ள பலருக்குப் பொருந்தும். ஆனுல், ஜேன் மாக் இல்வெயின் எழுதியுள்ள இந்தச் சரித்திரத்தைப் படித்தபின், அன்னுரின் வாக்கு சுவைமிக்கதெனினும், அவள் விஷயத்திலும் அவள் கணவன் விஷயத்திலும் உண்மையல்ல என்பது விளங்கும். இவர்கள் விரும்பியது என்னவென்பதை இவர்கள் நன்கு உணர்ந்தே இருந்தனர். அவர்கள் செய்த காரியத்தை உணர்ந்தே செய்தனர். அதே காரியத்தை மறுமுறை அவர்கள் செய்யவும் சித்தமாயிருந்தனர். இத்தொழிலே விட்டு வேறு தொழிலே அவர் மேற்கொள்ள விரும்பவுமில்லே. வாழ்க்கை என்னும் சுவை ததும்பும் கிண்ணம், இதைவிட வேருென்று இருக்க முடியாது.

கிராமாந்திரப் பத்திரிகை ஆசிரியரின் சரித்திரமாகையால், இப்புத்தகம் பத்திரிகை உலகத்தில் உலவும் தலே சிறந்த பல புத்தகங்களுடன் இருக்கவேண்டியதே. இக்காரணத்திஞல் மட்டுமல்லாது தொடர்ந்து தாக்கும் இடுக்கண்களிலிருந்து தொடர்ந்து வெற்றி கண்ட வீரர்களின் சரித்திரம் இது. படிப்போர் மனத்தே "எப்படியும் ஒருநாள் இவர்களின் வெற்றி பூரணமாகக் கைகூடும்" என்ற உணர்ச்சியை இப்புத்தகம் உண்டாக்கும்.

மூன்ருவது அத்தியாயத்தின் தொடக்கத்தில் ஜேன் மாக் இல்வெயின் எழுதுவதாவது: "கிராமாந்திரப் பத்திரிகை அதிபருக்கு அவசியம் இருக்கவேண்டிய அம்சங்கள் என்னவென்ருல், மற்றவர்களுடைய வாழ்க்கையில் உண்மையான அக்கறை; ஒவ்வொருவரிடத்திலும் மனிதத் தன்மையுடன் கூடிய அன்பும் சகிப்புத் தன்மையும்; பொருமை கலவாத உற்று நோக்கும் பண்பு; குறுகிய நோக்குடன்

இராமல் அனுதாபத்தோடு கவனிக்கும் தன்மை முதலியன"—இக்குணாதிசயங்கள் யாவும் இச்சிறு புத்தகத்தில் நன்கு புலப்படுகின்றன.

'மானிட இன்பியல் நாடக'த்தில் பாத்திரங்கள் எல்லாம் பரபரப்புள்ள உலகத் தலைநகரங்களிலிருந்து எடுக்கப்படுவதுபோல் உறங்குவதுபோன்ற நிலையிலுள்ள கிராமங்களிலிருந்தும் பொறுக்கப்பட்டு, உணர்ச்சியுடன் நாடகமானது அதற்கென அமைக்கப்பட்ட அரங்கில் நடத்தப்பட்டு, அப்படியே உலக அரங்கிலும் இயற்கையாகவே நடத்தப்படுகிறது. இது பிரபல நாவலாசிரியர்கள் எடுத்துக்காட்டியுள்ள ஒரு உண்மை. இந்த உண்மைக்கு ஒரு இன்றியமையாத உதாரணமாக அமைந்துள்ளது இப்புத்தகம். இதை எழுதியுள்ள மாதிரியும், சம்பவங்களை விவரிக்கும் திறனும் 'ஆர்க்கைவ்' என்னும் கிராமாந்திரப் பத்திரிகையில் மட்டும் இடம் பெற்றால் போதாது; உலக இலக்கிய நூல்களில் ஒன்றாக இடம் பெற்றுப் பலர் அனுபவிக்க வேண்டும். இம்மாதிரி புத்தகம் உலக இலக்கியத்திற்கே ஒரு அணிகலன். இதற்காக அது காத்துக்கொண்டிருந்தது என்றுகூடச் சொல்லலாம்.

வாஷிங்டன், டி. சி.,
ஜூன் 1951

ஆர்தர் நாக்
(ARTHUR KNOCK)

# பதிப்புரை

தம்பதிகளால் குடும்பம்தான் நடத்த முடியும் என்று நினைக்கவேண்டாம். ஆணும் பெண்ணும் சேர்ந்து பத்திரிகையும் நடத்தலாம். அதற்கொரு சான்று இந்நூல்.

இந்த நூலை எழுதிய ஆசிரியை ஒரு பத்திரிகாசிரியரின் மனைவி. வாழ்க்கைக்கு மட்டுமின்றி பத்திரிகைக்குக்கூடத் துணைவியாக நிற்பவள். வியாழக்கிழமைக்கு வியாழக்கிழமை பத்திரிகை வெளிவருவதற்குள்தான் எத்துணை சங்கடங்கள்!

இரண்டணு (மன்னிக்கவும், பதின்மூன்று புதுக்காசுகள்) கொடுத்துப் பத்திரிகை வாங்குவோம். "ஹூம்! இதில் என்ன இருக்கிறதாம்!" என்று ஒருமுறை படித்துவிட்டு வீசி எறிந்துவிடுகிறோமே...பத்திரிகை நடத்துவ தென்பது அவ்வளவு இலேசான காரியமாகவா இருக்கிறது? இல்லை.

பத்திரிகாசிரியர்கள்—அதுவும் தனி வழியில் சென்று புதுமையாக ஏதேனும் செய்யவேண்டு மென்று நினைக்கிறவர்கள்—மிகவும் கஷ்டப்படுவார்கள். இந்த உண்மை தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல; அமெரிக்கா போன்ற குபேரநாட்டுக்கும் பொருந்தும் உண்மைதான். காரணம் என்ன தெரியுமா? "ஜனங்களில் பத்தில் ஒன்பது பேரிடத்தில் உணர்ச்சி வேகம்தான் வெற்றி பெறுகிறதே தவிர புத்தி சக்தி அல்ல என்பதை நாங்கள் கண்டோம்" என்று எழுதுகிருளே இந்த ஆசிரியை, அதுதான்.

இந்தக் கதையில் காகிதமும், கருப்பு மசியும், அச்சு எழுத்தும், இயந்திரமும் கதாபாத்திரங்களாகிவிட்டன.

இந்நூலுக்கு முன்னுரை எழுதியவர் கூறுவதைப்போல் "இத்தகைய நூலுக்கென இலக்கியம் காத்துக்கிடந்ததில் தவறில்லை" என்றே நமக்கும் தோன்றுகிறது.

நாவல் எழுத விஷயமே கிடைக்கவில்லை என்று தலையைப் பிய்த்துக்கொள்ளும் எழுத்தாளர்களுக்கும், காதலும் அதைத் தொடர்ந்த நிகழ்ச்சிகளும் தவிர படிக்க வேறு ஒன்றுமே கிடைக்காதா என்று வருந்தும் வாசகர்களுக்கும் இது நல்ல விருந்து.

படித்துப் பாருங்கள்.

**ஏ. கே. கோபாலன்**

UNIVERSITY EXTENSION LIBRARY
★ MADURAI ★

இப்போதுதான் எனக்குத் தெரிகிறது. மீன் பிடிப்ப தில் நான் ஈடுபடாதிருந்தால் ராபின்ஸன் மாக்இல் வெயினை மணந்தே யிருக்கமாட்டேன்; கிராமாந் திரப் பத்திரிகைக்கு ஆசிரியையாகவும் இருக்கமாட் டேன். இந்தப் புத்தகத்தையும் எழுதி யிருக்க மாட்டேன்.

மீன் பிடிப்ப தென்றால் எனக்குப் பிடிக்காது. நண்டு பச்சடியைப் போல அது என் உணர்ச்சிகளைச் சுருக்கும். உண்மையில் 1938-ம வருஷம் ஜுன் மாதம் அன்றிரவு நான் பாப்(Bob)பைச் சந்தித்தபோது மீன் பிடிக்கும் எண்ணமும் இல்லை; கல்யாணம் செய்து கொள்ளும் எண்ணமும் இல்லை. பத்திரிகைகளைப் பற்றியோ என்றால், சொல்ல வேண்டியதில்லை. புட்டி யில் பால் வருவதுபோல் தினந்தோறும் என் வாசற்படி யில் வந்து விழும் ஒரு சாமான் அது என்பது மட்டுமே தெரியும்.

எனக்கு அப்போது வயது பதினெட்டு. விவாகம் என்பது ஒரு நல்ல ஸ்தாபனம். அதில்லாமல் ஒரு குடும்பமும இருக்கக்கூடாது என்றுதான் நான் எண்ணி யிருந்தேன். ஆனாலும், 'கணவன்' என்றால் 'டானிக்' வைத்திருப்பதுபோல் ஜாக்கிரதையாகப் புட்டியில் அடைத்துக் கைக்கெட்டக்கூடிய அலமாரி யில் வைத்துப், புட்டிக்கு வெளியில் மருந்துகளுக்கு எழுதுவதுபோல் 'உபயோகத்துக்கு முன் புட்டியைக் குலுக்கவும்' என்று எழுதி ஒட்டி வைத்துக்கொள்ள வேண்டுமென்று நான் நினைத்திருந்தேன். ஆனால், இது பாப்பை நான் சந்திக்கும் வரையில்தான்.

மேலும், பல இடங்களுக்குச் செல்லவேண்டும்; பல. காரியங்களைச் செய்யவேண்டும் என்ற ஆசையும் நிறைய இருந்தது. சமையலறைக்கும் குடும்பத்துக்கும் இடையில அகப்பட்டுக்கொள்ளுமுன்தானே இந்த ஆசையைப் பூர்த்தி செய்துகொள்ள வேண்டும்!

விதி என்று ஒன்று உண்டல்லவா? இம்மாதிரி நான் எண்ணுவதைக் கண்டு அது எள்ளி நகையாடி இருக்கவேண்டும்!

வர்ஜீனியா பிரதேசத்தின் மிட்டல்பார்க்கிலுள்ள என்னுடைய ஆப்த சிநேகிதனின் வீட்டிற்குள் வந்துகொண்டிருந்த என்னைவிடச் சற்றே வயதான ஒரு மனிதனைக் கண்டேன்.

மெலிந்த உருவம்; உயரமான தோற்றம்; ஒட்டின கன்னங்கள். அவரைக் கண்டதும், உணர்ச்சி வேகமும் விஷய சம்பத்தும் ஒருங்கே அமைந்த மனிதர் இவர் என்ற எண்ணம் உண்டாயிற்று.

மாலை நேரத்திற்குள் நான் பல இடங்களுக்குப் போகவேண்டுமென்ற எண்ணங்களையெல்லாம் மறந்துவிட்டேன். ஒரே ஒரு விஷயம்தான் என் மனத்தில் திரும்பத் திருமப வட்டமிட்டது. பாப்பைக் கல்யாணம் செய்துகொள்ள வேண்டும். அது ஒன்றுதான் நான் செய்யவேண்டிய காரியம்.

ஆனால், அவரை என் எண்ணத்துக்கு இணங்க வைப்பதற்கு நான் மிகவும் வேகமாகச் சிந்தனை செய்ததல்லாமல், மன உறுதியும் தேவையாயிருந்தது. ஒரு ரசமான செய்தியைச் சேகரிப்பதற்குக்கூட இவ்வளவு உறுதியும் சிந்தனையும் வேண்டியதில்லை. அவருடைய 27-வது வயதில் அரசாங்க தேசீயக் கமிட்டியின் உதவித் தலைவராக வாஷிங்டனில் அவர் உத்தியோகம் வகித்து வந்தார். தம்முடைய கல்யாணத்தில் அவருக்கு

சிந்தனையே இருக்காது. பனிக்கட்டிப் பிரதேசத்தில் வசிக்கும் 'எஸ்கிமோ'வுக்கு அந்தப்புரம் அமைத்துக் கொள்வதில் என்ன விருப்ப மிருக்கும்? அப்படித்தான் இவருக்கும். மேலும், அவருக்குக் கொடுக்க எங்கள் ஊரில் என்ன இருக்கிறது, குதிரைகளைத் தவிர? குதிரைகள் அவருக்குப் பிடிக்காது. ஆகவே, என் எண்ணம் நிறைவேற எப்படியாவது நான், என் கிராமத்தை விட்டு வாஷிங்டன் போய்ச் சேர வகை செய்துகொண்டால்தான் உண்டு.

நான் எபபோதாவது நகரத்திற்குச் சென்றதுண்டா என்று அவர் கேட்டபோது, "ஒவ்வொரு வியாழக்கிழமையும் எனக்குத் தேவையான மீனை வாங்கிவரப் போவேன்" என்று விடை கூறினேன்.

"உன்னுடைய...என்ன?" என்று பாப் புரியாமல் மேல்மூச்சுடன் கேட்டார்.

"என்னுடைய மீன்" என்று கூறிவிட்டு, மேலும் விவரிக்க வேகமாகச் சிந்தனை செய்தேன்: "கேளுங்கள். நாங்கள் செஸபீக் (Chesapeake) கடலுக்கு நாற்பது மைல் தூரத்திலிருந்தாலும், அன்றுடம் பிடித்த மீன் புதியதாக இக் கிராமத்தில் கிடைப்பதில்லை. ஆகையால், வாரத்திற்கு ஒருமுறை என்னுடைய அண்டை வீட்டுக்காரர்களுக்குத் தேவையான மீன் உணவுக்கு 'ஆர்டர்' வாங்கிக்கொண்டு, என் மோட்டாரில் வாஷிங்டன் சென்று வண்டி நிறைய மீன் வாங்கிக் கொண்டு, அவரவர்களுக்கு வீட்டில் கொண்டுபோய்க் கொடுக்கிறேன்."

"அப்படியா?" என்றுர் பாப். "மீன் விற்பவள் நாகரிக உடை யணிந்து பச்சை அங்கியுடன் காட்சியளிப்பதை இதுவரையில் நான் கண்டதில்லை. அடுத்த வியாழக்கிழமை கடற்கரையில் என்னுடன் பகல்

உணவு சாப்பிடுவதற்கு உனக்கு ஏதாவது தடை உண்டா?''

இப்படித்தான் எங்கள் பேச்சு ஆரம்பித்தது. மறு நாள் டெலிபோன் மூலம் பேசிப் பேசி 28 ஆர்டர்கள் வாங்கிவிட்டேன். பகல் உணவு சாப்பிடவிருந்த உணவுச் சாலைக்கு அருகிலேயே ஒரு கடையில் எனக்குத் தேவையான மீன் பூராவும் மொத்த விலைக்கே சரசமாக வாங்கிக்கொள்ள முடிந்தது.

எங்களுடைய அன்றைய முதல் பகல் போஜனத்தின்போது மீன் உணவு என்றால் பாப்புக்கு மிகவும பிரியம் என்பதை உணர்ந்தேன். இவ்வாறு முப்பத்தெட்டு வியாழக்கிழமைகள் கடற்கரை ஓட்டலில் 'மாக்கரெலும்' கீரையும் விடாமல் சாப்பிட்ட பிறகு தான், ஒருவனுடைய வருமானத்திலேயே இரண்டு பேர் அதிகச் செலவில்லாமல் இருக்க முடியும் என்ற தீர்மானத்துக்குப் பாப் வந்தார்.

அந்தக் கட்டத்திலிருந்து மேல் நடவடிக்கைகளை அவரே கவனிக்கலானார். ''நாம் கல்யாணம் செய்து கொண்டதும் இந்தக் குதிரை சமாச்சாரம் உதவாது. நம்முடைய தேன்மதிக்கு ஒரு படகில் உல்லாசமாகப் பிரயாணம் செய்யவேண்டும்'' என்றார்.

கடற் பிரயாணம் என்றதும் என் நினைவு 'நார் மண்டி' கப்பலைத்தான் நோக்கிச் சென்றது. எப்பொழுதோ என் சிநேகிதி ஒருவளை ஐரோப்பாவுக்கு வழியனுப்ப இந்தக் கப்பல் தளத்தில் நின்று அதன் அழகைக் காண நேர்ந்தது. அதற்குப் பின் அவசியம் நேராததால் வேறு சிறியகப்பல் எதையுமே நான் கண்டதில்லை. எனவே, கப்பல் பிரயாணம் என்றதும் தளத்தில் நின்று சூரிய வெளிச்சத்தில் குளிர் காய்ந்து கொண்டு அசைந்தாடி நுரை நிறைந்த கடலில் அலை

யின் மீது ஒய்யாரமாகப் போவதாயும், இரவில் நீல வானில் நட்சத்திரக் கூட்டங்கள் மின்ன தளத்திலே ஆனந்தமாக மிதப்பதாயும் நான் எண்ணலானேன். பாப்பு மட்டும், "நம்முடைய தேன்மதி உல்லாசமாகக் கழிந்துவிட்டால், நமது பிற்கால வாழ்க்கையில் எந்தச் சம்பவமும் கவலேயே கொடுக்காது" என்று சொன்னார். அதன் உள் அர்த்தத்தை நான் சற்று புரிந்துகொண் டிருக்கவேண்டும்.

பின்னால்தான் தெரிந்தது, அவர் சொன்னது அவ்வளவும் சரியே. இப்போதெல்லாம் குழந்தைகள் நோய்வாய்ப்பட்டாலும், அச்சகம் செயற்புரிய மறுத்தாலும், விளம்பரதாரர்கள் தொல்லே கொடுத்தாலும் நான் எங்களுடைய தேன்மதி பிரயாணத்தைத்தான் நினைத்துக்கொள்ளுவேன். உடனே வாழ்க்கையில் எல்லாம் சரியாகப் போய்விடும்.

1939-ம் வருஷம் ஜூன் மாதம் மிட்டில்பர்க்கில் நாங்கள் விவாகம் செய்துகொண்டோம். விவாக விருந்தில் முக்கிய உணவு நண்டு சம்பந்தப்பட்டது. பாப்பு ஏனோ திகிலடைந்தவர்போல் அவர் கால்கள் நடுக்கமுற்றன. விவாகச் சடங்கின்போது என் கால்களில் அவர் உராய்ந்தபோது இதைக் கவனித்தேன். பரபரப்பில் மோட்டாரின் சாவியைக்கூட எங்கோ விட்டுவிட்டார். ஒருவிதமாக எல்லாம் முடிந்து வாஷிங்டனே அடைந்தபோது, நாங்கள் அமர்த்திக் கொண்ட ஓட்டல் முன்னால், என் கணவர் 1937-ல் தென் ஆப்பிரிக்காவில் சந்தித்த ஒரு நண்பரைக் கண்டோம். நாங்கள் மூவரும் ஓட்டலில் பானம் அருந்திய பிறகு கேன்யா பிரதேசத்தைப்பற்றிப் பல விவரங்களேப் புது நண்பரிடமிருந்து நான் தெரிந்துகொண்டேன்.

பிறகு நாங்கள் மாஸாஸூசெட்ஸ் பிரதேசத்தி லுள்ள மான்செஸ்டர் கடற்கரையை அடைந்தபோது

தான், இனி நாங்கள் தனிமையாக இருக்கலாம் என்ற எண்ணம் வந்தது. முப்பத்தேழு அடி நீளமுள்ள ஒரு பாய்மரப் படகை ஒரு நண்பர் விவாகப் பரிசாக எங்களுக்கு வழங்கியிருந்தார். எங்கள் பிரயாணம் உடனே தொடங்கிற்று: இரவல் வாங்கியிருந்த நீல ட்வீல் கவுன் அணிந்து இரண்டு நாள் படகுத் தளத்தைப் பெருக்குவதும், பித்தளைப் பிடிகளுக்குப் பாலிஷ் போட்டுத் துலக்குவதுமாகக் காலத்தைப் போக்கினேன். என் சம்பந்தப்பட்டவரையில் படகைச் சுத்தம் செய்வதுதான் வேலை. சிருங்காரம் என்பதற்கு இடமே யில்லை. எங்கள் சம்பாஷணைகள்கூடச் சுருக்கமாக "அந்த வாளியை இப்படிக் கொடு", "கீழே போய் ஈரம் துடைக்க ஒற்றுடையை எடுத்துக்கொண்டு வா" என்றே அமைந்தன. நான் வரித்த கணவன் ஈவிரக்கமற்ற ஒரு கொடுங்கோலன் என்பதை அப்போதுதான் உணர்ந்தேன். குதிரைப் பந்தய இடங்களில்கூட கேட்காத மட்ட சொற்கள் பலவற்றை முதல் தடவையாக அப்போது தான் தெரிந்துகொண்டேன்.

ஒருவாறுகப் பிரயாணம் தொடங்கியதும் "அப்பாடா" என்று பெருமூச்சு விட்டேன். அதற்கப்புறம் நான் பெருமூச்சு விடுவதற்கே நேரமில்லை. ஏன், மூச்சு விடவே நேரமிருப்பதில்லை! காலை ஆறு மணியிலிருந்து இரவு பத்து மணி வரையில் நாங்கள் பிரயாணம் செய்தோம். முதல்நாள் எதிர்காற்று, மழை, மூடுபனி! என்னுடைய 'ஷார்க்ஸ்கின்' அரை நிஜார் எல்லாம் பூஞ்சகாளம்போல் பூத்துப் போயிற்று. இரவு அணி பட்டாடைக் குஞ்சங்களெல்லாம் ஒன்றுசேர்ந்து சாணிச் சுருணை நிலைக்கு வந்துவிட்டது. அடுத்த இரண்டு வாரங்களுக்கு நான் பாப்பின் மாற்று காக்கி நிஜாரை யணிந்து, அவருடைய கம்பளிச் சட்டையில் ஒன்றை மேலுக் கணிந்து காலம் கடத்தவேண்டியிருந்தது. அவருடைய தாத்தா அணிந்திருந்த கம்

பளி உள் நிஜாரை விரித்து, இரவு படுத்துக்கொண் டேன்.

ப்ளிமத் பாறைக்கு அருகாமையில் நாங்கள் சற்று ஓய்வெடுத்துக்கொண்டோம். போர்ச்சுகீஸிய செம் படவர்கள் எங்களை விருந்துக்கு அழைத்துச் சென்று, உணவுக்குப் பின் ஒரு நடன விருந்து மளித்தார்கள். ஜூடித் முனை (Judith Point) என்னும் இடத்தில் எங்கள் படகு ஒரு திடலில் தரைதட்டி நானகு மணி நேரம் தவித்தபின் ஒரு பெரும் அலை மோதி படகை விடுவித்தது.

நித்திரையே இல்லாது கழிந்த இரண்டு வாரத் துக்குப் பின், நாங்கள் பிரயாணத்தை முடித்துக் கொண்டு மெதுவாக மான்செஸ்டர் கரையை அடைந் தோம். பாப்பு முகமெல்லாம் தாடி வளர்ந்திருநதது. என் உடல் பூராவும் உப்பு பூத்திருந்தது. என் நகக் கணுக்களி லெல்லாம் வெடிப்பு கண்டிருந்தது. என் னுடைய விலையுயர்ந்த கவுன் முழுதும் பாழடைந்து விட்டது. என் முகம்கூட காற்றி லடிபட்டுச் சிரிப்ப தற்கும் எனக்கு வெறுப்பாக இருந்தது. எட்டு தடவை என் தலை தளத்தின் மேல் பாகத்தில் அலை வேகத்தில் மோதி காயமடைந்திருந்தது. நான்கு விரல்களில் கட்டு கட்டிப் பார்ப்பதற்கு வெறுப்பை உண்டாக்கின.

"நாம் இன்னமும் ஒருவரோடொருவர் பேசிக் கொள்ளும் நிலையிலேயே இருக்கிறோம், அல்லவா?" என்றார் பாப், சற்று சிரித்துக்கொண்டே.

* * *

வாஷிங்டன் ஓட்டலில் எங்களுடைய இரண்டு அறை விடுதியைக் கண்டதும் நாங்கள் க்வீன் மேரி (Queen Mary) உல்லாசக் கப்பலில் இருப்பதாகவே எண்ணினோம். முப்பத்தேழு அடி பாய்மரப் படகி

லிருந்து விடுபட்டு இப்போது ஓட்டலில் தங்குவது அவ்வளவு ஆறுதலளித்தது. எப்படி யிருந்தாலும் ஓட்டல் இப்படியும் அப்படியும் அசையாதல்லவா? தோணி கிறுகிறுப்புக் கென்று நான் வைத்திருந்த மாத்திரைகளை வீசி எறிந்தேன். வீட்டு எஜமானியாகச் செயல் புரியத் தயாரானேன். ஓட்டல் விடுதியில் ஒரே ஒரு கஷ்டம்தான் இருந்தது. குப்பைக் கூளங்களைப் படகிலிருந்து எறிந்துவிடுவதுபோல், ஜன்னல் வெளியே இங்கே எறிய முடியவில்லை. ஆனால், என் வாழ்க்கை இவ்வளவு சலனமற்று நிம்மதியாக அதிக நாள் நீடிக்கவில்லை.

அரசியல் வானத்தில் யுத்த மேகங்கள் தோன்றின. சாப்பாட்டுச் சமயங்களி லெல்லாம் யுத்தத்தைப் பற்றி விவாதங்கள் நடைபெறும். வெளியே சென்றால் அங்கும் காரசாரமாக விவாதம் தொடங்கும். ஜனங்கள் எல்லோரும் யுத்தத்தில் ஈடுபடவேண்டும் என்றோ அல்லது தனித்து நிற்கவேண்டு மென்றோ இரு பிளவாகக் காணப்பட்டனர். வாஷிங்டன் நகரம் முழுவதிலும் இவ்விரு சாராரும் ஒன்றுபட்டதே இல்லை.

1941-ம் ஆண்டு வசந்த காலம். ஒரு இரவு பாப் மிகவும் களைப்படைந்து நேரங் கழித்து வீட்டை அடைந்தார். இரவு போஜனத்துக்குப் பின், "கப்பற் படைக்கு நான் சேருவதாக ஒப்புக்கொண்டிருக்கிறேன்" என்று விஷயத்தைச் சொன்னார்.

"ஏன்?" என்று வினவினேன் நான். முட்டாள் தனமான கேள்விதான்.

"ஏனென்றால் கூடியசீக்கிரத்தில் நம் நாடு யுத்தத்தில் ஈடுபடுவது நிச்சயம். அப்படியிருக்க, காலம் கடந்து படையில் சேருவதைக்காட்டிலும் முன்னதாகவே சேர்ந்துவிடுவது நல்லது" என்று பாப் விளக்கினார்.

முதல் இரண்டு முறை டாக்டர் பரிசோதனையில் பாப் நிராகரிக்கப்பட்டபோது அவர் படையில் சேர மாட்டார் என்றே நான் எண்ணியிருந்தேன். முட்டாள் தனமானதுதான் என் எண்ணம் என்று பின்பு தெரிந்தது. இரண்டு வருஷங்களாகியும் நான் இன்னமும் என் கணவரைப் புரிந்துகொள்ளவில்லை.

அவருடைய வாழ்க்கையிலேயே முதல் தடவையாக இப்போதுதான் தம் செல்வாக்கு பூராவையும் உபயோகித்து, வேண்டிய சிபாரிசுகளைப் பெற்றார். பொதுநலச் சேவையில் ஈடுபட்டுத் தமக்கு அறிமுகமான எல்லோரையும் விடாமல் பேட்டி கண்டு தம் நோக்கத்தைப் பூர்த்தி செய்துகொள்ள முயன்றார். "எதற்காக நீ இவ்வளவு சிரமம் எடுத்துக்கொள்ளவேண்டும், தேவையேயில்லாமலிருக்கும்போது? உன் உடலமைப்புப்படி, இராணுவப் பிரிவில் நீதான் நான்காம் தரத்திலும் F வகுப்பைச் சேர்ந்தவனாயிற்றே! நீ எவ்வளவு அதிர்ஷ்டசாலி என்பதை நீ உணரவில்லையா?" என்று எல்லோரும் பாப்பை ஒருமுகமாகக் கேட்டனர்.

ஆனால், கடைசியில் கடற்படை வேவு பார்க்கும் இலாகாவில் தமக்குத் தெரிந்த ஒருவர் மூலம், அவரைப் போன்ற ஒருவர் தேவைப்படுவதாகத் தெரியவந்தது. ஆப்பிரிக்க பாஷையில் தமக்குள்ள தேர்ச்சியினால் மத்தியதரைக்கடல் பகுதியில் இவர் உபயோகப்படுவார் என்று தெரிந்தது.

சந்தோஷ மிகுதியில் சீட்டி யடித்துக்கொண்டே பாப் வீட்டை யடைந்து, தம்முடைய உடைகளைத் தூசு தட்ட ஆரம்பித்தார். டாக்டர் பரீட்சை என்னவோ இன்னும் நடக்கவில்லை. பாப் பரீட்சைக்காகச் சென்ற மூன்றாவது டாக்டர், பாப்பின் கால் நரம்பு ஒன்று படித்துக்கொண் டிருந்தபோது ஒரு மோட்டார் சைக்கிள் விபத்தில் அறுபட்டுப்போனதைக்

கவனிக்கவில்லை. டாக்டர் பரீக்ஷையில் தேறிவிட்டார். படையில் ஜூனியர் பகுதியில் 'லெப்டினண்ட்' (Lieutenant)டாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, உத்தரவும் வழங்கப்பட்டது. ஆனுல், எதிர்பார்த்தபடி ஆப்பிரிக்காவுக்கு அனுப்பப்படவில்லை; பதிலாக, பனுமாவுக்கு அனுப்பப்பட்டார்.

நான் தற்காலத்துக்கு வர்ஜீனியா (Virginia) பிரதேசத்திற்குப் போனேன். ஜனவரி மாதத்தில் என்னுடைய முதல் பிரசவம் எதிர்பார்க்கப்பட்டது. எனவே, நான் அதுவரையில் இங்கேயே தங்கி, பின்பு பாப்புடன் சேர்ந்துகொள்ளுவது என்று தீர்மானித்திருந்தேன். ஆனுல், 'பேர்ல் ஹார்பர்' (Pearl Aarbour) சிதறியபோது அத்துடன் என் தீர்மானமும் சிதறியது. வாஷிங்டனில் 1942 ஜனவரி மாதம் 11-ந் தேதி ஸ்டீவ் பிறந்ததும், பாப்பை அடைவது என்பது முடியாமற் போய்விட்டது. ஆதலால், அடுத்த ஜூன் மாதம் விடுமுறையில் பாப் ஊருக்கு வரும்வரையில் அங்கேயே தங்கவேண்டி யிருந்தது. அவர் குறித்தபடி வந்தார். தம்முடைய குழந்தையை அன்புடன் தலையில் தட்டிக் கொடுத்தார். "எல்லோருடைய குழந்தைகளைப் போலத்தான் இவனும் காணப்படுகிருன். இவன் மாறுபட்டிருப்பான் எனறு எண்ணியிருந்தேன்'' என்ருர் பாப். சற்று விசனம் கலந்திருந்தது அவர் வார்த்தைகளில்.

பனுமா பிரதேசத்தில் பாப் இருந்த பத்து மாத காலம் பத்து வருஷங்கள் போலத் தோன்றின. யுத்தம் துவக்கப்பட்டு நன்ருக நடந்துகொண் டிருந்தது. பாதுகாப்பு, ஒழுங்கு முதலியவை திடீரென்று மக்களின் வாழ்க்கையிலிருந்து மறைந்தன. எங்கும் பயமும் பீதியும், எதிர்காலம் எப்படி இருக்குமோ என்ற கவலையும் நிரம்பி யிருந்தன.

ஒரே தவறை இரு முறை செய்வதற்கு நான் சித்த மாக இல்லை. எவ்வளவு நாள் கப்பற் படை இலாகா அனுமதிக்குமோ, அவ்வளவு காலம் பாப்புடன் இருந்து விடுவது என்று நான் திட்டமிட்டிருந்தேன். ஆனால், தாம் சாமர்த்தியமாக வேவு பார்க்கும் இலாகாவி லிருந்து விலகிக்கொண்டு கப்பற் படையிலேயே நேரடி யாகச் சேர்ந்துவிட்டதாயும், அதற்கென்று ஏற்பட்ட கீவேஸ்ட் (Keywest) கடற்படைக் கல்லூரியில் சில காலமும், மியாமி (Miami) என்னும் இடத்திலுள்ள நீர் மூழ்கிப் பயிற்சி நிலையத்தில் சில காலமும் பயிற்சி யடைந்து, பிறகு சமுத்திரப் படையுடன் கலந்து கொள்ளவேண்டுமென்றும் பாப் விவரமாகத் தெரி வித்ததும், நானும் குழந்தை ஸ்டீவுடன் அவருடன் தெற்கு நோக்கிச் செல்லப்போவதாகக் கூறினேன்.

பலர் விவாதிக்கக்கூடும், பெண்கள் வீட்டிலேயே தங்கவேண்டும்; கணவன்மாருடன் அவர்கள் போகும் இடத்திற்கெல்லாம் சென்று, அவர்களுக்கு மிகவும் அவசியமான இட வசதியை இவர்களும் பகிர்ந்து நெருக்கடியை உண்டாக்கக்கூடா தென்று. இருந்தாலும், யுத்த காலங்களில் குடும்பப் பிணைப்புகள் அறுந்துவிடும் என்ற நிலை ஏற்பட்டிருப்பதால், அவை களைப் பாதுகாத்துக்கொள்ளச் சாத்தியமானபோதெல் லாம் கணவனுடன் கூடியிருப்பது மிகவும் அவசியம் என்றே எனக்குத் தோன்றியது.

பின்பு ஓர் இரவு ஒரு கப்பலுக்குத் தலைமை தாங்கிச் செல்லுமாறு பாப்புக்கு உத்தரவு வந்தது. மியாமிலிருந்து அவர் விமான மூலம் வேறு இடத் துக்கு அழைத்துச் செல்லப்பட்டார். ஸ்டீவும் நானும் எங்களுடைய பழைய மோட்டார்க் கார் வெண்டலில் (Vendell) ஏறிக்கொண்டு வர்ஜீனியாவை நோக்கிப் புறப்பட்டோம்.

யுத்தம் முன்னேறிக்கொண்டிருந்த வருஷங்களில் காலமே சலனமற்று நிற்பதாகத் தோன்றியது. வருஷங்கள் தங்களுக்குள்ள தனித் தன்மையையே இழந்து விட்டது போலும்! இவ்வளவு உயிர்கள் சேதமுற்றன; இவ்வளவு சண்டைகள் நடந்தன; இவ்வளவு கப்பல்கள் மூழ்கின என்று இம்மாதிரி கணக்கின் மூலம்தான் காலத்தின் போக்கை அளந்துகொள்ள முடிந்தது. 'க்வாடேல் கேனல்' என்னும் பிரதேசத்திலிருந்து பாப் எனக்கு ஒரு கடிதம் எழுதினார். யுத்தம் முடிந்ததும் தாம் ஒரு கிராமாந்திரப் பத்திரிகை வாங்க விரும்புவதாயும், அதைப்பற்றி என்னுடைய அபிப்பிராயம் என்ன என்றும் அவர் கேட்டிருந்தார். வாழ்க்கைப் பாதையில் எதிர்பாராத திருப்பங்கள் எவ்வாறு உண்டாகிற தென்பதையும், எப்படி அதி விரைவில் முயற்சி அதிகமில்லாமல்—பிரயாசையு மின்றி திருப்பங்களில் திரும்பிப் புதிய முயற்சிகளில் ஜனங்கள் ஈடுபடுகிறார்கள் என்பதும் இப்போது எனக்கு விளங்கிற்று. நான் உடனே அவருக்குப் பதில் எழுதினேன். சிந்தனை அதிகம் செய்யாமலே அவருடைய யோசனை மிகவும் நல்லது என்று தயங்காமல் எழுதினேன். நாங்கள் மாறிமாறி அச்சகத்திற்குப் பிரதிகளைச் சளைக்காமல் எழுதித் தள்ளிக்கொண்டே யிருப்பதாயும், சிறந்த இலக்கியப் பரிசாகிய புலிட்ஸர் (Pulitzer) பரிசைப் பக்கங்கள் கணக்கில் நாங்கள் பெறுவதாகவும் நான் எண்ணி யிருக்கவேண்டும். பத்திரிகை வாங்கப் போதிய பணம் இருந்தாலும், எங்களில் ஒருவருக்காவது பத்திரிகையைப் பற்றி ஒன்றுமே தெரியா தென்பதைப்பற்றி நான் அந்தச் சமயம் யோசிக்கவே யில்லை.

ஐந்து வருஷங்கள் இடைவிடாமல் கடலில் அதிகாரப் பதவி வகித்துப் பின் யுத்த நிறுத்தமானதும் படையிலிருந்து விலகினபோது வாழ்க்கையில் இனிமேல் நாங்கள் ஒருவருக்கும் கடமைப்பட்டிருக்கவில்லை

என்ற ஒரு விஷயம் தெளிவாக விளங்கியது. எங்கள் ஜீவிய பாதை அமெரிக்க அரசாங்கத்தின் பராமரிப்பில் இனிமேல் இல்லை என்பதும் தெரிந்தது. நாங்கள் எங்கு வேண்டுமானாலும் செல்லலாம்; என்ன வேண்டுமானாலும் செய்யலாம். வெளித் தோற்றத்தில் எங்களுடைய உலகம் அதிகமாக மாறுதலடையாவிட்டாலும், எந்த விஷயமுமே முன்னிருந்தமாதிரி இப்போதில்லை. இதை நாங்கள் இருவரும் நன்கு உணர்ந்திருந்தோம். யுத்த காலத்தில் எங்கள் வாழ்க்கை—என்னுடையதும் என் கணவருடையதும் ஒன்றுக்கொன்று சம்பந்தமற்றுத் தனித்திருந்தது. அவை இப்போது எங்கள் வசம் திரும்ப வந்துவிட்டது. இனி இதை ஒன்றாக இணைத்துக் குடும்ப ஐக்கிய வாழ்க்கையாக ஆக்கவேண்டும். தனித்திருந்த காலத்தில் நாங்கள் கற்றுக்கொண்ட ஒரு விஷயம் என்னவென்றால், நாங்கள் இருவரும் ஒன்றாகவே இருந்து, ஒன்றாகவே உழைத்து, ஒன்றாகவே ஓடி ஆடி ஆனந்தமாக வாழ்க்கை நடத்தவேண்டும் என்பதுதான். யுத்த நிறுத்தமானதும ஒரு கிராமாந்திரப் பத்திரிகை வாங்கிக் கூட்டாக நடத்தவேண்டும் என்று பாப் எழுதியபோது, எங்கள் லட்சியத்துக்கு இது முற்றிலும் ஒத்திருந்தது.

ஆனால், ''கிராமாந்திர வாரப்பத்திரிகையை நீங்கள் எவ்வாறு நடத்தமுடியும்? கிராமத்தில் தானியங்களைப் பற்றியும், வைக்கோற்போரைப் பற்றியும், கிராம வாழ்க்கைப் பற்றியும் உங்களுக்கு என்ன தெரியும்?''

இந்தக் கேள்வியை வாஷிங்டனில் திரும்பத் திரும்ப எல்லோருமே எங்களைக் கேட்டனர். எங்கள் மனத்திலேகூட இது அவ்வப்போது எழும். ஆனால், அதைப்பற்றி நாங்கள் சிந்திக்கவே யில்லை. இதை ஒரு குறைபாடாகக் கருதவுமில்லை. யுத்த காலத்தில் எங்கள் சிறு சேமிப்புப் பணமெல்லாம் வெகுவாய்ச் செல

வழிந்துபோயின. இடைக்காலங்களில் விடுமுறையில் பாப் வந்தபோதெல்லாம் நாங்கள் தாராளமாகச் செலவு செய்தோம். வீண் செலவுகூட எனலாம். 1945-ம் வருஷம் நவம்பர் மாதம் ஓருநாள் சாயந்திரம் எங்களுக்கும் தெரியாமல் எங்கள் வாழ்க்கைப் பாதை யின் ஒரு முக்கியமான திருப்பத்தில் நாங்கள் திரும்ப உத்தேசித்தபோது, எங்களிடம் ஆயிரம் டாலர்களுக் கும் குறைவாகவேதான் பண மிருந்தது. இதை மூலதனமாகக் கொண்டுதான் எங்களுக்கு அனுபவ மில்லாத புதிய பாதையில் எதிர்கால வாழ்க்கையைத் தொடங்கவேண்டும்.

அன்றிரவு வாஷிங்டனில் எல்லோரிடமிருந்தும் விடை பெற்றுக்கொண்டு நாங்கள் வெளியே கிளம்பி னோம். என் கையை அவருடைய கையில் இணைத்துக் கொண்டேன். மௌனமாகவேதான் சென்றோம்; எனினும், இருவர் உள்ளத்திலும் உணர்ச்சி இருக்கத் தான் செய்தது. குறுகிய சந்துகள் வழியாகக் காலத் தால் பண்பட்ட சிறு வீடுகளின் நடுவில் செல்லும் போது நமது தேசத்தின் இருதயத் துடிப்பை நாங்கள் உணர முடிந்தது. அதன் வேகம் சற்று தணிந் திருந்த தெனினும், அது துடித்துக்கொண்டுதா னிருந்தது. உலகத்திலே பிரசித்தி பெற்ற பல தலை நகரங்களில் ஒன்றாகிய இந்த நகரத்தில் ஆயிரக்கணக் கான மக்கள் வேலை செய்துகொண்டுதா னிருக்கிறார் கள்; பலர் திட்டமிட்டுக்கொண் டிருக்கிறார்கள்; பலர் பழைய வாழ்க்கையை விட்டுப் புது வாழ்க்கையை எப்படி—எவ்வாறு—எந்த முறையில் தொடங்கலாம் என்று புனர்நிர்மாண வேலையில் மனத்தைச் செலுத்தித் திட்டம் போட்டுக்கொண்டுதா னிருக்கிறார்கள். இந்தத் தேசீய மக்களின் கூட்டத்தில் நாங்களும் ஒரு அம்சம் அல்லவா? மிகமிகச் சிறிய அம்சம்தான்; எனினும், ஒரு பாகமே.

சிறிய பாகமாக இருந்தாலும், எங்கள் வாழ்க்கையும் முக்கியம்தான்; சந்தேகமில்லை. பூரணமான ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பாகமும் முக்கியம்தானே? தனித்திருந்து இயங்குவது என்பது அர்த்தமற்றது என்னும் உண்மையை நாங்கள் உணர்ந்தோம். நாம் எல்லோருமே ஒருவரையொருவர் அனுசரித்தேதான் வாழ்கிறோம். ஒரு சிறிய பத்திரிகை மூலம் மற்றவர்களுடன் நெருங்கிப் பழகி, அதன் விளைவாகப் பொறுப்புள்ள பிரஜைகள் கற்றுக்கொள்ளவேண்டிய பல விஷயங்களையும் அறிந்துகொண்டால், அதுவே பெருத்த லாபமல்லவா? யுத்தத்தின் விளைவாக மனித சமூகத்தி னிடையே பங்கப்பட்டிருந்த சாந்தியை நிலை நிறுத்தவும், மேலும் இது குலையாமல் பாதுகாக்கவும் ஒரு கிராமாந்திரப் பத்திரிகை உகந்த கருவியாக ஏன் அமையக்கூடாது?

நடந்துகொண்டே ஒரு தெருவை யடைந்தபோது, "ஒரு கிராமாந்திரப் பத்திரிகைதானே உங்களுக்குத் தேவை? அதைக்கொண்டு நீங்கள் சந்தோஷமாக இருக்கலா மென்பதில் உங்களுக்கு நம்பிக்கைதானே?" என்று நான் பாப்பை வினவினேன்.

"ஆமாம், நீ சந்தோஷமாக இருந்தால் நானும் சந்தோஷமாக இருக்கமுடியும். எப்படி—ஏன் என்று என்னைக் கேட்காதே. காரணங்களை யெல்லாம் வார்த்தைகள் மூலம் சொல்ல என்னால் இயலாது. இதுதான் நமக்கு ஏற்றது என்றுமட்டும் உணருகிறேன்" என்றார் பாப். அவர் வார்த்தையில் நிச்சயம் நிலவியது.

* * *

நாங்கள் தீர்மானித்துவிட்டோம். இனி நாங்கள் செய்யவேண்டியதெல்லாம் ஓர் கிராமாந்திரப்பத்திரிகை எங்கே கிடைக்கும் என்று தேடவேண்டும். அதை

வாங்கத் தேவையான பணத்தைச் சேகரிக்கவேண்டும்; அவ்வளவுதான். நானும் குழந்தை ஸடீவும் பென்ஸில் வேனியா பிரதேசத்திலுள்ள டௌனிங்டனில் என்னுடைய மாமியார் வீட்டில் தங்கியிருந்தோம். எனனுடைய வாழ்க்கைத்துணைவர், ஆப்பிரிக்கக் காடுகளில் பாதிரி லிவிங்ஸ்டனைத் தேடி ஸ்டான்லி சென்றது போல் உள்ளத்தில் உறுதிகொண்டு—கருமமே கண்ணுக—உற்சாகத்துடன் பத்திரிகை வேட்டைக்காகச் சென்ருர்.

ஒரு பத்திரிகை வாங்குவது என்ருல் ஒரு புது மோட்டார் வாங்குவது போலன்று. வெளியே கிளம்பி வீடு திரும்பும்போது ஒரு பத்திரிகை முதலாளியாகத் திரும்ப முடியாது. யாருடைய ஆலோசனையைக் கேட்டாலும், ஒருவன் சொன்னதற்கு மாருகவே மற்றவன் சொன்னுன். எதைச் செய்யலாம் என்று ஒருவன் சொன்னுனே, அதைச் செய்யாதே என மற்றவன் மறுத்தான்.

பென்ஸில்வேனியாவில் தம்முடைய பிறந்த ஊரான செஸ்டர் பிரதேசத்தையே தமது ஆதார நிலையமாகக் கொள்ளவேண்டுமென்று பாப் எண்ணினுர். வாரக்கணக்கில் அந்தப் பிரதேசம் பூராவும் அலைந்து திரிந்த பின்னர், பாப் டௌனிங்டன் வந்து சேர்ந்தார்; தோல்விதான். பத்திரிகையில்லாமல் திரும்பியது மட்டுமல்ல, மன உறுதிகூடச் சற்று தளர்ந்திருந்தது.

அவருடைய தாயாரின் பிதுரார்ஜித வீட்டில் ஜனங்கள் நிரம்பி யிருந்தார்கள்—நிரம்பி வழிந்து கொண்டிருந்தார்கள் என்றுகூடச் சொல்லவேண்டும். அவருடைய விதவை அத்தையும், சித்தப்பாவும் அங்கேயே நிரந்தரமாகவே குடிபுகுந்தனர், யுத்தத்தில் நிலைபெயர்ந்த உறவினர்களும் அவர்களுடைய மூன்று

குழந்தைகளும் வீட்டின் மற்ருெரு பாகத்தில் இருந்த னர். அந்த வீடும் வருகிறவர்களுக்கெல்லாம் இட மளித்துக்கொண்டேதா னிருந்தது. பாப், நான், குழந்தை ஸ்டீவ் மூவரும், பிடுங்கி வேறு இடத்தில் நடுவதற்குத் தயாராக இருக்கும் நாற்றுகள்போல வீட்டின் மாடியில் இருந்த அறையில் மூன்று கட்டிலில் அடைந்து கிடந்தோம். ஒரு காலத்தில் இந்த அறை யைத்தான் என் மாமியார் தம்முடைய சித்திரச்சாலே யாக உபயோகித்துவந்தார். உடைந்த டிரங்குப்பெட்டி கள், தூசுபடிந்த கித்தான்கள்,பழைய வர்ண பிரஷ்கள், பீங்கான் கிண்ணிகள் முதலியவைகளின் மத்தியில் தான் நாங்களும் இருக்கவேண்டி வந்தது. அங்கு கழித்த மூன்று மாதகாலம் எங்கள் வாழ்க்கையிலேயே மிகவும் மோசமான நாட்கள். ஐந்து வருஷகாலம் தேக அசௌக்கியம் என்பதே அறியாத பாப், காமாலே வியாதியால் பீடிக்கப்பட்டார். எங்களுக்கு வசிக்க வீடும் இல்லே; எதிர்காலமும் இன்னும் குதிர்ந்தபா டில்லே. மனே நிம்மதியைக் குலேக்க வேறு என்ன வேண்டும்?

முடிவு பெருமல் நீடித்துக்கொண்டிருந்த இந்த நிலே எங்களுக்கு நிலேயற்ற தன்மையைக் கொடுததது மட்டுமல்ல, எங்களுடைய தீர்மானத்திலேயே எங் களுக்குச் சந்தேகம் விளேவிக்கத் தொடங்கியது. மாதக் கணக்கில் பாப் அலேந்ததன் பயனுக ஒரு முடிவுதான் நாங்கள் கண்டது. அவருடைய சொந்த ஊரில் பத் திரிகை என்று சொல்லக்கூடியது ஒன்றும் இல்லே. சில வியாபாரிகள் மட்டும் ஆர்கைவ் என்னும் பழைய பத்திரிகையை வாங்கி நடததும்படி நச்சரித்தார்கள். ஆனுல் பத்திரிகையின் சொந்தக்காரன் தன்னுடைய பத்திரிகையை விற்பதில் கொஞ்சம்கூட ஆர்வம் காட் டினதாகத் தெரியவில்லே. இந்த நிலேயில் பாப் செய்யக் கூடியது ஒன்றுதான். கிராமாந்திரப் பத்திரிகைத்

தொழிலிலேயே கண்டிராத மாதிரி, அதிகப்படியாகப் பணம் கொடுப்பதாக ஆசை காட்டினுல்தான், அதன் சொந்தக்காரனை விற்கும் முயற்சியில் ஈடுபடுத்தலாம் என்று பாப்புக்குத் தோன்றியது.

உடல் நலமும் மனே நலமும் ஒருங்கே குன்றி முறிந்துபோகும் நிலைக்கு வந்திருந்த சமயம் அது. அப்போதுதான ஓரிரவு அந்த டெலிபோன் மணி அடித்தது. பாப்தான் அதை எடுத்துப் பேசினர். அவர் இடத்தி லிருந்து சென்று, டெலிபோனில் பேசி விட்டுத் திரும்புவதற்குள், பல விசிஷ்டகாலங்கள் கழிந்தனபோலத் தோன்றியது.

மெதுவாகத்தான் அவர் தம்முடைய அறைக்குத் திரும்பினர். சாவதானமாகத் தம்முடைய சோபாவில் உட்கார்ந்தார். ஈரத் துவாலியை எடுத்து மஞ்சள் படர்ந்திருந்த தம்முடைய நெற்றியின்மேல் ஒத்திக் கொண்டார். அவர் வாயிலிருந்து வரும் வார்த்தைகளுக்கு எதிர்பார்த்துக்கொண்டிருந்தோம்.

"நான் அதை முடித்துவிட்டேன்" என்றுர் பாப், சாவதானமாக.

"என்ன?" என்று என் மாமியார், அத்தை, சித்தப்பா, நான் எல்லோரும் ஒரே குரலில் கேட்டோம்.

"நான் 'ஆர்க்கைவ்' பத்திரிகையை வாங்கி விட்டேன்" என்றுர் அவர் பதிலுக்கு.

அன்று பாப்புக்கு 102 டிகிரி ஜுரம் இல்லாதிருந்தால், எங்களுடைய பத்திரிகை உலகைப்பற்றிய கனவுகள் எல்லாம் எரியும் விறகிலிருந்து புகை புகை போக்கி வழியே போவதுபோலப் புகைந்துகொண்டிருக்கும் சமயத்தில் அந்த டெலிபோன் மணி அடிக்காதிருந்தால், நாங்கள் அந்தப் பத்திரிகையை வாங்கியே

இருக்கமாட்டோம். அதிலும் ஐயாயிரம் டாலர் விலை கொடுத்து இந்தக் காரியத்தைக் கட்டாயம் செய்திருக்கமாட்டோம். நினைக்கக்கூட முடியாத அவ்வளவு பெரிய தொகை அந்தப் பத்திரிகைக்கு அதிகம். ஆனால், அந்தச் சமயம் ஏதாவது ஒரு முடிவுக்கு வரவேண்டிய நிலையிலிருந்தோம். எந்த முடிவாயிருந்தாலும் பாதகமில்லை. யுத்த நிறுத்தத்திற்குப்பின், புனரமைப்பின் தொல்லைகள் உச்சநிலையை அடைந்திருந்த அந்தச் சமயம் எந்தத் தீர்மானமாவது செய்தே ஆகவேண்டியிருந்தது. தீர்மானித்தபின் எங்களைச் சூழ்ந்திருந்த பனித்திரை மெதுவாக விலக ஆரம்பித்தது. பணத்திற்குக் கடன் வாங்கவேண்டிய நிர்ப்பந்தம் என்னவோ இருக்கிறது. ஆனாலும், நாங்கள் இப்போது கிராமாந்திரப் பத்திரிகை ஆசிரியர்கள். இதைத்தானே நாங்கள் விரும்பினோம்! இவ்வளவு நாட்களுக்குப் பின் இது நிறைவேறியது.

1946-ம் ஆண்டு மே மாதம் முதல் தேதியன்று நாங்கள் ஆர்க்கைவ் பத்திரிகையை வாங்கினோம். பத்திரிகை வெளியிடுவோர்கள் என்னும் அந்தஸ்து எங்களை வந்தடைந்தது. ஆனால், அதற்கேற்ற சாதனங்களோ, பணவசதியோ, அல்லது இதர கருவிகளோ ஏதுமில்லை. ஐயாயிரம் டாலர்கள் கொடுத்துப் பெயரளவில் ஒரு பத்திரிகை வாங்கினோம் என்ற பெருமை மட்டும்தான் கிடைத்தது. ஒரு பெரிய கம்பளம் அளவுக்கு அறை; அதுதான் பத்திரிகைக் காரியாலயம்! மூலைமுடுக்குகளிலெல்லாம் சிலந்திக் கூடும் ஒட்டடையும் காலப்போக்கில் பழுப்பேறியிருந்தன. யுத்த காலத்தில் உபரியாகக் கருதப்பட்டு எங்கோ ஏலத்தில் எடுத்த இரண்டு டைப்ரைட்டர்கள்; ஒரு வாசற்கதவு சாவி; பெயர் பொறித்த போர்டு; சில சந்தாதார்கள்; எதிர்காலத்தில் நம்பிக்கை—இவைகள்தான் நாங்கள் எங்கள் பணத்திற்குப் பதிலாகக் காட்ட முடிந்தது.

எங்களுக்குத் தீங்கிழைக்கப்பட்டது என்பதை நாங்கள் அப்போது உணரவில்லை. டௌனிங்டனில் மனிதர்களுக்கன்றி பத்திரிகைகளுக்குத் தனியாக ஒரு மயானம் இருந்த தென்பதையாவது, அதில் ஏற்கனவே ஆறுபத்திரிகைகள் இறந்து அடக்கம்செய்திருந்த விவரமாவது எங்களுக்குத தெரியாது. வாரப் பத்திரிகை நடத்துவதற்கு டௌனிங்டனைக் காட்டிலும் மோசமான இடம் வேறு கிடையா தென்பதும் எங்களுக்குத் தெரியாது. பிலிடெல்பியாவி லிருந்து வெளியாகும் தினசரிப் பத்திரிகைகளைத் தவிர, டௌனிங்டௌன் செய்திகளை முதல் பக்கத்தில் தாங்கி வெளிவந்த பிராந்திய தினசரிகள் இரண்டும் எங்களுக்குப் போட்டியாக நிலைத்திருந்தன. நல்ல நாளில் ஆர்க்கைவ் பத்திரிகை கடைத்தெருக்களி லிருந்து ஐந்து பிரதிகள் தான் விற்றன வென்றும், புத்தகத்தில் பதிவாகியிருந்த 1750 சந்தாதாரர்களில் 60 பேர்களைத் தவிர மற்றவர்கள் எல்லாம் ஏற்கனவே இறந்துபோயினர் என்ற ரஸமான விவரங்களும் அப்போது எங்களுக்குத் தெரியாது. எனவே, அந்த வருஷம் மே மாதம் அவ்வூரில் எழுபத்தோரு வருஷம் பழமை வாய்ந்த வாரப் பத்திரிகைக்கு நாங்கள் இருவரும் ஏகபோக உரிமையாளர்கள், பதிப்பாசிரியர்கள், ஆசிரியர்கள், விளம்பர ஏஜெண்டுகள், நிருபர்கள், சந்தா சேகரிப்பவர்கள், அச்சடிப்பவர்கள் முதலிய எல்லாம் நாங்களே என்ற செய்தியைக் கேட்டதும், அந்த ஊரில் முக்கால்வாசிப் பேர் "எங்களைப் போன்ற முட்டாள்கள் உண்டா?" என்னும் பாவனையில் அபிப்பிராயம் கொண்டு நாங்களும கீழே விழுந்து மூக்குடைந்து போகும் நாளை எதிர்நோக்கி யிருந்தனர்.

டௌனிங்டனில் ஜனத்தொகை சுமார் ஐயாயிரம். தேசத்தில் பரவிக்கிடந்த மற்ற கிராமாந்திரப் பிரதேசங்களி லிருந்த மக்களைப் போலவேதான் இந்த

டௌனிங்டன் வாசிகளும். அவர்களுடைய வாழ்க்கை வேர்கள் காலவெள்ளத்தில் வேரூன்றி யிருந்தன. மாறுதல்களைச் சட்டென்று ஏற்றுக்கொள்ளா தவர்கள்; விரும்புவதுமில்லை. "இந்த ஊர் மக்கள் எந்த விஷயத்தைப் பற்றியும் கவலைப்பட விரும்புவ தில்லை" என்று ஊர் மேயர் ஒருதரம் சொல்லியிருந் தார். தெருக்களில் செல்லும்போது இரு பக்கங்களிலு மிருந்த பழங்கால கட்டிடங்களைப் பார்த்தால், அவை கள் ஒவ்வொன்றும் வெளிக் கதவை இறுகத் தாளிட்டு, வெளி உலக சம்பந்தமோ வாடையோ வீசாதபடி ஒவ்வொரு குடும்பமும் தனித்தனியே இயங்கும் தன்மை வாய்ந்ததோ என எண்ணத் தோன்றும். வெளி உலகத்தில் காணப்படும் முன்னேற்றம் அதற்கறி குறியான பரபரப்பு சலசலப்பு முதலியவைகளைப்பற்றி அவர்கள் கவலை கொள்ளுவதே இல்லையோ என்றும் தோன்றும்.

ஆனால், தெருக் கதவைத் திறந்து உள்ளே புகுந் தால், நன்மை தீமைகள், நம்பிக்கை, பயம், ஏக்கம், பீதி முதலிய எல்லா அம்சங்களும் மற்ற இடங்களில் ஜனங்களைப் பீடிப்பதேபோல இங்கேயும் பிடித்துக் கொண்டுதானிருந்தன என்பது விளங்கிற்று. வெளித் தோற்றத்தில் ஒருவர்க்கொருவர் சம்பந்தமற்றவர்கள் போலக் காணப்பட்டாலும், உள்ளூர அனுதாபம் கொண்டு மற்றவர்களுடன இணைந்தே வாழ்ந்தனர் என்பதும் தெரியவந்தது. டவுன் முனிசிபாலிடியில் பணம் இல்லாம லிருக்கலாம். முனிசிபல் சபை வேலையே செய்யாம லிருக்கலாம்; தெருக்களில் பள்ளம் மேடுகள் செப்பனிடப்படா திருக்கலாம். ஆனால் ஒருவன் கஷ்டப்பட்டால், அதைக் கண்டு அந்த ஊரே அனு தாபப்படும்; ஒருவனுக்குக் காயம் உண்டானால் ஊர் மக்களின் உடல்களில் ரத்தம் கசியும். ஒரு சமயம் ஒரு விதவையின் வீடு தீக்கிரையாகி அவளும் அவ

ளுடைய நான்கு குழந்தைகளும் தெருவில் நிற்கும் நிலை ஏற்பட்டது. உடனே பலர் உதவிக்கு வந்தனர். சிலர் ஆடைகள் தந்தனர்; சிலர் உணவளித்தனர்; சிலர் தங்க இடம் கொடுத்தனர். கிறிஸ்துமஸ் சமயத்தில் எளியவர்களுக்கு உதவுவதற்கு நிதி திரட்டும் பணியில் வர்த்தகர்கள்கூடத் தங்கள் வேலையை விட்டு ஈடு பட்டனர்.

நாங்கள் கண்டுபிடித்த உண்மை இது ஒன்றுமட்டு மல்ல. பத்திரிகை ஆசிரியர்கள் பதவியை யடைந்த தும், நாங்கள் கொண்டிருந்த அபிப்பிராயங்கள், சம்பிரதாயமான கொள்கைகள், விருப்பு வெறுப் புகள் முதலியவை யெல்லாம் ஆடிக் காற்றில் அடித்துப்போகும் சருகுகள்போல் பறந்தோடின. மேற்பார்வைக்குக் காணப்படுவதெல்லாம் உண்மையில் அதேபோல் இருப்பதில்லை. மனிதர்களும், அதேபோல் வஸ்துக்களும் முதல் நோக்கில் சரிவரத் தெரிவதே யில்லை. ஒரு செய்தித் தாளில் மேலாகச் சொல்லப் படும் விஷயங்கள் எப்படி உண்மையை மறைக்குமோ அதேபோல் மனிதர்களின் முகத் தோற்றமும் அநேக மாக அவர்களுடைய தன்மை, குணம் முதலியவற்றைத் திரித்துக் கூறவல்லது. சுருங்கச் சொன்னால், அடிப் படையி லிருந்தே இந்தப் புதிய வியாபாரத்தில் எங் களுக்கு ஒன்றுமே தெரியாது என்பது நன்றாக விளங் கிற்று.

ஆர்க்கைவ் பத்திரிகையின் முந்திய சொந்தக்கார ருக்குப் பத்திரிகை வெளியிடுவதில் செலவே அநேகமாக இல்லை என்ற காரணத்தினால் வாராவாரம் சுமாராக வருமானமும் கிடைத்துக்கொண்டிருந்தது. முதல் பக்கத்தில் வரும் முக்கிய செய்திகள் எல்லாம் கையா லேயே அச்சுக் கோர்க்கப்பட்டவை. மற்ற மூன்று பங்கங்களுக்குத் தேசிய விளம்பரங்களும் 'பாய்லா

ப்ளேட்'(ஏற்கனவே செய்திகளை யந்திரங்களில் அச்சில் வார்த்துத் தகடுகளாக்கி எடுத்து வைத்துக்கொள்ளும் சாதனம்)டுகளும் செயல் புரிந்தன. விளம்பரத்திலிருந்து கிடைத்த வருமானம் சொந்தக்காரருடைய ஜேபிக்குப் போயிற்று. அப்படியே அச்சுக்கூடத்தைத் தானே வாங்கிவிடுவதாக வாய்தா பேரம் செய்திருந்தும் அதை அவன் வாங்கவில்லை. பத்திரிகையோ, பெயருக்கேற்ப மிகவும் வருந்தத்தக்க அளவுக்கு உளுத்துப்போயிருந்தது. அது மூடப்படாமல் செயலில் இருந்ததற்குக் காரணமே, அதைக் கருவியாகக் கொண்டு இதர வழிகளில் அச்சகத்தில் வேலை வந்து கொண்டிருந்ததால் அதன் மூலம் கொஞ்சம் வருமானம் கிடைத்ததுதான். ஆனால் இதில் விசித்திரம் என்னவென்றால், இரண்டாயிரத்து ஐந்நூறு பிரதிகள் வாரந்தோறும் விற்றாலும், முந்திய சொந்தக்காரனுக்குக் கிடைத்துக் கொண்டிருந்ததைக் காட்டிலும் குறைவாகவேதான் எங்களுக்குப் பணம் கிடைக்கிறது. பத்திரிகை வளர வளர, எங்களுக்குச் செலவு அதிகரித்துக் கொண்டேதான் போயிற்று. தொழிலாளிகளுக்கு அதிகச் சம்பளம் கொடுக்கவேண்டியிருக்கிறது. காகிதத்திற்கு அதிகமாகச் செலவு செய்யவேண்டி யிருக்கிறது. 'ப்ளாக்கு'கள், உள்ளூர்ப் படங்களுக்காக விளம்பரத் 'தயாரிப்புகள், மற்றும உற்பத்திச் செலவுகள் என்பதில் சேரும் பல சில்லறைச் செலவுகள் எல்லாம் அதிகமாகிக்கொண்டே போகின்றன. இவ்வளவிற்கும் நாங்கள் மணிக்கணக்கில் டைப் மிஷனில் செயல் புரிவது கணக்கிலேயே வராது.

இவ்வித காரணங்களினால் சிறிய பத்திரிகை ஆசிரியர்கள் தங்கள் வருவாய்க்கு அச்சகத்திற்கு அவ்வப்போது கிடைக்கும் இதர வேலைகளையே நம்பியிருந்தார்கள். பெரும்பாலும் பத்திரிகை அச்சடிப்பது இரண்டாம்பட்ச வேலையாகவே கருதப்படும். ஆகை

யால், இந்தப் பத்திரிகைகள் அந்த ஊர் மக்களின் ஒலி யாகச் செயல் புரியாமல், படிப்படியாகக் குறைந்து காலப்போக்கில் தொல்லை விளைவிக்கும் கருவிகளாக மாறிவிடுகின்றன. குறித்த தினத்திற்கு முன் தினம் தான் அதைப்பற்றிய நினைவு ஆசிரியருக்கு உண்டாகும். உடனே குப்பைக் கூடையைத் துழாவிப் பார்ப்பார். அதில் அநேகம் 'பாய்லா ப்ளேட்டு'கள் இருக்கும்; ஸ்னன உடையிலிருக்கும் அழகிகள் உருவங்கள் இருக்கும்; ருசிகரமாகப் பச்சடிகள் செய்வதெப்படி என்று இருக்கும்; இன்னும் சில மொச்சைப் பருப்புகளை எப்படி நாள்படக் கெடாமல் வைத்துக்கொண்டு சுவை குன்ருமல் சமைப்பது என்று இருக்கும். சில சினிமா உற்பத்தியாளருக்குத் தேவையான 'ப்ளேட்டு'கள் பல இருக்கும். இவைகளிலிருந்து தோன்றியவற்றைக் கதம்பமாகப் பத்திரிகையில் இங்குமங்கும் நிரப்பி அன்றைய வாரத்தைக் கடத்திவிடுவார். இப்படி உண்டாக்கப்பட்ட பத்திரிகை எப்படி இருக்கும் என்று சொல்லவேண்டுமா? சாப்பாட்டுக்கு பின் எறியப்பட்ட வஸ்துக்களைக் கொண்டு 'எரிசேரி'யைப் போல் ஒரு உணவு தயாரித்தால் எப்படி இருக்கும்? இதைக் கண்டு யாருக்குப் பசி அடங்கும்? கண்டதும் உள்ள பசியும் மறைந்துவிடாதோ! வாரப் பத்திரிகையும் இப்படித்தான் இருக்கும்.

பத்திரிகை வாங்கினபோது 'பாய்லர் ப்ளேட்' என்பதைப்பற்றி நான் கேட்டதே இல்லை. அது இரும்புத் தொழிற்சாலையிலிருந்து வரும் ஒரு பொருள் என்றுதான் எண்ணியிருந்தேன். தபால் மூலம் வருகிறதென்பதே பிறகுதான் தெரிந்தது. உடனே வாழ்க்கையில் உற்சாகம் உண்டாயிற்று. கேக்கைத் தின்ருல் விதவிதமான பழங்கள் வெவ்வேறு சுவையுடன் கிடைப்பதுபோல் அந்த ஊரில் எங்களுக்கும் புது அனுபவம் ஏற்பட்டது. பாப்பும் நானும் வாரத்திற்கு

நூறு சந்தாதாரர்கள் சேர்ப்போம். டைப்ரைடிங் மிஷினைத் தட்டினால் மலையையும் அசைக்க முடிந்தது. உள்ளூர் முனிசிபல் சபையையே மாற்றி அமைக்க முடிந்தது. விசை தவறிய ஆகாய விமானம் தரையை அடைவதைக்காட்டிலும் வேகமாக நாங்கள் அந்த ஊர் வாழ்க்கையில் ஈடுபட்டு அவர்களுடன் லயித்துவிட்டோம். இப்போது முதல் வேலை ஆர்க்கைவ் பத்திரிகையை அச்சடிக்க ஒரு புதிய இடத்தைப் பார்த்துக்கொள்ளவேண்டும்.

*　　　　*　　　　*

கிராமாந்திர ஆசிரியர்கள் வக்கீல்களையும் அரசியல்வாதிகளையும் போல பலதரப்பட்ட அந்தஸ்துள்ளவர்களாயும், அனுபவமுள்ளவர்களாயும், சிறியவராயும் பெரியவராயும் இருப்பதுண்டு. எனினும், அவர்கள் ஒரு தனி இனத்தைச் சேர்ந்தவர்களே. அவர்களுடைய தொழிலில் வெற்றி என்பதைப் புரிந்த சாதனைகளையும், பட்ட கடன்களையும் கொண்டு அளக்கவேண்டுமே தவிர, டாலர் செண்ட் கையிருப்பைக் கொண்டு அளவிட இயலாது.

மக்களிடை உண்மையான அபிமானம், அனுதாப உணர்ச்சி, தயாள குணம், சகிப்புத் தன்மை, அடிப்படையாக அமைந்த மனிதப் பண்பு, தயை முதலிய குணங்கள் நல்ல கிராமாந்திர ஆசிரியரிடம் அவசியம் இருக்கவேண்டும். பகை தேடிக்கொள்ளாது உண்மையை ஆராய்ந்தறிவதில் ஆவலும் கபடமின்றிய அறிவாற்றலும்கூட அவசியமாக அவரிடம் இருக்கவேண்டிய இதர குணங்கள். ஏனெனில், நகரங்களில் பத்திரிகை ஆசிரியர்களைச் சுற்றிலும் நிருபர்களும், எழுத்தாளர்களும் சதா வட்டமிட்டுக்கொண்டு பொதுமக்களுக்கும் அவர்களுக்குமிடையே ஒரு திரையே போட்டதுபோல ஆக்கிவிடுவார்கள். கிராமாந்திரத்திலோவெனில், பத்திரிகை ஆசிரியர் என்றால் அவர் சந்தாதாரர்

களுக்கு எல்லாம் தாமே எனத் திகழவேண்டும். உள்ளூர் போலீஸ் காவற்காரன், டாக்டர் முதலியவர்களைப் போல் கிராமப் பத்திரிகை ஆசிரியரும் பகல் இரவு எல்லா சமயங்களிலும் மக்கள் அவரைக் காண அனுமதிக்க வேண்டும். அவர் விஷயத்தில் ஊரில் ஒரு புது மனிதன் இருக்கிறான் என்ற எண்ணமே கூடாது. புதுமை என்பதற்கு இதற்கு முன் இவரைச் சந்தித்ததில்லை'' என்றுதான் அர்த்தம்.

அச்சகத்திலிருந்து அச்சுக் கோப்பவர் கையெழுத்துப் பிரதிகளுக்காகக் காத்திருப்பார். அவசரமாக ஏதாவது செய்தியைப் பரபரப்புடன் டைப் செய்து கொண்டிருக்கும் சமயத்தில் உள்ளூர்ப் பெண்மணி ஒருவள். குறுக்கெழுத்துப் போட்டியில் வார்த்தைகள் ஜோடித்துக்கொண்டு சந்தேகம் தீர்த்துக்கொள்ள வருவாள். அலாஸ்கா பிரதேசத்தில் எந்தவிதப் புஷ்பம் மலருகிறது என்று கேட்டுத் தெரிந்துகொள்ள ஆர்வம் காட்டுவாள். பத்திரிகை ஆசிரியர் தன்னுடைய வேலையை ஒத்திப்போட்டு, அப்பெண்மணியின் சந்தேகத்தை முதலில் தீர்க்கவேண்டும். முடிவே இல்லாது அவரைக் காணவரும் கூட்டங்களை முகம் கோணாமல் முகமன் கூறி ஒவ்வொருவருடனும் பேசச் சளைக்கக் கூடாது. காரியாலயத்தைக் கூட்டிப் பெருக்கிச் சுத்தம் செய்வதும் அவரேதான். பத்திரிகைக்கு விளம்பரம் தேடிக்கொண்டு வரவும் அவர்தான் போகவேண்டும். 'ப்ரூப்' அவரேதான் படித்துத் திருத்தித் தரவேண்டும். பிரதிகளைச் சரிபார்த்து அச்சகத்திற்கு அனுப்புவதும் அவரே. புது தொடர்கதைகள், சிறுகதைகள் முதலியன எழுதுவதும் அவரே. பக்கங்களைச் சரிவர அமைத்துக் கொடுப்பதும் அவரே. குப்பைக் கூடையை அவ்வப்போது காலி செய்வதும் அவர்தான். யாராவது ஒரு நிருபர் ஒரு சிறு தவறு செய்துவிட்டாலோ, யாராவது ஒருவருடைய பெயரை எழுத்துக்

கூட்டுவதில் பிழை ஏற்பட்டுவிட்டாலோ, அவர்கள் தாராளமாக வழங்கும் வசைமொழிகளை மகிழ்ச்சியுடன் ஏற்பதும் அவரே. ஊரில் எந்தப் பொது ஸ்தாபனமாயிருந்தாலும், அதன் கமிட்டிகளில் இவருக்கு ஒரு இடம் உண்டு. கமிட்டிகளில் அங்கம் ஏற்கும்படி அழைப்பதே வேடிக்கை: "மற்றவர்களைப்போல உங்களுக்கு அதிக வேலை இல்லாததால், மாலை நேரங்களில் உங்களுக்கும் வீட்டுத் தொல்லைகளைவிட்டு வெளியே சென்றுவர இது வாய்ப்பளிக்குமல்லவா? ஆகையால், நீங்கள் கமிட்டியில் இருக்கவேண்டும்!" என்றுதான் சாதாரணமாகச் சொல்லப்படும். அவர் பொழுது பூராவும் பேசிக்கொண்டேயிருப்பதில் கழியுமே தவிர எழுதி முடிப்பதற்கு அவகாசமே இருக்காது. மற்றவர் அனுப்பும் செய்திகளைக் கவனித்துச் சரிபார்த்து, நீக்க வேண்டியவைகளை நீக்கி ஒழுங்கு செய்தாலும், தாம் எழுதுவதை இரண்டாந்தரம் படித்துப் பார்க்கக்கூட அவருக்கு அவகாசமிராது. ஒரு பத்தி சமாச்சாரத்தை ஒரே தலைப்பு வாக்கியத்தில் ஒரு நொடியில் குறுக்கும் சாமார்த்தியம் வாய்ந்தவரும் அவரே. ஒரு நடமாடும் அகராதியாகவே அவர் எல்லோராலும் கருதப்படுவார்.

உண்மையான கிராமப் பத்திரிகை ஆசிரியர் 'சிறிய' வஸ்துக்களையும், சாதாரண மனிதர்களையும் 'பெரிய'வைகளாகவும் 'பெரிய' மனிதர்களாகவும் கருதுகிறார். ஊரில் எல்லாமே அவருக்கு முக்கியத்துவம் வாய்ந்தது. பழக்கப்பட்ட தெருவுகள், அண்டை வீட்டுக்காரர்கள். குடியரசின் ஆணித்தரமான வலிமை முதலியவைகளில் அவருக்கு எப்போதும் பற்று உண்டு. இவைகளை எதிர்த்து அவர் ஒன்றும் செய்யமாட்டார். களேபரமாகக் காட்சியளிக்கும் அவருடைய மேஜைக்கு அவரேதான் ராஜா. அவருடைய டைப் மிஷினுக்கு அவர் எஜமானர்.

இம்மாதிரி குணாதிசயங்களுடன் திகழ்ந்த கிராமப் பத்திரிகை ஆசிரியர் மார்ட்டின் லீ ஆண்டிஸ் (Martin Lee Andes) என்பவர். 'நார்தர்ன் செஸ்டர் கண்ட்ரி ஹெரால்ட்' (Northern Chester Country Herald) என்ற தலைப்புடன் டௌனிங்டனிலிருந்து பதின் மூன்று மைல்களுக் கப்பாலுள்ள ஹனீ ப்ருக் (Honey Brook) என்னும் ஊரிலிருந்து வெளிவந்துகொண்டிருந்த பத்திரிகைக்கு அவர்தான் சொந்தக்காரர், ஆசிரியர், வெளியிடுவோர் எல்லாம். இந்தப் புது வாழ்க்கையை அவர் தமக்கென்று வகுத்துக்கொண்டதோடு, அதில அவர் சந்தோஷத்தையும் கண்டார். முன்னாட்களில் அவர் பிலிடேல்பியா நகரத்தில் ஒரு பாங்கி வியாபாரியாக இருந்தார். சிறிது காலத்திற்குப் பின் நகர பிராந்தியத்தில் பணம் சம்பாதித்துக் கொண்டு காலத்தை வீணாகக் கழிக்கிறோம் என்று தோன்றவே, தம் மனைவியுடனும், மூன்று குழந்தைகளுடனும் அதைவிட்டுத் தாம் பிறந்த ஊராகிய ஹனி ப்ருக்குக்கு வந்து மேலே கூறிய ஹெரால்ட் பத்திரிகையை வாங்கினார். அவர் காரியாலயம் ஒரு சமயம் மின்னலினால் தாக்கப்பட்டுச் செயலற்றது. மற்றொரு சமயம் கூரையே பிய்ந்து, அச்சகம் ஸ்தாபிக்கப்பட்டிருந்த பழைய குதிரை லாயத்தில் கவிழ்ந்தது. இது போல் இன்னும் பல இன்னல்களையும் அவர் அனுபவித்திருக்கிறார். இவ்வளவுக்கும் அவருடைய பத்திரிகை ஒரு இதழாவது நின்றதில்லை. மிஸ்டர் லீயின் புன் முறுவலில் ஒளி குன்றியது மில்லை.

1946-ம் ஆண்டு வசந்த காலத்தில் அன்று ।ாப்பும் நானும் ஹனி ப்ருக்குக்குச் சென்றபோது, நாங்கள் உண்மையிலேயே பெரும் பீதி யடைந்திருந்தோம். நாங்கள் சேமித்து வைத்திருந்த பணமெல்லாம் போய் விட்டது. எங்களுக்கு அனுபவமே துளிகூட இல்லை என்பதை நாங்களே உணர்ந்தது எங்கள் இருதயத்

தையே பாராங்கல் கொண்டு அழுத்துவது போலிருந்தது. எங்களிருவரிடை அப்போதிருந்த பயம்தான் எங்களுக்குப் பிணைப்பாக இருந்தது. இருவருள்ளத்திலும் ஒரே விதமான பயம் குடிகொண்டிருந்தது. வெளியில் செல்லாவிட்டாலும் நாங்கள் அதை உணர்ந்தே இருந்தோம். பிரயாணத்தின்போது அதிகம் பேசவில்லை. பென்ஸில்வேனியா பிரதேசங்களில் ஆங்காங்கே காணப்படும் கிராமங்களைக் கடந்து, ஹெரால்ட் பத்திரிகை வெளியாகும் சிவப்பு செங்கற் கட்டிடத்தைக் கண்டதும் எங்களுடைய அச்சாபீஸ் வேலைகளுக்கெல்லாம் ஒருவித பரிகாரம் இங்கே கிடைக்கும் என்று ஏதோ எங்களுக்குள் தோன்றியது.

என்னுடைய முதல் பார்வைக்கு லீ ஆண்டிஸ் ஒரு பாங்கர் மாதிரிதான் தோற்றமளித்தாரே தவிர, கிராமந்திரப் பத்திரிகை ஆசிரியராகத் தோன்றவில்லை. நன்றாக க்ஷவரஞ் செய்யப்பட்ட முகம்; நல்ல ஆடை அணிகள்; தங்கச் சட்டம் போட்ட மூக்குக் கண்ணாடி துலங்க ஜ்வலிக்கும் கண்கள்; எங்களைக் கண்டதும் வெகுநாள் பழகியவர் போலவே வரவேற்றார். "ஆர்க்கைவ் பத்திரிகையை வாங்கிய மாக்கில்வெய்ன் தம்பதி நீங்கள்தானா? சந்தோஷம். உங்களைக் காண நான் உண்மையிலேயே மகிழ்ச்சி யடைகிறேன்" என்றார்.

அவருடைய காரியாலயத்தில் பழமையடைந்த ஒரு நாற்காலியி லமர்ந்து, எதிரே ஒழுங்கில்லாது காகிதங்கள் இறைந்துகிடந்த மேசைக் கெதிரில் எங்களுடன் லீ பேசலுற்றார். இடையிடையே டெலிபோன் பேசுவதும், வருவோருக்குப் பதில் சொல்லுவதுமாக எங்கள் சம்பாஷணை நடந்தது.

"நீங்கள் ஆர்க்கைவ் பத்திரிகையை வாங்கியது மிகவும் நல்ல காரியம். பேஷான காரியம் செய்தீர்கள்.

உங்கள் பத்திரிகையை என்னுடைய அசசகததிலேமய அவசியம் அச்சிட்டுத் தருகிறேன்'' என்ருர் லீ உற்சாகத்துடன்.

பண்புமிக்க கனவான் விருந்தினர்கள் எல்லாம் போனபின் சிலரை மட்டும் ''சிற்றுண்டி அருந்திச் செல்லலாமே'' என்று தனிமையாகப் பெருந்தன்மையுடன் சொன்னல் எப்படி இருக்குமோ, அப்படியிருந்தது லீ சொல்லியது. அவர் சொன்ன மாதிரியில் ஆர்க்கைப் பத்திரிகையை அச்சடிப்பதைப்போலச் சுலபமான காரியம் உலகத்திலேயே வேருென்றுமிருக்காது என்ற பாவம் தோன்றியது. பின்னல் இந்த அபிப்பிராயத்தை அவர் பலதரம் மாற்றிக்கொள்ளவேண்டிய நிர்ப்பந்தங்கள் ஏற்பட்டன. எனினும், ஹனி ப்ருக்கில் எங்கள் அச்சடித்த இரண்டு வருஷங்களில் லீயின் உற்சாகமும் நம்பிக்கையும் குறைந்ததை நான் கண்டதில்லே.

*　　　*　　　*

எல்லாவற்றைக் காட்டிலும் பெரிய இடையூறு இதுதானே எங்களுக்கு! இதைச் சமாளித்துவிட்டோம். பத்திரிகை அச்சடிப்பதற்கு ஒரு இடம் கிடைத்துவிட்டது. புது நிர்வாகத்தின்கீழ் ஆர்க்கைவ் பத்திரிகையில் முதல் இதழ் இரண்டு வாரத்திற்குப் பின் வரவேண்டும் என்று நாளும் குறிப்பிட்டோம். இனி நாங்கள் செய்யவேண்டியது அதற்குத் தேவையான விஷயங்களேச் சேகரிப்பதுதான்.

விளம்பர விஷயம் முதன் முதலில் எங்களுக்குச் சுலபமாகத் தோன்றியது. பின்பு நாங்கள் ஏமாற்றமடைந்தோம். ஆனல், அப்போதைக்குப் புதியதாக நாங்கள் ஆரம்பிப்பதால், முதல் இரண்டு இதழ்கள் நாங்கள் உத்தேசித்துள்ள இடங்களில் விரிவாக விநி

யோகமாகவேண்டும் என நினைத்தோம். தபாலாபீஸ் சாதனங்களை யெல்லாம் ஆராய்ந்து 3200 பிரதிகள் அச்சாகி, குறித்த இடங்களிலும் கிராமத் தபால் நிலையங்களிலும் விநியோகித்தால் உத்தேசித்த பலன் கிட்டும் என்று கணக்கிட்டோம். இது பலனளித்தது. வியாபாரிகள் எல்லாம் இதைப் பாராட்டினார்கள். பலர் 'பாராட்டு விளம்பரங்கள்' வழங்கினார்கள்.

ஆனால், விளம்பரதாரர்களுக்குத் தேவை விநியோக விரிவு. விநியோகம் அதிகமாக வேண்டுமானால், பத்திரிகையில் செய்திகள், முகப்புகள், படங்கள், இன்னும் இதுபோன்று படிப்பவர் மனத்தைக் கவரும் அம்சங்கள் இருக்கவேண்டும். எனவே, எங்களுடைய உடனடிக் கவலை இந்த அம்சங்களைப் பூர்த்தி செய்வது எப்படி என்றுதான்.

எங்களுக்குத் தேவையான செய்தி ஒரு தனி ரகத்தைச் சார்ந்தது. நகரப் பிரதேசங்களில் சாதாரணமாக மனிதர்கள் புரியும் தீமைகள்தான் பத்திரிகையில் முதல் பக்கத்தில் முகவரியுடன் இடம் பெறும். கிராமாந்திரங்களிலோ மனிதர்கள் செய்யும் நன்மைகள்தான் முதலிடம் பெறும். நகராட்சிக் கூட்டங்கள், மாதாகோயில் கூட்டங்கள், அண்டை வீடென்னும் பண்பு—இவைகள்தான் கிராமாந்திரத்தில் முக்கியம். உள்ளூரைத் தவிர சுற்றுப்புறத்திலுள்ள கிராமங்களிலிருந்து அந்தந்தக் கிராம வாழ்க்கையைப் பற்றி கிராம நிருபர்கள் செய்தி அனுப்பிப் பத்திரிகைக்கு உதவுவார்கள். நாங்களும் படிப்படியாகச் சுற்றுப்புறத்திலிருந்த ஆறு கிராமங்களிலாவது பத்திரிகை விநியோகமாகத் திட்டமிட்டிருந்தபடியால், ஆங்காங்கே நிருபர்களை அமர்த்தத் தொடங்கினோம்.

எங்கள் பத்திரிகையின் முன்னாள் சொந்தக்காரர் இதைச் செய்யவேண்டுமென்று கவலை கொண்டதே

யில்லை. அடுத்த ஒரு வாரத்திற்கு பாப் ஊரைச் சுற்றித் திரிந்தார். மூலைமுடுக்குகளை யெல்லாம் ஆராய்ந் தார். ஒரு பெரிய மளிகைக் கடையைக் கண்டால் அதன் முதலாளியுடன் பேசினார். அவர் மனைவி நிருபராகப் பணியாற்ற முடியுமா என்று வினவினார். ஒவ்வொரு தபால் நிலையத்திலும் வருவோர் போவோர் களைக் கவனித்தார். அவர்கள் சிபாரிசு செய்த நபர் களை யெல்லாம் கண்டு பேசினார். ஒரு பத்தி இஞ்சுக்கு 5 செண்ட் வீதம் பணம் தருவதாகக் கூறினார். பலர் இந்தப் பத்திரிகையைப் பற்றிக் கேள்விப்பட்டதே யில்லை யாகையால், பாப் சொல்லுவதைச் சந்தேகத் துடனேயே ஏற்றனர். நீண்ட நேர விசாரணை விவா தங்களுக்குப் பின் மூன்று நிருபர்களை அமர்த்திவிட்டு பாப் திரும்பினார். மேலும் மூன்று நிருபர்களின் விலாச மும் கிடைத்தது. பின்பு இம்மூவரையும் வேலைக்கு அமர்த்திவிட்டோம்.

டௌனிங்டனைப் பொருத்தவரையில் நிருபரின் உதவி யில்லாமல் பாப் எல்லாவற்றையும் தாமே கவ னிப்பது என்று முடிவு செய்தார். இதைச் செய்வதற்கு ஒரே வழி, முடிந்த அளவு அதிகமான மனிதர்களை நேரிடையாகத் தெரிந்துகொள்ளவேண்டியது என்று விளங்கியது. எனவே, பாப் ஊரிலுள்ள எல்லா பாதிரி மார்களையும் முதலில் கண்டு பேசினார். அவரவர்கள் ஸ்தாபனத்துச் செய்திகளை அனுப்பி வைக்கும்படிக் கேட்டுக்கொண்டதோடு, பாதிரிமார்களுக் கென்று பத் திரிகையில் ஒரு பகுதி ஒதுக்கி, அப்பகுதிக்குப் பாதிரி களையே விஷயதானம் செய்யுமாறு கேட்டுக்கொண் டார். ஊரில் செயல் புரிந்த மூன்று தொழிலாளித் தலைவர்களையும் சந்தித்து அவரவர்களின் சங்க நடவடிக்கைகளைப் பற்றி எங்களுக்கு அவ்வப்போது செய்தி அனுப்புமாறு ஏற்பாடு செய்தார். வியாபாரிகள் எவருமே இதற்குமுன் அவர்களைத் தேடி வந்ததே

யில்லை. எந்தக் கிராமாந்திரப் பத்திரிகையும் நான் கைந்து வரிகளுக்கு மேல் சங்க நடவடிக்கைகளுக்கு இடம் கொடுத்ததில்லை. ஆகையால் பாப் அவர்களைக் கேட்டுக்கொண்டபோது, மற்றவைகளைப்போல் இந்தப் பத்திரிகையும் ஒன்று என்று அசட்டையுடன்தான் இருந்தனர். இரண்டொரு வாரத்திற்குப் பின் அவர்கள் அனுப்பிவைத்ததை யெல்லாம் நாங்கள் அச்சடித்து விளம்பரப்படுத்தியதைக் கண்டு அவர்கள் ஒத் துழைக்க ஆரம்பித்தனர். அவர்களுக்குக் கிடைத்த செய்திகளை யெல்லாம் அனுப்பிவைத்தனர்.

ஊரின் மற்ற நடவடிக்கைகளுக்குப் பாப் ஒரு தொடர்பு அங்கத்தினர் போன்ற நிலையை ஏற்படுத்திக் கொண்டார். உள்ளூர் வியாபாரிகள் சங்கம், ரோட்டரி சங்கம், அமெரிக்கப் படைச் சங்கம், வெளிநாட்டு யுத்த வீரர்கள் சங்கம், டௌனிங்டன் இளைஞர் சங்கம் முதலிய பல்வேறு ஸ்தாபனங்களோடு தொடர்பு வைத்துக்கொண்டார். சிறிது காலத்திற்குள் ஊரில் பொது ஸ்தாபன நிதி பரிபாலனக் கமிட்டி யிலும், சாரணர் சங்கத்திலும் அங்கத்தினராகப் பாப் ஆகிவிட்டார். ஆரம்பத்திலிருந்தே உள்ளூர்ப் பள்ளிக கூட நிர்வாகக் கமிட்டிக் கூட்டங்களுக்கும், நகர பரிபாலன சபைக் கூட்டத்திற்கும் தவருது போகும் வழக்கத்தையும் ஏற்படுத்திக்கொண்டார். முதல் இதழ் வெளியாவதற்கு முன்பே ஒவ்வொரு மாலையும் இரண்டு அல்லது மூன்று கூட்டங்களுக்காவது போய் வருவ துண்டு. வீடு வந்ததும் அந்தந்த நடவடிக்கைகளைப் பற்றிய செய்தியையும் படுக்குமுன் பூர்த்தி செய்த பின்னரே தூங்குவோம்.

லீ ஆண்டூஸின் அச்சகத்தில் அவருடைய சொந்தப் பத்திரிகையைத் தவிர பார்க்கெஸ்பர்க் போஸ்ட் (Parkerburg Post) என்னும் பத்திரிகையும் அச்சாவ

தால், அவருடைய ஒரே அச்சு கோர்க்கும் மிஷினும், நான்கு பக்கங்களே அச்சடிக்கவல்ல மிஷினும் ஓய்வில்லாது இயங்கிக்கொண்டிருந்தன. இதே காரணத்தினுல் நாங்கள் எங்கள் பத்திரிகைக்குக் குறைந்தது நான்கு பக்கங்களாவது திங்கட்கிழமையன்றே — அதாவது மூன்று நாட்கள் முன்னதாகவே பூர்த்தி செய்து கொள்ளவேண்டியிருந்தது. திங்கட்கிழமை நான்கு பக்கம் பூர்த்தியாக வேண்டுமானுல், கையெழுத்துப் பிரதிகள் முந்திய வெள்ளிக்கிழமையே அச்சகத்திற்கு அனுப்பவேண்டும். ஆகையால், வியாழக்கிழமை அந்த வாரத்திய இதழை வெளிக்கொணர்ந்ததும், அடுத்த வார இதழுக்கு வேலே உடனே ஆரம்பித்து, வெள்ளிக்கிழமையே 'காபி'கள் தயார்செய்ய வேண்டும். இயந்திரங்களில் ஒன்றைத் தள்ளி மற்றென்றை இழுத்துக் கொள்ளுவதுபோல நாங்களும் ஒரு வாரத்திய வேலே முடிந்ததும் மறு வாரத்திய வேலேயை உடனே தொடங்கவேண்டியிருந்தது. மூன்று நாள் முன்னுல் தயார்செய்யப்பட்ட முதல் நான்கு பக்கங்களில் மேற்கூறிய காரணத்தினுல் கவர்ச்சிகரமான செய்தி ஒன்றும் இருக்கமுடியாது. ஆகையால், இதற்காக காலவரம்புக் குட்படாத தலேயங்கங்களேயும் முகவரிகளேயும் தயார்செய்து, அதில் அதிக கவனம் செலுத்தலானேம். கொஞ்ச நாளேக்குள்ளாகவே இந்த நான்கு பக்கங்கள் ஆர்க்கைவ் பத்திரிகைக்கே ஒரு புது அம்சமாக விளங்கியதோடல்லாமல், மெருகு பெற்று காலப்போக்கில் எங்கள் பிராந்தியத்திலேயே ஆர்க்கைவ் பத்திரிகையின் பெயர் உலவ ஆரம்பித்தது.

ஆரம்பத்திலிருந்தே இரு முழு பத்திகள் தலேயங்கம் தாமே எழுதுவதென்று பாப் தீர்மானித்திருந்தார்.

"தலேயங்கங்களேப் பற்றி ஏன் இவ்வளவு கவலே கொள்ளுகிறீர்கள்?" என்று ஒரு அனுபவசாலி

ஆசிரியர் எங்களைக் கேட்டார். "ஒரு வாரப் பத்திரிகையில் இதைப் படிக்கவேண்டுமென்று யார் கவலை கொள்ளுகிறார்கள்? மக்களுக்கு வேண்டுவதெல்லாம் பெயர்கள், பெயர்கள், பெயர்கள்!"

"பெயர்கள் கிடைக்கும்; வேண்டியமட்டும் கிடைக்கும். ஆனாலும், வாரந்தோறும் நான் இரண்டு பத்தி எழுதத்தான் போகிறேன். எனக்கென்னவோ ஆசிரியரே எழுதிய தலையங்கமில்லாத பத்திரிகை, குரைத்தலே இல்லாத நாய் போலத்தானிருக்கும் என்று தோன்றுகிறது!" என்று பாப் உறுதியுடன் பதிலளித்தார்.

அவருடைய முதல் தலையங்கம் திருத்தித் திருத்தி எழுதப்பட்டு, 1946-ம் வருஷம் மே மாதம் 16-ந் தேதி இதழில் வெளிவந்தது. எங்கள் பத்திரிகையின் நோக்கம், கொள்கை முதலியவற்றை அது விளக்கியது. அன்று முதல் இதழில் என்ன குறிக்கோள் இருந்ததோ அதேதான் இப்போதும் இருக்கிறது.

## எங்களைப் பற்றி

"இடையூறுகள் பல ஏற்பட்டும் நீ குறித்த ஒரு காரியத்தை மற்றெல்லாக் காரியங்களைக் காட்டிலும் முக்கியமாகக் கருதி முடித்தே தீரவேண்டும் என்று எண்ணினால், உன்னுடைய சாமர்த்தியம் முழுவதையும் உபயோகித்து அதைச் செய்; அநேகமாக நீ வெற்றி யடையலாம்."

நான் காலேஜிலிருந்து படிப்பு முற்றி வெளியேறிய வருஷம் மேலே சொன்ன புத்திமதியை ஒரு வயது முதிர்ந்த அறிஞர் எனக்குச் சொன்னார். அந்தச் சமயம் நான் ஒரு கட்டிடச் சிற்பியாகத் திட்டமிட்டிருந்தேன். அது கைகூட வேண்டுமென்றால் மூன்று வருஷம்

மேலும் படிக்கவேண்டும். அது முடியும்வரை என்னுடைய ஜீவனத்திற்கு வகை செய்துகொள்ள வேண்டும். அந்த அறிஞருடைய புத்திமதியைச் சிந்தித்தேன். உடனே எனக்கு விளங்கியது உண்மை. நான் கட்டிடச் சிற்பியாகப் போவதில்லை.

அதற்குப் பின் கடந்தோடின வருஷங்கள் என் வாழ்க்கையில் எந்த உண்மையைப் புகட்டியதோ அதை நிச்சயமாகச் சொல்ல முடியாது. அனுபவம் மிகுந்த வருஷங்கள் அவைகள் எல்லாம். ஆகையால், என் சம்பந்தப்பட்டவரையில் அவைகள் வீணாக்கப் பட்ட காலம் என்று சொல்ல முடியாது. ஆனால், இந்தக் காலத்தில்—முக்கியமாக கடலில் யுத்த காலத்தில் நீண்டுகொண்டே யிருக்கும் பகல் இரவுகளிலெல்லாம் ஒரு நிச்சயம் ஏற்பட்டு வளர்ந்துவந்தது. சென்ற நவம்பர் மாதம் கப்பலை விட்டு வந்தபோது எவ்வளவு இடையூறுகள் ஏற்பட்டாலும் நான் ஒரு சிறிய பத்திரிகை சொந்தமாக நடத்தவேண்டும் என்ற நிச்சயம் வலுப்பெற்றது.

இடையூறுகள் பல ஏற்பட்டன. இது தொல்லைகளின் ஆரம்பம் எனலாம். முதல் தடைகளெல்லாம் தாண்டியாய்விட்டது. எதிர்காலம் என் வசத்தில் மட்டுமே உள்ளது. இதை நான் நன்கு உணருகிறேன். உங்களில் பலர் ஏற்கனவே முழு மனத்துடன் என்னை ஆதரிக்க முற்பட்டுள்ளனர். அதை ஏற்று உங்களை அநாதரவாக விடாமலிருக்க முயற்சிக்கிறேன்.

கிராமாந்திர வாரப் பத்திரிகையின் முதல் நோக்கம் உள்ளூர்ச் செய்திகளையும், உள்ளூர் மக்களைப் பாதிக்கக்கூடிய போக்குகளையும் செயல் ஓட்டங்களையும் விவரிப்பதே. நிருப முறை கலப்பில்லாததாக இருக்கவேண்டும். சமூகத்தின் எல்லாப் பகுதிகளையும் கவரவேண்டும். இந்தப் பத்திரிகையில் வெளியாகும்

செய்திகள் குறிப்பிட்ட பகுதிக்கோ அல்லது கட்சிக்கோ சாதகமான முறையில் திரித்துக் கூறப்பட்டது என்ற குறை ஏற்படாது என்று நம்புகிறேன்.

தலையங்கங்களுக்காக ஒதுக்கப்பட்ட இடம் அபிப்பிராயங்களைத் தெரிவிப்பதற்காக ஏற்பட்டது. ஒரு சந்தாதாரரையோ விளம்பரதாரரையோ புண் படுத்தும் என்பதற்காக அடிப்படையான கிராம—பிராந்திய—தேசீய நடவடிக்கைகளில் தான் கொண் டுள்ள அபிப்பிராயத்தைத் தெரிவிக்கப் பயப்படும் பத்திரிகையிடத்தில் நான் மதிப்பு வைப்பதில்லை. ஆகையால், நான் இந்தப் பத்திரிகையில் தலையங்கங்கள் எழுதுவதாகத் தீர்மானித்துள்ளேன். என்னுடைய நோக்கம் டௌனிங்டனிலும் சுற்றுப்புறத்திலு முள்ள மக்களின் பொதுநலத்தை ஆதரித்து விருத்தி செய்வது. இது பரந்த நோக்கம் என்பது உடனே விளங்கும். எனவே, வேற்றுமைகளுக்கு இடமுண்டு. தலையங்கப் பக்கத்தில் பிரதானமான பத்தியில் 'ஆசிரி யருக்குக் கடிதங்கள்' என்று ஒரு பகுதி ஒதுக்கப்பட் டிருக்கும். பத்திரிகையிலே இது ஒரு முக்கிய பகுதி யாக விளங்கும் என நம்புகிறேன். தலையங்கத்தில் கூறி யுள்ள அபிப்பிராயம் சரியன்று என நீங்கள் நினைத் தால், ஏன்—எப்படி என்று கூறுங்கள். தலையங்கம் எழுதவேண்டிய முக்கியத்துவம் பெற்றிருந்தால் அந்த விஷயம் எல்லா கோணங்களிலிருந்தும் விவாதிக்கப்பட வேண்டும். அதுதான் குடியாட்சி.

முடிவாக, எனக்கு உள்நோக்கம் ஏதுமில்லை ; ஒரு பதவிக்கும் நான் முயற்சிக்கவில்லை. செஸ்டர் கௌண்டி யில்தான் இங்குமங்கும் போய்க்கொண்டிருப்பேன். விளம்பரம் வாங்கிவரவும், சந்தாதாரர் சேர்க்கவும், செய்தி திரட்டவும் இப்படி தினந்தோறும் பன்னி ரண்டிலிருந்து பதினைந்து மணி நேரம் கழிப்பேன்.

ஏனெனில், எல்லாவற்றுக்கும் மேலாக இதுவும் ஒரு வியாபாரமே. நானும் ஜீவிக்கவேண்டு மல்லவா? அண்டை வீட்டுக்காரர்கள் இருப்பதுபோல் நானும் இருக்கவேண்டு மல்லவா? இதைச் செய்யும்போது கூடவே மக்களுடைய நலத்தையும் பாதுகாத்து உங்களுக்கும் படிப்பதற்குச் சுவையுடன் விஷயங்களையும் வழங்க முயற்சிக்கிறேன். —ராபர்ட் மாக்கில்வெயின்

எங்களுடைய முதல் இதழ் ஆறு பத்திகளடங்கிய எட்டு பக்கங்க ளிருந்தன. அச்சடித்தபின் திரும்பப் படித்தபோது பல குறைகள் காணப்பட்டன. பக்கங்களின் அமைப்பு வெறுப்பை யூட்டியது; அச்சுப் பிழைகள் அபரிமிதமாக இருந்தன; சில விளம்பரங்கள் தலைகீழாகவே இருந்தன. இருந்தாலும், எங்களுக்கு அது உலகத்திலேயே மிகவும் நேர்த்தியான பத்திரிகையாகவே விளங்கிற்று. ஒரு முடிவுக்கு வராமல் பல மாதங்கள் தவித்துத் தயங்கித் தயங்கி கடைசியாக, நல்லதானாலும் சரி கெட்டதானாலும சரி என்று ஆரம்பித்த பத்திரிகை யல்லவா? நாங்கள் படிப்படியாக வேலை செய்துகொண்டு வந்தோம். நாங்கள் செய்யவேண்டியது என்று இப்போது எங்களுக்கு ஒரு வேலை ஏற்பட்டுள்ளது. காமாலையி லடிபட்டு பலஹீனத்துடனேயே இருந்த பாப், வேலை மிகுதியால் கடைசிப் பக்கம் பொருத்தப்படுமுன் மூர்ச்சை போட்டே விழுந்து விடுவார். என்னுடைய பாதங்கள் நின்று நின்று 'ஆம்லெட்' மாதிரி வீங்கியிருந்தன. அப்படியிருந்தும், ஹனிப்ரூக்கில் பழைய அச்சாபீஸ் மிஷினில் முதல் பக்கம் அச்சடித்து வெளிவருவதைப் பார்த்ததும் நானடைந்த சந்தோஷத்திற்கு இணையாக என்னுடைய பிரசவ அறையை விட்டு வெளியே வந்து என் முதல் குழந்தையைப் பார்த்தபோது நானடைந்த பெருமையைத்தான் கூறலாம். இந்த இரண்டு விஷயங்களிலும் கிடைத்த முடிவுக்கு என்னுடைய பொறுப்பு

என்னவோ மிகவும் கொஞ்சம்தான். இருந்தாலும், வேறெதுவுமே எனக்கு அப்போது அடைந்த திருப்தியையும் பெருமையையும் அளித்திருக்க முடியாதென்றுதான் தோன்றிற்று.

ஆனால், "பத்திரிகைத் தலைப்பில் என்னுடைய பெயர் பொறிக்கப்படவில்லையே!" என்று முதல் பக்கத்திலிருந்த நாற்பத்திரண்டு அச்சுப் பிழைகளைக் கவனித்தபடியே பாப்பைக் கேட்டேன்.

பாப் ஒரு முறை என்னை உற்று நோக்கினார். "நல்லது, ஆசிரியர் பதவியைப்பற்றி உனக்கு என்ன தெரியும்? முதல் பக்கத்திலிருந்து கடைசி பக்கம் வரையில் எல்லாவித வேலையையும் செய்ய உனக்குச் சாமர்த்தியம் வந்தாலன்றி, உன் பெயரைத் தலைப்பில் ஆசிரியராக அச்சடிக்க எதிர்பார்க்கக்கூடாது" என்று திட்டமாகக் கூறினார் பாப்.

கணவனுடன் வேலை செய்வது நான் நினைத்திருந்ததுபோல் அவ்வளவு சந்தோஷகரமான காரியமல்ல என்பது அப்போது தெரியவந்தது.

ஒரு மாதத்திற்குப் பின் எனக்கும் ஒரு சந்தர்ப்பம் கிட்டியது. பாப்புக்கு 102 டிகிரி ஜுரமடித்துக்கொண்டிருந்தது. சோர்வு மிகுதியால் ஏற்பட்டதென்று டாக்டர் அவரைப் படுக்கையை விட்டு நகரக்கூடாதென்று அனுப்பிவிட்டார்.

"நான் வேலை செய்தே ஆகவேண்டும்; இல்லாவிட்டால் பத்திரிகையை யார் வெளியில் கொண்டு வருவார்கள்?' என்று உறுதியுடன் சொன்னார்.

"உங்களுடைய துணை ஆசிரியர் கொண்டு வருவார்; சந்தேகமென்ன?" என்று நான் பதிலளித்ததோ

டல்லாமல், அவரை எழுந்திருக்கவொட்டாது தடுக்க அவர் வயிற்றின்மீதே உட்கார்ந்துகொண்டேன்.

அந்தச் சமயம் நாங்கள் வேறு வீட்டிற்குக் குடி போய்க்கொண் டிருந்தோம். வாரக்கணக்கில் வீட்டுக்காக அலைந்த பின் கடைசியில் யூனியன் வில்லா தோட்டத்தில் ஒரு விடுதியைத்தான் தேர்ந்தெடுத்தோம். டௌனிங்டனி லிருந்து பதினாலு மைல், ஹனீப்ரூக்கிலிருந்து இருபத்தேழு மைல் இந்தப் புதிய வாசஸ்தலம்.

நாங்கள் பாதி சாமான்தான் புது இடத்திற்கு மாற்றியிருந்தோம். ஆகையால், என் மாமியாரின் கூரை மேட்டு அறையிலேயே பாப்பைப் படுக்கவைத்து குழந்தை ஸ்டூவையும் ஒரு நண்பரையும் புது வீட்டில் விட்டு வைத்தேன். பிறகு ஒரு குதிரை மேல் ஏறிச் சவாரி செய்யும் ஒரு வீரனின் உற்சாகத்தை மனத்தில் கொண்டு நான் கோட்ஸ்வில், டௌனிங்டன், செஸ்டர் இந்த மூன்று ஊர்களிலும் ஒவ்வொரு கடைக்கும் சென்று விளம்பரம் வாங்கிவரப் புறப்பட்டேன். இன்னும் மூன்று மாதத்திற்குள் இரண்டாவது குழந்தை மேரியைப் பிரசவிக்கப்போகிறேன். இங்நிலையில் நான் கடைவீதியில் மேலும் கீழுமாக நடமாடினது ஒரு சிறிய விமானம் சமுத்திர அலைகளுக்குமேல் பறந்துகொண்டிருப்பதுபோலத் தோன்றியது.

உள்ளூர் வியாபாரிகள் தங்களுடைய முக்கிய விளம்பரங்களைப் பிராந்திய தினசரி இரண்டிலும் வெளியிட வெகுநாள் முன்னரே தீர்மானித்திருந்தனர். ஆர்க்கைவ் பத்திரிகைக்கு விளம்பரம் சேகரிப்பது சைனு தேசத்து அரணைக் கொண்டை ஊசியினால் தகர்க்க முற்படுவதுபோல என்று அப்போது நான் கண்டேன். மேலும், அருகாமையிலிருந்த இரண்டு ஊர்களிலும் பெரும்பாலான வியாபாரிகள் ஆர்க்கைவ் பத்திரிகையைப்பற்றிக் கேள்விப்பட்டதே யில்லை.

கொண்டு திரும்பினேன். ஸ்டீவைப் புது வீட்டில் ஒரு காவற்காரனிடம் ஒப்படைத்தேன். நேராக ஹனிப்ருக்குக்குச் சென்றேன். அங்கே லீயிடமிருந்து அச்சுத் தட்டுகளிலிருந்து அச்சுகளை எப்படிப் பொறுக்குவதென்றும், எப்படி அடுக்குவதென்றும், பக்க அமைப்பு ஓரக்கட்டைகளை எப்படிச் சரிசெய்வது என்றும், அதை எஃகு சட்டங்களில் எப்படிச் சரிவரப் பொருத்துவதென்றும், கடைசியில் அச்சு யந்திரத்தில் எப்படி அசையாது அணைத்துப் பூட்டப்படுகிறதென்றும், பல விஷயங்களை அறிந்துகொண்டேன். கொஞ்சம் கொஞ்சமாகத் தலைகீழாக அச்சில் இருந்த எழுத்துக்களைக்கூட அப்படியே படிப்பதற்கும் பழகிக்கொண்டேன். அச்சுத்தட்டிலேயே சிமிட்டாவினால் திருத்தங்கள் செய்வதற்கும்கூடத் தெரிந்துகொண்டேன்.

நடு இரவில் வேலை முடிந்தது. எங்களுடைய மோட்டார் வெண்டல் விலாசம் ஒட்டி பத்திரிகை பூராவும் கட்டுக்கட்டாக விநியோகத்திற்குத் தயாராக அடுக்கி வைக்கப்பட்டது. உடனே ஹனிப்ருக்கிலிருந்து கிளம்பினேன். அந்தப் பாதை அடிக்கடி போயிருந்ததனால் நன்கு பழக்கப்பட்டிருந்தது. அந்த நிசிவேளையில் சோர்வு மிகுதியால பாப் எனக்குச் சொல்லியிருந்த எல்லா விஷயங்களையும் விடாமல் செய்து முடித்தேனா என்பதைச் சரிபார்த்துக்கொள்ளவும் தோன்றவில்லை. என்னுடைய விவாக மோதிரம் மட்டும் சுண்டு விரலிலேயேதா னிருந்தது. சுண்டு விரலிலிருந்தால் ஏதோ ஒன்றை மறந்துவிட்டேன் என்று அர்த்தம். என்னுடைய கவுன் ஜேபியில் கையைவிட்டுத் துளாவினேன்; ஒரு துண்டுக் காகிதம் கிடைத்தது. ஒரு புது விளம்பரதாரரிடமிருந்து அன்றுதான் கிடைத்த நாலு அங்குல விளம்பரம் அது. நான்கு அங்குலம்! அங்குலத்துக்கு 30 செண்டு வீதம் எங்களுக்கு ஒரு டாலர் இருபது செண்டு இந்த விளம்பரத்தினால்

கிடைத்திருக்குமே! செலவு ஏறிக்கொண்டே போகும் நிலையில் ஏதாவது ஒரு செலவுக்கு இது காணுமே! இப்படி நினைத்தபோது எனக்குத் துக்கம் வந்தது. அது போனால் போகட்டும், விளம்பரதாரருக்கு எப்படி சால்ஜாப்பு சொல்வது? என் பாதங்கள் விம்மின; என் தலை வலித்தது; கண் எரிந்தது; அழுகையே வந்து விட்டது. கண்களிலிருந்து ஜலம் முகம் முழுதும் பெருகி வழிந்தோடியது. நான் பத்திரிகை ஆசிரியை யாக என்றைக்கும் ஆகப்போவதில்லை. இந்த எண்ணம் உடனே தோன்றியது எனக்கு அந்தச் சமயத்தில்.

அடுத்த வாரம் என்னுடைய பிரசவ காலம். படுக்கையோடு கிடந்தேன். இதற்குள்ளாகவே நாங் கள் யூனியன் வில்லாவில் புது வீட்டில் நன்கு அமர்ந்து விட்டோம். ஸ்டீவ் யூனியன் வில்லாவில் புது வீட்டி லும், பாப் டௌனிங்டனிலும், ஹனி ப்ரூக்கிலும், நான் இங்கிருந்து இருபத்தைந்து மைல் நீளப் பாதை யில் இங்குமங்குமாகவும் சிதறிக்கிடந்தோம். கோலி குண்டுகள் ஓடினமாதிரி இருந்ததே தவிர, ஒரு குடும்பம் போலவே இல்லை. என் பிரசவ காலம் நெருங்கியது.

மற்ற எல்லாம் சம்பவிப்பது போலவே, மியாவின் பிரசவமும் அச்சாபீஸ் நாளன்றுதான் சம்பவித்தது.

பிறப்பு அறிவிப்புச் செய்தியை அடுத்த வார இதழுக்கு அச்சு கோர்த்துக்கொண்டே இருந்த தொழிலாளி, "பிரசவம் அச்சாபீஸிலேயே ஆகாம லிருந்ததே என்று ஆச்சரியப்படவேண்டும்" என்று கூறினார்.

பிரசவ அறையிலிருந்து நான் வெளியே வருவ தற்கும் அந்த வார இதழைப் பாப் எடுத்துக்கொண்டு வீடு வருவதற்கும் சரியாக இருந்தது.

குழந்தையைச் சுட்டிக் காட்டி, "இதுதான் கடைசி பதிப்பாக இருக்கும் என்று எண்ணுகிறேன்" என்றேன் பாப்பிடம்.

புன்முறுவலித்துக்கொண்டே கையிலிருந்த இதழைப் படுக்கையின்மீது வீசினார்.

தலையங்கப் பக்கத்தைத் திருப்பினேன். படிக்கத் தொடங்கினேன் :

## மறுபடியும் எங்களைப் பற்றி

ஆண்களிடம் சாதாரணமாகக் காணப்படும் குணாதிசயங்களில் ஒன்று, அவர்கள் பெண்களைக் காட்டிலும் அதிக புத்தி பலம் பெற்றவர்கள் என்று நினைப்பது. சட்டரீதியாக ஆண்களுக்கும் பெண்களுக்கு மிடையே சமத்துவம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது உண்மையே. ஆனாலும், தயங்காமல் இதை ஒப்புக் கொள்ளும் ஆண்கள் மிகச் சிலரே இருப்பார்கள். தான் உயர்ந்தவன் என்ற நினைப்பும், தனனை உயர்த்தியே கருதுவதும் ஆண் மகனுடைய வாழ்வுக்கு அடிப்படை யாக அமைந்துள்ளன. இதைத் தகர்த்துவிட்டால் அவன் ஒரு ராணிக்கு உழைக்கும் வேலைக்காரனாக ஆகிவிடுகிறான்; பரிதாபப்படக்கூடிய பிறவி என்று பலராலும் ஏசப்படுகிறான்; அவன் பெண்டாட்டி தாசனாகி விடுகிறான்! எந்தப் பெண்ணும் உண்மையிலேயே ஆணைக் காட்டிலும் புத்தி சக்தி அதிகம் உடைய வளும் அவள் தன்னுடைய மேன்மையைக் காட்டிக் கொள்ளுவதில்லை. அவள் கணவனுடைய இறுமாப்பு ஓங்கி வளரும்படி உற்சாகமூட்டுகிறாள். ஆதரவே இல்லாதவள்போல் அடிக்கடித் தோன்றுவாள். உடனே புருஷன் அவளுடைய உதவிக்காகவும் பாது காப்புக்காகவும் விரைவான். அவளுக்கு ஆலோசனை தேவை போலத் தோன்றும். புருஷன் வேண்டிய

ஆலோசனைகளை அள்ளி வீசுகிறான். இப்படிப்பட்ட ஒரு பெண்ணும் ஒருவிதத்தில் ராணியே. மனிதர்கள் பாடுபட்டு அவர்களுக்காகத்தான் உழைக்கிறார்கள். ஆனால், அதை அவர்கள் விரும்பியே செய்கிறார்கள்.

ஒரு வாரத்துக்கு முன் நான் 102 டிகிரி ஜுரத்துடன் வீடு திரும்பினேன். புதன்கிழமைக்குள் எட்டுப் பக்கம் பத்திரிகை வெளிவந்தாகவேண்டும். என்னால் ஒன்றுமே செய்யமுடியாதென்பது தெளிவாகத் தோன்றியது. என்னைக் கட்டிப்போட்டே இருக்கலாம். அப்படித்தானிருந்தேன். எனினும், வியாழக்கிழமை பத்திரிகை வழக்கம்போல் வரத்தான் செய்தது. தான் மிகவும் இன்றியமையாதவன் என்று சதா நினைத்துக் கொண்டிருந்த கேவலம் ஆணுக்கு, இது ஒரு பலமான அடி! நான் படுக்கையில் புரண்டுகொண்டிருந்தபோது ஜேனி - என்மனைவி - எழுதவேண்டியவற்றையெல்லாம் எழுதி முடித்தாள்; திருத்த வேண்டியதைத் திருத்தினாள்; பக்கங்களைச் சரி பார்த்தாள்; பத்திரிகையைக் கால அட்டவணை தவறாமல் விநியோகத்திற்கு அனுப்பிவிட்டாள். சீக்கிரத்திலே கால அட்டவணை தவறாமல் எங்கள் குடும்பத்திற்கும் ஒரு புது அங்கத்தினரை அளிக்கக் காத்திருக்கிறாள். பெயரளவில் ஆண் என்று சொல்லிக்கொள்ளும் பெண் இந்தச் சாதனையை மிஞ்சமுடியும்!

அவளுடைய பெயரையும் என்னுடன் சேர்த்துத் தலைப்பில் போடுவதில் உண்மையில் நான் பெருமையடைகிறேன். இன்று முதல் 'நாங்கள்' என்று கூறும்போதெல்லாம் உண்மையிலேயே நாங்கள் 'இருவரும்'தான். —ராபர்ட் மாக்கில்வெய்ன்.

ஆர்கைவ் பத்திரிகை மடிப்பது ஒரு விசேஷ வார நிகழ்ச்சி. பார்க்கில் நடக்கும் ஜூலை மாத தேசிய

விழாக்கூட இதன் முன் ஈடு சொல்லாது. ஹனி ப்ரூக்கிலேயே இது பிரசித்தம்.

ஒரு முறை ஒரு குடியானவன் அச்சகத்தில் நாங்கள் வேலை செய்வதைப் பார்த்தான். "ஓஹோ, நீங்கள் பத்திரிகையைக் கையால்தான் மடிக்கிறீர்களா?" என்று ஆச்சரியத்துடன் கேட்டான்.

முதலில் பத்திரிகையை வெளிக்கொண்டு வருவதில் ஒரு முக்கிய அம்சம், அதைக் கையால் பக்கம் தவருமல் மடிப்பது என்று நான் தெரிந்துகொண்டதே எனக்கு அதிர்ச்சியை உண்டாக்கிற்று. பத்திரிகை என்ருல் அச்சகத்தில் ஒரு கோடியில் காகிதமாக அனுப்பிஞல் மறு கோடியில் அச்சடித்து, அழகாக மடித்து விநியோகத்திற்குத் தயாராக வரும் என்று நான் எண்ணியிருந்தேன்.

ஹனி ப்ரூக்கிலும், பிற்காலத்தில் எங்கள் சொந்த அச்சகத்திலும், பத்திரிகை மடிப்பது ஒரே மாதிரிதான் செய்யப்பட்டது. பென்ஜேமின் ப்ராங்க்லின் காலத்தில் எப்படிச் செய்யப்பட்டதோ, அப்படியேதான் இப்போதும் நடந்துவந்தது. அச்சகம் என்பது அவசியமான பொருள்கள் சில சேர்ந்த இடம்; அவ்வளவுதான். ஆஞல், அதிலிருந்து வெளியாகும் வேலையை அயலான் கவனித்தால் பிரமித்தே போவான்.

பெரிய அச்சு யந்திரம் செயலாற்ற மறுத்த பின்னர், மூன்று பத்திரிகைகள் கையாலேயே அச்சில் அணைக்கப்பட்டு, இரண்டு பக்கங்களே அச்சடிக்கும் மீலி (Mihle) மிஷினில்தான் அச்சாகிக்கொண்டிருந்தன. மூன்று பத்திரிகைகளும் இருபத்திநான்கு பக்கங்களடங்கியவை. வாரந்தோறும் ஐயாயிரம் பிரதிகள் அச்சாகும். அதாவது, ஒரு லட்சத்து இருபதிஞயிரம் தாள்கள் வாராவாரம் மடிக்கப்பட்டு, இடைத் தாள்

கள் நுழைக்கப்பட்டு, கடைசி மடிப்பு ஏற்றத் தாழ்வில்லாமல் அமைக்கப்பட வேண்டும். இவ்வளவும் கையாலேயே செய்தாக வேண்டும். ஆர்கஸைவ் பத்திரிகையை மட்டும் மடித்து முடிக்க மூன்று மணியிலிருந்து எட்டு மணி காலம் வரையில் பிடிக்கும். இது எத்தனை வேலைக்காரர்கள் இப்பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதையும் அன்றைய சம்பாஷணைக்கு எது விஷயமாக அமைந்தது என்பதையும் பொருத்தே இருந்தது. உயர்பள்ளி மாணவர்கள் சிலர் எங்களுடன் வெகுவாய்ச் சேர்ந்துகொள்ளுவார்கள். புதன்கிழமை ஒரு நாள் இரவுக்காவது ஏதாவது வேலை செய்வதில் அவர்களுக்குச் சந்தோஷம் போலும்!

காகிதம் மடிப்பவர்கள் **14** வயதிலிருந்து **70** வயது வரையில் இருந்தனர். பள்ளிக்கூடப் படையினருடன், அநேகமாக பாப்பின் அத்தை ஜென்னியும் மற்றொரு அத்தை பானும் (Fan) கலந்துகொள்ளுவது முண்டு. அத்தை ஜென்னி ஐந்து குழந்தைகளை உலகத்திற்களித்து பதினைந்து பேரக் குழந்தைகளை வளர்த்து அனுபவமிக்கவள். இதற்கு மேலும் தனக்குச் செய்யப் போதிய வேலை ஏதுமில்லாததால், முடியுமானால் பத்திரிகைக்குத் தான் உதவி செய்வதாகச் சொன்னாள். பாப்பின மற்றொரு அத்தை பான் கன்னியாகவே கிழவியானவள். செவிடு; ஒவ்வொரு நாளும் பைநிறைய நோட்டீசுகள், விளம்பரத் தாள் எடுத்துக்கொண்டு குறுகுறுக்கும் பார்வையுடன், தலைக் குல்லாயை ஒரு கண் மறையும்படிச் சரிவாக அணிந்து அச்சகத்தில் காட்சி தருவாள். தோட்டக் கலையில் வல்லவள் என்று தேசத்திலேயே அவளுக்குக் கீர்த்தி யுண்டு. எங்களுக்கு ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு தோட்டப் பயிர்களைப்பற்றியும் பல விஷயங்களைச் சொல்லுவாள். ஒரு இரவு அச்சாபீசில் சிவப்பு டொமட்டோ சிறந்ததா பச்சை டொமட்டோ சிறந்ததா என்ற விவாதம் மும்

காகிதம் மடிக்கும் 'ஸதஸ்' பலர் ஒன்றுகூடி ஒரே நோக்கத்துடன் செயல்புரிவதில் எங்களுக்கிருந்த அந்நியோன்னிய ஒத்துழைப்புக்கும் பண்புக்கும் ஒரு சின்னமாகவே விளங்கிற்று. கடினமான வேலைதான். சில சமயம் என் பாதங்கள் வீங்கிவிடுவதால், ஜோடு களைக் கழற்றிவிட்டு, மேஜோடுடனேயே நடமாட வேண்டி யிருந்தது.

ஆனால், ஒற்றுமையும் நட்பும் கடைசி காகிதம் மடித்து, விலாசம் ஒட்டி, கட்டு கட்டிப் பைகளில் நிரப் பும் வரையில் குன்றாது நிலவும். வேலை இடையில் ஏற் படும் கோபதாபங்கள், சிணுங்கல், முனகல் முதலிய எல்லாவற்றையும் கடந்து எங்கள் ஒற்றுமைப் பண்பு பிரகாசித்தது. "மாலை ஐந்து மணிக்கு வேலை முடிந்து வண்டி தெருவில் இருக்கவேண்டும்" என்று சொல்லத் தவறுவதில்லை. நாங்கள் என்னவோ இரவு பத்து மணிக்கு முன் ஹனி ப்ருக்கை விட்டு நகர்ந்ததில்லை. பல சமயம் வண்டியில் காகிதக் கட்டை ஏற்றும்போது நிசி நேரத்திற்கு மேலும் ஆகும். உறங்கிக்கொண்டிருக்கும் தோட்டக்கால்களுக் கிடையே எங்கள் வண்டி ஊர்ந்து செல்லும். பனிக்காலங்களில் சக்கரங்கள் உராய்ந்து, வண்டியே சாலையோரம் கவிழ்ந்துவிடும்போல நெருக் கடி ஏற்படுவதுண்டு. சில சமயம் வண்டியிலிருந்து காகிதக் கட்டுகள் வீதியில் அவிழ்ந்து சிதறி, வண்டி வேகத்தில் அதைத் தொடர்ந்து துரத்திக் கொண்டு வருவது முண்டு.

சில சமயம் க்ளென்மூருக்குப் போகவேண்டிய கட்டு மறதியில் அச்சகத்திலேயே விட்டுப்போயிருக் கும். அதை எடுத்து வர இரவு இரண்டு மணிக்கு மேல் தபாலாபீசிலிருந்து ஹனி ப்ருக்குக்குத் திரும்பி வருவது முண்டு. கீழ் டேளனிங்டனுக்குப் போக வேண்டிய கட்டுகளில், நடுத்தாள் செருகாமலேயே

விட்டுப்போயிருக்கும். ஆனால், இதைச் சரிபடுத்த நேரம் கிடைக்காததால், அப்படியே விட்டுவிடுவதுமுண்டு. இப்படிப் பல சம்பவங்கள் ஏற்பட்டாலும், நாங்கள் ஒவ்வொரு வாரமும் தபாலாபீசின் பின் அறையில் பத்திரிகைக் கட்டுகளைக் கொண்டு சேர்த்ததும், அந்த வாரத்து அதிசயம் சம்பவித்தது என்றே எண்ணி னோம். ஆர்க்கைவ் பத்திரிகையின் அந்த வார இதழை எப்படியோ—எந்த முறையிலோ வெளிக்கொணர்ந் தோம் என்ற மன அமைதியும், சாந்தியும் எங்களுக்கு நிலவும்.

விளம்பர இலாகா மானேஜர் ஸ்தானத்தை நான ஏற்றுக்கொண்டேன். அடிக்கடி நான் வெளியே செல்லும்போதெல்லாம் குழந்தை மியாவைத் தள்ளு வண்டியில் கூடவே அழைத்துச் செல்லுவேன். பகல் காலத்தில் ஸ்டீவ் பள்ளிக்கூடத்திலிருந்து வந்துவிட் டால், அவனும் என்னுடன் வருவான்.

குழந்தைக்குப் பகல் உணவு எங்கு கிடைக்கிறதோ அங்கேதான்—வெகுவாக என்னுடைய சுற்றுகள் க்ளாரேன்ஸ் ப்ரைட்டின் துணிமணிக் கடையில்தான் முடிவு பெறும். சூடாக உண்ண ஏதாவது அங்கே கிடைக்கும். குழந்தைக்கு புட்டிப்பால் அங்குதான் கொடுப்பேன். க்ளாரென்ஸும் நானும் அந்த வார விளம்பரப் பகுதியில் வந்துள்ள விளம்பரங்களையெல் லாம் ஆராய்வோம். இடையிடையே புதுமையான துணி மணிகள் ஏதாவது வந்திருக்கிறதா என்றும் விளம்பரத் திற் கருகதையா யிருக்குமோ என்றும் ஆராய்வேன். மத்தியில் கிளாரென்ஸின் வீட்டு விஷயங்களையும் பற்றிச் சிறிது பேசுவோம். அவருடைய மனைவி தூக்கத் தில் நடமாடும் பழக்க முடையவராம். அந்தச் சமயங் களில்தான் அவளுக்குச் சிறு திண்டிகள் உண்ணுவதில் பிரியமாம். இதனால் இரவு முழுவதும் கண்விழித்து

அவளைக் கண்காணிக்கவேண்டிய நிர்ப்பந்தம் க்ளாரென்ஸுக்கு ஏற்படுமாம். இதனால் பகற் காலங்களில் கடையில் உட்கார்ந்தபடியே பூனைத் தூக்கம் போல் சிறிது சிறிது தூங்கிக்கொண்டே யிருப்பதால், வியாபாரம்கூடச் சிறிதளவு பாதிக்கப்படுகிறது என்று அவர் குறைகூறிக்கொண்டார்.

பத்திரிகையின் முதல் வருஷத்தில் மிகச் சிலருக்குத்தான் ஆர்க்கைவ் பத்திரிகையைப் பற்றித் தெரியும். அப்படி அவர்கள் தெரிந்துகொண் டிருந்தது பத்திரிகைக்குப் பெருமை தரும் விஷயங்களைப் பற்றி அல்ல. எப்போதுமே அந்த ஊரில் நன்கு நடத்தப் பட்ட பத்திரிகை இருந்ததில்லை. அதனால் விளம்பரத்தின் மூலம் வியாபாரம் பெருகும் என்னும் உண்மையை அவ்வூர் வியாபாரிகள் தெரிந்துகொள்ள வாய்ப்பே இல்லை. எனவே, விளம்பரத்தில் அவர்களுக்கு நம்பிக்கையே இல்லை. மரியாதையுடனேதான் பதிலளிப்பார்கள்; ஆனாலும், நிச்சயமாக "வேண்டாம்" என்றுதான் பதில். இதே பல்லவிதான் எல்லாவிடங்களிலும்.

"என்னுடைய கடையின் பெயரை உங்கள் பத்திரிகையில் போடுவதற்கு நாங்கள் ஏன் பணம் கொடுக்க வேண்டும்? இதே இடத்தில் முப்பது வருஷங்களாக நான் பண்டங்கள் விற்று வருகிறேன். எனக்கு முன் என் தகப்பனார் இதே கடையில் இருந்தார். என் கடை எங்கே யுள்ளது என்று எல்லோருக்கும் தெரியுமே."

இப்படிப் பலர் சொன்னார்கள். மற்றும் சிலர், "என்ன, பன்னிரண்டாயிரம் வாசகர்கள் படிக்கக் கூடிய தினசரியில் விளம்பரம் செய்வதைவிட்டு உங்கள் வாரப் பத்திரிகையிலா விளம்பரம் தரச் சொல்லு

கிறீர்கள்? என்னை என்ன பைத்தியக்காரன் என்று எண்ணிவிட்டீர்களா?" என்று முகம் சுளித்தனர்.

வெய்யி லென்றும் மழை யென்றும் பாராமல், காற்ருனாலும் பனியானாலும் விடாமுயற்சியுடன் நான் கடை கடையாகப் படியேறி இறங்கினதுதான் மிச்சம்; நான் சோர்வுற்று உற்சாகம் குன்றியதுதான் லாபம்! சிறிதளவு நான் விவாதமும் செய்யாமலில்லை; வேகமாகக்கூடப் பேசினேன். ஆனால், பாறைபோல் உடைந்திருந்த அவர்களுடைய தீர்மானத்தை என்னால் அசைக்கக்கூட முடியவில்லை. இப் பத்திரிகையில் விளம்பரம் கொடுத்தால் பலன் கிடைக்குமா எனபதை நிரூபிக்க எங்களுக்குச் சந்தர்ப்பமே அளிக்கமாட்டேன் என்கிறார்களே! இதுதான் எனக்கு வருத்தத்தைத் தந்தது.

நான் மனத்தளர்ச்சி யுற்ற சமயங்களிலெல்லாம் மிஸ் மியா ஓலா (Mis Mia Ola) என்பவள்தான் எனக்கு ஆறுதலளிப்பாள். சதைப் பற்றுள்ள குறுகிய உடல்; பனிபோல் வெளிறிய மயிர்கள். அவள் மேஜை மீது காகிதங்கள் பட்சிகளின் இறகுபோல் பரந்திருக்கும். அவளுடைய இயற்கையான புத்திக்கூர்மையை மேஜையின் மீது காணப்பட்ட ஒழுங்கீனம் ஓரளவு மறைத்தது என்றே சொல்லவேண்டும். அவள் ஒரு துப்பாக்கிச் செவிடு. வெடி வெடித்தாலும் "என்ன புகை?" என்று கேட்கும் இனம். ஆனால், உதடு அசைவதிலிருந்து அவள் புரிந்துகொள்ளும் சாமர்த்தியம் காதுள்ளவனிடம்கூடக் காண்பது அரிது. குடும்ப வியாபாரமாக வளர்ந்துவந்த அந்த இரும்புச் சாமான் கடையில் அவள் கடைக் கணக்குகளைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அங்கேதான் என்னுடைய தினசரி சுற்றுப் பிரயாணத்தை முடித்துக்கொள்ளுவேன். பல பேர் "இந்த வாரம் என்ன விளம்பரம் செய்வது என்றே தோன்றவில்லை" என்றும் சொன்னார்கள்.

நான் சிந்தித்தேன். அவர்கள் சொல்லியதில் உண்மை கொஞ்சம் இருக்கத்தான் செய்தது. பெயரளவில் இரும்புச் சாமான் கடை என்ருலும், க்ரிப்பித் கடை ஊரிலேயே மிகவும் பழமையான பலசரக்குக் கடை. சுமார் நூறு வருஷங்களாக அந்தப் பக்கங்களிலிருந்த எல்லாத் தோட்டக்காரர்களும் அங்கேதான் சந்திப்பது. க்ரிப்பித் கடையில் கிடைக்காத சாமானே உலகத்தில் இருக்காது. பழங்காலத்துக் குதிரைச் சேணம் முதல் நவீனமான வேடை வீட்டுச் செடிகள் வரையில் எல்லாம் கிடைக்கும். ஆனல், கூர்ந்து கவனிக்க வேண்டும். சொந்தக்காரர்களுக்கே அவர்கள் கடையில் என்னென்ன சாமான்கள் உள்ளன என்று தெரியாது. வருஷக் கணக்கில் சாமான்கள் சேர்ந்திருந்தபடியால், வாடிக்கைக்காரர்களே கடைசியில் புகுந்து ஏணிகளில் ஏறித் தங்களுக்கு வேண்டியவற்றைக் கண்டுபிடிப்பார்கள். அப்படி அவர்களே பார்த்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டனர். சில பொருள்களுக்குத்தான் விலைச் சீட்டு ஒட்டியிருக்கும். சிப்பந்திகளில் பலர் செவிடு. எனவே, வாங்கின பொருளுக்கு நியாய விலையைக் கொடுக்கப் பிரயாசைப்படவேண்டும். எட் க்ரிப்பித் மிகவும் நல்லவர். தாராள மனப்பான்மை உடையவர். பல தடவைகளில் ஒரு பொருளின் விலை என்னவென்ருல், தன் கைகளை விரித்து, "என்ன விலை என்று எனக்கே தெரியாது. 50 செண்டு கொடு, போதும்; நான் திருப்தி யடைகிறேன்" என்பார்.

விளம்பரத்தைப் பற்றிப் பேச்சுத் தொடங்கினதும், "மிஸ் ஓலாவைப் பார்த்துப் பேசிக்கொள்" என்று எட் சொன்னர். "அவள் எவ்வளவு இடம் எடுத்துக்கொள்ளுகிருளோ அவ்வளவு போதும். அவள் என்ன விளம்பர விஷயம் சொல்லுகிருளோ அதைப் போடுங்கள்" என்று மேலும் சொன்னர்.

அங்கிருந்து ஆணி பீப்பாய்களேயும், பீங்கான் சாமான்களேயும் தாண்டி கடையின் பின்புறத்தில் ஒரு மூலேயில் துண்டுச் சீட்டுகளுக்கும் கணக்குப் புத்தகங்க ளுக்கு மிடையில் அமர்ந்திருந்த மிஸ் ஓலாவை அடைந்தேன்.

ஒவ்வொரு முறையும் என்னேப் பார்க்கும்போ தெல்லாம், கடைப் பகுதியிலிருந்து தன்னுடைய ஜாபிதாவில் பதிவு செய்ய மறந்துவிட்ட பூதம் பிசாசு இனத்தைச் சேர்ந்த ஒரு வஸ்துவைக் காண்பதுபோல என்னே ஏறஇறங்கப் பார்ப்பாள்.

மேஜைமீது சிதறிக் கிடக்கும் காகிதங்களேப் பொறுக்கிக்கொண்டே "ஓ, நீயா? என்னிடம் தயா ராக ஒன்றுமில்லேயே! சற்று இரு, பார்க்கிறேன். இதென்ன...இரும்புக்கெட்டில்களே எப்படிச் சுத்தமாக வைத்துக்கொள்வது? மீன் பிடிக்கப் போகும்போது அணியும் பூட்ஸ்...ஹா! இப்போதுதான் கவனம் வருகிறது! புதிதாகத் துடைப்பங்கள் சில இப்போது தான் வந்திருக்கின்றன...ஹா! இது மிகவும் நேர்த்தி யானது—புல் பயிராக்க விதைகள்—புது ரகப் பெயிண்டுகள்."

ஒருவாறு இவைகளே யெல்லாம் சரிபார்த்து விட்டுத் தனது ஆசனத்தில் அமைதியுடன் சாய்ந்ததும், நான் கேட்டேன்:

"இன்னும் வேறு என்ன இருக்கிறது?"

"என்னது?" என்று தன் தலேயைத் திருப்பிக் கவனித்தாள்.

"என்ன விலேகள்? என்ன அளவு?" என்று கேட்டுக்கொண்டே, என்னுடைய நோட்டில் குறித்துக் கொள்ளத் தயாரானேன்.

" அதைப்பற்றிக் கவலை வேண்டாம். ' புல் விதை ' என்று மட்டும் போடு ; மறந்துவிடாதே. அதற்குத் தேவையான காலம் இது " என்று பதில் சொன்னாள்.

மிஸ் ஓலாவின் பலசரக்குக் கடையிலிருந்து ஒரு விளம்பரம் தயாரிக்கவேண்டு மென்றால் அவியல் சமைப்பதுபோல இருக்கும். ஒரு பொருளுக்கும் மற்ற பொருளுக்கும் சம்பந்தம் இருக்காது; ஆனால், அவியல் மட்டும் சுவையுட னிருக்கும்.

கணக்கென்றால் எங்களுக்குக் கலவரம். மிஸ் ஓலாவுக்குப் போகும் விளம்பரக் கணக்குகள் சரிவர இருக்காது. தேசீய விளம்பரப் பகுதிக்குப் போக வேண்டிய பட்டியல் இங்கே ஓலாவுக்கு வந்திருக்கும். அல்லது விளம்பர நீளத்தில் ஒரு அங்குலம் கூட்டியோ குறைத்தோ பட்டியல் தயார் செய்திருக்கும். ஒவ்வொரு மாதக் கடைசியிலும் எங்களிடையில் ஒத்திட்டு விவாதம் நடந்த பின்னரேதான் கணக்குப் பரிசீலனையாகும். ஆனாலும், மிஸ் ஓலாவுக்கு எங்களிடம் வெறுப்பில்லை. ஒரே முறைதான் அவள் கடுமையாக இருந்தாள். ஒரே வாரத்தில் 4 வாழ்த்து விளம்பரமும் சேர்ந்து ஆர்க்கைவில் வெளியிடப்பட்டால் யாருக்குத் தான் கோபம் வராது?

எங்கள் காரியாலயத்திற்கே அவள் வந்துவிட்டாள். " நான்கு விளம்பரங்களை எப்படி நீங்கள் ஒரே வாரத்தில் போட்டீர்கள் ? " என்று இறைந்தாள்.

" மிஸ் ஓலா, சற்றுப் பொறுங்கள். தேசீய விளம்பர ஏஜென்ஸி மூலம் மூன்று விளம்பரங்கள் வந்தன. அவைகளில் விநியோகஸ்தர்கள் என்று உங்கள் கடையின் பெயர் கொடுக்கப்பட்டிருந்தது. அம்மூன்றுக்கும் நீங்கள் பணம் கொடுக்கவேண்டிய தில்லை " என்று விளக்கினேன்.

"பணத்திற்காகச் சொல்லவில்லை. ஒரே இதழில் எங்களுடைய பெயர் நான்கு இடங்களில் காணப் படுவது நன்றாக இல்லை; அதனால்தான் சொன்னேன்" என்றாள்.

•

உண்மையில் விளம்பரதாரர்கள் எங்கள்மீது குறைகூற நிறைய சந்தர்ப்பங்களிருந்தன. ஒரு சமயம் டெலிபோன்மூலம் ஒரு விளம்பரம் சேகரித்தேன். அடுக்களையில் (mantel) அத்திச் செடிகளைப் பற்றியது அது.

அடுத்த வாரம் விளம்பரதாரர் எங்கள் காரியாலயத்திற்கு வந்தார். சாவதானமாக ஆரம்பித்தார். "ஜேன், உனக்குத் தெரியுமா? என்னுடைய அத்திச் செடி குறைந்தது ஐம்பது பவுண்டாவது எடையுள்ளது; ஐந்தடி உயரமுள்ளது."

"இதைக் கேட்க மிகவும் சந்தோஷம். அவைகள் மிகவும் செழிப்பாக வளர்க்கப்பட்டிருக்கின்றன என்பது தெரிகிறது"—நான் உற்சாகத்துடன் பதில் சொன்னேன்.

"நல்லது. இவ்வளவு பெரிய செடியை அடுக்களையில் வைக்க முடியுமா? டெலிபோனில் நான் உனக்குச் சொன்னது 'அழகுக்காக (Ornamental) அத்திச் செடிகள்' என்றுதானே?" என அவர் விளக்கினார். குரலில் கடுமை இல்லை; சாவதானமே நிலைத்திருந்தது.

பொறுமை என்னும் நேர்த்தியான தன்மை என்னிடம் எப்போதுமே இருந்ததில்லை. ஆனால், இந்த விளம்பரதாரர் அக்குணம் எப்படிப்பட்டதென்பதன் சாயையாவது என்னிடம் படரும்படிச் செய்தார். காலத்துடன் போட்டியிட்டுக்கொண்டிருந்த நான், எந்த

விளம்பரதாரராவது என்னைக் காக்கவைத்தாலும், ஏதாவது குறைகூறினாலும் எனக்குக கோபந்தான் வரும். ஒரு சமயம் ஒரு செருப்புக் கடையில் சொந்தக் காரர் செருப்புப் பெட்டிகளைக் கடையில் அடுக்கி அடுக்கி வைப்பதை நாற்பத்தைந்து நிமிஷம் பார்த்துக் கொண்டு நின்றேன். கடைசியில், "விளம்பரம் ஒன்றும் கொடுப்பதாக உத்தேசமில்லை" என்று என்னிடம் கூறியபோது, துப்பாக்கியிலிருந்து குண்டு பாய்வது போல அவர்மீது பாய்ந்தேன். முதலிலே சொல்லியிருக் கலாமே ; காக்கவைக்க வேண்டிய அவசிய மில்லையே ! என்று கடிந்துகொண்டேன். மோட்டார் வண்டியை ஸ்டாண்டில் அதிக காலம் விட்டு வைத்திருந்ததற்காக அபராதமும் கட்டவேண்டி யிருந்தது. இதைப் பார்த்ததும் அந்த விளம்பரதாரர்மீது மேலும் கோபம் தான் மூண்டது. ஆபீசுக்குத் திரும்பி பாப்பிடம் நேரே சென்றேன். என்னைப் பொருத்தமட்டில் தம்முடைய விளம்பரதாரர்கள் எல்லாம் இறந்துவிட்டுப் பத்து மைலுக்கப்பால் அவர்களைக் கொண்டுபோய் அடக்கம் செய்வதா யிருந்தாலும், நானே குழி பரித்து அவர்களை அடக்கம் செய்யத் தயாராக இருக்கிறேன் என்று மனமிடிந்து கூறினேன்.

பெண்கள் தங்கள் பலவீனத்தை வெளிப்படை யாகக் காட்டிக்கொள்ளும்போதுதான் ஆண்கள், தாங் கள் எவ்வளவு உயர்ந்தவர்கள் என்பது புரிகிறதா என்ற பாவம் தோற்றும்வண்ணம் நடந்துகொள்வார் கள். பாப் என்னை அந்தச் சமயம் பார்த்த பார்வையில் அந்த பாவம்தா னிருந்தது.

அவருடைய அனுதாபத்தைத்தான் எதிர்பார்த் தேன் நான்; அதற்கு மாருக, எனக்குக் கிடைத்தது ஒரு சூடுதான். "அது உன்னுடைய வேலை. வாடிக்கைக் காரர்கள் சொல்வது எப்போதுமே சரி என்பது உன்

நினைவி லிருக்கவேண்டும். உன் விஷயத்தில் விளம்பர தாரர்கள்தான் வாடிக்கைக்காரர்கள். அவர்களுக்குத் தானே உன் சாமானை நீ விற்கிருய்? என்ருலும் எதிர்த்துப் பேச முடியும் என்ற உணர்ச்சியை உனக்குத் தோற்றுவிக்கலாம் என்ற நிலையிலுள்ள வாடிக்கைக்காரன் ஒரு தனி இனம்தான். எப்படி யிருந்தாலும் இது உன் வேலை—உன் பாடு!"—இதை வெகு சாவதானமாகச் சொல்லிவிட்டு, ஒரு குறும்புப் பார்வை பார்த்து மேலும் சொன்னார்: "இதற்கெல்லாம் ரோஷப்பட்டுக்கொள்வதானுல் கூட்டு ஆசிரியர் ஸ்தானத்திலிருந்தும்பத்திரிகைத்தலைப்பிலிருந்தும் உன் பெயரை எடுத்துவிடுகிறேன். ஒரு விற்பனையாளருக்குப் பொறுமைதான் முதல் அரண். மேலும், மற்றவர்கள் உன்னிடம் பணம் இல்லாமல் நடந்துகொண்டால் நீயும் அதேபோல் நடந்துகொள்ளவேண்டுமா?"

இதைக் கேட்டுக்கொண்டு மன அமைதிக்காகப் பின்னல் போட முயன்றேன். செருப்புக் கடைக்காரனுக்கு ஒரு ஜதை மேஜோடு பின்னிக் கொடுத்தேன். அன்றுமுதல் ஒரு நிரந்தர விளம்பரதாரரைப் பிடித்து விட்டேன்.

காலப்போக்கில் நகைக் கடைக்காரர்களைக் காலை வேளைகளில் பார்ப்பது நல்லதென்று தெரிந்துகொண்டேன். அவர்களில் கால் நோவு தெரிவதற்கு முன்னும் அவர்களின் மனைவிமார்களின் நச்சரிப்புகள் தொடங்கு முன்னும்தான் அவர்கள் தங்கள் சுயநிலையில் இருப்பார்கள். பீட்டர் எர்ஸ்கின் என்பவரைக் கண்டால் "உங்கள் பையன் பள்ளிக்கூடத்தில் நன்ருகப் படிக்கிருனு?" என்று குசலம் விசாரிக்கக் கற்றுக்கொண்டேன். அவன் சந்தோஷமாக, "நன்ருகப் படிக்கிருன்" என்று பல்லை இளித்தால், எட்டு அங்குல விளம்பரம் அவனிடமிருந்து வாங்கலாம் என்று கணக்

கிடுவேன். மாருக, மறுபடியும் தன்னுடைய பையனைப் பள்ளிக்கூடத்திலிருந்தே நீக்கிவிட்டார்கள் என்று சொன்னுல், அன்று அவனிடம் எவ்வளவு நேரம் பேசினுலும் ஒரு காசுக்கும் பிரயோஜனப்படாதென்றும் தெரிந்துகொண்டேன். சிறு ஊரில் எல்லாமே ஒரு பொதுஜனத் தொடர்பு வேலையே. அவர்கள் உன்னை நேசித்தால் உனக்கு வேண்டியவையெல்லாம் கிடைக்கும். உன்னுடைய பத்திரிகை லட்சம் பிரதிகள் நடமாடினுலும், ஒரே விளம்பரம் கடை முழுதும் வாங்குவோர்களைத் திணிக்க இயலுமாஞலும், கடையின் சொந்தக்காரர் 'நீ சரியான மனிதனல்ல' என்று எண்ணிவிட்டால், அவரிடமிருந்து இரண்டு அங்குல விளம்பரமும் வாங்க முடியாது.

* * *

அச்சகத்தின் தொல்லைகளுக்கும், வீட்டிற்கும் அச்சாபீசுக்கும் டௌனிங்டனுக்குமிடைய அடிக்கடி போய்வரவேண்டிய அல்லல்களுக் கிடையில், அச்சுத் தொழிலாளிகள் மூன்று பத்திரிகைகளுக்கும் வேலை செய்யவேண்டியதால் ஓய்வின்றி செயலாற்றினுலும், எங்களுடைய முக்கிய பிரச்சினை மனேநிலையைப் பொருத்ததுதான். முதல் ஒரு வருஷ காலத்தில் இதுதான் எங்கள் வேலை.

உள்ளூரில் ஒரு பத்திரிகைக்கு அவசியமே இல்லை என்றும், இரண்டு தினசரிகள் அடுத்த நகரத்திலிருந்து இந்த ஊரில் நன்கு நடமாடுகின்றன வென்றும், ஆர்க்கைவ் முன்னுள் ஆசிரியரின் அசட்டையும் அந்தப் பத்திரிகையின் க்ஷீணமும், நகர தினசரிப் பத்திரிகைகள் விரிவாக நடமாட சந்தர்ப்பமளித்ததென்றும் நாங்கள் உணர்ந்தபோது, எங்கள் பத்திரிகை எந்த அம்சத்திலும் இவைகளைக் காட்டிலும் வேருன முறையில் இருந்தால்தான் முன்னேறலாம் என்று நிச்சய

TY EXTENSION LI

மாகக் கண்டேன். ஆகவே, தினசரியின் டௌனிங்டன் நிருபருக்குக் கிடைக்காத செய்திகளாகத் தேட வேண்டிய நிர்ப்பந்தம் எங்களுக்கு ஏற்பட்டது. அவர் அனுப்பியிருக்கும் செய்திகளை மாற்று முறையில் கவர்ச்சிகரமாக எழுதவும் நாங்கள் திட்டமிட்டோம். எங்கள் வேலையும் காலவரம்பின்றி வளர்ந்துகொண்டே யிருந்தது.

வின்ஸெண்ட் ஷீன் என்னும் பிரபல பத்திரிகை நிருபர், தன் இனத்தைப்பற்றிக் குறை கூறுகையில், "நாங்கள் உலகத்தின் கஷ்டங்களும் வறுமையும் உலவும் காட்சிசாலையில் காட்சி காண்பதையே தொழிலாகக் கொண்டவர்கள்" என்று விவரிக்கிறார். நகரப் பிராந்திய நிருபர்களுக்கு இது முற்றிலும் பொருந்தும். உணர்ச்சிமிக்க சம்பவங்களையோ கோரமான சம்பவங்களையோ மையமாக வைத்து, நிருபர்கள் தங்கள் கதைகளைப் பின்னிவிடுவார்கள். அவர்களுக்கு 'முதல்தர செய்திகள்' என்று கருதப்படுவதெல்லாம் கிராமாந்திரப் பத்திரிகைக்குச் 'செய்திகளே' அல்ல. நகரப் பத்திரிகைகளில் கொட்டை எழுத்துக்களில் வெளிவந்துள்ள துன்பகரமான செய்திகளைப் படித்த பின்னர், கிராம ஜனங்கள் தங்களுடைய சொந்த ஊர்ப் பத்திரிகைகளைப் புரட்டி, சட்டத்திற்கு விரோதமில்லாது—ஆடம்பரமில்லாது—சம்பிரதாயத்திற்கு மாறாத தங்களுக்குத் தெரிந்த ஊர் ஜனங்களின் நடவடிக்கைகளைப்பற்றிப் படிக்கத்தான் ஆசைப் படுவர்.

உள்ளூர் மாதர் சங்கம் அல்லது நகரக் கழகம் முதலியவைகளின் நடவடிக்கைகளை ஒவ்வொரு வாரமும் புதுப்புது முறையில் சுவை குன்றாது எழுத வேண்டுமென்றால் எளிதான காரியமன்று. அதற்கு சாமர்த்தியமும், கற்பனாசக்தியும், உறுதியும் மிகுதி

யாக வேண்டும். டௌனிங்டனிலேயே நாங்கள் செய்வது ஒரு புது முயற்சி; முன் ஒருவரும் செய்ததில்லை. எனவே, பலர் எங்கள் செய்கைகளையும் சந்தேகத்துடனே பாவித்தனர். உள்ளூர் தொழில் முதலாளிகள் பொதுஜனத் தொடர்பு என்றாலே சொந்தத் தகராறுகளை அம்பலத்தில் பரிமாறுதல் என்றுதான் எண்ணியிருந்தார்கள்.

ஒரு சமயம் ஊருக்கு வெளியில் அப்போதுதான் உருப்பெற்றுத் தொடங்கிய ஒரு ஸ்தாபனத்தின் சொந்தக்காரரைக் காணச் சென்றார். கட்டிடம் எழும்பிக்கொண்டிருந்ததை ஊரில் எல்லோரும்தான் கவனித்தனர். எங்களுக்கும் அதைப்பற்றி 'என்ன, ஏது' என்று தெரிந்துகொள்ள பல கடிதங்கள் வந்தன. சொந்தக்காரரைக் கண்டு "என்ன தொழில் அங்கே ஸ்தாபிக்கப்போவது?" என்று கேட்டபோது அவர், "அதைப்பற்றி மற்றவர்கள் யாரும் கவலை கொள்ளவேண்டியதில்லை" என்று அலட்சியமாகச் சொன்னார். நிதானத்துடன், தான் உள்ளூர்ப் பத்திரிகையின் சார்பில் வந்திருப்பதாகவும், ஊரில புது தொழில் ஸ்தாபிக்கப்பட்டால், அதைப்பற்றி ஊர் ஜனங்களுக்குத் தெரியப்படுத்துவது அவருடைய தொழில் என்றும், எப்படியும் புதுத் தொழிலைப்பற்றி முன்னாடியே பத்திரிகையில் எழுதியிருந்தால், அந்தப் புது ஸ்தாபனத்திற்கும் நன்மைதானே என்றும் பலவாறு பாப் அவருக்கு விவரித்தார். பல ஸ்தாபனங்கள் அந்தச் செய்தியை விளம்பரமாகவே பக்கம் பூராவும் கொடுப்பார்களே என்பதைப் பாப் சொல்லவில்லை. செய்தி மட்டுமேதான் அவர் கோரினார். ஆனால், அவர் மரியாதைகூடத் தெரியாதவராகக் கண்டிப்பாக இருந்தபோது, அந்த வார இதழில் இப்போட்டியை நடந்தது நடந்தபடியே விவரித்தார். "புது தொழில் ஸ்தாபனத்தின் சொந்தக்காரர், அவர்

செய்யும் தொழிலில் ஊரில் ஒருவருக்கும் அக்கறை வேண்டாம் எனகிருர்'' என்று கொட்டை எழுத்தில் தலைப்புக் கொடுத்து எழுதியிருந்தார். சொந்தக்காரர் எதிர்பார்த்தபடி ஆவேச மடைந்தார். பாப்பைப் போலவே சொந்தக்காரரிடம் அவமான மடைந்த மற்றவர்களு மிருந்தனர். அவர்கள் பாப் எழுதியவை முற்றிலும் சரிதான் என்று ஆமோதித்தனர். பாப் மட்டும் உள்ளூர சந்தோஷப்படவில்லை. ஏதோ குற்றம் செய்துவிட்டது போலவே நடந்துகொண்டார். பல நாட்கள் "நான் செய்தது ஒரு மட்டரகமான சூழ்ச்சி; அதை நான் செய்திருக்கக்கூடாது'' என்று சொல்லிக் கொண்டே யிருந்தார்.

* * *

நாங்கள் பத்திரிகையை வாங்கிய பின்னர், ஒரு சமயம் பழங் குப்பைகளைக் களைந்தபோது இரண்டு பெட்டிகள் நிறைய பழம் போட்டோக்கள் கட்டுக் கட்டாக தூசி படிந்து கிடைத்தன. கட்டுகளுக் கிடையில் சுண்டெலிகள் சௌக்கியமாக வாசம் செய்து கொண்டிருந்தன. ஒரு போட்டோ எப்போதோ காலமாய்விட்ட முன்னுள் மேயருடையது. மற்ருென்று காலஞ்சென்ற டாக்டருடையது. இவைகள் எல்லாம் ஆர்க்கைவ் ஆரம்பிக்கப்பட்ட 1875-ம் வருஷத்திலிருந்த டௌனிங்டன் மக்களின் வாழ்க்கைத் தகவல்களைப்பற்றித் தொடர்பு கொண்டிருந்தன. அந்த அம்சத்தில் அவை ஒரு பொக்கிஷமே. புதியதாகப் போட்டோ எடுக்காமலும் அதிலிருந்து பிளாக்குகள் பிலிடேலிப்பியாவிலிருந்து தருவித்துக்கொள்ளாமலும் இந்தப் பெட்டியிலுள்ள பழைய பிளாக்குகளை உபயோகப்படுத்திப் பத்திரிகையில் ஒரு புதுமையைப் புகுத்த முடியும் என்று தோன்றிற்று. அந்தப் படங்களில் ஒவ்வொன்ருக வாராவாரம் போடுவதென்றும், அதை யார் சரிவர அடையாளம் புரிந்து தக்க ருசு

வுடன் படத்தில் கண்ட பிரமுகரைப்பற்றி வியாழக் கிழமை 9 மணிக்கு முதலாவதாக விவரம் தெரிவிக் கிறார்களோ அவர்களுக்கு ஒரு பரிசு வழங்குவதென் றும் தீர்மானித்தோம். பரிசு என்றால் பணமன்று; ஆர்க்கைவ் பத்திரிகை சந்தா இல்லாமல் அனுப்புவது. முதல் வாரம் நூறு பேர் வந்தார்கள். அதற்கடுத்து வியாழன், வெள்ளி, சனி மூன்று நாட்களிலும் சுமார் இருநூறு பேர் வந்தார்கள். அநேகமாக பிரசுரிப் பதற்கு முன்னமே, "யார் இவர்?" அல்லது "இது எங்குள்ளது?" என்ற தலைப்புடன் வெளிவரவிருக்கும் படத்தை அடையாளம் புரிந்து, எங்களுக்குந் தெரி விக்க டௌனிங்டனில் வயது முதிர்ந்தவர்கள் யாரா வது கிடைத்துக்கொண் டிருந்தார்கள். 'மர்ம மாளிகை' என்ற ஒரு வீட்டைப் பற்றித்தான் எங்களுக்கே ஒரு தகவலும் கிடைக்கவில்லை. அது எங்குள்ளது என்று இதுவரையில் ஒருவராலும் சொல்ல முடியவில்லை. ஒவ்வொரு புது வருஷத்திலும் இதை முதல் பக்கத்தில் பிரசுரித்து அது எங்குள்ளது என்று விவரம் கூறுவோருக்கு ஐம்பது டாலர் பரிசு வழங்குவதாக விளம்பரம் செய்தோம்.

இந்தப் போட்டி கிராமாந்திரப் பிரதேசம் முழுவதி லும் விவாதங்களை உண்டாக்கியது. வியாழக்கிழமை காலை எந்தத் தபாலாபீசில் நின்றாலும், ஒரு கூட்டம் கூடி இந்த மாளிகை எங்கிருந்தது—யாருடையது என்று விவாதித்துக்கொண்டிருக்கும். தபாற்காரன் அல்லது அவன் மனைவி "ராக்ரேவன் பாதைக்கப்பால் வசித்துவந்த ஸைலாஸ் மார்டின் வீடுதான் அது" என்பாள். "தீப்பற்றி 1930-ம் ஆண்டில் எரிந்து போன லின்ஹேவன் மளிகைக்கடை அது" என்று மற்றவர் சொல்லுவார்.

ஒரு சமயம் படுக்கையைவிட்டு எழுந்திருக்கக்கூட வில்லை. ஒரு சந்தாதாரர் வேகமாக எங்களிடம் வந்தார்.

அவர் ஏதோ ஆட்டம் ஆடிக்கொண் டிருந்தாராம். இந்த விளம்பரத்தைக் கண்டதும், விவாதம் ஏற்பட்டு அவர்கள் ஆட்டம் நின்றுவிட்டதாம். அன்றைய சாயங்காலம் ஆட்டமே தடைப்பட்டு நின்றுவிடும் போலிருந்ததால் அவர் மிகவும் கஷ்டப்பட்டாராம். ஆட்டத்தைத் தொடங்குவதற்காகவாவது ஒருவராலும் அடையாளம் சொல்லமுடியாத இந்த மாளிகை எது என்று விளக்குமாறு எங்களையே கேட்டார்.

'யார் இவர்' அல்லது 'எங்குள்ளது' என்ற படங்களுடன் இதர செய்திகளைக் கொண்ட படங்களும் பிரசுரித்தோம். ஆனால், இது மிகவும் கஷ்டமாக இருந்தது. முதலாவதாக நாங்கள் உள்ளூரில் ஒரு போட்டோ எடுப்பவரைத் தேர்ந்தெடுக்கவேண்டும். ஒரு பிரதி நன்கு தயார்செய்து அவனிடமிருந்து தருவிக்கவேண்டும். அதைப் பிலிடெல்பியாவுக்குத் தபாலில் அனுப்பவேண்டும். அங்கு அதிலிருந்து பிளாக்குகள் தயார்செய்து திரும்பி வரவேண்டும். இது மிகவும் செலவு மிகுந்த வேலை. படிப்போர்க்கு ஊக்கமளித்தது என்பதைப் பார்க்குமிடத்து இந்தச் செலவுகள் அவசியமானது என்றே தோன்றியது.

விளம்பரங்களை அதிகப்படுத்த ஒரு புதுமுறையைக் கையாண்டோம். ஒவ்வொரு வாரமும் ஒரு சந்தாதாரரின் பெயரை அந்த வார விளம்பரங்களில் ஏதாவது ஒன்றில் மறைமுகமாகப் புகுத்திவிடுவது. எந்த விளம்பரதாரருடைய விளம்பரத்தில் இந்தப் பெயர் புகுத்தப்பட்டிருக்கிறதோ, அவர் அந்தச் சந்தாதாரருக்கு ஒரு மலர் மதிப்புக்கு ஏதாவது அவர் கடைச் சாமான் வாங்குவது என்று திட்டம் போட்டு, விளம்பரதாரர்களையும் இதற்கு இணங்க வைத்தோம். எங்கள் சந்தா கார்டுகளிலிருந்து வாராவாரம் கண்ணை மூடிக்

கொண்டு ஒரு கார்டை எடுப்போம். அந்தச் சந்தாதாரரின் பெயரை விளம்பரப் பகுதியில் எங்காவது நுழைத்து வைப்போம். இம்முறை இரண்டு விதத்தில் பலனளித்தது. சந்தாதாரர்கள் எல்லா விளம்பரங்களையும் விடாமல் படிக்கத் தொடங்கினார்கள். கூர்ந்து படிக்கவேண்டிய சிறிய எழுத்துக்களைக்கூட விடாமல் படித்தார்கள். கடைகளுக்குப் பல புது வாடிக்கைக்காரர்கள் வந்தார்கள். தெருவில் நடந்துகொண்டே ஆர்க்கைவ் பத்திரிகையைத் தலைகீழாகவும், பக்கவாட்டாகவும் திருப்பித் திருப்பி விளம்பரப் பகுதியை ஓரக்கண்ணால் பார்க்கும் பலரை வீதிகளில் நான் கண்டதுண்டு. சந்தாதாரர்கள், தங்கள் பெயர் காணப்படாதபோது எங்களைக் குறைகூறுவதுமுண்டு. பாரபட்ச முடையவர்களென்றும், எங்களுக்கு வேண்டிய சந்தாதாரரின் பெயரை மட்டுமே பொறுக்கி எடுக்கிறோம் என்றும் குற்றம் சாட்டினார்கள். ஒரு சமயம் ஒரு ஸ்திரீ கோபமாக எங்களிடம் டெலிபோனில் பேசினாள். அவள் பெயர் ஒரு பூக்கடைக்காரன் விளம்பரப் பகுதியில் இருந்ததாம். அந்தப் பகுதியில் போட்டதற்காக அவளுக்குக் கோபம்.

"புஷ்பங்கள் எனக்குப் பிடிக்காது; அவைகளை வெறுக்கிறேன். என்னுடைய பேரப்பிள்ளைக்கு ஒரு பொம்மை வாங்கவேண்டுமென்பதுதான் என் ஆசை. பூக்கடைக்காரன் ஒரு டாலர் மதிப்புக்குப் புஷ்பம்தான் கொடுப்பதாகச் சொல்லுகிறான். என்னுடைய பேரனுக்கு நான் பொம்மை வாங்கக்கூடாது என்று என்னைக் கட்டுப்படுத்த நீங்கள் யார்?'' என்று அவள் பொரிந்து தள்ளினாள்.

மனிதத் தன்மையின் போக்கு எங்களுக்கு விளங்கியது. அவளுக்குக் கடலைக்கொட்டை இனமாகக் கொடுத்தால் மரகத மணிகளாக ஏன் இனம் வழங்க்

வில்லை என்று குறைபடுவது மனித சுபாவம் என்று வருத்தத்துடனே தெரிந்துகொண்டோம்.

'டிஜ்ஜஸி' என்று ஒரு பகுதி பள்ளிக்கூடச் சிறு வர்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது. ஒரு பள்ளிச் சிறுமி அதற்கு ஏதோ எழுதிவந்தாள். அவள் பெயரை வெளியிடாமல் புனைபெயரிலேதான் எழுதினாள். இந்தப் பகுதி எல்லோராலும் விரும்பிப் படிக்கப்பட்டது என்பதை அறிந்து நாங்கள் சந்தோஷித்தோம். உபாத்தி யாயர்களைப் பற்றி பல ஹாஸ்யங்கள் அதில் இருந்தன. ஆகவே, அவர்கள் மட்டும் இப்பகுதியை ரசிப்பதில்லை. இதெல்லாம் பள்ளிக்கூடப் பிள்ளைகள் பாஷையி லேயே இருந்தன. எங்களுக்கு அந்தப் பாஷை புரியா விட்டாலும், பிள்ளைகள் புரிந்துகொண்டு அதன் சுவையை அனுபவித்தால், அதைத் திருத்தி நல்ல இங்கிலீஷில் மாற்றி அமைப்பதே யில்லை. அவள் எழுதி அனுப்புவதை அப்படியே பிரசுரித்துவிடு வோம்.

ஒருநாள் பள்ளித் தலைவர் எங்களிடம் வந்தார். ஹாஸ்டலில் சமையற்காரிக்கும் அவருக்கும் சிறு மனஸ் தாபம் ஏற்பட்டுவிட்டது என்றும், அதற்கு நாங்கள் தான் பொறுப்பு என்றும் சொன்னார். அவள் பரிமாறிய குழம்பிலிருந்து ஒரு கொண்டை ஊசி, சாப்பிட்டுக் கொண்டிருந்த ஒரு பெண்ணுக்குக் கிடைத்ததாம். அதை எல்லோருக்கும் தெரியும்படி எங்கள் 'டிஜ்ஜஸி' பகுதி மூலம் அம்பலப்படுத்திவிட்டோம். அவள் மனத் தாங்கல் படுகிறாள் என்று அவர் விளக்கினார். உண் மையிலேயே பாப் வருத்த மடைந்தார். பள்ளிச் சிறு வர் பாஷையே தமக்குப் புரியவில்லை என்றும், இப்படி ஒரு அர்த்தம் கொடுக்கும் வாக்கியம் பிரசுரத்திற்கு முன் எடுபடாமல் போனதற்குத் தம் அறியாமையே காரணம் என்றும், பள்ளிச் சிறுவர்களைத் தவிர

மற்றெவருக்கும் அது புரிந்திராது என்றும் சமாதானம் சொல்லி யனுப்பினர்.

இனவாரி (Classified) விளம்பரப் பகுதி அமைந்த பக்கம் பலருக்குச் சுவையுள்ளதாக இருந்தது. பாப்புக்கும் எனக்கும் பல சமயங்களில் லாபமும் விளைவிக்காமலில்லை. எங்களுக்கு எப்போதுமே நேரம் அதிகம் கிடைக்காது. ஆர்க்கைவ் பத்திரிகையை வளர்க்கப் போதுமான திட்டங்கள் பல இருந்தாலும், அமுலில் கொண்டுவர முடிந்தது மிகச் சிலவே. நாங்கள் பத்திரிகைக்கு எழுதும் விஷயங்கள், விளம்பரங்கள் எல்லாம் டெலிபோன் பேச்சுகளுக் கிடையிலும், செய்திகள் சேகரிப்பதன் நடுவிலும், வெகு வேகமாகவேதான் எழுதப்படும். எங்களால் வேலை நெருக்கடியைச் சமாளிக்க கடைசியில் கீழ்க்கண்ட விளம்பரம் விடுத்தோம்:

"தேவை. ஆர்க்கைவ் பத்திரிகையில் வேலை செய்யத் தகுந்த சிப்பந்தி தேவை. நிரந்தரமான வேலை; ஒரு நிமிஷம்கூட வெறிச்சென்று இருக்காது; ஆண் பெண் இரு பாலரும் விண்ணப்பித்துக்கொள்ளலாம்; சிறியவர் பெரியவர் யாராயிருப்பினும், பொறுப்பேற்று நிர்வகிக்கும் திறமையோடு, புத்தகங்கள் படித்துப் புரிந்துகொள்ளும் சாமர்த்தியம், டைப் அடிக்கத் தெரிதல் வேண்டும். வேலை செய்யும் காலம் 9 மணியிலிருந்து 5 மணி வரையில்தான் என்று எண்ணுபவர்கள் கண்டிப்பாக விண்ணப்பிக்கவேண்டாம். ஆசிரியரை நேரில் சந்திக்கவும்."

இந்த விளம்பரத்தின் விளைவாக, எங்கள் பிரார்த்தனை குறைந்து, எங்களுக்குக் கிடைத்த பெண்மணி பார்பார் ஹில்மன் அந்த ஊர் பள்ளி கணக்கு ஆசிரியரின் மனைவி. ஆர்க்கைவ் பத்திரிகையில் சுமார்

ஐந்து வருஷ காலம் அவள் இணைந்து ஈடுபட்டிருந்தாள். எங்கள் வேலை கணிசமான அளவுக்குக் குறைந்து, வருவோரிடம் பேசவும், நாங்களே வியாசங்கள் கட்டுரைகள் எழுதவும் எங்களுக்கு அதிக அவகாசம் கிடைத்தது. இனவாரி விளம்பரத்திலும் செய்தியிலும் மிகவும் பற்றுடைய பார்பார், ஒரு புதிய தொடரையே ஆரம்பித்து ஏழு வாரம் நடத்தினாள். 'சொந்த விஷயங்கள்' என்னும் பகுதியில் முதலிரண்டு துணுக்குகள் பின்வருமாறு இருந்தன:

டோரிஸ்: வீட்டுக்குத் திரும்பி வா; நீ வீட்டைவிட்டுப் போவதற்கு ஒரு காரணமும் இல்லை. அந்தச் சிறு விஷயத்திற்காக வீட்டை விட்டுப் போவதா? நீ இல்லாமல் வீடு எல்லாம் ஒரே களேபரமாக இருக்கிறது. குழந்தைகள் ஏங்கியிருக்கிறார்கள்.—ஆர்தர்

டோரிஸ்: உடனே நீ என்னைச் சந்திக்கவும்; காலதாமதம் செய்யாதே. நீ எங்கே இருக்கிறாய் என்று உடனே தெரிவி. வீட்டில் எல்லோரும் மிகவும் கவலையுட னிருக்கிறார்கள்.—ஆர்தர்

இதனுடைய முடிவு கீழ்க்கண்டவாறு:

டோரிஸ்: சரி, ஒப்புக்கொள்ளுகிறேன். நீ தான் ஜெயித்தாய். நீ வேண்டியபடி ஆர்க்கைவ் பத்திரிகையில் $2\frac{1}{2}$ டாலர் செலுத்தி உன்னைச் சந்தாதாரராகச் சேர்த்துவிடுகிறேன். உள்ளூர்ச் செய்தியும் படங்களும் ஏராளமாக நிறைந்து கிடக்கும் இந்தப் பத்திரிகையை நீ ஒன்றுவிடாமல் படித்து உன் இஷ்டம்போலச் சந்தோஷமாக இரு. இப்போதாவது உடனே வீடு திரும்புவாயா?

—ஆர்தர்

இவைகளைக் காட்டிலும் விளம்பரத்தை விரிவாக்க நான் ரசித்துக் கையாண்ட மற்றொரு விளம்பரம் பின் வருமாறு:

> பெண்கள் எல்லாம் 'ஆர்க்கை'வைப் போலவே எப்போதைக் காட்டிலும் அவர்கள் அதிக ஆரோக்கிய முள்ளவர்களாகவும் வலுவுள்ள வர்களாகவும் இருக்கிறார்கள். அவர்களைக் கண்டால் பலனுண்டு. அவர்களுக்குப் பல முகங்களும் முகவரிகளும் உண்டு. பழையவைகள் என்றால் அதிக மவுசு கிடையாது. அவர்கள் எங்கு சென்றா லும் செய்தியைத் தாங்கியே செல்லுகிறார்கள். தங்கள் மனத்தில் தோன்றியதை வெளிப்படை யாகச் சொல்ல பயப்படுவதில்லை. எவைகள் அவசியம் சொல்லவேண்டியவையோ அவற்றைச் சொல்லியே வருகிறார்கள். ஒவ்வொரு மனிதனும் அண்டை வீட்டுக்காரனுடையதை விரும்பாமல் தனக்குச் சொந்தமானதையே உபயோகிக்க வேண்டும். உடனே ஆர்க்கைவ் பத்திரிகைக்குச் சந்தாதாரராகச் சேரவும்.

வில்லியம் ஆல்பன் ஒயிட் (William Alben White) என்னும் ஆசிரியர், "அபிப்பிராயம் என்று சொல்லப் புகின் பொதுஜன அபிப்பிராயம் ஒன்றுதான் பிரதானம்; அதைத்தான் கவனித்துக்கொள்ள வேண்டும்'' என்று ஒரு சமயம் எழுதி யிருந்தார். ஆனால், நான் அறிந்தமட்டில், பொதுஜன அபிப்பிராயம் ஜனவரி மாதத்தில் விளம்பரதாரரைப்போல எவ்வளவு தேடினா லும் சுலபத்தில் அகப்படாத பொருள். அநேக விஷயங் களில் பொதுஜன அபிப்பிராயம் என்பது என்ன என்றே நிர்ணயித்துக் கூறுவது இயலாத காரியம். முதலிலிருந்தே எங்கள் காரியங்களைப் பற்றியும், எங்கள் அபிப்பிராயத்தைப் பற்றியும் எங்கள் வாச

கர்கள் தனித்தனி கருத்துக்கள் கொண்டிருந்தனர் என்று எங்களுக்குத் தெரியும். ஆனால், அக்கருத்துக்கள் என்ன என்று நிச்சயமாகத் தெரியாது. ஒவ்வொரு இதழிலும் ஒவ்வொரு புது அம்சம் புகுத்தி அது எப்படி ஏற்கப்படுகிறது என்று அறிய ஆவல் கொள்ளுவோம். திக்கு திசை தெரியாத ஒரு இருட்டு மலைப்பாதையில் வழி உண்டாக்கிக்கொண்டே போவது போல எங்களுக்கு உற்சாக மளிக்கும் வகையில் ஆதாரம் ஒன்றும் கிடைக்காது. பேப்பர் கடைகளில் விற்பனை அதிகரித்து எங்களிடம் குறை கூற யாரும் வரவில்லை என்றால், எல்லாம் சரியாகத்தான் நடந்துகொண்டிருக்கின்றன என்று ஆறுதலடைவோம். எனினும், எங்கள் முன்னேற்றம் எவ்வளவு தூரம் வலுப்பெற்றிருந்தது என்று அறிந்துகொள்ள வகை இல்லை. முதல் மாதத்திற்குப் பின்னரே பத்திரிகையின் வருமானமும் செலவும் சரிக்கட்டிக்கொண்டன. ஆனால் ஹனி ப்ருக்கில் அச் சங்கத்துக்குச் செலுத்த வேண்டிய தொகையையும், எங்கள் வீட்டு மாதாந்திரச்செலவுகளுக்கும் பணம் கொடுத்து முடித்தால், பாக்கி ஒன்றும் மிஞ்சாது. கொடுக்கவேண்டியவர்களுக்குச் செலுத்தப் போதிய பணம் இருந்தால் எங்களுக்குப் போதும். மேற்கொண்டு காசாக பெட்டியிலிருக்க வேண்டுமென்று நாங்கள் விரும்பவில்லை, அப்போதைக்கு ஊரிலும் சுற்றுப்புறத்திலும் ஆர்க்கைவ் பத்திரிகையைப் பற்றி என்ன அபிப்பிராயம் கொண்டுள்ளார்கள் என்பதைத் தெரிந்துகொள்ளத்தான் நாங்கள் ஆவலுற்றோம்.

சீக்கிரத்திலேயே இரண்டு கட்சிகள் சம்பந்தப்பட்ட ஒரு விவாதத்திற்குரிய விஷயத்தில் ஒரு கட்சியின் சார்பாக அபிப்பிராயம் கூறி என்ன நடக்கிறதென்பதைப் பார்ப்பது என்று தீர்மானித்தோம்.

## நாங்கள் கழுத்தைக் கொடுக்கிறோம்

நவம்பர் மாதம் 8-ந்தேதி குடிமகனின் பொறுப்பை உணரும் ஒவ்வொருவரும் ஓட்டுப் போடப் போவார்கள். நமது பிராந்திய ராஜ்ய சட்டத்தில் ஒரு திருத்தத்தின் மீது ஓட்டுப் போடவேண்டும். இந்தத் திருத்தம் நிறைவேறினால் தேசியக் கடன் 500 மிலியன் டாலர்கள் உயரும். யுத்த வீரர்களுக் களிக்கப்படும் இலவச வசதியின் விளைவாக ஏற்படப்போகும் அதிகப்படி கடன் இது.

ஐந்து வருஷம் நாட்டிற்கு வெளி தேசத்திலேயே யுத்த காலப் பணியாற்றியபடியால், என்னைப்போன்றவர்கள் எல்லோரும் உச்ச பட்சமாக 500 டாலர்கள் வரை ராஜாங்கத்திலிருந்து பெற்றுக்கொள்ள உரிமையுடையவர்கள். மேலும், யுத்த பிற்காலத்தில் வாழ்க்கையில் நிலைத்துப் புதிதாக எதிர்காலத்தை நிர்மாணித்துக்கொள்ளும் வேலையில் ஒரு சிறு வியாபாரிக்குக் காட்ட வேண்டிய சலுகை 500 டாலர்கள் வரை நாங்களும் ராஜாங்கத்திலிருந்து பெற்றுக்கொள்ள உரிமை யுண்டு. எங்களுக்கு இப்படி லாபமேற்படினும், இந்தத் திருத்தத்தை நாங்கள் எதிர்க்கிறோம். நாங்கள் கழுத்தை நீட்டிக்கொண்டு ஏன்—எதற்காக ஆட்சேபிக்கிறோம் என்று மறுபடியும் சொல்ல முற்படுகிறோம்.

இவ்வளவு பெரும் தொகை ஏன் கொடுக்க வேண்டும் என்பதற்குச் சாதகமாக நாங்கள் கேள்விப்பட்ட வரையில் சொல்லப்படும் ஒரே காரணம்—நமது வீரர்கள் புரிந்த சாதனைகளுக்கு இந்தச் சலுகை வழங்குவது முற்றிலும் பொருந்தும் என்பதே. வீரர்களில் நானும் ஒருவன் என்ற நிலையில் இந்தக் காரணத்தை நாங்கள் ஏற்க மறுக்கிறோம். சட்டத்தின் கீழ் ஒவ்வொரு பிரஜைக்கும் பிரஜா உரிமைகள் வழங்கப்பட்

டுள்ளன. இவ்வுரிமைகளில் ஒன்றுதான், யுத்த காலத்தில் நம் நாட்டை விரோதியிடமிருந்து பாதுகாத்தலும். நம் நாட்டைப் பாதுகாத்தோம் என்ற நினைவு நமக்கெல்லாம் பெருமை யளிக்கிறது; கடமையைச் செய்த திருப்தி நிலவுகிறது. உயிரிழந்த பல சகாக்களுக்காகவும், கைகால் இழந்து கஷ்டப்படும் மற்றவர்களுக்காகவும் மட்டும் நாங்கள் அனுதாபப்படுகிறோம். அவர்கள் ராஜாங்கத்தினால் பாதுகாக்கப்படவேண்டியவர்கள்; சந்தேகமில்லை. மற்றவர்களுக்கு இப் பாதுகாப்புத் தேவையில்லை.

பென்ஸில்வேனியா பிரதேச 'போனஸ் திட்ட'த்தைக் குறிப்பாக—வன்மையாகக் கண்டிக்கிறோம். பிரதேசத்தின் தேசீயக் கடனை மும்முறை இத் திட்டம் பெருக்கும். ஆனால், அக்கடனைத் தீர்ப்பதற்கு வகை ஒன்றும செய்யாது விடப்பட்டுள்ளது. யுத்த வீரர்களுக்கு 500 மிலியன் டாலர் (50 கோடி) தானம் வழங்குவது ஒன்று. ஆனால், அதற்கு வகை செய்வது மற்றொன்று. யுத்த வீர அங்கத் தலைவர்கள் என்ன கூறினாலும், கடனை அடைப்பதற்குப் பொதுமக்களின் மீது வரி சுமத்தி வசூலிப்பதைத் தவிர, வேறு எந்த வழியும் இருப்பதாக எங்களுக்குத் தெரியவில்லை. வீரர்கள்கூட வரி கொடுக்கிறார்கள்.

மேலும், இக்காலங்களில் ஒவ்வொரு நாளும் தேசீயச் செலவினங்கள் ஒன்றன்மீது ஒன்றாக தினந்தோறும் வெளிவந்தவண்ணம் இருக்கின்றன. இந்தப் 'போனஸ்' திட்டமும் அவைகளில் ஒன்றே. சர்க்காரால் ஏற்கனவே வகுக்கப்பட்டுள்ள திட்டங்களை நிறைவேற்ற, உத்தேசித்த தொகையைக் காட்டிலும் குறைந்தது மூன்றிலொரு மடங்கு அதிகமாகும் என்று கூறப்படுகிறது. வேறுமாதிரி சொல்லவேண்டுமானால், எல்லா திட்டங்களும் நிறைவேறினால்

சாதாரண மக்கள்—வேலை செய்து வாழும் ஜனங்கள் மாதத்தில் மூன்று வாரம் தமக்காகவும் ஒரு வாரம் 'ஸாம்மாமா'வுக்காகவும் உழைப்பார்கள்.

ஏற்கனவே கடனால் தவித்துக்கொண்டிருக்கும் சாதாரண அமெரிக்கக் குடும்பத்திற்கு இது ஒரு புது சோதனை. புதிய திட்டங்கள் 'நன்றாக உள்ளன' என்று இருந்தாலும், அவைகளை அங்கீகரிப்பதா நிரா கரிப்பதா என்ற முடிவை இந்தச் சமயம் செய்தே ஆக வேண்டும். இந்தத் திட்டங்கள் இல்லாவிட்டாலும் நமக்கு ஒன்றும் குறை ஏற்படாதென்பதே எமது அபிப்பிராயம்.

எங்கள் கொள்கைக்கு எதிராக அபிப்பிராயம் கொள்ள மற்றவர்களுக்கு உரிமை உண்டு என்பதை நாங்கள் உணருவதோடு, அவர்களுக்கு மரியாதையும் அளிக்கிறோம். எங்கள் பத்திரிகையில் அப்படிப்பட்ட மாற்று அபிப்பிராயங்களுக்கு இடம் தாராளமாக அளிக்கிறோம். இன்று வரையில் போனஸ் திட்டத் திற்குச் சாதகமாகக் கூறப்பட்டுள்ள காரணங்கள் ஒன் றுவது எங்களுக்குத் திருப்தி யளிக்கவில்லை. அவைகளை நாங்கள் ஏற்கவில்லை. உணர்ச்சிகளை உத்வேகமூட்டும் முறையில் பிரசாரங்கள் அமைந்துள்ளன; அதைத் தவிர விஷயத்தை விளக்கும் முறையில் அமைய வில்லை. தேசத்திலும் பிராந்தியத்திலும் இம்மாதிரி அவசர அலுவல்கள்தான் அபரிமிதமாக நடைபெறு கின்றன.

இவ்வாறிருக்கிறது என்று தெரிந்தும் இதை ஏன் எதிர்க்கவேண்டும் என்னும் கேள்வி எழலாம். இது அரசியல் மதியீனமல்லவா என்றும் தோன்றும். விஷயம் தெரிந்த பல அரசியல் வல்லுநர்கள், தவறு னவை எனத் தெரிந்தும் அவைகளைக் கண்டிக்காமல் 'நமக்கேன் தொல்லை' என்று சும்மா இருப்பதையே

கொள்கையாக அனுஷ்டிக்கின்றனர். நாங்கள் சம்பந்தப்பட்டவரையில் அவ்வாறு சும்மா இருப்பது தவறு என்று நினைக்கிறோம். ஆகையால், நாங்கள் அதை எதிர்க்கிறோம்.

எனவே, யுத்த வீரர்களானாலும் சரி, மற்றவர்களும் சரி, மற்றொரு முறை சாவதானமாக இவ்விஷயத்தை ஆலோசித்து, நமக்கு இப்போதைக்குக் கிடைக்கப்போகும் சலுகையைவிட பிற்காலத்தில் நிச்சயமாகக் கிடைக்கும் செலவை ஏற்றுக்கொள்ளுவதா நிராகரிப்பதா என்பதை முடிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

விளைவு: சில சந்தாதாரர்கள் குறைந்தனர். திருத்தம் நிறைவேறியது.

மற்றொரு சமயம் ஒரு விவாதத்தில் ஈடுபட்டோம். தீர ஆலோசித்த பின்னரேதான் அதில் இறங்கினோம். பலனும் எதிர்பார்த்தபடி கிடைத்தது. ஒரு வியாழக்கிழமை காலை. பத்திரிகை விநியோகமான பிறகு ஊரின் கடைப்பகுதியை அடைந்தோம். அங்கே ஒரே அமளியாக இருந்ததைக் கண்டோம். ஸாம் சார்லஸ் என்னும் பத்திரிகை விற்பனையாளர் எங்களைப் பார்த்ததும் ஒன்பது மணிக்கே முந்நூற்று எழுபத்தைந்து பிரதிகள் விற்றுப்போயின வென்றும், மேலும் பிரதிகள் இருந்தால் உடனே அனுப்பவும் என்றும் தெரிவித்தான்.

"இதோ பாருங்கள், உங்கள் பத்திரிகைக்குப் பதிலாக இந்தச் சதுக்கத்தில் ஐம்பது பவுண்டு வெடியையே நீங்கள் வைத்திருக்கலாம். இன்று அவ்வளவு பரபரப்பு" என்றான் ஸாம் சார்லஸ்.

பாப் சற்றே திகைப்படைந்தார்.

"இதற்கு காரணம் 'எலக்ஷன் கேஸ்'. சில பெரும் புள்ளிகள் அந்தக் கேசில் சம்பந்தப்பட்டிருப்ப தாகத் தெரிகிறது. அவர்கள் நடவடிக்கைகள் திருப்தி கரமாக உள்ளது போல் தெரியவில்லை" என்று ஸாம் மேலும் விளக்கினர்.

"அது வெறும் செய்திச் சுருள்தானே; அதில் ஒன்றும் விசேஷம் இல்லையே. அச் செய்தியிலும் பாதிக்கு மேல் ருசிகரமான விவரங்களை யெல்லாம் ஒதுக்கிவிட்டுத்தானே செய்திமட்டில் கொடுத்திருக்கிறோம்" என்று பாப், அவனுக்குச் சமாதானம் கூறும் முறையில் சொன்னர்.

ஸாம் பல்லை இளித்தார். "இருக்கலாம். ஆனலும், அச்சடித்துப் படித்தால் இவைகள் எல்லாம் மர்மம் கலந்தது மாதிரித் தோன்றுகிறது. ஒருகால் ஜனங்களுக்கு இப்போது நன்ருக விளங்கலாம். நம்முடைய ஊரிலும் ஒரு பத்திரிகை இருக்கிற தென்பதை அவர்கள் இனி உணர்வார்கள்" என்ருன் ஸாம்.

'யுத்தகால வீரரை ஈவிரக்கமற்ற வீட்டுக்காரன் வீட்டை விட்டு விரட்டினன்' என்பது போன்ற தலைப்புடன் முதல் பக்கத்தில் இடம் பெற்று நகரப் பிராந்தியங்களில் செய்திகளை ஆவலாகப் படிப்பது வழக்கம். ஆனல், கிராமப் பகுதிகளில் ஒருவனும் ஈவிரக்கமற்றவன் அல்ல. இருந்தாலும், பத்திரிகையில் விவரிக்குமளவுக்கு இருக்கமாட்டார்கள். ஆகையால், எங்கள் பத்திரிகையில் இம்மாதிரி வார்த்தைகளை யெல்லாம் தள்ளிவிட்டு கண்ணியமான முறையில்தான் விவரங்களை எழுதினேம். இதை எழுதத் தூண்டியவர் 'வெளியில்' தள்ளப்பட்டவரேதான். அவர் ஒரு யுத்தகால மாலுமி. இப்போது அருகிலிருந்த எஃகு தொழிற்சாலையில் தொழிலாளர்த் தலைவராகச் சங்க நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தார். இதனலேயே

டௌனிங்டனில் அவர் ஒரு கம்யூனிஸ்ட்வாதி யாகவே கருதப்பட்டார். இன்னொரு சமயம், 'ஆசிரியருக்குக் கடிதங்கள்' என்னும் பகுதியில் எங்களைப் பற்றி வெறுப்பூட்டும்படி கடிதம் எழுதி எங்களைத் துன்புறுத்தி யிருந்தார். எனினும், அன்று காலை பரபரப்புடன் எங்கள் காரியாலயத்தை அடைந்து தான் குடியிருக்கும் வீட்டிலிருந்து விரட்டியடிக்கப்பட்டதாயும், எங்களுடைய ஒத்தாசை வேண்டுமென்றும் கூறினார். எல்லாத் தொழிலாளர்த் தலைவர்களைப் போல தனக்கு வேண்டியவற்றை மட்டும் கோர்வையாகத் தொடுக்கவும் திறம்படக் கூறவும் அவர் தேர்ச்சியுற்றிருந்தார். கொஞ்ச நாளைக்கு முன்புதான் அவர்களைப் பற்றி வசைமொழிகளைத் தாராளமாக வழங்கி, இப்போது அவர்களிடமே உதவிக்குப் போகிறோமே என்பதில் முரண்பாடு உள்ளதை அவர் பொருட்படுத்தவேயில்லை.

நாங்கள் அவர் வீட்டை அடைந்தோம் விஷயங்களைக் கேட்டறிய. ஒரு மோட்டார் வண்டி வீட்டின் பக்கத்தில் நின்றுகொண்டிருந்தது. உதவி ஷெரிப் கையில் 'எவிக்ஷன்' (வெளியேற்றம்) சம்பந்தமான காகிதங்களைக் கை நிறைய வைத்திருந்தார். அண்டை வீட்டுக்காரர்கள் அவரவர்கள் வேலியின் ஓரம் நின்றுகொண்டு இங்கே என்ன நடக்கிறதென்று மிகுந்த அக்கறையுடன் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தனர். இந்த நிலையை ஒருவாறு சமாளித்தார் அப்போது தான் வீட்டின் உட்புறத்திலிருந்து வெளியே வந்த டாக்டர். குடித்தனக்காரரின் மனைவி நோயுற்றிருப்பதால் அவள் வெளியே நடமாடும் நிலைமையிலில்லை என்று ஷெரிப்பிடம் அவர் தெரிவித்தார். அந்தமட்டும் விட்டதே தொல்லை என்று ஷெரிப்பும் அவருடைய மோட்டாரும் அவ்விடத்தை விட்டகன்றன. செய்தியை நாங்கள் ஜோடிக்கத் தொடங்

கிறோம். அந்தத் தெருவிலேயே இந்தச் சம்பவம் மிகுந்த பரபரப்பை உண்டாக்கி யிருந்தது.

வீட்டின் சொந்தக்காரர் உள்ளூர் போலீஸ் இலாகாவின் தலைமை அதிகாரி. அவர் தம் மனைவியுடன் வீட்டின் அடித்தளத்தில் வசித்துவந்தார். பெருத்த சரீரம் படைத்தவர்; சண்டைக்காரர்; சட்டத்தை அமுல் நடத்துவதில் மிகவும் கண்டிப்பானவர்; எல்லாவற்றையும் சட்டப்படியேதான் அவர் பார்ப்பார். குடித்தனக்காரரின் வாழ்க்கையும் அவருடைய அரசியல் கொள்கையும் சொந்தக்காரருக்குக் கட்டோடு பிடிக்கவில்லை. குடித்தனக்காரரின் மகள் முதல் மாடியில் சக்கரவண்டி விளையாடி கீழே உட்கார்ந்திருக்கும் சொந்தக்காரருக்குத் தலைவேதனை உண்டுபண்ணினாளாம். சில சமயங்களில் குழாயைத் திறந்துவிட்டுத் தண்ணீர் மாடியிலிருந்து வழிந்து கீழேவிழ சொந்தக்காரருக்குத் தொல்லை உண்டுபண்ணுவார்களாம். அக்கம் பக்கத்தார்கள் இந்தக் கதைகளில் அதிக நம்பிக்கை வைக்கவில்லை. இந்த மாடி பாகத்தை வேறு யாருக்கோ கட்டுப்படுத்தின வாடகைக்கு இரண்டு மடங்கு அதிகமான வாடகைக்கு ஏற்பாடு செய்த பின்னரேதான் குடித்தனக்காரரின் தொல்லைகள் இவருடைய கவனத்திற்கு வந்தன என்றுதான் அபிப்பிராயம் தெரிவித்தார்கள். எது எப்படி இருந்தாலும் குடித்தனக்காரரை வீட்டைவிட்டுத் துரத்திவிடுவது என்று அவர் முடிவுகட்டிவிட்டது என்னவோ உண்மை.

பல மாதங்களுக்கு முன்னரே இவ்விருவருக்கும் போர் மூண்டுவிட்டதால் அவ்வப்போது நடக்கும் சண்டைகளில் சரி தப்பு கண்டுபிடிப்பது கடினம். அண்டை வீட்டுக்காரர்கள் கொடுத்த தகவல்கள் மிகவும் சுவையுள்ளதாக இருந்தன. இரண்டு பேரின் மனைவிமார்களும் கைகலந்தே சண்டையிட்டார்களாம்.

சொந்தக்காரர் குடித்தனக்காரருடைய குழாயை மூடி விட்டாராம். சலவை மிஷினை உள்ளே போட்டுப் பூட்டிவிட்டாராம். அவரைப் பார்க்க வருவோருக் கெல்லாம் வண்டிகளை அங்கேயே விட்டுவைக்க டிக் கட்டுக்கள்கூட வழங்கினாராம். குடித்தனக்காரருக் கும் அவருக்கும் வாழ்க்கை கடினமாகப் போனதும், அவருக்கும் ரோஷம் பிறந்ததாம். அவரோ தொழிலாளி. தொழிலாளிகளின் உரிமைக்குப் பாடுபடுவதை லட்சிய மாகவும் கொண்டிருக்கிறார். அவருக்கும் சட்டம் தெரியும்; அவருடைய உரிமைகளும் தெரியும். எது வந்தாலும் சரி, பார்த்துவிடுவது என்று தீர்மானித்து விட்டார். சொந்தக்காரரும் அதே உறுதியுடன் அவரை எப்படியும்—ஏமாற்று முறை அனுஷ்டித் தாயினும்—வெளியேற்றுவதென்று தீர்மானித்திருந் தார்.

நாங்கள் எழுதிப் பிரசுரித்த செய்தியில் இந்த ருசி கரமான விவரங்கள் ஏதுமில்லை. நாங்கள் எழுதுவ தெல்லாம் அவசர அவசரமாகத்தான் எழுதவேண்டி யிருந்தது. திருப்பிப் பார்க்கவும் அவகாச மிராது. ஆகையால், இந்த விஷயத்திலும் முக்கியமான சில செய்தி மட்டும்—ஷெரீப், மோட்டார் வண்டி, டாக்டர் என்றுதான் கொடுத்திருந்தோம். ஆனால், ஊர் மக் களுக்கு இந்தச் செய்திகூடப் பத்திரிகையில் வெளிவந் துள்ளதே என்று ஆச்சரியத்தை விளைவித்தது.

சிலர் எங்களை எச்சரிக்கவும் செய்தார்கள். "உங் களுக்குத் தெரியாதா? அந்தப் போலீஸ் அதிகாரி மிக வும் பொல்லாதவர்! அத்துடன் மிகுந்த செல்வாக்குள் ளவர். அவரைப் பகைத்துக்கொள்ளுவது நல்லதல்ல. உங்கள் மீது அவர் இப்போது ஒரு 'நிகா' வைத் திருப்பாரே!" என்று எங்களுக்குப் புத்திமதி சொன் னார்கள்.

அடுத்த தடவை அவரை நாங்கள் சந்தித்தபோது அவர் சாந்தமாகவேதான் காணப்பட்டார். எங்கள் மீது அவர் எவ்வித வெறுப்பும் கொண்டதாக அவர் தோற்றத்தில் தெரியவில்லை. ஆகையால், பின்னல் நடந்த சம்பவங்களை நாங்கள் கொஞ்சமேனும் எதிர் பார்க்கவே யில்லை.

ஒரு நாள் பாப் அவர் காரியாலத்தில் காலம் கடந்து வேலை செய்துகொண் டிருக்கும்போது, ஒரு வர் பேட்டி காண வந்தார். அரசியல் வட்டாரங்களில் அவருக்கு நெருங்கிய தொடர்புண்டு எனத் தெரிந்தது. ஏதோ முக்கிய விஷயமாகத்தான் அவர் வந்தார். பல சில்லறை விஷயங்களைச் சிறிது நேரம் பேசிவிட்டு முடி வாக, "இவ்விஷயம் உங்களுக்குத் தெரியவேண்டியது அவசியம் என்று நினைக்கிறேன். அவர்கள் எல்லோ ரும் உங்களை இந்த ஊரை விட்டுத் துரத்த ஏற்பாடு செய்திருக்கிருர்கள்" என்று வந்த காரியத்தை விளக் கினுர்.

"என்ன? 'அவர்கள்' என்பது யார்?" என்று பாப் ஆச்சரியத்துடன் வினவினுர்.

"ஜனங்கள்" என்று மர்மம் கலந்த முறையில் அவர் மேலும் சொன்னுர். "ஜனங்களில் முக்கியஸ் தர்கள். அவர்கள் கருத்துப்படி நீங்கள் வலது சாரி யைச் சேர்ந்தவர்கள் அல்ல; 'சிவப்பு' ரகத்தைச் சேர்ந்தவர்கள்; கம்யூனிஸ்டுகள்" என்ருர்.

அந்தப் பேட்டியை பாப் வெகு நேர்த்தியாகக் கையாண்டார். இந்தச் செய்தியைக் கேட்டு உடல் நடுக் கம் ஏற்படலாம் என்று வந்தவர் எதிர்பார்த்தாரோ என்னவோ! பாப் விழுந்து விழுந்து சிரித்தார்!

"நீங்கள் சொல்லுவது வாஸ்தவம்தானு? பத்தி ரிகை ஆசிரியர்களை ஊரைவிட்டுத் துரத்தும் முயற்சி

களால் பத்திரிகையின் நடமாட்டம் இரண்டு மடங்காகப் பெருகியுள்ள பல சம்பவங்கள் எனக்குத் தெரியும். நீங்கள் கூறுவதை நான் நம்பலாமா?'' என்ருர் பாப்.

வந்த நண்பர் ஏமாற்ற மடைந்தவராய் ஒன்றும் புரியாமல் திரும்பிப் போனுர். 'அவர்களுக்கு'ச் சேதி சொல்லத்தான் போயிருப்பார். இதைப்பற்றி நாங்கள் அதற்குப்பின் ஒன்றும் கேள்விப்படவே யில்லை.

'எவிக்ஷன் செய்தி'யைப் பிரசுரித்த ஒரு வாரத்திற்குப் பின், யுத்த வீரர்களின் சங்கத்தில் சேர்ந்த ஆறு வீரர்கள் கையெழுத்திட்டு ஒரு கடிதம் 'ஆசிரியருக்குக் கடிதங்கள்' என்னும் பகுதியில் பிரசுரிக்க வந்தது. கையெழுத்திட்ட சிலருக்கு 'எவிக்ஷனு'க்கு இரையான வீரனைக்கூட நன்ருகத் தெரியும். ஆனுல், அவர்கள் எழுதியிருந்த கடிதத்தின் போக்கு போலீஸ் அதிகாரி ஒரு யுத்த வீரனை நடத்திய மாதிரி —அவரே அவமானப்படவேண்டிய விஷயம் என்னும் முறையில் அமைந்திருந்தது. கடிதம் மிகவும சுருக்கமானதே; நூறு வார்த்தைகளே கொண்டது. எனினும், தலையங்கத்தில் நாங்கள் எழுதுவதைக்காட்டிலும் இரு மடங்கு வேகமுள்ளதாக அது அமைந்திருந்தது. மேலும், ஊரில் பரபரப்பை உண்டாக்கி யிருக்கும் விஷயம் அது எனத் தெரிந்தும், அவர்கள் கடிதத்திற்குக் கையெழுத்திட்டு அனுப்பிய தைரியத்தைக் கண்டு நாங்களே ஆச்சரிய மடைந்தோம். சிறு நகரங்களிலும் கிராமங்களிலும் ஜனங்கள் தங்கள் அபிப்பிராயங்களை பகிரங்கமாக ஒப்புக்கொள்ளும் வழக்கம் உள்ளவர்களல்ல.

கையெழுத்திட்ட அறுவருள் ஒருவருக்குப் பலன் சீக்கிரத்திலேயே கிடைத்தது. நகராண்மை உணர்ச்சியைப் பெருக்க பல இளைஞர்களை ஒன்றுகூட்டி, அச்

சங்கத்தின் மூலம் அந்த ஊர் மக்களுக்குப் பல பெரிய சாதனைகளைப் புரியவேண்டும் என்று அவர் ஆவல் கொண்டிருந்தார். அந்தச் சங்கத்தின் ஸ்தாபகர், அலுவல் காரியஸ்தர் எல்லாம் அவரே. சங்கத்திற்குப் பணமுடை எப்போதுமே உண்டு. ஆகையால், ஊரில் பல வியாபாரிகளின் தயவு அவருக்குத் தேவையாயிருந்தது. சில மணி நேரத்தில் ஊரில் எல்லோருக்கும் இந்த ஸ்தாபனம் இளைஞர்கள் கூடி தீவிரவாதங்களை வளர்ப்பதில் ஈடுபட்டிருக்கிற தென்றும், ஊர் மக்கள் உதவியளிப்பது ஊருக்கு நல்லதல்ல வென்றும் கருத்துக்கள் பரிமாறப்பட்டன. ஸ்தாபனத்தின் செயற்கூட்டம் உடனே கூட்டப்பட்டது. குற்றமிழைத்த அங்கத்தினரை ராஜிநாமாச் செய்யும்படி வற்புறுத்தப்பட்டது. அதிர்ஷ்டவசமாக விஷயம் முற்றிவிடவில்லை. சில புத்திசாலிகளும் சங்கத்தில் இருக்கத்தான் செய்தனர். பரபரப்பு அடங்கியது. குற்றமிழைத்த 'தீவிரவாதி' அங்கத்தினர், காலப்போக்கில் சங்கத்திற்குத் தலைவராகி, ஊரிலேயே கண்ணியம் வாய்ந்த மனிதராகவே வளர்ந்தார்.

'எவிக்ஷன்' கேஸில் எல்லோரும் ஒரு கட்சியையோ மற்றொன்றையோ ஆதரித்தவர்கள். இதனால் விளைந்த மனத்தாங்கல்கள் மறைய ஒரு வருஷகாலம் பிடித்தது. போலீஸ் இலாகா அதிகாரியைப் பற்றிப் பலர் பல விதமாகக் கதைகள் கட்டிவிட்டனர். பாதிக்கு மேல் வீட்டு விவகாரத்தில் சம்பந்தப்பட்டவர்களால் திரித்து விடப்பட்டவை. போலீஸ் அதிகாரியின் நிமமதியான நிலையும், சண்டைபோடும் சுபாவமும் இந்தக் கதைகளுக் கெல்லாம் சற்று ஆதரவு அளித்து ஏற்கனவே எரிந்துகொண்டிருந்த நெருப்பில் எண்ணெய் வார்த்தது போலிருந்தன.

தொடர்ந்து இதைப்பற்றி எழுதும்படி பாப்பைப் பலர் கேட்டுக்கொண்டனர். ஆனால், பாப் இதற

கெல்லாம் இணங்கவில்லை. சாவதானமான முறையி லேயேதான் சீர்திருத்தங்கள் செய்யவேண்டும் என்ற உண்மையை அவர் உணர்ந்துகொண்டார். ஒரு செய் தியை அப்பட்டமாகக் கூறுவதிலும், மற்றவர் கூறு வதை அப்படியே கூட்டாமல் குறைக்காமல் போடு வதிலும் உண்மை தானுகவே வெளியாவதை அவர் கண்டார். அப்படி விளங்கும் உண்மை, தலையங்கங் களில் எழுதி ஊட்டப்படும் உண்மைகளைக் காட்டி லும் சிறந்தவையாகவும் விளங்கின. ஊர் மக்களின் அபிப்பிராயம்தான் எங்களுக்கு முக்கியமானதால், இருட்டாக இருந்த மூலைமுடுக்குகளில் வெளிச்சத்தைப் பரப்பினுல், உள்ளது தானே விளங்குகிறது என்ற கொள்கையுடன் வேலை செய்தோம்; பலனும் கிடைத் தது. போலீஸ் அதிகாரி தம் பதவியிலிருந்து விலகிக் கொண்டார்.

குறிப்பிட்ட ஒரு நன்மைக்காக எந்தச் சமயம் தலை யங்கங்கள் மூலம் ஆதரவு கோருகிறதென்பதை நிர்ண யிப்பது கடினம். பத்திரிகைத் தொழிலில் ஈடுபட் டிருப்பவர்களுக்கு இது மிகவும் கஷ்டம். நாங்கள் இந்த விஷயத்தில் ஒரு முடிவுக்கு வந்தோம். மிருது வாகவும், இலேசாகவும் கூறப்படும் வார்த்தைகள் பல சமயங்களில சீக்கிரமாக நன்மை பயந்து பொதுமக் களுக்குப் பலனளிப்பதை அனுபவத்தில் பார்த்தோம். பொதுக்கூட்டம் கூட்டிப் பிரசாரம் செய்வதால் ஏற் படும் பலனைக் காட்டிலும் அதிகப் பலன் கிடைக்கிற தென்பதையும் கண்டோம்.

*    *    *

எங்களால் இயன்றமட்டில் படிப்போர்க்குக் கவர்ச் சிகரமாகப் பத்திரிகை நடத்திவந்த காலத்தில் ஊரிலும் மாறுதல்கள் சிறுகச் சிறுக உண்டாகிக்கொண்டிருந் தன. இவைகள் எல்லாம் சிறு விஷயங்கள்தான் என்

ருலும், பெரிய விஷயங்களுக்கு இவைகள்தான் ஆதா ரங்கள். குடியரசு நிலைப்பதற்குச் சல்லிவேர்கள் போன் றவை. கிராமப் பிரதேசங்களில் நடக்கும் வாதப்பிரதி வாதங்கள், சிக்கல்கள் அவைகளைத் தீர்க்கும் வகை, கையாளும் முறைகள்—இவைகள்தானே தேசீய வாதப்பிரதிவாதங்களுக்கு ஆதாரமாக அமைகின்றன?

முதலில் டேவிட் ஆசைப்பட்டதுபோல் நாங் கள் ராட்சதர்களைத்தான் கொல்லவேண்டுமென்று ஆசை கொண்டோம்; பெரும் சாதனைகளைப் புரிய எண்ணம் கொண்டோம். இப்போது சிறுகச் சிறுக முன்னேற்றம் அடைவதுதான் சரியான வழி என் பதை உணர்ந்துகொண்டோம். குடியாட்சியின் அடிப் படையி லமைந்த ஒரு சிறு சமூகத்தில் உள்ளூர்ப் பத்தி ரிகைக்கு ஒரு முக்கிய இடம இருக்கிறது என்பதைக் கண்டோம். ஆனல், அந்த ஸ்தானம் தளபதி, தலைவர் முதலியவர்களைப் போலல்லாது ரசாயன சாலைகளில் உபயோகிக்கும் வஸ்துக்களைப்போல், தான் நிலைத் திருந்து சமூகத்தினிடையே மாறுதல்களை உண்டாக்கும் பொறுப்புடன் வகிக்கத்தக்கது.

ஒவ்வொரு மாதத்திலும் முதல் திங்கட்கிழமை இரவு உள்ளூர் நகராண்மைக் கழகக் கூட்டத்திற்கு பாப் தவருமல் விஜயம் செய்வார். அவருக்கென்று ஒரு ஆசனமும் போடப்பட்டிருந்தது. கிராமத் தண் ணீர் வசதிகளைப்பற்றி என்ஜினீயர் புள்ளிவிவரங்களைப் படித்துக்கொண்டே போவார். நகர சட்ட ஆலோச கர், சட்ட நடவடிக்கைகளைப்பற்றியெல்லாம் ஏதா வது சொல்லுவார். இதைக் கேட்டால் தூக்கம்தான் வரும் பாப்புக்கு. ஆனல், இந்தக் கூட்டங்கள் மிகவும் முக்கியம். பத்திரிகையில் விரிவாக நடவடிக்கையை விவரித்தாகவேண்டும். இதன் விளைவாக உருவானது தான் 'சமுக முன்னேற்ற சர்ச்சைக் கூடம்' என்று

ஆர்க்கைவ் ஆரம்பித்து நடத்திய பகுதி. நகராண்மைத் தலைவருக்குக்கூடச் சில சமயம் இப்பகுதியில் வெளியாகும் விஷயங்கள் கவலை தந்தன. ஓர் சமயம் பாப்பைக் கண்டு, நகர சபை விஷயங்களில் இவ்வளவு நுணுக்கமாகக் கவனிப்பது விருப்பத்தக்கதல்ல என்று எச்சரித்தார். எப்படி இருந்தாலும், ஆர்க்கைவ் ஆதரித்த சில அம்சங்கள் இப்போது ஊரில் அமுலில் இருக்கின்றன. சரித்திர சம்பந்தம் பெற்ற ஒரு மர வீடு வெகு காலமாகக் கவனிப்பாரற்று, பாழடைந்து இருந்தது. அது இப்போது செப்பனிடப்பட்டு இந்த ஊருக்கே ஒரு அடையாளமாக விளங்குகிறது. தெருக்களில் வண்டிகளுக்கெல்லாம் போக்குவரத்து தடையில்லாது நிலவ ஆங்காங்கே சிவப்பு, பச்சை விளக்குகள் நிறுவப்பட்டுள்ளன. உள்ளூர் நகராண்மை நடவடிக்கையிலேயே காணப்பட்ட ஊழல்கள் பலவற்றை ஒரு நிபுணர் கவனித்து அவைகளைக் களைந்ததால், அலுவல்கள் இப்போது தீவிரமாக நடைபெறுகின்றன.

கிறிஸ்துமஸ் கமிட்டியை ஆரம்பித்து வைத்தது ஆர்க்கைவ்தான். உள்ளூர்க் குழந்தைகளுக்குக் கிறிஸ்துமஸ் பண்டிகைக்கு முன் தினம் ஆயிரம் பொம்மைகளாவது வழங்கவும், வறுமையிலடிபட்ட குடும்பங்களுக்கு உணவு, ஆடை, தின்பண்டங்கள் முதலியன வழங்கவும் இக்கமிட்டி நிறுவப்பட்டது.

'டாலர் விற்பனை நாள்' என்று ஆரம்பித்து ஊர் முழுதும் வியாபாரப் பெருக்கு ஏற்பட ஒரு புது முறையைப் புகுத்தினோம். வியாபாரிகள் எல்லோரும் தனிப்பட இயங்கி, தனிப்படச் சிந்தித்து, தனித்தே இருப்பவர்கள். அவர்களை ஒன்றுகூட்டி ஒரு காரியம் செய்வது மிகவும் கடினமாகத்தானிருந்தது. புதியதாக ஸ்தாபிக்கப்பட்ட வியாபாரிகள் சங்கத்தின் மூலம் வியாபாரிகளைச் சாமான்கள் விலையைக்

குறைத்து வியாபாரத்தைப் பெருக்க முடியும் என்று நிருபித்து, கிராமத்திற்கு வெளியிலிருந்தும் ஜனங்களைக் கடைக்கு வரும்படி வகை செய்தோம். மூன்று நாட்கள் நீடித்து நடந்த இந்த விற்பனைகள் மூலம் ஆர்க்கைவ் பத்திரிகையின் வாசகர்கள் எவ்வளவு பேர் இருக்கிறார்கள் என்று ஒருவாறு கணக்கிட முடிந்தது; அல்லது ஒரு சிறு தவறு ஏற்பட்டதன் மூலம் இது சாத்தியமாயிற்று என்றும் கூறலாம்.

பெட்ரோல் விநியோக சம்பந்தமாக ஒரு விளம்பரம் வந்தது. ஒரு க்வார்ட் எண்ணெய் வாங்குபவர்களுக்கு ஐந்து காலன் பெட்ரோல் இனமாக வழங்கப்படும் என்று அந்த விளம்பத்தில் நான் எழுதியிருந்தேன். இது தவறுதான். "ஐந்து காலன பெட்ரோல் வாங்குபவர்களுக்கு ஒரு க்வார்ட் எண்ணெய் இனமாக வழங்கப்படும்" என்று இருக்கவேண்டும். ஆனால், இதை நான் கவனித்தபோது, பக்கம் சரிவர அமைக்கப்பெற்று அச்சு யந்திரத்தில் கல்லின்மேல் படுக்க வைத்தாய்விட்டது. அந்தச் சமயத்தில் ஒன்றும் செய்வதற்கில்லை. மேலும், நாங்கள் பரபரப்புடன் வேலை செய்யும் வேகத்தில் "ஐந்து காலன் பெட்ரோல் இனம்" என்பதற்குப் பதிலாக "ஐந்து பொட்டலம் வைரக் கற்கள் இனம்" என்றிருந்தாலும் அந்த நிலையில் எனக்கு வித்தியாசம் புரிந்திருக்காது.

பத்திரிகை விநியோகமான சிறிது நேரத்திற்கெல்லாம் பெட்ரோல் நிலைய சொந்தக்காரர் எட் பீட்டர்சன் எங்களிடம் வந்தார். "என்னுடைய கடைக்கு எதிரில் நூறு மோட்டார் வண்டிகள் வரிசையாக நின்று கொண்டிருக்கின்றன. போக்குவரத்தே தடைப்பட்டு விட்டது. லங்காஸ்டர் சாலை கோடியிலிருந்து இந்த வழியே போகவே முடியாது. உதவிக்கு போலீஸ் அதிகாரிக்குச் சொல்லியனுப்பி யிருக்கிறேன். நீங்கள்

உடனே எங்கள் கடைக்கு வந்து, 'தவறு உங்களுடையது' என்று கொட்டை எழுத்துக்களில் எழுதி பெட்ரோல் பம்பின் மீது தொங்கவிட்டு, மோட்டார் வண்டிகளைத் திரும்பிச் செல்லுமாறு கேட்டுக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் ஒரு மணி நேரத்தில் நான் கடன்காரனாக ஆவேன்!'' என வேண்டிக்கொண்டார்.

''ஆர்க்கைவ் பத்திரிகை தவறு செய்து விட்டது'' என்ற அட்டையைப் பெட்ரோல் பம்புக்கு மேல் எல்லோருக்கும் தெரியும்படி ஒட்டியபோது, ஜிம் மாக்கோவென் என்னும் தோட்டச் சாமான்-வியாபாரி ஒரு பெரிய 'டிராக்ட'ரை ஓட்டிக்கொண்டு வந்தார். என்னைக் கண்டதும, ''இதோ பார், என்னிடமிருந்த எல்லா வண்டிகளையும், ஒன்றாகத் திரட்டி ஓட்டிக்கொண்டு வந்திருக்கிறேன். லங்காஸ்டர் சாலையில் இந்த வரிசைக்குப் பின்னால் டிராக்டர், தானியம் களையும் மிஷின், லாரி முதலிய எல்லாம் வரிசையாகக் காத்துக்கொண்டிருக்கின்றன!'' என்றார். அவர் கண்களில் சந்தோஷம், நன்றி இரண்டும் கலந்திருந்தன.

எனக்கு துக்கம் மேலிட்டது. வாழ்க்கை முழுவதும் பெட்ரோல் பம்பிலே வேலை செய்துகொண்டிருப்பது போன்ற உணர்ச்சி. அதை நினைக்கவே நடுங்கியது உள்ளம். ''நான் தவறு செய்துவிட்டேன். அதற்காக நாங்கள் மிகவும் வருந்துகிறோம். எப்படி இதற்கு ஈடு செய்வது என்று புரியவில்லை. ஏதாவது செய்யத்தான் வேண்டும்'' என்று பணிவுடன் கூறினேன்.

மாக்கோவென் சிரித்தார். என்னை அன்புடன் தட்டிக்கொடுத்தார். ''நான் சும்மாதான் சொன்னேன்; விளையாட்டுக்காக. நீங்கள் தவறு செய்துவிட்டீர்கள் என்று எனக்கு அப்போதே விளங்கிவிட்டது. ஆனால்......''—அவர் கண்கள் பெட்ரோல் ஸ்டேஷ

னுக்கெதிரில் வரிசையாக நின்றுகொண்டிருந்த வண்டிகளைக் கவனித்தது. "இதிலிருந்து ஆர்க்கைவ் பத்திரிகையை எல்லோரும் படிக்கிறார்கள் என்பது புலப்படுகிறதல்லவா ?" என்றார். சந்தேரஷத்துடனே தான் சொன்னார்.

எங்கள் ஊருக்கு ஆர்க்கைவ் பத்திரிகை எவ்வாறு சேவை செய்திருக்கிறது என்று நிச்சயமாகச் சொல்ல வேண்டுமென்றால் சற்று கடினம்தான். எங்கள் வேலை, ஒரு பெரிய குடும்பத்தில் பெற்றோர்கள் வேலையைப் போல நன்றிகூட கிடைக்காத வேலை. குழந்தைகள் தங்களைச் சுத்தமாக வைத்துக்கொண்டு, நடவடிக்கையும் நன்றாக இருந்தால், பெற்றோர்கள் தங்கள் கடமையைச் சரிவர செய்தார்கள் என்று அர்த்தம். ஆனால், அதைப் பற்றி ஒருவருமே கவனிக்கமாட்டார்கள். அதே போல் ஒரு பத்திரிகை விரும்பத்தக்க காரியங்களுக்கு ஆதரவு தந்து, நகராண்மை விஷயங்களில் குற்றங்களையும் குணங்களையும் ஒருங்கே வாசகர்களுக்கு எடுத்துக்காட்டினால், அதன் வேலையை அது சரிவரச் செய்ததாகக் கருதப்படும். ஆனால், அதன் முக்கியத்தைப்பற்றி ஒருவரேனும் கவனிப்பதில்லை. வீட்டில் தாயார் செய்யும் வீட்டு வேலைகளைப்போல அவைகளுக்கு விளம்பரம் கொடுப்பதில்லை; அதை மேன்மையாகக்கூடக் கருதுவதில்லை. ஆனாலும், சில சமயங்களில் நல்லது செய்யப் புகுந்தும் மாறுபலனும் கிடைத்துவிடும். உள்ளூர் விஷயங்களில் பல சிக்கல்கள் தோன்றினால் எங்களுக்கு அவைகளை எப்படிச் சிக்கறுப்பது என்றே விளங்காது. எங்களுக்கு அனுபவம் குறைவு என்னும் குறை அச்சமயங்களில் நன்கு விளங்கும். மனித சுபாவத்தின் தன்மையே நல்லதை எண்ணி அசட்டுக்காரியங்களைச் செய்வது. நாங்களும் தவறுதல்கள் செய்தோம். நாங்கள் எழுதிய பல செய்திக் கதைகள் தங்களைப் புண்படுத்தியதென்று நொந்து

கொண்டனர் பலர். ஒருவரையும் துன்புறுத்த நாங்கள் என்னவோ எண்ணியதில்லை. மக்கள் எங்களிடம் வருத்தமுற்றதுபோல், எங்களுக்கும் ஜனங்களிடை பல தடவைகளில் வருத்தமுறக் காரணங்களிருந்தன.

இம்மாதிரி சந்தர்ப்பங்களில் நாங்கள் இருவரும் ஒருவர்க்கொருவர் ஊர் நிலையைப்பற்றிப் பேசி, மன ஆத்திரத்தைத் தணித்துக்கொள்ளுவோம். உள்ளூர் போலீஸ்காரர் மாதிரி கிராமப் பத்திரிகை ஆசிரியர்களும் நிறைய விஷயம் தெரிந்தவர்கள். அவர்கள் மட்டும் வாயை மூடிக்கொண்டு சும்மா இருக்கவேண்டும். ஆனால், பீர் (beer) குழாயைத் திறந்ததும் நொப்பும் நுரையும் பீருடன் வருவதுபோல் பத்திரிகை ஆபீஸில் அன்றுடம் ஏற்படும் சிறு சச்சரவுகள், தொல்லைகள், ஏக்கங்கள், ஏமாற்றங்கள் இவைகளுக்கு மாற்றாக அமைவது நாங்கள் ஒருவர்க்கொருவர் பேசிக்கொள்வதுதான். மற்றவர்கள் மீது உள்ள தாபத்தை ஒருவர் முன்னிலையில் மற்றவர் வெளிக்காட்டி அமைதி பெற்றோம். கோபதாபங்களில் வீணாக்க எங்களுக்கு அவகாசம் இல்லை என்பது உண்மைதான். எங்கள் வேலை மும்முரத்தில் நகராண்மை அலுவல்களில் ஏற்படும் ஊக்கம், உற்சாகம், ஏக்கம், ஏமாற்றம் முதலியவைகளை அவ்வப்போது சீர்தூக்கி ஆராய்ந்து, அலசி, தலையங்க வாயிலாக ஒரு பரிகாரம் சொல்ல முடியாமலிருந்தது.

எனவே, நடுநிலைமை வகித்த எங்கள் நிலை பலருக்குச் சரியாக விளங்கவில்லை. ஜனங்கள் எல்லோரும் ஏதாவது ஒரு பட்சமாக அபிப்பிராயம் கொண்டவர்கள். எங்கள் அபிப்பிராயம் என்னவென்று தெரிந்துகொள்ளுவதில் அவர்களுக்கு ஆவல் அதிகம். உதாரணமாக, 'எவிக்ஷன்' கேசைப்பற்றி வெளிவந்த செய்தி

போலீஸ் அதிகாரிகள் அந்தஸ்துக்குக் குறைவையே உண்டுபண்ணியது. சில வாரத்திற்குப் பின் நாங்கள் பிரசுரித்த மற்ெருரு செய்திச் சுருள் அதே போலீஸ் அதிகாரியைத் தட்டிக் கொடுத்துப் புகழ் தேடித் தரும் வகையிலிருந்தது. கடமையைச் சரிவர செய்ததற்காக அவரைப் பாராட்டி யிருந்தது. பிராந்திய போலீஸ் இலாகா உள்ளூர் சூதாட்ட ஸ்தாபனங்கள் மூன்றை திடீரென்று சோதனை போட்டு, வியக்கத்தக்க முறை யில் பல சூதாட்ட நடவடிக்கைகளை ஒழித்தது. இப் படிப்பட்ட ஒரு சம்பவம் நிகழும் என்றே ஒருவரும் எண்ணமாட்டார்கள் கிராமப் புறத்தில். இங்கு சூதாட் டங்கள் சாதாரணமாக நடக்கும் பலவகை தினசரி அலுவல்களில் ஒருவகை என்றே எண்ணப்பட்டன. அதை ஒழிக்க ஒருவரும் முற்பட்டதில்லை. ஒரு சமயம் முயற்சி எடுத்தபோது, நடவடிக்கை சரிவர நடத்தப் படாததால் சூதாட்டக் கூட்டத்தின் தலைவர், "நான் இன்னும் ஏன் கைதாகவில்லை?" என்றுகூட ஏளனம் கலந்த குரலில் அலட்சியமாகக் கேட்டாராம்.

இந்த முறை திடீர் சோதனைத் திட்டம் வகுத்ததே வியக்கத்தக்கது. லியோ ஹாமில்டன் என்னும் கழக அங்கத்தினர் இதில் சற்று ஊக்கம் காட்டினார். அடிக் கடி காணப்படாத தனி இனத்தைச் சேர்ந்த மனித ருள் ஒருவர் அவர். வாரத்தில் நான்கைந்து நாளா வது மாலை நேரங்களில் நகராண்மை விவகாரத்திலும் பிராந்திய அரசாங்க நடவடிக்கைகளிலும் ஈடுபாடுடை யவர். இவ்வளவுக்கும் தம்முடைய ஹாஸ்ய உணர்ச் சியை இழக்காமலும் நியாயம் நடுநிலைமை தவரும லும் எந்த விஷயத்தையும் பரிசீலிக்கும் பண்புள்ளவர். குதிரைப் பந்தய சூதாட்ட சங்கங்களில் பள்ளிக்கூடப் பிள்ளைகள்கூட அதிகமாகக் கலந்துகொள்ளுகிறார்கள் என்பதைக் கேட்டு மிகவும் வருந்தினார். இதற்கு ஏதா வது வகை செய்யவேண்டுமென்று ஆலோசிக்கலானார்.

உள்ளூர் போலீசைக் கொண்டு நடவடிக்கை எடுப்பது இயலாத காரியம் என்பதையும் உணர்ந்தார். எனவே, ஹாரிஸ்பர்க்கிலுள்ள தேசீயப் போலீஸ் தலைவருடன் கலந்து ஆலோசித்து, முன்பின் தெரியாத ஒரு அதிகாரியைத தலைமைக் காரியாலயத்திலிருந்து அனுப்பி விஷயத்தைக் கவனிப்பது என்று முடிவு செய்தார். இவ்விவரங்களை யெல்லாம் அவர் பாப்பிடமும் உள்ளூர் போலீஸ் தலைவரிடமும் மட்டுமே தெரிவித்து, இதைப் பற்றிச் சோதனை நிறைவேறும் வரையில் வெளியில் எவ்வித உளவும் தெரியக்கூடாதென்று எச்சரித்தார். "ஏதாவது புலன் முன்கூட்டியே தெரிந்துவிட்டால் உள்ளூர் போலீஸ் அதிகாரியைப்பற்றி மக்கள் பேசிக் கொள்ளுவதெல்லாம் உண்மைதான் என்று ஏற்பட்டு விடும்" என்று அவர் பாப்புக்கு விளக்கமும் கூறினார்.

திட்டம் ரகசியமாகவே இருந்தது. எவ்வித உளவும் ஒருவருக்கும் கிடைக்கவில்லை. இரண்டு மாத காலம் செய்யவேண்டிய ஏற்பாடுகளனைத்தும் செய்து முடித்து, சோதனை ஒரு தடங்கலுமில்லாமல் நிறைவேறியது. அடுத்த வார இதழில் இந்தத் திட்டத்தின் முழு விவரத்தையும், நிறைவேற்றிய விதரணையையும், உள்ளூர் போலீஸ் அதிகாரியின் ஒத்துழைப்பையும் பாப் வெளியிட்டார். பத்திரிகை வெளியான மறு தினம் முன்பு தம்மைக் கம்யூனிஸ்ட் என்று கூறிவந்த அதே மனிதர், காரியாலயத்திற்கு வந்து ஒரு விளம்பரமும் கொடுத்துப் போனார். மற்றும் பலர்—எங்களைக் கண்டால் வீதியில் மறுபுறம் தாண்டி எங்களைப் பாராது சென்றவர்கள் இப்போது "ஹல்லோ" என்று உரத்த குரலில் மகிழ்ச்சி தெரிவித்தனர். இடதுசாரி நண்பர்கள், சூதாட்டக்காரர்களின் சகாக்கள் எங்களிடம் வருவதை நிறுத்திக்கொண்டனர்.

ஏதாவது குறிப்பிட்ட செய்திச் சுருளை யாராவது ஒருவருக்கு மனத்தாங்கல் விளைவிக்கும் என்ற காரணத்

திற்காகப் பிரசுரிக்க வேண்டாமென்று பலர் எங்களை வறபுறுத்தியதுண்டு. சிறு சம்பவமாக இருந்தால் நாங்களும் பிரசுரிப்பதில்லை. ஆனால், குறிப்பிட்ட செய்தி முக்கியமாக இருந்து ஊரில் எல்லோரும் அதைப்பற்றி விவாதங்கள் நடத்துகிறார்கள் என்று தெரிந்தால், கட்டாயம் பிரசுரித்தே தீருவோம். பல சந்தர்ப்பங்களில் எங்களுக்கு வேண்டியவர்கள் பலருடைய நல்லெண்ணத்தை அவர்களுக்கு வேண்டாததைப் பிரசுரித்தோம் என்பதற்காக இழக்கவும் நேர்ந்தது. ஜனங்களில் பத்தில் ஒன்பது பேரிடத்தில் உணர்ச்சி வேகம்தான் வெற்றி பெறுகிறதே தவிர புத்தி சக்தி அல்ல என்பதை நாங்கள் கண்டோம். சூதாட்டக் கூட்டங்களில் சோதனை நடத்தியபோது அவர்கள் காணப்பட்டார்கள் என்று பெயர்களைப் பிரசுரித்ததற்காக எங்களைக் கண்டாலும் பாராததுபோல், தெருவின் மறுபுறம் போகும் நண்பர்களைக் கண்டு "உங்களிடம் எங்களுக்கு அன்பும் ஆசையும் உண்டு; ஆனால், ஆர்க்கைவ் பத்திரிகையில் எங்களுக்கு ஆசை அதிகம் உண்டு" என்று சொல்லவேண்டும்போல் தோன்றும்.

இம்மாதிரி சோதனைகளுக்கும் இன்னல்களுக்கும் ஈடாக வேறு ஏதாவது மகிழ்ச்சிக் குரியவை கிடைக்கத்தான் செய்தன. நீண்ட காலம் வேலை செய்தாலும், சக்திக்கு மிகுந்து செயல் புரிய நினைத்தாலும், தன்னிலைக்கு அதிகமாக விவகாரங்களில் இறங்கினாலும், "நம்முடைய ஸ்தாபனத்துக்குத்தான் உழைக்கிறோம்; நம்முடைய கொள்கைக்காகத்தான் பாடுபடுகிறோம்" என்பதில் தனியாக ஒரு இன்பம் இருக்கத்தான் செய்கிறது. பலதரப்பட்ட மக்களுடன் கலந்து கொள்ளுவதிலும் அவர்களுடைய பிரச்சினைகளில் ஈடுபடுவதிலும் ஒருவித உற்சாகம் உண்டாகிறதென்பதில் சந்தேகமில்லை. நுண்ணிய அறிவு விஷயங்களை நன்கு

விளக்குகிறது. விஷயங்கள் விளங்கினால் அலுப்புத் தட்டுவதில்லை; எப்போதும் உணர்ச்சியுடனும் ஊக்கத்துடனும் இருக்க முடிகிறது. வாழ்க்கையில் மேலான இன்பங்களும், உயர்வான திருப்திகளும் சில சமயங்களில் எதிர்பார்க்காத இடங்களிலிருந்து கிடைக்கின்றன. ஊர் மக்களின் வாழ்க்கையை பாதிக்கும் எல்லாவித நடவடிக்கைகளிலும் கலந்துகொண்டால், மேலாக உலவும் விஷயங்களுக்குப் பின்னால் உட்புகுந்து பார்க்கும் வாய்ப்பும், மனிதத்தன்மை எப்படியெல்லாம் இயங்குகிறதென்பதை அறியும் ஆற்றலும் நிச்சயம் உண்டாகின்றன.

ஒரு தீவிபத்தைப்பற்றி ஒரு சமயம் பத்திரிகையில் பிரசுரித்தோம். 1947-ம் ஆண்டு பனி பெய்து கொண்டிருந்த ஒரு பிப்ரவரி மாத காலையில் அது நிகழ்ந்தது. ஊருக்கு இரண்டு மைலுக்கப்பால் ஒரு நீக்ரோ பள்ளிக்கூடமிருந்தது. 'டௌனிங்டன் விவசாயத் தொழிற் கல்வி பாடசாலை' என்று அதற்குப் பெயர். 1905-ம் ஆண்டில் அது ஸ்தாபிக்கப்பட்டது. நீக்ரோ பிள்ளைகள், பொய், களவு முதலிய குற்றங்கள் மலிந்துகிடக்கும் சூழ்நிலையில் வாழ்வதை விட்டு உயர்தரப் பள்ளி வரையிலாவது கல்வி கற்று ஒரு தொழிலைக் கற்றுக்கொள்வது நன்று என்ற சீரிய கருத்தை மனத்தில் கொண்டு பண்பு வாய்ந்த சில பிரமுகர்கள் இப் பள்ளியை ஆரம்பித்து வைத்தனர். பள்ளிக்கூடமும் பல இடையூறுகளுக்கிடையேதான் வளர்ந்து வந்தது. பண முடைகள் பல இருந்தன. இன வெறிக் கலவரங்கள் நிகழ்ந்தன. அடிக்கடி சட்டத்தின் கீழ் தொல்லைகள் நேர்ந்தன. இவைகளையெல்லாம் சமாளித்து அது பணியாற்றி வந்தது.

அன்று நிகழ்ந்த தீவிபத்தில் வகுப்பு அறையும் பிள்ளைகள் வசிக்கும் பகுதியும் தீக்கிரையாகி தரை

மட்டமாயின. பல வருஷங்களாகப் பாடுபட்டுக் கோட்டை கட்டின எங்கள் எண்ணங்களெல்லாம் பள்ளிக்கூடச் சாமான்களும் பள்ளிச் சிறுவர்கள் சாமான்களும் எரிந்து புகைந்ததுபோல் புகைந்து போனதே என்று தலைவர் ஜேம்ஸ H. N. வாரிங்கும் அவர் மனைவியும் பெரிதும் வாட்டமுற்றனர். பள்ளிக்கூடத்தையே இனி மூடிவிடத்தான் வேண்டும் என்னும் நிலை ஏற்படுமோ என்று எண்ணத் தோன்றியது.

அப்போதுதான் ஒரு அற்புதம் நிகழ்ந்தது. அம்மாதிரி அற்புதங்களினுல்தான் மனிதத் தன்மையில் அடிக்கடி எழும் சந்தேகங்கள் நீங்கி, மனிதப் பண்பு முடிவில் மக்களின் நன்மையைத்தான் கருத்தில் கொண்டது என்ற நிச்சயம் ஏற்படுகிறது. தீ விபத்தின் விளைவாக மக்களிடைய ஒரு உணர்ச்சி ஆவேசம போல் எழுந்தது, இன வேற்றுமைகளையும் உதறித் தள்ளிக்கொண்டு. அரை நூற்றுண்டாக ஊருக்கப்பால் தள்ளி வைக்கப்பட்டிருந்த பள்ளிக்கூடத்திற்கு ஆதரவளிக்க முற்பட்டது. வண்டி வண்டியாக உணவுடனுடம், புத்தகங்களுடனும், துணிமணிகளுடனும் ஊர் மக்கள் திரண்டு வந்தனர். இதுவரையில் பள்ளிச் சிறுவர்களைத் தங்கள் வீட்டு வாசலிற்கூட அனுமதிக்காத அண்டை வீட்டுக்காரர்கள் இப்போது வேறு இடம் கிடைக்கும் வரையில், பிள்ளைகளைத் தங்கள் வீட்டிலேயே வைத்துப் போஷிக்கச் சம்மதித்தார்கள். புது கட்டிடம் எழுப்பப் பணம் திரட்ட உடனே ஒரு கமிட்டி நிறுவப்பட்டது. வாரிங் என்பவர் இவ்வளவு வருஷங்களாக நிகழ்த்திய அற்புதத்தையும் மனிதப் பண்பில் அவர் உண்டாக்கிய மாறுதலையும் விவரித்து ஆர்க்கைவில் ஒரு வியாசம் விரிவாக எழுதினேம். இவைகள் எல்லாம் சனிக்கிழமை மாலை தபால் (Saturday Evening Post) என்னும் பிரபல அமெரிக்க தேசியப் பத்திரிகையிலும் ஒரு நீண்ட கதையாக

வெளிவந்தது. இதன் விளைவாக, தேசீய அரசாங்கத்தினிடமிருந்து பள்ளிக்கூட கட்டிட நிபுணர் நிர்மாணத்திற்காக ஒரு லட்சத்து ஐம்பதினுயிரம் டாலர்கள் ஒதுக்கப்பட்டது. இந்தப் பள்ளிக்கூடத்தின் சரித்திரத்திலேயே கேட்டிராத சம்பவம் இது.

1951-ம் வருஷம் ஒரு வெள்ளிக்கிழமை பகல் மற்ருெரு அற்புதம் நிகழ்ந்தது. உணவு நேரம். காரியாலயத்தின் பின்புறத்தில் ஒரு நீண்ட மேஜையின் மீது உண்டி வைக்கப்பட்டிருந்தது. ரொட்டிக் கடையிலிருந்து வாங்கி வந்த ரொட்டிச் சுருளும், பலசரக்குக் கடையிலிருந்து வாங்கிவந்த வெண்ணெயும் மாமிசமும் தான் எங்களுக்குப் பகல் உணவு. திடீரென்று வாசற் கதவு திறக்கப்பட்டது. ஒரு காகிதக் கம்பெனியின் தலைவர், சிப்பந்திகள் இலாகா மானேஜர், வர்த்தகச் சங்கச் சில்லறை வியாபாரக் கமிட்டியின் தலைவர், சில ஊர் முக்கியஸ்தர்கள்—இவர்கள் எல்லோரும் ஏக காலத்தில் உள்ளே நுழைந்தனர். அவர்கள் எல்லோரும் உணவுக்காக காகிதப் பைகளில் 'சாண்ட்விச்சு' கள் வைத்திருந்தனர்.

"நாங்கள் டெளனிங்டனைப் பற்றி எந்த முறையில் உதவி செய்யலாம் என்று தெரிந்துபோக வந்திருக்கிருேம்" என்று சம்பாஷணையை ஆரம்பித்தார்கள் அவர்கள்.

அந்த வாக்கியம் நாங்கள் நெடுநாளாகக் கொண்டிருந்த் நோக்கம் நிறைவேறிக்கொண்டிருக்கிறதென்பதை உணர்த்தியது. அந்த ஊரின் சரித்திரத்திலேயே முதல் தடவையாக அப்போதுதான் தொழிலதிபர்கள் சமூக மக்களின் ஒத்துழைப்பு அவர்களுக்கு அவசியம் என்பதை உணர்ந்தனர். வியாபாரிகளும் முன்னேற்ற மடைவதற்குப் புது விநியோக முறைகளைக் கையாள வேண்டும் என்றும் உணர்ந்தனர். ஆர்க்கைவ் ஆபீசில்

அன்று நடந்த இந்த முதல் கூட்டத்தின் விளைவாக 'நண்பர்கள் சங்கம்' உருவாகியது.

இச்சங்கத்தின் அடுத்த கூட்டம் மறு வாரம் நகராண்மைக் கட்டிடத்திலேயே நடந்தது. முதல் கூட்டத்தில் கலந்துகொண்ட எல்லோருக்கும் அழைப்புகள் அனுப்பப்பட்டு, அவர்களுக்குப் பகல் உணவும் அளிக்கப்பட்டது. இந்த் இரண்டாவது கூட்டத்தில் ஒரு 'குறைபாடுகள் கமிட்டி' நிறுவப்பட்டது. ஜனங்கள் தங்கள் குறைகளை இக்கமிட்டியிடம் சொலலிக்கொள்ளலாம். எப்படி இவைகளை நிவர்த்திப்பது என்று இக்கமிட்டி பரிசீலனை செய்யும். முதலாவதாக வந்த குறைபாடு ஒரு நீக்ரோ அங்கத்தினரால் இனத் துவேஷத்தைப் பற்றியும் இன ஒற்றுமையின் அவசியத்தைப் பற்றியும் எழுதப்பட்டது. அதன் விளைவு காகிதக் கம்பெனித் தலைவர் பல நீக்ரோ அங்கத்தினர் முதலியவர்கள் அடங்கிய ஒரு உப கமிட்டி நிறுவப்பட்டு, இன ஒற்றுமையை வளர்க்க செயல் புரியத் தலைப்பட்டது. தெரு விளக்குகள், அசுத்தம் எடுத்தல் முதலிய விஷயங்களைப் பற்றிய குறைகள் நகராண்மை அங்கத்தினர் கவனிக்குமாறு அனுப்பப்பட்டன.

சில சந்தேகப் பேர்வழிகள் கூட்டத்திற்கு வரத் தயங்கிச் சாக்குபோக்குகள் சொன்னார்கள். தங்கள் கடைகளை விட்டு வர இயலவில்லை என்று கூறினர். இவர்களுடைய சௌகரியத்தை முன்னிட்டு கமிட்டியின் கூட்டங்களைச் செவ்வாய்க்கிழமை காலை வேளைகளில் வைத்துக்கொண்டு, கடைகளுக் கருகாமையிலிருந்த ஒரு ஓட்டலில் காலை உண்டியும் ஏற்பாடு செய்து கூட்டமும் நடைபெற்றது. காப்பியும் கேக்கும் சாப்பிட்டுக்கொண்டே ஊர் மக்கள் ஊர் பிரச்சினைகளைப் பற்றி சர்ச்சை செய்தார்கள். பல வருஷங்களாக

அமுழ்ந்திக் கிடந்த பல பிரச்சினைகள் வெளிக்குக் கொண்டுவரப்பட்டன. காகிதக் கம்பெனியின் கொள் முதல் இலாகாவின் உள் உளவினாலும் சலுகையினாலும், ஊரில் பலர் பக்கத்து ஊருக்குச் சென்று வேண்டிய பொருளைக் கம்பெனியிடமிருந்து வாங்கி உச்சபட்ச தள்ளுபடி லாபத்தை அடைந்துவரும் பழக்கம் அம்பலப்படுத்தப்பட்டது. உள்ளூர் வியாபாரிகள் தங்கள் வெறுப்பைக் காட்டினர். இந்த விஷயம் காகிதக் கம்பெனிக்கே தெரியாது. உடனே இதைப் பற்றி விசாரணை நடத்தி நிலைமை சீர்ப்படுத்தபட்டது. தொழிலாளிகள், நிர்வாகஸ்தர்கள், மந்திரிகள், வியாபாரிகள் முதலிய எல்லோரும் இக்கமிட்டியின் காலைக் கூட்டங்களில் கலந்துகொண்டனர்.

இச்சம்பவங்களிலிருந்து அந்த ஊரில் ஆர்க்கைவ் பத்திரிகை எவ்வளவு பயனுள்ளதாகத் திகழ்ந்தது என்பது உள்ளங்கை நெல்லிக் கனிபோல் விளங்கிற்று. நாங்கள் மட்டும் தனித்து 'நண்பர் சங்கத்'தை ஸ்தாபித்திருக்க முடியாது. ஆனால், அதற்கு வேண்டிய சூழ்நிலையையும் சாதகமான நிலையையும் உண்டுபண்ண எங்களால் முடிந்தது. பத்திரிகையில் தலையங்கங்கள் மூலமாகப் போடப்பட்ட அஸ்திவாரத்தினால்தான் 'சங்கம்' என்ற கட்டிடம் எழுந்தது. பார்க்கப் போனால் நாங்கள் செய்தது ஒரு பெரும் சாதனை என்று தோன்றாது. ஏனெனில், ஊர் மக்களின் ஒத்துழைப்பின்றி எந்தப் பத்திரிகையாலும் ஒன்றும் செய்ய இயலாது. நாங்கள் செய்தனவெல்லாம்—நூறில் தொண்ணூற்றொன்பது பாகம்—சிறுசிறு விஷயங்களைப் பற்றிச் சரிவர செய்தி தயாரித்ததே. இச்சிறு விஷயங்களால் உலகப் போக்கில் எவ்வித சலனமும் உண்டாகாது எனினும், இச்சிறு விஷயங்கள்தானே உலகம்? இவைகள்தானே சாதாரண ஜனங்கள்? அவர்கள்தான் எங்களுக்கு லட்சியம். அவர்களுடைய

சுகதுக்கங்கள்தான் எங்களுக்கு உணவு. இதில் எங்களுக்குச் சந்தேகமேற்பட்டாலோ, உற்சாகம் குன்றினாலோ அல்லது அசட்டை ஏற்பட்டாலோ கிராமப் பத்திரிகை ஆசிரியர்கள் என்னும் வேலையே எங்களுக்கு முடிந்துவிடும். ஏன், நாங்கள் சாதாரணகள்ளங்கபடமற்ற மானிடர்கள் என்பதும் முடிந்துவிடும்.

*　　　*　　　*

எங்கள் பத்திரிகை உலகக் கனவுகளில், சந்தாதாரர்கள் கணக்கு வழக்குகள், இதர கணக்குகள் முதலியன அவசியம் என்பதை நாங்கள் பொருட்படுத்தவேயில்லை. சில நூறு சந்தாதாரர்களுக்காசப் பல்வேறு புத்தகங்கள் அவசியம் என்றே நாங்கள் உணரவில்லை. இதனுல்தான் குமாஸ்தாக்களே இல்லாத எங்கள் காரியாலயத்தின் குறைபாடுகளை நாங்கள் முதன்முதலாக உணர்ந்தபோது முற்றிலும் புதுமையாகவே அவைகள் விளங்கின. ஆனுல், நிலைமை வளர்ந்து உச்சநிலையை அடைந்தபோது 1947-ம் ஆண்டு கோடைகாலம். பாப் டாக்டருடைய சிபாரிசின்படி பதினைந்து நாள் ஒய்வு பெற்று கடல் பிரயாணம் தொடங்கியிருந்தார். முதல் தடவையாக நான் தனியாகவே விடப்பட்டுப் பத்திரிகையின் எல்லா விவகாரங்களையும் கவனிக்கவேண்டி வந்தது.

கடலில் அவர் ஆனந்தமாக மிதந்துகொண்டிருந்த சமயத்தில், இங்கே காரியாலயத்தில் ஒரு நாள் ஒரு வாலிபர் நுழைந்து தான் கணக்குகளைச் சரிபார்க்க வந்துள்ளதாகத் தெரிவித்தார். பத்திரிகை வாங்கின பிறகு ஒரு வாரம் பாப் தேக நிலை காரணமாக நான் தனியாக வேலை செய்தாலும், இப்போதுதான் நான் எல்லாவிதத்திலும் தனித்து நின்றேன். அசட்டுத்தனமாக ஒன்றும் செய்யக்கூடாதென்று தீர்மானித்து, ஒரு

புன்சிரிப்புடன், "ஓஹோ, அப்படியா? நல்லது" என்று அர்த்தமில்லாமல் சொன்னேன்.

ஆனால், அவ்வளவு சுலபத்தில் நிலைமையைச் சமாளிக்கக்கூடவில்லை. என் கணவர்தான் உண்மையில் ஆசிரியர் என்றும் அவர் விடுமுறையிலிருக்கிறார் என்றும் அவர் என்ன கேட்கிறார் என்பதைப்பற்றி எனக்கு எள்ளளவும் தெரியாதென்றும் ஒப்புக்கொண்டேன். இந்த விவரத்தையும் கேட்டு, அப்போதுதான் இங்குமங்கும் மிகுந்த பரபரப்புடன் கையில் பத்திரிகைக் கட்டுகளுடன ஓடிக்கொண்டிருந்த இரண்டு பள்ளிக் கூடச் சிறுவர்களையும் பார்த்து வந்தவர் சற்று நேரம் பிரமித்துப் போனார். ஆனால், ஒரு பொறுமைமிக்க உபாத்தியாயர் மந்த புத்தியுள்ள பையனுக்குப் பாடம் சொல்லுவதுபோல் அவர் அங்கிருந்த ஒரே ஒரு நாற்காலியிலிருந்த டெலிபோன் புத்தகங்களை யெல்லாம் அப்புறப்படுத்திவிட்டு அதில் அமர்ந்துகொண்டார். சாவதானமாக அவர் 'ஆடிட் பீரோ ஆப் ஸர்குலேஷன்' (Audit Bureau of Circulation) என்னும் ஸ்தாபனத்தைச் சேர்ந்தவரென்றும், சுருக்கமாக அதை ABC என்று கூறுவார்கள் என்றும் தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டார்.

"உங்கள் கணவர் இந்த ஸ்தாபனத்தில் அங்கத்தினராக மனுப் போட்டிருந்தார்" என்று ஆரம்பித்தார். சுற்றுமுற்றிலும் ஒருமுறை பார்த்துவிட்டு, மூலைகளிலும் கூரையிலும் ஒட்டடையும் சிலந்திக் கூடும் படிந்து இருந்ததைப் பார்த்துக் கையை விரித்து, "எதற்காக மனுப் போட்டார் என்று தெரியவில்லை. உங்கள் பத்திரிகைக்கு அதிக நடமாட்டம் இருக்கும் என்று தோன்றவில்லையே" என்று மேலும் சொன்னார்.

"உண்மையில் ABC என்பதைப் பற்றி நான் இதற்குமுன் கேள்விப்பட்டதே இல்லை. இது ஏதோ

வியாபார சம்பந்தமுள்ள விளம்பரத்துக்கேற்ற குழம்பு என்பதுபோல இருக்கிறது உங்கள் வார்த்தையிலிருந்து. அதுதான் உங்கள் விருப்பம் என்ருல், உங்கள் விளம் பரத்திற்குக்கிராமாந்திரப் பிரதேசங்களிலேயே எங்கள் பத்திரிகையைவிட அதிக நடமாட்டமுள்ள பத்திரிகை இந்தப் பக்கங்களில் கிடையாதென்று உறுதியாகச் சொல்லுவேன்'' என்றேன்.

அந்தப் புது மனிதன் தலையை அசைத்தான். 'அல்ல' என்பதற் கறிகுறியாக மேலும் கீழும் பார்த் தான். பிறகு ஏதோ 'வேறு வழியில்லை' என்று நினைத்தவன்போல், தன் கோட்டை கழற்றிவிட்டுச் சட்டையை முழங்கை வரையில் தள்ளிவிட்டுக்கொண் டான். ஏதோ மும்முரமாக வேலை செய்யத் தயாரான வன் போல் காணப்பட்டான்.

ஆடிட் பீரோ என்பது ஒரு பெரிய ஸ்தாபனம் என்றும், அதன் முக்கிய வேலை தினசரி, வார, மாதப் பத்திரிகைகள் ஒவ்வொன்றுக்கும் பணம் செலுத்தப் பட்ட நிகர சந்தாதாரர்கள் எவ்வளவு பேர் இருக்கிருர் கள் என்று கணக்கு வைத்துக்கொள்ளுவதென்றும், இவ்விவரத்தை சர்டிபிகேட் மூலம் கேட்போருக்கு வழங்குவதென்றும், இந்த வேலையின்பொருட்டு நியூயார்க் தலைநகரத்திலிருந்து வெய்யிலில் மிகவும் கஷ்டப்பட்டு வந்துவிட்டபடியால் வந்த வேலையை இங்கே தாமதமானுலும் முடித்துக்கொண்டு போவ தாகத் தீர்மானித்திருப்பதாயும் அவர் விவரமாக எல்லா வற்றையும் சொன்னுர்.

"எங்கே உங்கள் சந்தாதாரர்கள் விவரங்களைக் கொடுங்கள், பார்க்கலாம்'' என்று உறுமினுர்.

ஒரு தட்டில் அடுக்கி வைத்திருந்த ஐந்தங்குல நீளமும் மூன்று அங்குல அகலமு முள்ள கார்டுகளை

அப்படியே வெளியே கொணர்ந்தேன். இந்தக் கார்டு களில்தான் சந்தாதாரர்களின் பெயர்களும் விலாசங் களும் இருந்தன. தட்டை வெளிக் கொணரும் போதே என் கணவரும் நானும் வேறு உதவி கோரா மல் இந்தப் பத்திரிகையை ஆரம்பித்து நடத்துகிறோம் என்றும், வேலை மிகுதியால் களைப்படைந்து ஓய்வுக் காக பாப் லீவு எடுத்துக்கொண்டிருக்கிறார் என்றும் சொல்லிக்கொண்டே வந்தேன்.

வெளியிலெடுத்த தட்டை அவரிடம் நீட்டி, "இதில் ஏதாவது உங்களுக்குப் புரியவில்லை என் றால் என்னைக் கேளுங்கள். எனக்கு என்னென்ன தெரியுமோ அவற்றையெல்லாம் சொல்லுகிறேன்" என்று கூறினேன்.

நான் தலையங்கம் எழுதுவதில் முனைந்தேன். அதி லேயே நான் ஆழ்ந்திருந்தபோது லேசாக முனகல் சத்தம் கேட்டுத் தலை நிமிர்நதேன்.

"இதைப் பாருங்கள்! இவைகள் என்ன?" என்று ஆடிட்டர் வினவினார். அவர் கேட்டதிலிருந்து சந்தாதாரர்கள் பெயரும் விலாசமும் இருக்கவேண்டிய இடத்தில் சீட்டுக் கட்டிலிருந்து மூன்று ஏஸ் சீட்டுகள் இருக்கின்றனவே என்ற ஆச்சரியம் தொனித்தது.

ஒவ்வொரு சீட்டிலும் மேலே இடது பக்க ஓரத்தில் ஒரு பெரும் விலாசமும் தேதியும் குறிக்கப்பட் டிருந்தன. தேதி சந்தா முடிவடையும் நாளைக் குறிக் கும். இதில் ஒன்றும் தவறுதல் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. அதை அவரிடமும் கூறினேன்.

அவர் அதிருப்தி அடையவில்லை. "அவைகளில் எழுதியுள்ள குறிப்புகளைக் கவனியுங்கள்!" என்றான் ABC மனிதன். தன்னுடைய தலையை இரண்டு

கைகளாலும் தாங்கி, ஏதோ புதுமையைக் கண்டுபிடித்தவன்போல், "உன் கணவர் எதற்காக இந்தச் சமயம லீவு எடுத்துக்கொண்டார் என்று இப்போது எனக்குத் தெரிகிறது. அவர் கெட்டிக்காரராக இருந்தால், அவர் திரும்பவேமாட்டார்" என்று அவன் மேலும் அடுக்கினுன்.

சீட்டுகளைப் பார்த்தேன். ஒவ்வொரு சீட்டிலும ஒவ்வொரு குறிப்பு இருந்தது. அக்குறிப்புகள் எல்லாம் எனக்கு விளங்கின. அவைகள் எல்லாம் சரியே. ஆனல், ஆடிட்டருக் கென்னவோ அவைகள் மேஜை டிராயரிலிருந்து வெளிவரும் தேள்கள்போலத் தோன்றின. ஒன்றின்மேல், "சந்தா அந்த மனிதனுல் செலுததப்பட்டது" என்று எழுதியிருந்தது; மற்ருென்றில் "பாங்கி மூலையில் பாப்பிடம் கொடுத்ததாகச் சொல்லுகிருர்" என்றிருந்தது; மற்ருென்றில் "பணம் அனுப்புவார்" என்றிருந்தது; மேலும் ஒன்றில் "பள்ளிக்கூடத்திற்கு அனுப்பிவிட்டதாகச் சொல்லுகிருள்" என்றிருந்தது. இன்னுமொன்றில் "கடையில் ஜேனிடம் கொடுத்ததாகச் சொல்லுகிருள்", "அடுத்த சம்பளத் தேதியன்று கொடுப்பதாகச் சொன்னுர்", "இதற்கு இரண்டு முறை கொடுத்துவிட்டதாகச் சொல்லுகிருர்" என்றெல்லாம் குறிப்புகள் இருந்தன.

இதைச் சாவதானமாகக் கேட்ட பின்னர் ஆடிட்டர் முடிவாகச் சொன்னுர். "கவனியுங்கள், இந்தக் குறிப்புகள் என்ன வென்பது உங்களுக்கு நன்ருக விளங்கலாம்; எனக்கு அவைகள் விளங்கவில்லை. விளங்கினுலும் அவைகளைப்பற்றி நான் அதிகக் கவனம் செலுததப் போவதில்லை. ABC ஸ்தாபனத்திற்கு என்ன தெரிய வேண்டுமென்ருல், இந்தச் சந்தாத் தொகைகள் எந்தத் தேதியில் ஆபீசில் செலுத்தப்பட்டன என்றும்,

அவைகள் பாங்கியில் சேர்ப்பித்ததற்கு அறிகுறியாக அந்தத் தேதி பாங்கி ரசீதையும் ஒத்திட்டுக் காட்டப் பட்டதா என்றுமே. இல்லை என்ருல் அந்தச் சந்தாக்கள் எல்லாம் செலுத்தப்பட்ட சந்தாக்கள் என்னும் கணக் கில் எடுத்துக்கொள்ள முடியாது.''

எங்கள் நிலைமைபற்றி விவரித்தேன். நாங்கள் பத்திரிகையை வாரந்தோறும் கொண்டுவருவதிலேயே முழு கவனம் செலுத்தியதால், புத்தகங்கள் வைத்துக் கொள்ளுவதற்கு அவகாசம் கிடைக்கவில்லை என்றும், நாங்கள் வெளியே போனபோது தெருவில் எங்களை நிறுத்திவைத்து, ''சென்ற வார விளம்பரத்திற்காக இதோ பணம் வாங்கிக்கொள்ளுங்கள்'' அல்லது ''பாக்கியாக தங்கிப்போன சந்தாத் தொகையைப் பெற்றுக்கொள்ளுங்கள்'' என்று பணம் வழங்கு வார்கள் என்றும், கொடுத்ததை எல்லாம் வாங்கிச் சட்டைப்பையில் திணித்துக்கொண்டு, ஆபீசுக்குத் திரும்பியதும் யார் எவ்வளவு கொடுத்தார்கள் என்று ஞாபகம் வைத்துக்கொண்டேதான நாங்கள் காரி யம் நடத்திக்கொண்டிருக்கிறோம் என்றும் நான் சொன்னேன்.

நான் சொல்லிக்கொண் டிருக்கும்போதே ஒரு பெண்மணி, ''சந்தாத் தொகையை வாங்கிக்கொள்ளும் இடம் இதுதானு?'' என்று உரத்த குரலில் கேட்டுக் கொண்டே உள்ளே வந்தாள்.

''இதுதான்'' என்று அந்தப் பெண்மணிக்கு உறுதி கூறிவிட்டு, அவள் செலுத்திய தொகையை வாங்கி அதை ABC மனிதனிடம் நீட்டினேன்.

''தயவுசெய்து நாங்கள் இந்தப் பணத்தை எப்படி கணக்கு வைக்கவேண்டும்? சொல்லிக் கொடுங்கள் ; பப்படியாகச் சொல்லுங்கள்'' என்று வினவினேன்.

வேறு வழியில்லாததால் மீதியிருந்த நாள் பூராவும் எங்கள் புத்தகங்களைப் பார்வையிட்டு, கடினமில்லாததும் எளிதில் புரிந்துகொண்டு சரிவர அமைத்துக்கொள்ளும்படிக்கும் ஒரு முறையை எனக்கு விளக்கினார். அதற்கு வேண்டிய புத்தகங்கள் எப்படி வைத்துக்கொள்ளவேண்டுமென்றும் சொன்னார். இடையிடையே வழிந்த வியர்வையைத் துடைத்துக்கொண்டும், குளிர்ந்த தண்ணீர் அருந்திக்கொண்டும் அவர் மிகவும் கஷ்டப்பட்டார். மறுநாள் நியூயார்க்கிலிருந்து டிரங்கு டெலிபோனில் என்னைக் கூப்பிட்டு, எல்லாம் புரிந்ததா என்று வினவியதோடு, சொன்னபடி புத்தகங்களையெல்லாம் வைத்துக்கொண்டிருக்கிறீர்களா என்றும் பரிவுடன் கேட்டார். அவர் பொறுப்பை நிறைவேற்றிய முறை எனக்கு ஆச்சரியத்தை விளைவித்தது.

அவர் மேலும் பல முறைகள் இங்கு வந்து சென்ற பிறகு, ஒரு வருஷம் கழித்து நாங்கள் ABC-ல் அங்கத்தினராக ஆனோம். ஆர்க்கைவ் பத்திரிகைக்கு லீஜன் ஆப் ஹானர் (Legion of Honour) என்னும் பட்டம் கிடைத்துவிட்டமாதிரி நான் பெருமையடைந்தேன்.

*　　　*　　　*

விடுமுறையிலிருந்து திரும்பியதும் முதல் வேலையாக மிஸ்டர் பீடர்ஸ் என்பவரிடம் பேசி, அவரை தினம் கொஞ்ச நேரத்திற்குக் கணக்குப் புத்தகங்களைப் பார்த்துக்கொள்ள இணங்கும்படிச் செய்தார். நான் அவரிடம் நேரில் சொல்லாவிட்டாலும், மிஸ்டர் பீடர்ஸ் வாஸ்தவத்தில் மகான் பீடர்ஸ் என்றே நான் எண்ணினேன். சாதுவுக்கு இருக்கும் ஒளியை அவர் தலையில் அணிந்திருந்த பட்டுக் குல்லாய்க்குள் மறைத்து வைத்திருந்தார் போலும்!

பென்ஸில்வேனிய இருப்புப்பாதை ஸ்தாபனத்தில் ஐம்பது வருஷம் வேலை பார்த்து ஓய்வு எடுத்துக்கொண்டவர் மிஸ்டர் பீடர்ஸ். ஒன்றும் செய்யாமல் சும்மா இருப்பது அவருக்குச் சற்று கடினமாய்த்தான் இருந்தது என்று அவர் சொன்னார். முதல் வாரத்திற்குப் பின் காலை வேளைகளில் நாங்கள் வருமுன்னரே வந்துவிடுவார். மாலை ஐந்து மணி வரையில் பல நாட்கள் இருப்பார்.

அவர் வந்தபிறகு காரியாலயத்தில் சிறுகச் சிறுக மாறுதல்கள் ஏற்பட்டன. ஒருநாள் எங்களுடைய மேஜையில் 'நகரப் பகுதி' என்று குவிந்து கிடந்த காகிதங்களைப் பார்த்துவிட்டு, "நான் ரெயில்வேயில் வேலை பார்த்த காலங்களில் ஒருநாள்கூட மேஜையைக் காலி செய்யாமல் இரவு வீட்டுக்குத் திரும்பியது கிடையாது" என்று பொறுமையாகக் கூறிக்கொண்டார்.

பாப்பும் நானும் அவர் சொன்ன கருத்தைப் புரிந்துகொண்டோம். இப்போதெல்லாம் மாதத்திற்கொரு முறை எல்லா டெலிபோனையும் நகர்த்துவோம். பிரிக்காமலே அடுக்கடுக்காகக் கிடக்கும் பாயிலர் பிளேட்டுகளையெல்லாம் பிரிப்போம். பதிலே எழுதாது குவிந்திருக்கும் கடிதங்களையெல்லாம் பார்ப்போம். அச்சு 'ப்ரூப்'களைச் சுத்தம் செய்வோம். தூசு படிந்த பாங்குக் கணக்கு விவரங்களையெல்லாம் கட்டி எடுத்து வைப்போம். மறுபடியும் எல்லாவற்றையும் முன் மாதிரி நாங்களே வீட்டில் தயாரித்த மேஜையின்மீது அடுக்கி வைப்போம்.

நாங்கள் பத்திரிகை ஆரம்பித்த புதிதில் சில வழக்கங்களைக் கொண்டிருந்தோம். மிஸ்டர் பீடர்ஸ் இவைகளைக் காரணத்துடனேயே கண்டித்தார். அதற்குப்பிறகு இவைகளை நாங்கள் கைவிட்டோம்

உதாரணமாக, ஒரு சமயம் கூப்பன் புத்தகத்தைத் தொலைத்துவிட்டேன். இதைக் கொண்டுதான் நான் தவணை செலுத்தி ஒரு சலவை செய்யும் மிஷின் வாங்கினேன. இது கெட்டுப் போனதால் கணக்குத் தெரியாமல் இரு மடங்கு அதிகமாக நான் தவணை செலுத்திவிட்டேன். அந்தக் கம்பெனி நிர்வாகஸ்தர்கள் நாணயம் மிகுந்தவர்கள். அதிகப்படியாக அனுப்பிய பணத்தைத் திருப்பி அனுப்பினர்கள். அவர்கள் நாண யத்தில் நான் ஆச்சரியமடைந்து அந்தப் பணத்தை மறுபடியும் அவர்களுக் கனுப்பி, ஒரு 'ரிப்ரிஜிரேட்ட' (Refrigeratter)ருக்கு ஆர்டர் கொடுத்து இந்தத் தொகையை அதற்கு முன்பணமாக வைத்துக்கொள் ளும்படி எழுதினேன். மிஸ்டர் பீடர்ஸ் இதைப் பற்றிக் கேட்டபோது இதை ஆமோதிக்கவில்லை. "ரயில்வேயில் இதை ஒரு நல்ல வியாபாரம் என்று கருதமாட்டார்கள்" என்ருர்.

ஏற்கனவே எங்களிடம் ஒரு ரிப்ரிஜிரேட்டர் நல்ல நிலைமையிலேயே இருந்தாலும், இரண்டாவது ஒன்றும் அவசரத்திற்கு இருப்பது நல்லது என்று நம்பிக்கை யுள்ளவள் நான். மிஸ்டர் பீடர்ஸ் கணக்குப் புத்தகங் களைச் சுட்டிக்காட்டி, "உங்கள் குடும்பமும் வருமான மும் இரண்டு ரிப்ரிஜிரேட்டர்கள் வைத்துக்கொள்ளும் தரத்தைச் சேர்ந்தவை அல்ல" என்று விளக்கிவிட்டு, அந்தப் பணத்தை வைத்திருந்தால் நன்ருக இருக்கும் என்று கூறினர். ஒவ்வொரு மாத இறுதியிலும் நாங் கள் மேற்கொண்ட ஒரு நடவடிக்கையை அவர் ஆமோ திக்கவில்லை. அம்மா தம் வீட்டுச் செலவுக்காகச் செலுத்த வேண்டிய பட்டியல்கள் எல்லாவற்றையும் பொறுக்கி ஒரு தொப்பியில் போட்டு நன்ருகக் கலந்துவிடுவோம். பிறகு அதிலிருந்து லாட்டரி பிரைஸ் சீட்டு பொறுக்கு வதுபோல் ஒரு பட்டியலைப் பொறுக்குவோம். அதற்குத் தான் பணம் கொடுப்போம். யாராவது பாக்கிக்காக

கடுமையாகக் கடிதம் எழுதினுல், அவர்களுடைய பட்டியலை நான் அந்த மாதம் சீட்டுக் குலுக்கும் கூடையிலேயே போடமாட்டேன் என்று அவர்களைப் பயமுறுத்துவது முண்டு. இதை யெல்லாம் நான் மிஸ்டர் பீடர்ஸிடம் சொன்னபோது சாந்தமாகவே அவர் முணுமுணுத்தார். ''என்னுடைய நீண்ட கால அனுபவத்தில் இம்மாதிரி ஒரு அனுபவம் எனக்கு ஏற்பட்டதில்லை'' என்ருர் அவர். முடிவாக, இன்று பணம் நிறைய வசூலாகி இருக்கிற நாள் என்று அவர் எண்ணினுல், அன்று அவரே பாக்கிதாரர்களுக்கு வழங்க செக்குகள் எழுதி, கையெழுத்தாகும் வரை பக்கத்திலேயே நிற்பார். இப்போதெல்லாம் மிஸ்டர் பீடர்ஸின் மேற்பார்வையில், பாங்கியிலிருந்து எங்களுக்குத் தாக்கீது வருவதில்லை; எங்கள் தொப்பிக்கும் வேலை இல்லை.

* * *

1948-ம் ஆண்டு வசந்த காலத்தில், ஹனி ப்ருக்கை விட்டு வெளியேறியே தீரவேண்டும் என்ற நிலை சீக்கிரத்திலேயே ஏற்பட்டுவிடும் என்பதை உணர ஆரம்பித்தோம். அச்சகத்தில் வேலை மிகுதியால் வாராவாரம் பத்திரிகையைத் தவருமல் கொண்டுவருவது மேலும் கடினமாகி வந்தது. ஒவ்வொரு வாரமும் காலங் கடந்தேதான் அச்சடிக்க ஆரம்பிக்கப்படும்; காகிதங்கள் மடித்தலும் காலதாமதமாகவே ஆரம்பமாகும். ஆர்க்கைவ் பத்திரிகையும் அதிகமான பிரதிகள் அச்சாவதால் வேலையும் அதிகம்.

கோடைகாலம் முழுவதும் எங்கள் தேவைக்குத் தகுதியான இடம் கிடைக்குமா என்று தேடி அலைந்தார் பாப். வேடிக்கைக்காகப் பத்திரிகையில் ஒரு விளம்பரமும் விடுத்தோம். ''ஆர்க்கைவ் பத்திரிகையை அச்சடிக்க ஒரு இடம் தேவை. யாராவது உதவி

புரிவார்களா?'' என்று எழுதி யிருந்தோம். ஆலோசனைகள் வந்து குவிந்தவண்ண மிருந்தன. ஒரு விவசாயி தன்னுடைய வைக்கோற்போர் போட்டிருக்கும் இடத்தைத தருவதாகச் சொன்னார். மற்றொருவர் எங்களுக்கென்றே ஏற்பட்ட ஒரு இடம் தன் வசம் இருப்பதாகக் கூறிக்கொண்டு நேரடியாகவே வந்து விட்டார்.

"நல்ல விஸ்தாரமான நிலம் இருக்கிறது. அந்த ஓடையை ஒட்டினாற் போலுள்ளது. நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் அங்குள்ள மரம், செடி கொடிகளைக் களைந்தெரிந்துவிட்டு, உங்களுக்கு எந்தமாதிரி கட்டிடம் தேவையோ அதுமாதிரி கட்டிக்கொள்ளலாம்'' என்றார் அவர்.

"எங்கள் சந்தாதாரர்கள் எப்படி எங்களை அணுகுவார்கள்? படகு வைத்துக்கொண்டா?'' எனறார் பதிலுக்கு பாப்.

கடைசியாக, ஆகஸ்ட் மாதத்தில் நடு ரஸ்தாவிற்குச் சற்று தூரம் தள்ளி, பழைய மோட்டார்கள் விடப்பட்டிருந்து பின்னல் குதிரை லாயமாக உபயோகிக்கப் பட்ட ஒரு இடத்தை நீண்ட கால குத்தகைக்கு நாங்கள் எடுத்துக்கொண்டோம்.

எங்களுக்காகச் சொந்தமாக அச்சகம் ஏற்பட்டபின் எங்களுக்குப் புது இன்னல்கள் பல விளைந்தன. அராபியக் கதையில் வரும் செம்படவனைப்போல புட்டியிலிருந்து பூதம் புறப்பட்டது எங்களுக்கு. நாங்கள் எதிர்ப்பார்த்ததற்கு அதிகமாகவே எல்லாம் கிடைத்தன. வாரந்தோறும் பத்திரிகையை வெளிக்கொணர்வதுடன், குதிரை லாயத்தைச் சீர்படுத்தவேண்டி யிருந்தது. வைக்கோல் விழும் சரிவை அச்சுத் தட்டு வைக்கும் மேடையாக மாற்றவேண்டி யிருந்தது. தானியத்

தொட்டிகளை யெல்லாம் அச்சுப் பெட்டிகளை அடுக்கும் கல்லணையாக மாற்றிக்கொள்ளவேண்டி யிருந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக ஆர்க்கைவ் பத்திரிகையை அச்சடிக்கப் போதிய எழுத்துக்களையும் பொறுக்கியாக வேண்டும்.

எங்கள் ஸ்தாபனத்தில் புதியதாக அச்சாபீஸ் மானேஜராகச் சேர்ந்த எட் ரஸ்ஸல் என்பவரும் பாப் பும் வியாபாரப் பத்திரிகைகளில் விளம்பரப் பகுதிகளை யெல்லாம் விடாது படித்தனர். வார முடிவில் எல் லாம் பிராந்தியம் முழுமையும் சுற்றினார்கள். அச்சாபீ ஸுக்குச் சம்பந்தமுள்ள எல்லாவிதப் பொருள்களை யும் சேகரித்தனர். காலிகள், கல்லணைகள், அச்சுக் கோப்புகள் முதலியவைகளைப் பற்றி யெல்லாம் விரி வாகப் பேசினார்கள். எழுத்துச் சேர்த்து அச்சடிக்கும் மிஷின் நல்லதா 'ஆப் செட்' மிஷின் நல்லதா என் றெல்லாம் விவாதித்தனர். உற்சாகம் மிகுந்து சரித்திர கால சின்னங்களைச் சேகரிப்பவர்கள் போல இவ்விரு வரும் விலையைப் பற்றி பேரம் பேசினார்கள். முதலில் பேரத்தைத் திருப்திகரமாக முடித்துக்கொண்டனர்.

ஒரு சனிக்கிழமை தோட்ட லாரி ஒன்றை வாட கைக்கு வாங்கிக்கொண்டு நூறு மைல்களுக் கப்பால் சென்று பிராந்தியத்தின் நடுவில் ஒரு இரண்டாந்தர ரஸ்தாவின் சமீபம், பழைய அச்சகம் நிலைகுலைந்து தாறு மாறாக இருந்ததைக் கண்டனர். அங்கேதான் இவர் கள் தேடிப்போன பொக்கிஷம் கிடைத்தது. அன்றி ரவு வெகு சந்தோஷத்துடன் லாரியை ஓட்டிக்கொண்டு வீடு திரும்பியபோது, வண்டியில் நாற்பது வருஷமா வது செயல் புரிந்த ஒரு பழங்கால 'லைனோ டைப்' மிஷின், அதைச் சேர்ந்த பல உபகரணங்கள் எல்லாம், ஒரு காயலாங் கடைக்காரன்கூட பிரமித்துப் போயிருப் பான்—அம்மாதிரி குவிந்து கிடந்தன.

பாப்பின் ஒன்றுவிட்ட சகோதரன் ஊரிலேமய தெருக் கோடியில் ஒரு காகிதப் பெட்டி கம்பெனி நடத்திவந்தான். அவனிடம் உபரியா யிருந்த நாற்பத் தைந்து வருஷ—பழங்கால—இரண்டு பக்கங்களை அச்சடிக்க வல்ல—மீலி (Miehle) அச்சு யந்திரத்தை யும் இருபத்திரண்டு அலமாரி நிறைய பழைய அச்செழுத்துக்களையும் ஆயிரத்தைந்நூறு டாலர்களுக்கு விற்க உடன்பட்டான். விலை என்னவோ மலிவுதான். சாதாரணமாகக் கிடைக்காது. ஆனால், அலமாரியி லிருந்து அச்சு எழுத்துக்களை யெல்லாம் சுத்தம் செய்து, பொறுக்கி எடுத்து, தட்டில் அதற்குரிய இடத்தில் ஒழுங்காக வைக்க மூன்று மாதம் பிடித்தது. எங்கள் குழந்தைகள் ஸ்டீவ், மியா இருவரையும் அச்சாபீசில் வேலைக்கு எடுத்துக்கொண்டோம். இவர்களோடு எட்டி ரஸ்ஸ(எட்டு வயது)லும், ஸூஸி(ஐந்து வயது)யும் இருந்தார்கள். மியா விளையாடுவதற்கு இது வெகு நேர்த்தியான இடமாக அமைந்தது. பிளாக்குகளைக் கொண்டு சிறுகச் சிறுக வீடுகள் கட்டி மகிழ்வாள். ஸ்டீவ், எட்டி, ஸூஸி இவர்களுக்குப் பெரிய எழுத்துக் களை மட்டும் பொறுக்கித் தரும்படி வேலை வாங்கி னோம். இவர்களால் தொல்லையிருந்ததே தவிர துயரம் தீரவில்லை. பெரிய பிள்ளைகள் மூவரும் அலமாரி பின் னால் ஒளிந்து 'இந்தியர்களும் இடையர்களும்' என் னும் விளையாட்டு விளையாடினர். வீட்டுச் சொந்தக் காரர் ஒரு எலெக்ட்ரிக் சாமான் கடை வைத்திருந்தார். எங்களுக்கு ஒரு ரேடியோவும் ஐஸ் பெட்டியும் உபயோகத்திற்காகக் கொடுத்திருந்தார். ரேடியோ சங்கீதமும் குளிர்ந்த பானமும், ஆர்க்கைவ் அச்சகம் எப்படி உருவாய்க்கொண் டிருக்கிறதென்று பார்க்க வருவோர்க் கெல்லாம் வழங்கப்பட்டன.

இப்படி டைப் சுத்தப்படுத்திய காலம் பல யுகங்கள் போலவே காணப்பட்டன. கடைசியில் எங்களுக்குப்

போதிய அச்செழுத்துக்கள் கிடைத்துவிட்டன என்று தெரிந்ததும், எங்கள் சொந்த மிஷினில் பத்திரிகை அச்சாவதைப் பார்த்தோம். அச்சகம் ஓடத் தலைப்பட்டது. லைனோ டைப் மிஷின் வேலை செய்தது.

1948-ம் வருஷம் நவம்பர் மாதம் முதல் தேதி எங்கள் பததிரிகையை எங்களுடைய இடத்திலேயே எங்களுடைய அச்சகத்திலேயே வெளியிட்டோம்.

அன்று முதல் நாள் இரவு, நாங்கள் ஏற்கனவே பொறுக்கிப் பிரித்து வைத்திருந்த எழுத்துக்கள் எல்லாம் தீர்ந்துபோயின. எங்களுக்கு இன்னும் ஒரு பக்கம் அச்சுக் கோர்த்தாகவேண்டும். அந்தப் பக்கத்தில் விளம்பரத்தோ டில்லாமல், தலைப்பு வரிகளும் கோர்த்தாக வேண்டும். அவசரம் அவசரமாக அலமாரியில் கையைவிட்டுத் துழாவினோம். சில அறைகள் வருஷக் கணக்கில் திறக்கப்படாமலே இருந்தன.

"சிறிய எழுத்து 'a' இருக்கிறதா என்று பார்" என்று எட் கேட்பார்.

"இல்லை" என்று நான் பதிலளிப்பேன். "நான் ஒரு பதினெட்டு பாயிண்ட் 'டி வின்னி' (De Vinine) 'p' என்னும் எழுத்தைத் தேடிக் கொண்டிருக்கிறேன். எனக்குக் கிடைப்பதெல்லாம் 'r' எழுத்துக்கள் தான்."

அந்தக் கடைசி பக்கம் ஒன்றைப் பார்த்தாலே முதிர்ந்த அனுபவமுள்ள பத்திரிகையாளர் மூளை கிறுகிறுக்கும். எங்கே யெல்லாம் 'a' என்னும் எழுத்து இருக்கவேண்டுமோ அங்கெல்லாம் 'q' எழுத்து உபயோகப்படுத்தி யிருந்தது. தலைப்புகள் எல்லாம் கீழே கிடந்த டைப் தலைப்புகளி லிருந்தும் மூலையில் குவித்து கிடந்த 'காலி'களி லிருந்தும் பொறுக்கப்பட்டிருந்தன. ஒரு இடத்தில் ஒரு விளம்

பரத்தின் கையெழுத்து நடுவில் இருபத்திநான்கு பாயிண்ட் 'a' எழுத்து அவசியமா யிருந்தது. ஒரு துண்டுப் பலகையி லிருந்து 'a' எழுத்தைப் பாப் தன் பேனுக் கத்தியால் செதுக்கித் தந்தார். மசி படிந்திருந் தும், செதுக்கி எடுத்த அந்த எழுத்து, அச்சாகி வெளிவந்தபோது 'a' எழுத்துப் போலவேதான் இருந்தது.

தபாலாபீசில் விநியோகத்திற்காகப் பத்திரிகை களைக் கொடுக்கவேண்டிய திட்டமான காலவரை வியா ழக்கிழமை காலே ஆறு மணி. இரவு இரண்டு மணிக்குத் தான் பத்திரிகையின் கடைசி பக்கம் அச்சில் வைத்துப் பூட்டப்பட்டது. 'ப்ரூப்'பைக் கவனித்தபோது கடைசிப் பக்கத்தில் இரண்டு விளம்பரங்கள் தலேகீழாக இருந்ததைக் கண்டோம். நாங்கள் மிகவும் சோர் வுற்றிருந்தமையால், தவறை அப்படியே விட்டுவிட் டோம். முதல் பிரதி அச்சிட்டு முடிந்ததும் எனக்கும் பாப்புக்கும் அப்போது ஒரே கவலேதான். இரண் டாயிரத்து முந்நூறு பிரதிகளேயும் மடித்து, விலாச மிட்டு, தபாலாபீசில் கொண்டு கொடுத்துவர உடம் பில் போதிய சக்தி குன்ரும லிருக்குமா என்றுதான் கவலே கொண்டோம்.

அடுத்தபடியாக எங்கள் மனத்தில் தோன்றியது அன்றைய இதழான நான் பார்த்தவைகளில் மிகவும் மோசமான இதழ். அதை வெளிக் கொண்டுவந்ததில் நாங்கள் அடைந்த அவமானத்தைச் சொல்ல முடியாது. முன் வார இதழில் வீரர்கள் சங்க நடவடிக்கைகளேப் படிக்கத் தவறிய ஒரு சந்தாதாரர் இந்த வாரச் செய்தி யையாவது படிக்க எண்ணி, காரியாலயத்திலேயே தாம தித்துப் படிக்க முயன்ருர்; ஆனல், படிக்க முடிய வில்லே. ஒரு எழுத்தாவது சரிவர இருந்தால்தானே! லேனே டைப் மிஷினில் எங்கேயோ ஒரு இரும்புத்

துண்டு சிக்கிக்கொண்டு 'm' எழுத்து இருக்கவேண்டிய இடங்களி லெல்லாம் 'p' எழுத்தைத் தள்ளியிருந்தது.

மாலைப்போது நண்பர்களும் விளம்பரதாரர்களும் ஓயாது எங்களைக் கண்டு எங்களுக்கு ஆசி கூறிவிட்டுச் சென்றார்கள். ஆனால், காகிதத்தை மடிக்கவேண்டிய கட்டம் வந்தபோது, அத்தைமார்க ளிருவர் ஜென்னி, பான்—இவர்கள் மட்டுமே இருந்தனர். எட், அத்தைமார்கள், பாப், நான், எல்லோருங்கூட ஐந்து மணி நாற்பத்தைந்து நிமிடத்திற்கு மடித்து முடித்தோம். என் இரு அத்தைகளும் இன்னமும் நின்றுகொண்டேதானிருந்தார்கள். அணிந்த தொப்பியைக்கூட அகற்றவில்லை. எல்லோருமே சோர்வுற்றிருந்தோம்.

ஆறு மணி அடிப்பதற்கு ஒரு நிமிஷமும் முன்னாடி தபாலாபீசை அடைந்தோம். அப்போதுதான் கிராமாந்திரப் பிரதேசங்களுக்குச் செல்ல தபால் வண்டி புறப்பட்டுக்கொண் டிருந்தது. நாங்கள் கொண்டுவந்த பத்திரிகைக் கட்டுகளைத் தபால் வண்டியின் பின்புறத்தில் திணித்ததும், டிரைவர் பாப்பையும் என்னையும் ஒரு முறை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, "உங்களைப் பார்த்தால் இரண்டு மீன் குட்டிகள் துள்ளிக் கரையில் வந்தமாதிரி தோன்றுகிறதே" என்றார்.

அவன் கூறியது உண்மைதான். அன்று காலை நாங்கள் களைப்பின் மிகுதியால், எங்கள் முகத்தில் படிந்திருந்த அச்சாபீஸ் கறைகளைத் துடைத்துக் கொள்ளவும் தோன்றவில்லை.

"உனக்கென்ன தெரியும்? நாம் நம்முடைய சொந்த அச்சாபீஸ் வைத்திருக்கிறோம்" என்று கூறிவிட்டு பாப் அணிந்திருந்த சட்டையுடனேயே தூங்கிவிட்டார்.

நான் ஸ்நானம் செய்துவிட்டு என்னைச் சுத்தப் படுத்திக்கொள்ளவேண்டி யிருந்தது. ஸுசீலாவைப் பள்ளிக்கூடத்திற்குக் கொண்டுவிடவேண்டும். இடையில் அவன் விளையாட்டையும் கண்டு களிக்கவேண்டும். அவன் தன்னுடைய காலை வேலைகளை யெல்லாம் முடித்துக்கொள்ளும்போது தாயார் என்ற முறையில் அவைகளைப் பார்த்துக்கொண் டிருந்தேன்; அல்லது பார்த்துக்கொண் டிருக்க முயன்றேன். என் உள்ளுணர்ச்சிதான் என்னைத் தூங்கவிடாமல் தடுத்தது. என் கணவனை மணந்து இது வரையில் வேறு ஒரு லாபத்தை அடையாவிட்டாலும், இராத் தூக்கம் பகல் தூக்கம் இரண்டுமே துறந்துவிட்டது என்னவோ நிச்சயம். மண வாழ்க்கைக்கு நான் கொடுத்த விலை அது என்று சொன்னாலும் சொல்லலாம். ஆனாலும், அந்த விலை நான் விரும்பிக் கொடுத்ததுதான். என் வாழ்க்கை இதைவிட வேறு வகையில் இருக்க முடியாதென்பதையும் உணர்ந்தே இருந்தேன்.

* * *

நாளடைவில் நாங்கள் மேலும் அச்செழுத்துக்கள் சுத்தம் செய்து, தரம் பிரித்து வைத்துக்கொண்டோம். ஒரே இடத்தில் தேவையான எல்லாப் பொருள்களும் எங்களுக்குக் கிடைத்துவிட்டதில் நிம்மதியே. ஒன்பது வருஷம் ஏற்கனவே சலியாது உழைத்து வயதேறின எங்கள் 'வெண்டல்' மோட்டாரில் வாரந்தோறும் இருநூறு மைல்களாவது மேலுங் கீழுமாக அலைந்து பத்திரிகை அச்சடிப்பதற்குப் பதில் இப்போது ஒரே இடத்தில் நிலைத்து எங்கள் வேலையை முடித்துக் கொள்ள வசதி ஏற்பட்டதில் சந்தோஷம். சந்தோஷ மிகுதியில் பாப் இராக்காலத்தில் அச்சகத்தை அடைந்து அச்சு யந்திரங்களையும் டைப் அலமாரிகளையும் தொட்டுத் தொட்டுப் பார்த்து, அவைகள் எல்லாம் அதனதன் இடத்தில் இருக்கிறதா என்று தமக்கே உறுதி கூறிக்

கொள்ளுவார். இதில் எங்களுக்குக் கவலை ஏற்பட வேண்டியதில்லைதான். நாங்கள் மறந்தாலும் பாங்கி எங்களை மறக்க வொட்டாமல் மாதாமாதம் நினைவு மூட்டித்தான் வந்தது. அதிர்ஷ்டவசமாக எட் சில சில்லறை வேலைகள் கொணர்ந்து அச்சகத்திற்கு வேலை தந்தார். மாதா கோயில் நிகழ்ச்சிகள் ஆயிரக்கணக்கில் அச்சிட்டதில், வேலையும் கிடைத்தது; வருவாயும் கிடைத்தது.

நாங்கள் ஒரு 'கார்ப்பரேஷன்' ஸ்தாபித்துக் கொண்டோம். 'செஸ்டர் வாலி பிரஸ்' என்று பெயரிட்டு, அதற்குச் செல்லமான மாற்றுப் பெயராக 'செஸ்டர் வாலி ரெட் இங்க்' (Chester Valley Red Ink) என்றும் வழங்கினேம். இந்த ஸ்தாபனத்திற்கு பாப் தலைவர், நான் உப தலைவர், எட் ரஸ்ஸல் காரியதரிசியும் பொக்கிஷதாரும்.

சில மாதங்கள் கழிந்ததும் எங்களுக்குப் புதிய தொல்லைகள் சில ஏற்பட்டன. எல்லாம் அச்சகம் சம்பந்தப்பட்டவைகள். ஹனி ப்ரூக்கில் மிஷின்களைப் பற்றி நாங்கள் கவலைப்படவேண்டிய அவசியமில்லை. இப்போது மிஷினில் ஏதாவது கோளாறு ஏற்பட்டாலும், கடைசி நிமிஷத்தில் ஏதாவது எதிர்ப்பாராது அச்சு யந்திரம் செயல் புரிய மறுத்தாலும், நாங்கள் சமாளிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஒவ்வொரு வாரமும் அச்சு யந்திரமாவது தொந்தரவு கொடுக்கும்; அல்லது லைனே டைப் மிஷினுவது தொல்லை தரும். அவைகளும் மனிதர்களைப் போலவே சலன புத்தி யுடையது என்று நானும் பாப்பும் நிச்சயமாக எண்ணினேம். சில சமயம் பெரிய கண்ணியமான கனவான்போல தன் சக்திக்கு மீறி அவைகள் வேலை செய்யும். மற்றும் சில சமயங்களில் அவைகள் முரண்டிக்கொள்ளும். திடீரென்று வேலை மத்தியில் நின்றுவிடும். ஒரு காரண

மும் இருக்காது. ஐந்தாறு மணி நேரமாவது அவைக ளுடன் மன்றாடி வேண்டிக்கொள்ளாத முறையில் போராடிவிட்டுப் பிறகுதான் வேலையைத் தொடங்கும். ஆனால், எங்களுக்கு விலாசம் ஒட்டிப் பத்திரிகை அனுப்புவதில் ஏற்பட்ட பிரச்சினைகளைப்போல மற் றெதுவு மில்லை.

ஆர்க்கைவ் பத்திரிகைக்குச் சந்தாதாரராக இருப் பது சில சந்தர்ப்பங்களில் சாகசங்கள் புரியும் தீரர் களின் கதைபோல இருக்கும். ஒரே சந்தாவுக்கு வருஷத்தில் மூன்று முறை பணம் செலுத்தும்படி நோட்டீசு வந்தாலும் வரலாம். இரண்டு அல்லது மூன்று வருஷங்களுக்குத் தொடர்ந்து கேட்காமலே விடப்பட்டாலும் வியப்படையவேண்டாம். இந்த ஹேஷ்யம் ABC ஆடிட்டரை ஒரு சமயம் திணரவைத் தது. இவைகளைத் தவிர, சந்தாதாரரின் பெயரையே பத்திரிகையில் அச்சடிக்கும் வாய்ப்பும் சிலருக்குக் கிட்டலாம்.

முதலில் விலாசங்களை ஒட்ட எங்கள் வியாபாரத் துறையில் 'விங் மெயிலர்' (Wing mailer) என்று கூறப்படும் ஒரு சாதனத்தைத்தான் உபயோகித்தோம். இது உட்கார்ந்திருக்கும் ஒரு அணில் பிள்ளையைத் தலை கீழாக வைத்தால் எப்படி இருக்குமோ அதுபோல் அமைந்த ஒரு கருவி. அதன் வயிற்றுப் பாகத்தில் ஒரு மாவுப் பசை புட்டி இருக்கும். சந்தாதாரர்களின் பெயர்கள் எல்லாம டைப் அடிக்கப்பட்டு நீளமான தட் டில் வரிசையாக வைக்கப்பட்டிருக்கும். அதிலிருந்து ஒரு விலாசத்தை எடுத்து இந்தக் கருவியில் திணித்துக் கொக் கியை அடித்தால் விலாசத்தைக் காகிதத்தின் மீது ஒட்டி விடும். அதாவது, அந்தக் கருவியின் செயல் புரியும் வித்த்தில் சரிவர இயங்கினால் விலாசத்தை ஒட்ட வேண்டும். நான்தான் மாவையும் தண்ணீரையும்

கலந்து கொதிக்கவைத்துப் பசை செய்தேன். பாப அதைப் பார்த்துவிட்டு, என்னைப் போலவேதான் பசையுமிருக்கிறது என்று அபிப்பிராயம் தெரிவித்தார். ஒன்று மிகவும் தடித்திருந்ததாம்; அடுத்தது மிகவும் மெல்லியதாக இருந்ததாம். எப்படி இருந்தாலும் ஓட்டப்பட்ட விலாசம் நெகிழ்ந்துபோய், தபாற்காரன் கையில் எப்போதுமே விலாச மில்லாது ஒரு கத்தை பத்திரிகைகள் காணப்படும். வழக்கத்தின் வலுவில் தபாற்காரன் அவனுடைய ரோந்தில் யார் யாருக்குப் பத்திரிகை வருகிறதென்று உத்தேசமாகப் பட்டுவாடா செய்வான்.

பட்டாலும் படும், விட்டாலும்விடும் என்னும் இம்முறையில எங்களுக்குச் சந்தோஷம் அளித்த அம்சமும் இருந்தது. பத்திரிகை கிடைக்காதவர்கள் உடனே எங்கள் காரியாலயத்திற்கு வந்து குறை சொல்லுவார்கள். இதிலிருந்து ஆர்க்கைவ் மக்களிடையே எவ்வளவு நடமாட்டமுள்ளது என்பது எங்களுக்கு விளங்கிற்று. நாங்கள் பத்திரிகை கிடைக்கவில்லை எனக் கேட்டதும் ஆச்சரிய மடைந்தவர்கள் போலத்தான் நடிப்போம். இருந்தாலும் வியாழக்கிழமை பாதி நாள் ஊர் பூராவும் மோட்டாரில் சுற்றிப் பத்திரிகை கிடைக்காதவர்களுக்கு நாங்களே பிரதிகளை நேரில் வழங்கிவிட்டு வீடு திரும்புவோம்.

இந்தக் கருவியில் மற்றொரு விரும்பத்தகாத அம்சமும் இருந்தது. புது சந்தாதாரர்கள் பெயரை அச்சு மிஷினில்தான அச்சு கோர்க்கவேண்டும். லினோடைப் மிஷினுக்குச் சாதாரணமாக இதைவிட முக்கியமான வேலை ஏதாவது இருக்கும். ஆகவே, எங்கள் சந்தாதாரரின் எண்ணிக்கை ஆயிரம் என்றிருந்தால், கையில் அச்சடித்த விலாசங்கள் முந்நூறுவது குறையும். அதைப் பூர்த்தி செய்ய பாப் தன் கையாலேயே விலா

சங்கள் எழுதி யிருப்பார். ஆர்க்கைவ் பத்திரிகைக்குச் சந்தாதாரராக இருந்தால் மட்டுமே ஆசிரியர் கைப்பட நேரடியாகப் பத்திரிகை பெறலாம் என்ற பெருமை ஒருபுற மிருக்க, இந்த முறையிலே குறைபாடுகள் நிறைய இருந்தன. எனவே, ஒரு பழைய விலாசம் அடிக்கும் மிஷின் வாங்கத் தீர்மானித்துவிட்டேன் என்று பாப் அறிவித்ததும், நாங்கள் சற்று நிம்மதி அடைந்தோம்.

இந்தப் புது சாதனத்தில் ஒரு சௌகரியம் என்ன வென்றால், டைப் அடிக்கும் மிஷினிலேயே ஆபீசில் சந்தாதாரர்கள் சேரும்போது விலாசமும் 'ஸ்டென் சில்' எடுத்து வைத்துக்கொள்ளலாம். ஆசிரியர் கைப் பட பல விலாசங்கள் எழுதவேண்டிய தேவை யில்லை. விலாசங்களைப் பத்திரிகைகளில் ஒட்டுவதற்குப் பதிலாக இப்புது முறையில் விலாசங்களையே பத்திரிகையின் மீது அச்சடிக்க முடிந்தது. பார்ப்பதற்கு இம்முறை யில் தவறுதலே ஏற்படாவண்ணம் அமைந்துள்ளது மாதிரி காணப்பட்டது. நமது சந்தாதாரர்களிடையே இனியாவது நல்லெண்ணத்தை வளர்க்கலாம் என் னும் நம்பிக்கையுடன் எதிர்காலத்தை நோக்கி யிருந்தோம்.

ஆனால், ஒரு விஷயம் நாங்கள் உணர்ந்திருக்க வேண்டும். இந்தச் சாதனம் மற்ற இடங்களில் சரிவர வேலை செய்து திருப்தி அளித்திருக்கிறது என்ற கார ணத்தினால் மட்டும் எங்களிடத்திலும் அதேமாதிரி சரிவர வேலை செய்யவேண்டும் என்று நினைத்திருக்கக் கூடாது. இது வரையில் பணியாற்றிய 'விங் மெயில'ரைவிட இது சிறந்த முறையில் பணியாற்றும் என்று எப்படி நம்ப முடியும்? எங்களிடத்தில் யந்திரங் கள்கூட மனிதத் தன்மை பெற்று நெருக்கடியான சந்தர்ப்பங்களில் வேலை செய்ய மறுத்துவிடுகின்றனவே! இந்தப் புது சாதனமும் இவ்விதிக்கு விலக்கல்ல.

இந்த உண்மையை நாங்கள் ஒருநாள் உணர்ந்தோம். ஒருநாள் பிலிடெல்பியாவி லிருந்த ஒரு பிரபல மனோதத்துவ வைத்தியரின் மனைவியிட மிருந்து கடிதம வந்தது. ஒரு காரணமுமின்றி தன் கணவருக்குத் திடீரென்று ஆர்க்கைவ் பத்திரிகை இரண்டு பிரதிகள் கிடைத்துக்கொண்டிருக்கின்றன வென்றும் இந்தச் சமாசாரத்தைக் கேட்க எங்களுக்கும் விசித்திரமாக இருக்கிறதென்றும் அதில் அவள் குறிப்பிட்டிருந்தாள். இதைத் தொடர்ந்து ஆராய்ச்சி நடத்தியபோது க்ளென் மூர் என்னும் இடத்திலிருந்த E. G. க்ரீட்ஸ்ஜர் என்பவருக்கு வாரம் நான்கு பிரதிகளாவது கிடைத்தன; அல்லது பிரதிகளே கிடைக்காமலே தவறின என்றும் தெரியவந்தது. க்ரீட்ஸ்ஜருக்குப் பிரதிகள் சேரவில்லை என்ற வாரங்களில் எர்ல் கைஜருக்கு இரண்டு பிரதிகள் கிடைத்துக்கொண் டிருந்தன.

இது பாப்புக்கு உற்சாகத்தை உண்டாக்கியது. ஒவ்வொரு வாரமும் 'விங் மெயிலரை'ப் படிப்படியாக மெதுவாக இயக்கி, தவறுதல் எப்படி உண்டாகிறதென்பதைக் கண்டுபிடித்தே விடுவது என்று முனைந்து விட்டார். அவ்வப்போது "ஆ! கண்டுபிடித்துவிட்டேன்!" என்று கத்துவார். இந்த மிஷினுக்கு 'K' எழுத்தில் ஆரம்பிக்கும் பெயர்களிடத்தில் தனியாகப் பிரியம் இருப்பதாகத் தெரிகிறது. இந்த முடிவை உடனே மாற்றிக்கொள்ளவேண்டி யிருந்தது. அடுத்த முறை அதே மிஷின் M. R. ஸீபோல்ட் என்ற விலாசத்தை இரு முறை அடித்துத் தள்ளியது.

இந்த விலாசம் அடிக்கும் சாதனத்தில் கோளாறுகளின் விளைவாக எங்களுக்கே ஆச்சரியத்தை விளைவித்த சம்பவம் எனக்கு நன்றாக கவன மிருக்கிறது. மாதக் கணக்கில் மூன்று நபர்களுக் கிடையே நிகழ்ந்த கடிதப் போக்குவரத்து எங்களைத் திக்குமுக்காட

வைத்ததோ டல்லாமல், எங்கள் மிஸ்டர் பீடர்ஸைப் பழையபடி ரயில்வே உத்தியோகம் பார்ப்பதே மேல் என்னும் நிலைமைக்குக் கொண்டுவிட்டது.

அக்கடிதங்களை நாங்கள் ஜாக்கிரதையுடன் எடுத்து வைத்திருக்கிறோம். அவைகளே அக்கதையைச் சொல்லட்டும்:

ஒக் நால்,
எக்ஸ்டன் (பென்சில்வேனியா),
டிசம்பர் 28, 1948

ராபர்ட் மாக் இல்வெய்ன்,
ஆசிரியர், தி ஆர்க்கைவ்,
டௌனிங்டன் (பென்)

அன்புள்ள மிஸ்டர் மாக் இல்வெயினுக்கு,

மூன்று வாரங்களுக்கு முன்பு என் தாயார் இரண்டு டாலரும் ஐம்பது செண்டும் என்னிடம் கொடுத்து ஆர்க்கைவ் பத்திரிகைக்கு ஒரு வருஷ சந்தாவுக்காக இதை அனுப்பி வைக்கும்படிச் சொன்னாள். பத்திரிகையை யாருக்கு அனுப்பவேண்டும் என்று உங்களுக்கே தெரியுமென்றும் கூறினாள்.

நேற்று இரவு துணிமணிகளை வண்ணானுக்குப் போடுமுன், என் சராய் ஜேபியைக் காலி செய்தபோது இந்தப் பணம் அப்படியே ஒரு மூலையில் பத்திரமாக இருந்தது. இந்த ஜேபியில்தான் எனக்குச் சொந்தமில்லாத பணத்தை வைத்திருப்பது. உங்களுடைய புது விலாசம் எங்கே என்றே என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை. யாரோ ஒருவன் ரஸ்தாவே இல்லாத ஒரு மூலையிலுள்ளது என்றான். அரை மணி நேரம் அலைந்து வீடு திரும்பினேன். நான் மறந்து போவதற்குமுன் அந்தச்

சந்தாத் தொகையைத் தபால் மூலம் அனுப்பி யிருக்கிறேன். பெற்றுக் கொள்ளவும்.

இப்படிக்கு:
ஜாக் க்ரைம்ஸ்

பின்னுரை: உங்கள் பத்திரிகையை நாங்கள் எல்லோரும் மிகவும் ரசிக்கிறோம் என்று என் தாயார் உங்களுக்குச் சொல்லச் சொன்னார்.

2

தி ஆர்க்கைவ்,
டௌனிங்டன்,
டிசம்பர் 30, 1948

மிஸ்டர் ஜாக் க்ரைம்ஸ்,
ஓக் நால்,
எக்ஸ்டன் (பென்)

அன்புள்ள ஜாக்குக்கு,

உன்னுடைய கடிதமும் இரண்டு டாலர் ஐம்பது செண்ட் பணமும் கிடைத்தன. எனது வந்தனங்கள். நாங்கள் எப்போதுமே ஒரு புதிய சந்தாதாரர் சேர்ந்தால் சந்தோஷமடைகிறோம். நீ தயவுசெய்து உன தாயாரை இச் சந்தா யாருடைய கணக்கிற்காக என்று கேட்டு எங்களுக்குத் தெரிவி. பன்னிரண்டு தடவையாவது நாங்கள் எங்கள் புத்தகங்களைப் புரட்டிப் பார்த்தாகிவிட்டது. சந்தா பாக்கியாக தங்கிப்போன ஒரே சந்தாதாரர் ஸ்டீல் வில்லாவில் இருக்கும் மிஸஸ் ஜேம்ஸ் ஸ்னைடர் ஒருவள்தான். அவளுக்குத்தான் விலாசம் மட்டும் ஸ்டென்சில் செய்யப்பட்டுள்ளது. சந்தா கார்டு இல்லை. விலாசம் மட்டும் இங்கே எப்படி வந்ததென்று எங்கள் யாருக்கும் புரியவில்லை.

ஆகையால், எங்கள் யூகம் சரிதானு என்பதை உடனே ஊர்ஜிதம் செய்யவும். இல்லாவிட்டால் மிஸஸ் ஸ்னைடரின் பெயரைச் சந்தாதாரர்களின் ஜாபிதாவி லிருந்து ABC விலக்கிவிடுவார்.

இப்படிக்கு:
பாப்

3

ஓக் நால்,
பாப்,
டிசம்பர் 31, 1948

அன்புள்ள ஆசிரியரவர்களுக்கு,

ஜாக்கும் நானும் உங்கள் கடிதத்தைக் கண்டு மிகவும் சந்தோஷித்தோம். உங்களை மிக்க நேசிக்கி ருேம். நீங்கள் மிகவும் கெட்டிக்காரர். ஆர்க்கைவ் பத்திரிகை மீது நாங்கள் மோகமே கொண்டுள்ளோம். என் நண்பர்கள் ஒவ்வொருவருக்கும் அதைக் காட்டுகி றேன். அவர்கள் எலலோரும் இது அற்புதம் என்கிருர்கள்.

மிஸஸ் ஸ்னைடருக்குப் பத்திரிகை அனுப்பும் எண் ணம் முதல்தரமான யோசனை. ஜனங்களுக்கு வழங்குவதற்காக நீங்கள் தேர்ந்தெடுக்கும் விஷயங் களே மிகவும் கவர்ச்சிகரம். அவள் உங்கள் பத்திரி கையை நிச்சயம் விரும்புவாள்; சந்தேகமில்லை. மிஸஸ் ஸ்னைடரை எனக்குத் தெரியாது. ஒருகால் கார்னர் கெட்ச்சி லுள்ளவர்களுக்கு உறவினராக இருக்குமோ? எப்படியும் நீங்கள் அவளுக்குப் பத்திரிகை அனுப்பி ஞல், அவளும் உங்களுடைய ஏனைய நண்பர்களைப் போல ஆனந்தப்படுவாள்.

உங்களுக்கு என் ஆசிகள்.

எலிஸபெத் க்ரைம்ஸ்

பின்னுரை : நான் 'ப்ளாக்கி ப்ளாப்பியர்ஸ்' (Floggie Floppears) என்னும் தலைப்புடன் படுக்கைக் கதைகளை எழுதி யிருக்கிறேன். உங்களுடைய பத்திரிகைக்கு இலவசமாக அவைகளை வழங்கச் சித்தமாக இருக்கிறேன். அவைகளில் சிலவற்றையாவது பிரசுரிக்க முடியுமா?

4

226, செர்ரி லேன்,
ஸ்டீல்வில் (N. J.),
ஜனவரி 2, 1949

ராபர்ட் மார்க் இல்வெயின்,
தி ஆர்க்கைவ்,
டௌனிங்டன் (பென்)

மிஸ்டர் மாக் இல்வெயினுக்கு,

சென்ற வாரம் நானும் என் கணவரும் ப்ளாரிடா (Plorida)விலிருந்து திரும்புகையில், எங்கள் ஊர் போஸ்ட்மாஸ்டரிட மிருந்து வந்த கடிதத்தில் போஸ்டாபீசில் ஒரு கத்தைப் பத்திரிகைகள் எங்கள் விலாசத்திற்கு அனுப்பப்பட்டுக் குவிந்து கிடக்கின்றன என்றும், உடனே எடுத்துப் போகும்படிக்கும் கண்டிருந்தது. தபாலாபீசை அடைந்தபோது, ஒரு பை நிறைய ஆர்க்கைவ் பத்திரிகை இருப்பதைக் கண்டேன். ஒருசில பிரதிகளை எடுத்து மேலாகப் படித்தேன். அவைகள் நன்ருகத்தான் இருந்தன. எனினும், டௌனிங்டனில் எங்களுக்கு எந்தவிதத் தொடர்பும் இல்லை. அது எங்கே இருக்கிறது? வாலி போர்ஜி (Valley Forge)ன் பக்கத்திலுள்ளதா—அல்லது ஊர் பெயர் டாயல்ஸ்டௌன் என்றிருக்க வேண்டுமோ...எப்படியும் உங்கள் பத்திரிகைக்கு நான் சந்தா அனுப்பியதே கிடையாது. உங்கள் விலாச ஜாபிதாவி லிருந்து

என் பெயரை எடுத்துவிடுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்படிக்கு:
ஜூன் ஸ்னைடர்
(மிஸஸ் ஜேம்ஸ் ஸ்னைடர்)

5

மிஸஸ் ஜேம்ஸ் ஸ்னைடர்,
226, செர்ரி லேன்,
ஸ்டீல்வில் (N. J.)

ஜனவரி, 1949

அன்புள்ள சந்தாதாரருக்கு,

உங்கள் சந்தா பூர்த்தி யடைந்து சில வாரங்களாயின.

எனினும், வழக்கமாக வந்துகொண் டிருக்கிற பத்திரிகையைத் தொடர்ந்து படிக்க ஆவல் இருக்குமென்று நாங்களும் நிறுத்தாமல் பத்திரிகையை அனுப்பிக்கொண் டிருக்கிறோம். சந்தா பாக்கி என்னும் விஷயம் உங்கள் கவனக் குறைவால் மறந்திருக்குமானால், இரண்டு டாலர் ஐம்பது செண்டு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறோம். சந்தாதாரர் கார்டும் இத்துடன் அடக்கம் செய்திருக்கிறோம்.

அன்புள்ள,
ஆர்க்கைவ்

6

தி ஆர்க்கைவ்,
டெனிங்டன் (பென்)

ஜனவரி 9, 1949

உங்களில் யாராவது நீங்கள் செய்யும் வேலை இன்னது என தெரிந்து செய்பவர்கள் இருந்தால் அவருக்கு,

என்னுடைய ஜனவரி இரண்டாந் தேதி கடிதத்தில் எனக்கு ஆர்க்கைவ் பத்திரிகை வேண்டாம் என்னும் விஷயத்தை உங்களுக்குச் சொல்லி யுள்ளேன். டெளனிங்டனில் எனக்கு ஒருவரையும் தெரியாது. நல்ல மனிதர்கள் அங்கே பலர் இருப்பார்கள். எனினும், எனக்கு உங்கள் பத்திரிகை தொடர்ந்து வரவேண்டுமென்ற ஆசை இல்லை. ஹனி ப்ருக்கிலிருந்து வந்த ஹெரால்ட் பத்திரிகைக்கு நாங்கள் சந்தாவை நிறுத்திய பின், நகர பத்திரிகை த்விர இதர பத்திரிகைகள் நான் தருவிப்பதே இல்லை. தயவுசெய்து எனக்குப் பத்திரிகை அனுப்பவேண்டாம்.

வாஸ்தவமாகவே எனக்கு வேண்டாம்.

ஜீன் ஸ்னேடர்

7

மிஸ்டர் ராபின்ஸன் மாக் இல்வெயின்,
தி ஆர்க்கைவ்,
டெளனிங்டன்

ஜனவரி 10, 1949

அன்புள்ள மிஸ்டர் மாக் இல்வெயினுக்கு,

பல வாரங்களுக்கு முன்பு—தேதி சரியாக ஞாபகமில்லை—எலிஜபெத் க்ரைமர் என்னும் என்னுடைய பழைய சிநேகிதியைச் சந்திக்க நேர்ந்தது. மிஸஸ் ஹென்ரி ஸ்மைத்துடன் தேநீர் அருந்துகையில்தான் சந்தித்தேன். எலிஜபெத்தும் நானும் பார்மிங் க்ராப்ட் (Farming corft) என்னுமிடத்தில் ஒன்ருக இருந்தோம். அதற்குப்பின் வருஷக் கணக்காக அவளைக் காணவே யில்லை. அவள் ஒரு தோட்டத்தை வாங்கி அங்கேயே வசித்து வருவதாகச் சொன்னுள். கிராமாந்திர வாழ்க்கையைப் பற்றி அன்று பகல் பூராவும் பேசிக் கொண்டிருந்தோம். உங்கள் பத்திரிகையைப் பற்றி

அவள் சொன்னாள். மிகவும் நேர்த்தியான பத்திரிகை என்றும் அதற்கு அவசியம் நான் சந்தாதாரராகச் சேர வேண்டுமென்றும் சிபாரிசு செய்ததோடு, அவள் எழுதிய குழந்தைகளுக்கான தூங்கவைக்கும் கதைகள் அப்பத்திரிகையில் வெளியாகின்றன என்றும் சொன்னாள். என்னுடைய இரண்டு பையன்களுக்கும் படுக்குமுன் கதைகள் சொன்னால்தான் திருப்தியடைவார்கள். 'டெலிவிஷன்' நிகழ்ச்சிகளில் அவர்களுக்குப் பிரியமில்லை. நான் ஒரு வருஷ சந்தாவுக்காக இரண்டு டாலர் ஐம்பது செண்டு அவளிடம் கொடுத்தேன்.

எனக்கு இன்னமும் பத்திரிகை கிடைக்கவில்லை. என் குழந்தைகளுக்குப் 'ப்ளாக்கி ப்ளாப்பர்ஸ்' கதைகளைப்பற்றி ஏற்கனவே சொல்லிவிட்டேன். அவர்கள் அவைகளைப் படிப்பதற்காகத் துடித்துக்கொண்டிருக்கிறார்கள். பத்திரிகைகளை உடனே அனுப்பவும்.

அன்புள்ள,
மார்ஸியா பிட்டில் டோல்டன்
(மிஸஸ் ஸ்டீவார்ட் டோல்டன்),
டோல்டர் ப்ரூக்,
ஆர்ட்மூர் (பென்)

8

மிஸஸ் ஜேம்ஸ் ஸ்னேடர்,
226, செர்ரி லேன்,
ஸ்டீல்வில் (N. J.)

ஜனவரி 12, 1949

அன்புள்ள மிஸஸ் ஸ்னேடருக்கு,

மிஸ்டர் மாக் இல்வெயின் நீங்கள் ஜனவரி மாதம் 9-ம் தேதி எழுதிய கடிதத்திற்குப் பதில் எழுதுமாறு என்னிடம் கொடுத்துள்ளார். உங்களுக்கு மனத்தாங்

கல் உண்டாக்கியதற்கு நாங்கள் வருந்துகிறோம். உங்களுடைய மன்னிப்பை வேண்டுகிறோம்.

உடனடியாக உங்கள் பெயரை எங்கள் சந்தாதாரர் ஜாபிதாவிலிருந்து எடுத்துவிட ஏற்பாடு செய்கிறோம்.

இப்படிக்கு :
ஜே. ஆர். பீடர்ஸ்,
நிர்வாகஸ்தர்,
தி ஆர்க்கைவ் அண்டு செஸ்டர்வாலி பிரஸ்

9

ஜனவரி 12, 1949

அன்புள்ள ஆசிரியரவர்களுக்கு,

இப்போதுதான் எனக்கு ஞாபகம் வந்தது. மார்ஸியா என்னிடம் இரண்டு டாலர் ஐம்பது செண்டுகள் கொடுத்தாள். ஸ்மைத்துடன் தேநீர் அருந்தும்போது அவளைப் பார்த்தேன். மார்ஸியாதான் உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டுமே, மிஸஸ் ஸ்டீவார்ட் டோல்டன். அவள் கணவர்தான் இங்கேயுள்ள மரத் தொட்டிகள் எல்லாவற்றிற்கும் சொந்தக்காரர். அவள் எனக்கு ஆப்த சிநேகம். உங்களுடைய நேர்த்தியான பத்திரிகையைப்பற்றி அவளுக்குச் சொன்னவுடனே சந்தாதாரராகச் சேர பணம் கொடுத்துவிட்டாள். இதை நான் எப்படி மறந்து போனேன் என்றே விளங்கவில்லை. ஆனால், தேநீர் சமயங்களில் இவ்வாறு மறதி ஏற்படுவது சகஜம்தானே? உங்களுக்கே தெரியுமே! உடனே அவளுக்கு எழுதவும். அவள் எப்போதும் புதியன புதியனவாக ஏதாவது செய்துகொண்டேயிருப்பாள். என்னுடைய 'ப்ளாக் ப்ளாப்பர்ஸ்' கதைகளை அவள் மிகவும் விரும்புவாள். இத்துடன் கதையின் முதற் பகுதி அனுப்பி யிருக்கிறேன்.

ஆனந்தம் ஓங்குக ! எலிஜபெத் க்ரைம்ஸ்

10

ஜனவரி 19, 1949

அன்புள்ள மிஸஸ் க்ரைம்ஸுக்கு,

நீங்கள் மிஸஸ் டோல்டனுடைய சந்தாவைப் பற்றிச் சொன்னது எனக்கு ஞாபகமிருக்கிறது. கடையில் மாமிசம் வழங்கும் இடத்தில் நாமிருவரும் வரிசையாக நின்றுகொண் டிருந்தோமே, அப்போதுதான் சொன்னீர்கள். பன்றித் தசை மட்டும்தான் அன்று கிடைத்தது. ஆகையால், அது திங்கட்கிழமை என நினைக்கிறேன். திங்கட்கிழமைகளில்தானே மாமிசம் வழங்கப்படுவதில்லை!

போகட்டும். சந்தாவுக்கு மிகவும் நன்றி. இன்றே தபாலில் அனுப்பவேண்டிய ஜாபிதாவில் மிஸஸ் டோல்டனின் பெயரையும் சேர்த்துவிடுகிறேன். 'ப்ளாகி' கதை மிகவும் நேர்த்தியாகவே யுள்ளது. ஆனால், இட நெருக்கடியினால் உடனே பிரசுரிக்க இயலவில்லை. பின்னர் ஒரு சமயம் உபயோகப்படுத்தலாம் என நினைக்கிறேன்.

அன்புள்ள,
ஜேன்
(மிஸஸ் ஜேன் S. மாக் இல்வெயின்)

11

ஜனவரி 15, 1949

மிஸ்டர் மாக் இல்வெயினுக்கு,

ஆர்க்கைவ் பத்திரிகை இன்னமும் வந்துகொண்டே யிருக்கிறது. ஆனாலும், நிறுத்தவேண்டாம். நின்றுவிட்டால், நான் இறந்துபோகும் நிலைமைக்கு வந்துவிடுவேன். இரண்டு டாலர் ஐம்பது செண்டு அனுப்பி யிருக்கிறேன். ஏன் தெரியுமா? பத்தி

ரிகை வந்தவுடனே என் கணவர்தான் முதலில் அதைப் பிடுங்கி, அதில் எத்தனை அச்சுப் பிழைகள் உள்ளன என்பதைக் கணக்கெடுப்பதில் இன்பம் காணுகிறார். முதல் பக்கத்தில் கொட்டை எழுத்தில் "பெர்லின் நகரம் பாழடைந்தபோது லுக்கென்ஸ் இரும்புக் கம்பெனிக்கு டன் கணக்கில் 'Crap' ('Scrap'—பழைய இரும்புச் சாமான்கள்—க்குப் பதில்) கிடைத்தன" என்று அச்சிட்டிருப்பதைப் பார்த்துத் தபாற்காரன்கூடச் சிரித்தான்.

உண்மையுள்ள,
ஜேன் ஸ்னைடர்

## 12

ஜனவரி 15, 1949

அன்புள்ள மிஸஸ் ஸ்னைடருக்கு,

உங்களுடைய 9-ம் தேதி கடிதத்திற்கு மிஸ்டர் பீடர்ஸ் பதில் எழுதிவிட்டார் என்று தெரிந்திருந்தும், அதை மறுமுறை நான் படித்தபோது, நானும் உங்களுக்குத் தனியாக எழுதி நீங்கள் அடைந்த வருத்தத்திற்கு நான் மன்னிப்புக் கோரவேண்டியது அவசியம் என்று எனக்குப் பட்டது.

முன்னுடியே உங்களுக்கு எழுதாத காரணம் நாங்கள் கிறிஸ்துமஸுக்கு முன் எங்களுடைய புது இடத்திற்கு வந்தது ஒன்று. நாங்கள் நாளொன்றுக்குப் பதினெட்டு மணி நேரமாவது வேலை செய்யவேண்டியிருந்ததால், கடிதங்களுக்குப் பதில் எழுதத் தாமதப்பட்டது. விநியோக சம்பந்தமான எல்லாக் கடிதங்களையும் என் மனைவிதான் கவனிக்கிறுள். ஆனல், என் குழந்தைகளிருவருக்கும் சிறு அம்மை போட்டுத் தனியே விடப்பட்டிருந்ததால், அவர்களுடன் அவள் இருக்கவேண்டி வந்தது. உங்களுக்கு அனுப்பியிருந்த

ஆர்க்கைவ் பத்திரிகையை நீங்கள் படித்திருந்தீர்க ளானல், கிறிஸ்துமஸ் தினத்தன்றே என் குழந்தைகள் அம்மையுடனேதான் வீட்டிற்கு வந்தார்கள் என்று தெரிந்திருக்கும். தீ விபத்துக்களினின்றும் பாதுகாக்கப் படவேண்டும் என்று நாங்கள் பத்திரிகையில் தொடர்ந்து எழுதியதன் பலன், மற்றவர்களுக்குச் சௌகரியம் கிடைத்தாலும், எங்கள் வீட்டுப் புகை போக்கி ஒன்று மட்டும்தான் தீப்பற்றிச் சேதமடைந் தது. இந்த விவரங்கூட நீங்கள் பத்திரிகையில் படித் திருக்கலாம். வீட்டுச் சிறுவர்களுக் கென்னவோ இது வேடிக்கையாகவே இருந்தது. தீ யணைக்கும் சிப்பந்தி களுக்குக் குறைந்தது 75 கோப்பை தேநீர் வழங்கிய தால், அவர்கள் சந்தோஷமாகவே அன்றைய பொழுதைப் போக்கினர்.

இவை ஒருபுற மிருக்கட்டும். உங்கள் சந்தாத் தொகைச் சிக்கலை இப்போது எங்களால் விடுவிக்க முடிந்தது. எங்கள் பத்திரிகை ஹனி ப்ரூக்கில் ஹெரால்ட் அச்சகத்தில்தான் அச்சாகிக்கொண்டிருந் தது. அவர்கள் சந்தாதாரர்கள் ஜாபிதாவிலிருந்து உங்கள் பெயரை நீக்கியபோது, அவர்கள் எறிந்துவிட்ட கார்டைத் தவருக நாங்கள் எடுத்து எங்கள் ஜாபிதாவில் சேர்த்துக்கொண்டு ஸ்டென்சிலும் வெட்டி வழக்கப் படி பத்திரிகை விநியோகிக்கபபட்டது. அப்போதி லிருந்து மிஸ்டர் பீடர்ஸ் உங்கள் விலாசத்தைக் கண்டு பிடிக்கப் பெரும் பாடுபட்டுக்கொண் டிருக்கிறார்.

உங்கள் பெயரை எங்கள் ஜாபிதாவிலிருந்து எடுத்துவிட உடனே ஏற்பாடு செய்கிறேம்.

அநாவசியமாக உங்களுக்குத் தொந்தரவு உண் டாக்கியதற்காக நான் மறுமுறை என் வருத்தத்தைத் தெரிவித்துத்துக்கொள்ளுகிறேன்.

இப்படிக்கு:
உங்கள் உண்மையுள்ள,
ராபின்ஸன் மாக் இல்வெயின்

13

ஜனவரி 15, 1949

பிரியமுள்ள மிஸ்டர் மாக் இல்வெயினுக்கு,

உங்கள் பத்திரிகையில் 'ப்ளாகி' கதைகள் இது வரையில் வெளிவராமையாலும், உங்கள் பத்திரிகையே இதுவரையில் கிடைக்காததாலும் நீங்கள் அதை அனுப்பவேண்டாம் என்று இதன்மூலம் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

உண்மையுள்ள,
மார்ஸியா டோல்டன்

14

ஜனவரி 15, 1949

அன்புள்ள மிஸஸ் டோல்டனுக்கு,

உங்களை ஆர்க்கைவ் பத்திரிகைக்கு ஒரு புதிய சந்தாதாரர் என்ற முறையில் வரவேற்கிறேன். உங்களுடைய முதல் பிரதி தபாலில் அனுப்பப்பட்டிருக்கிறது. மிஸஸ் க்ரைம்ஸ் உங்களுக்கு ஏற்கனவே விவரித்துள்ளபடியே எங்கள் பத்திரிகை கவர்ச்சிகரமாக இருக்கும் என்றே நம்புகிறேன்.

உண்மையான,
ஜேன் எஸ். மாக் இல்வெயின்

15

ஜனவரி 17, 1949

அன்புள்ள மிஸ்டர் மாக் இல்வெயினுக்கு,

உங்கள் கடிதம் கிடைத்தது. ஆனல், இந்த வாரம் உங்கள் பத்திரிகை வரவில்லை. பத்திரிகை இல்லாமல்

என் கணவருடைய தேக நிலையே குன்றிவிட்டது. நாங்கள் மறுபடியும் வாழ வழி செய்யமாட்டீர்களா?

உண்மையுள்ள,
ஜேன் ஸ்னைடர்

கடைசியில், 'ப்ளாக்கி ப்ளாப்பர்ஸ்' கதைகளை நாங்கள் பிரசுரிக்காவிட்டாலும், மிஸஸ் ஸ்னைடர், மிஸஸ் டோல்டன் இருவரும் எங்களுக்கு நிரந்தர சந்தாதாரராகவே நிலைத்து நின்றனர்.

* * *

அதிகமான நடமாட்டமுடைய எல்லாப் பத்திரிகைகளும் விநியோகத்தை விரிவுபடுத்த பிரத்தியேகமாக முயற்சிகள் எடுத்துக்கொள்ளுகிறார்கள் என்பதை நாங்கள் கவனித்தோம். அதற்காக மிகுந்த பணம் செலவழித்து அதை ஒரு முக்கிய வேலையாகக்கூட பாவிக்கிறார்கள். இது முக்கியமான அம்சம்தான் என்று பொதுவாக நாங்கள் உணர்ந்திருந்தோமே தவிர, இதன் முறை என்ன, செயல் எப்படி என்று நன்றாக உணரவில்லை. எங்களால் இயன்ற அளவுக்கு ஆர்க்கைவ் பத்திரிகையை எல்லோருக்கும் விளம்பரமாகும்படித்தான் விநியோகித்து வந்தோம்.

முதல் முறையாக விநியோகத்தை விரிவுபடுத்தும் நோக்குடன் நாங்கள் எடுத்துக்கொண்ட முயற்சி எங்களை ஏறக்குறைய ஓட்டாண்டியாகவே அடித்து விட்டது. எங்கள் விநியோகம் உயர்ந்தது உண்மையே. இரண்டாயிரத்து அறுநூறுக்கு 66 சதவிகிதம் முதல் ஒரு வருஷத்திலேயே விநியோகம் உயர்ந்ததால், இது அதிசயிக்கத்தக்க விஷயமே. பாப் இதைப் பத்திரிகையில் முதல் பக்கத்தில் கொட்டை எழுத்துக்களில் தலைப்புக் கொடுத்துப் பெருமையுடன் வெளியிட்டார். இருந்தாலும், எங்களுக்கு எவ்வளவுக்கெவ்வளவு விநி

யோகம் விரிவடைகிறதோ அவ்வளவுக்கவ்வளவு பத்தி ரிகை வெளிக்கொண்டு வரும் செலவும் அதிகரித்துக் கொண்டே போயிற்று.

ஒன்பது மாத காலம் எங்கள் சொந்த அச்சகத்தை நடத்தி, பத்திரிகையைக் கையாலேயேதான் மடித்து, இடுப்புடைய வேலை செய்தே பத்திரிகையை வெளி யிட்டு வந்தோம். இந்தப் பழங்காலத்து முறையைக் கைவிட முடியவில்லை. இரண்டு பக்கங்களே அச்சடிக்க வல்ல பழைய அச்சு யந்திரத்தைக் கொடுத்துப் பெரிய யந்திரம் வாங்க எங்களுக்குப் போதிய பணமில்லை. பாப் உட்பட நாங்கள் எல்லோரும் எட்டுப் பக்கங்களா வது அச்சடிக்க வல்ல யந்திரம் இருந்தால் நம்முடைய தேவைக்கு நன்ருக இருக்குமென்று நினைத்தோம். ஆனுல், அதற்குப் பணத்திற்கு எங்கே போவது? இரண்டாந்தரத்துப் பழைய யந்திரமே எட்டாயிரத்தி லிருந்து பன்னிரண்டாயிரம் டாலர்கள் வரை விலையாகும்.

ஒரு சமயம் ஹாம்பீ பார்ன்ஸ் என்னும் மற்ருெரு பத்திரிகை ஆசிரியருடன் தன்னுடைய இன்னல்களைப் பற்றியெல்லாம் பேசி அவர் அனுபவத்தையும் தெரிந்து கொண்டார். அவர் டிலாவேர் பிராந்தியத்தில் டோவர் என்னும் நகரத்தில் வசித்து வந்தார். அவரிடம் கலந் தாலோசித்தபின் ஒரு நாள் பாப் வீட்டுக்குத் திரும் பியபோது, "நான் ஒரு புது அச்சு யந்திரம் வாங்கிவிட் டேன்" என்று வெற்றிக் குரலில் மகிழ்ச்சியுடன் அறிவித்தார்.

லைனே மிஷினுக்குப் பின்னுல் வேலை செய்து கொண்டிருந்த எட் ரஸ்ஸல் அங்கிருந்தே பதில் கூறினுர். "ஆகாய விமானத்தில் கொண்டுவந்திருக் கிருய் போலும்! அதை விமானத்திலிருந்து இறக்க நான் ஒரு கை உதவட்டுமா? அல்லது நீங்களே டாக்ஸி

வைத்துக்கொண்டு நேரே வந்துவிடுகிறீர்களா?'' என்றார் கேலியாக.

பாப் அவற்றை யெல்லாம் பொருட்படுத்தவே யில்லை. ''நமக்கு வேண்டியது பணம்தான். பார்ன்ஸ் விநியோக விரிவுக்காக ஒரு புதுமுறை கையாண்டு பிரமிக்கத்தக்கவாறு நாலாயிரம் டாலர்கள் நிகரமாகச் சேர்த்துவிட்டாராம். நாமும் அப்படியே செய்தால், அச்சு யந்திரத்திற்கு வேண்டிய முதல் தவணைப் பணத்தைச் சேகரித்துவிடலாம்'' என்றார் அவர்.

பார்ன்ஸ் டிலாவேர் வாரப் பத்திரிகையில் நடத்திய திட்டம் பிரமிக்கும்படி வெற்றி யடைந்தது. வெளிப் பிரதேசத்திலிருந்து வந்த ஒரு விளம்பரக் கம்பெனியால் நடத்தப்பட்ட விநியோகப் போட்டிதான் அந்த முறை. முதல் பரிசாக ஒரு மூவாயிரம் டாலர் பெறுமான 'ப்யூக்ஸெடன்' மோட்டாரும், இரண்டாவது பரிசாக எழுநூற்றைம்பது டாலர் ரொக்கமாகவும், இன்னும் குறைந்த தொகையில் பலப்பல பரிசுகளும் வழங்கப்படுமென்று விளம்பரப்படுத்தினர். இரண்டாயிரம் புது சந்தாதாரர்கள் சேர்ந்துவிட்டனர். ஆயிரம் சந்தாதாரர்கள். சந்தா புதுப்பித்தனர். செலவுக ளெல்லாம் போக கடைசியில் நிகரம் நாலாயிரம் டாலர்கள் நின்றன. எங்கள் பிரார்த்தனைகளுக்கெல்லாம் இதுதான் பதில் என்று தோன்றியது. ஒருகால் இந்த முறை வெற்றிகரமாகப் பலனளிக்கவில்லையானால் என்னவாகும்? நாங்கள் ஓட்டாண்டியாக ஆகலாம்!

பாப் ஒரு வாரம் இதைப் பற்றிச் சிந்தித்தார். பிறகு ஒரு நாள் எனக்கும் தெரியாமல் அந்த வெளிப் பிராந்தியக் கம்பெனியுடன் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டு விநியோக முறையைப் புகுத்திவிட முடிவு செய்தார். பல வாரங்கள் சென்ற பின்னரேதான்

அதைப் பற்றி எனக்கு விவரமே தெரிந்தது. நான் கவலைக்குள்ளானேன்.

பாப் தத்துவாசிரியர் மாதிரி பதிலளித்தார். "என்ன முட்டாள்தனம்! பத்திரிகை மடித்து உண்டாகும் இடுப்பு வலி மூலம் 'மடிப்பு வாத'த்தினுல் நான் மடிந்து போவதைக் காட்டிலும் ஓட்டாண்டியாகப் புகைந்துவிடுவது மேலல்லவா?" என்ருர்.

எங்கள் சராசரி விநியோகம் அப்போது இரண்டாயிரம் பிரதிகள். வாரத்திற்கு பன்னிரண்டுப் பக்கங்கள் அச்சாகிக்கொண் டிருந்தன. அச்சாபீஸில் அச்சடிக்கும் வேலை மட்டும் பத்து மணி நேரம் பிடித்தது. நான் சிந்தித்தேன். பாப் சொல்லுவது சரிதான் என்று பட்டது.

போட்டிகள் காரியாலயத்தி லிருந்து நிபுணர் ஒருவர் நவம்பர் மாத முதலில் வந்தார். உடனே முதல் பக்கத்தில் எட்டுப் பத்திகள் பூரா தலைப்புக் கொடுத்து, இரண்டு பக்கங்கள் முழுவதும் சிறிய எழுத்திலும் பெரிய எழுத்திலுமாக ஆடம்பரமாக எங்கள் போட்டியின் விவரங்களையும் ஷரத்துக்களையும் விளம்பரப் படுத்தினேம். பாப்பே குறும்புச் சிரிப்புடன்தான் அந்த வார இதழை வெளியனுப்பினுர். ஆனுல், அவருக்கே விளம்பரங்கள் அமைந்த முறை திருப்தியளித்தது.

போட்டியில் கலந்துகொள்ளுவோரும் சந்தாதாரர்களுமாக கொஞ்சங் கொஞ்சமாகத்தான் வந்தார்கள். போட்டி மானேஜரும் காலை ஆகாரத்துடன் காப்பிக்குப் பதிலாக 'ஜின்' (ஒருவகை மது) என்னும் பானத்தில் தான் அதிகப் பற்று காண்பித்தார். இருந்தாலும் வாரந்தோறும் கிடைத்த வருவாயில் நாலில் ஒரு பாகத்தை அவர் பங்குக்கு எடுத்துக்கொள்ளத் தவற

வில்லை. எங்கள் சொந்தப் பணத்தைப் போட்டு 'ப்யூக்' மோட்டாரை வாங்கித் தனியாக ரொக்கப் பணம் எழுநூற்றைம்பது டாலரையும் ஒதுக்கி வைத்த போது எங்களுக்கு என்னவோ போலத்தான் இருந்தது.

ஜனங்களுக்குக்கூட எங்களுக்கு உள்ளூர இருந்த ஏக்கம் சிறிதளவாவது தெரிந்திருக்கவேணடும்; அல்லது அவர்கள் யூகித்திருக்கவேண்டும். ஏனெனில், கடைசி நிமிஷத்தில் நாங்கள் பின்வாங்கி, ப்யூக் வண்டி பரிசு பெற்றவருக்குக் கொடுக்காமலும் விட்டு விடுவோம் என்று 'குசுகுசு' வென்று உலவிய சந்தேகமும் எங்களுக்கு எட்டாமலில்லை.

ஒரு நாள் சனிக்கிழமை, போட்டியில் கலந்து கொண்ட எல்லோரையும் காரியாலயத்தின் பின்புறத்தில் கூட்டம் கூட்டினர். அவர்களுக்கு விஷயத்தை நேரடியாக விளக்கினர். "நீங்கள் கொடுக்கும் சந்தாத் தொகையைக் கொண்டுதான் பரிசாகக் கொடுக்க விருக்கும் மோட்டாரையும் வாங்கவேண்டும்; ரொக்கப் பணமும் ஒதுக்கவேண்டும். ஏனெனில், நாங்கள் நஷ்டப்படக்கூடாது. ஆனால், ஒரு விஷயம் மட்டும் உங்களுக்குச் சந்தேகமின்றி கூற ஆசைப்படுகிறேன். சந்தாத் தொகை சேர்ந்தாலும் சரி, வேகமாக உடனே வந்தாலும் சரி, தாமதித்து வந்தாலும் சரி, போட்டியில் வெற்றி யடைந்தவர் பரிசைப் பெறுவது நிச்சயம். எப்படி அறிவித்திருக்கிறோமோ அதே போல கட்டாயம் அளிப்போம். எங்கள் சொத்துகளை விற்க வேண்டிய அவசியம் ஏற்பட்டாலுங்கூட அறிவித்தபடி பரிசுகளை வழங்குவோம்" என்று உறுதியுடன் விளக்கினர் பாப்.

புது வருஷப் பிறப்புக்கு முன் தினம் போட்டிகளின் முடிவு அறிவிக்கப்பட்டது. பரிசு பெற்றவர்

'ப்யூக்' வண்டியைப் பெற்றுக்கொள்ளும் காட்சியைப் போட்டோ எடுத்து முதல் பக்கத்தில் விளம்பரப் படுத்திஞேம். இரண்டாவது பரிசுக்கு உரித்தான பெண்மணிக்கு எழுநூற்றைம்பது டாலர் 'செக்கு' வழங்கப்பட்டது. மற்றவர்களுக்கும் அவரவர்களுக்குச் சேரவேண்டியதைக் கொடுததுவிட்டோம். பாப லாப நஷ்டக் கணக்குப் பார்த்தார். எங்களுக்கு நிகரமாகக் கிடைத்தது முப்பத்திரண்டு டாலரும் ஐம்பது செண்டும்! புது வருஷக் கொண்டாட்டததிற்கு இதைக்கொண்டு குதூகலமா யிருக்கலாமல்லவா!

பண வசதிகளைப் பொருத்தமட்டில் எப்போதும் நாங்கள் இருந்த நிலைமையில்தான் இருந்தோம்; முன்னேற்றம ஏதும் காணவில்லை. பாப்புக்கு தேகநிலை குன்றி உடம்பெல்லாம குழிப் புண்கள் ஏற்பட்டு வைத்தியச் செலவு அதிகமாயிற்று. இதுதான் நாங்கள் அடைந்த முன்னேற்றம். நிலைமையை ஒருவாறு சமாளித்துச் சாவதானம் நிலவியதும்தான் பரிசுத் திட்டம். மிகவும் விலை யுள்ளதாஞலும் விநியோக விரிவு சம்பந்தப்பட்டமட்டில் உயர்ந்தமுறைத் திட்டமென்றே எங்களுக்கு விளங்கியது. போட்டியில் பரிசு பெற்ற இருபது பேர்களும் அந்தப் பிராந்தியத்தில் மிகவும் முக்கியமான மனிதர்களாக ஆகிவிட்டார்கள். கௌரவம் அவர்களைத் தேடி அடைந்தது. ஆறு வார காலங்கள் அவர்களைப் பேட்டி கண்டு ஆசி கூறிப் போகத் தெரிந்தவர்களும் தெரியாதவர்களும் வந்து கொண்டே யிருந்தனர். இதன் விளைவாக அவர்கள் எல்லோரும் ஆர்க்கைவ் பத்திரிகையை வெகு விரிவாக மூலை முடுக்குகளிலெல்லாம் சுற்றுப்புற கிராமங்களில் கூட விற்பதில் முனைந்தார்கள். முடிவில் எங்களுக்குக் கிடைத்த லாபம் எண்ணூற்றிருபது புது சந்தாதாரர்களும், முந்நூறு புதுப்பித்த சந்தாக்களும் என்ருலும், பார்ன்ஸ் ஏற்படுத்திய உச்சபட்ச பலனுக்கும்,

நாங்க ளடைந்த லாபத்துக்கும் சமுத்திரத்திற்கும் மடுவுக்கு முள்ள வித்தியாசம் இருந்தாலும், எங்கள் பிராந்தியத்திற்கு நாங்கள் அடைந்த லாபத்தில் பெருமை கொள்ளத்தான் வேண்டும். நாங்கள் செயல் புரிந்தது கிராமாந்திரப் பிரதேசம்; நகர வட்டாரமல்ல. எங்களால் அணுகக்கூடிய அனைவரும் ஆர்க்கைவ் பத்திரிகைக்குச் சந்தாதாரராகவோ அல்லது அதைப் பற்றி நன்கறிந்தவராகவோ இருப்பர். "இதைக் காட்டிலும் விநியோக விரிவு முறைகளால் மேலாக எவ்வித லாபத்தை எதிர்பார்க்க முடியும்—புது அச்சு யந்திரத்தை நீக்கிவிட்டால்?" என்று நாங்கள் எங்களையே கேட்டுக்கொண்டோம்.

*          *          *

டிலாவேர் நகரத்திற்குப் போய்ப் பரிசுப் போட்டிகள் மூலம் எங்கள் சந்தாதாரர் எண்ணிக்கையை அதிகப்படுத்த முடியும் என்று தெரிந்துகொண்டு திரும்பி வந்த மறு வாரத்திலேயே, நாங்கள் எங்கள் பத்திரிகையை பதினறு பக்க அளவில் கொண்டு வந்தோம். எங்கள் சரித்திரத்திலேயே அதுதான் அளவில் மிகவும் பெரியது.

இந்தச் சம்பவத்தைப் பற்றி பிற்காலத்தில் பாப் மிகவும் விரிவாக எழுதி யிருந்தார். அது கீழ் வருமாறு:

அச்சு யந்திரங்களின் ஓசை, அச்சுத் தட்டு அடிக்கப்படும் ஓசை, அச்சு வீசி யெறியப்படும் சத்தம், 'டைப் ரைட்டர்' ஓசை, ரம்பங்கள் அச்சுக் கம்பிகளை அறுத்தெறியும் ஓசை—இப்படிப் பலதரப்பட்ட சத்தங்களுக்கிடையில் நாங்கள் வேலை செய்துகொண்டிருந்த ஒரு சமயம், ஒரு புது மனிதர் அதிகாரத் தோரணையில் உள்ளே நுழைந்தார். கழுகின் மூக்கைப் போல

இருந்தது அவர் முகம். 'காரியாலய மேஜை' என்று நாங்கள் ஆடம்பரமாகச் சொல்லிக்கொள்ளும் நீண்ட மேஜையை அணுகி, கையில் வைத்திருந்த ஒரு அட்டைக் காகிதக் கட்டு ஒன்றை என்னுடைய மூக்குக் கெதிரே நீட்டினர்.

நான் அந்த வார இதழுக்கு முக்கிய செய்திச் சுருளை எழுதி முடிப்பதில் கவனமா யிருந்தேன். ஏற்கனவே பதினைந்து தடவையாவது தடங்கல் ஏற்பட்டிருந்ததால், அவர் சொன்னதை நான் அறையுங் குறையுமாகத்தான் கேட்டேன். அவர் யுனைடெட் ஸ்டேட்ஸ் அரசாங்கத்தின் தொழில் இலாகாவைச் சேர்ந்தவராம். தொழிலாளிகள் வேலை செய்யும் நேரம், அவர்களுக் களிக்கப்படும் ஊதியம் முதலியவற்றைப் பார்க்கும் பகுதியைச் சேர்ந்தவராம். அந்தச் சமயம் அவருடைய மாமூல் முறையில் எங்கள் காரியாலயத்தையும் சரிபார்த்துப் போவதற்காக வந்துள்ளாராம். இதை அவர் விளக்கினர். நான் எழுதிக் கொண்டே யிருந்தேன்.

"நல்லது. சரி, பார்த்துக்கொள்ளுங்கள்" என்று அரை கவனத்துடனே சொன்னேன்.

மிஸ்டர் பீடர்ஸுக்கு அவரை அறிமுகப்படுத்தி, அவரிடம், "மிஸ்டர் பீடர்ஸ் ரெயில்வேயில் வேலை பார்த்து ஓய்ந்தபின், எங்களிடம் தினம் கொஞ்ச நேரத்திற்கு மட்டுமே கணக்கு வேலை பார்க்கிறார்" என்று கூறிவிட்டு, நான் என் டைப்ரைட்டரை அடைந்து வேலையைக் கவனிக்கலானேன்.

என் செய்தியை எழுதி முடித்ததும், புது நண்பர் எங்கள் கணக்குப் புத்தகங்களை யெல்லாம் வெகு ஆர்வத்துடன் புரட்டிக்கொண்டும், நிறைய குறிப்புகள் எழுதிக்கொண்டு மிருந்தார். நான் அச்சகத்துள் சென்

றேன். அடுத்த பக்கம் அச்சடிப்பதற்கு வேண்டியவற்றைக் கவனித்தேன். அந்தச் சமயம் அவர் என்னை அணுகி, எனக்காகச் சில கேள்விகள் கேட்கவேண்டுமென்று தெரிவித்தார்.

"'செஸ்டர் வாலி பிரஸி'ன் தலைவர் என்ற பதவி வகிப்பதற்காக நீங்களாவது உபதலைவர் பதவி வகிப்பதற்காக மிஸஸ் மாக் இல்வெயினுவது சம்பளம் என்று வாங்கிக்கொண்டதாகத் தெரியவில்லையே" என்று அவர் கேட்டார்.

"இல்லை" என்று ஊர்ஜிதம் செய்தேன் அவர் கூறியதை. எனக்குச் சிரிப்பு வந்தது. "வருந்தத் தக்க விஷயம் அல்லவா? ஆனால், நீங்களே கணக்குப் புத்தகத்திலிருந்து தெரிந்துகொண் டிருப்பீர்களே. அச்சுக் கோர்ப்பவர், லைனோ ஆபரேட்டர், எங்களுக்கு சாமான்கள் கொடுத்தவர்கள், பாங்கிக்கு வட்டி—முதலிய எல்லா பாக்கிகளைக் கொடுத்த பின்னர் எங்களுக்குப் பாக்கியுள்ளது பற்றுக்குறைதான். ஆனால், எங்களுக்கும் சில டாலர்கள் மிகுதியாகக் கிடைக்கக் கூடிய நாளும் வரும் என்றுதான் நம்பி யிருக்கிறோம்" என்று நான் கூறினேன்.

நம்முடைய அரசாங்க அதிகாரிக்கு நான் சொன்னது ஒன்றும் உரைத்ததாகக் காணப்படவில்லை. அவர் முகத்தில் புன்னகைகூடப் பரவவில்லை. "ஒரு கார்ப்பரேஷனுக்கு வேலை செய்யும் ஒவ்வொருவரும் குறைந்த பட்ச ஊதியமாக மணிக்கு நாற்பது செண்டுகளும், உபரி காலத்திற்கு ஒன்றறை மடங்கு ஊதியமும் அவசியம் வாங்கியே ஆகவேண்டும்" என்றார் அதிகாரி.

அவர் தவருகப் புரிந்துகொண்டார் என்று எனக்கு நிச்சயமாகத் தெரியவே, விஷயத்தை மேலும் விரிவாக

விளக்க முற்பட்டேன். நானும் என் மனைவியும் கார்ப்ப ரேஷனின் வேலைக்காரர்கள் அல்ல என்றும், அதி காரிகள்தான் என்றும், கார்ப்பரேஷனில் முக்கால் பாகம் எங்களுக்குச் சொந்தம் என்றும், நாங்கள் எவ்வளவு ஊதியம் பெறுவது என்பது எங்களின் சொந்த விஷயம் என்றும், இதில் மற்றெவருக்கும் பாத்தியதை இல்லை என்றும் சொன்னேன். நான் இவ்வளவு சொல்லியே இருக்கவேண்டியதில்லை.

அதிகாரி மறுபடியும் அவர் சொன்னதையேதான் சொன்னார். "சட்டப்படி ஒரு கார்ப்பரேஷனுக்கு வேலை செய்யும் ஒவ்வொருவரும் வேலையாள் என்றே மதிக்கப்படுகிறார்கள். அவர்கள் எல்லோரும் 'மணிக்கு ஊதியம்' என்னும் விகிதாசாரச் சட்டப்படி சம்பளம் வாங்கியே ஆகவேண்டும்" என்று மறுமுறை சொன்னார்.

இதற்குள் அச்சு யந்திரத்திற்கு அனுப்பவேண்டிய பக்கத்தைப் பற்றி மறந்தே போனேன்.

"எங்களுக்கு வாஸ்தவமாகப் பணமில்லை என்றா லும் நாங்கள் எங்களுக்கே சம்பளம் வழங்கிக்கொண்டே ஆகவேண்டும் என்பதுதான் உங்கள் கருத்தோ? பண மில்லாவிடில் பாங்கிக்குச் சென்று கடன் வாங்கி அதைச் சம்பளமாக எடுத்துக்கொண்டு, பின்னர் அதே பணத்தைப் பாங்கிக்கு எடுத்துச் சென்று பாக்கிக்காகச் செலுத்தி, இடையில் வட்டி வேறு கொடுக்கவேண்டும். இதுவா நீங்கள் சொல்லுவதன் பொருள்? அதாவது, நான் ஏற்கனவே பாங்கிக்குக் கடன்பட்டிருக்கும்போது மேலும் கடன் அளிக்க அவர்கள் இணங்கினல், இப்படித்தானே நடக்கும்? இதுவா உங்கள் ஆலோ சனை?" என்று சினம் பொங்க கடுமையாகப் பேசினேன் நான்.

அதிகாரி தம் முகத்தைச் சுளித்தார். "அப்படி நான் சொல்லவில்லை. நான் சட்டம் இப்படித்தான் உள்ளது என்று அதை விளக்கினேன். நீங்கள் உங்கள் வியாபாரத்தை எப்படி நடத்தவேண்டும் என்று ஆலோசனை கூற நான் முயற்சிக்கவில்லை" என்றார்.

இந்தச் சமயத்தில்தான் ஆபீஸ் கதவு படார் என்று திறக்கப்பட்டது. இருபத்தாறு பையன்கள், ஏழு வயதிலிருந்து பத்தொன்பது வயது வரையில் சிறியவர்களும் பெரியவர்களுமாக ஒரே காலத்தில் உள்ளே நுழைந்தனர். அரசாங்க அதிகாரியை உராய்ந்து சென்று, என்னை நோக்கி வெகு உற்சாகத்துடன், "ஏ, பாப்! இன்று மடித்துப் போட ஏதாவது பத்திரிகை இருக்கிறதா?" என்று கேட்டனர். அவர்கள் தன்னை இடித்துச் சென்ற அதிர்ச்சியில் அதிகாரி கையில் வைத்திருந்த பென்சிலை ஏறக்குறைய விழுங்கியே விட்டார்.

அதிர்ச்சி நீங்கியதும் நமது அதிகாரி, "இவைகள் எல்லாம் என்ன?" என்று கேட்டார்.

நான் மறுபடியும் அவருக்கு விஷயம் விளங்குமாறு சொல்ல ஆரம்பித்தேன். எப்படி நாங்கள் ஒரே சமயத்தில் இரண்டு பக்கங்கள் மட்டுமே எங்கள் அச்சு யந்திரத்தில் அச்சடிக்கிறோம் என்றும், எப்படி இவைகளை யெல்லாம் கையாலேயே மடிக்கவேண்டி யிருக்கிறதென்றும், எப்படி உள் காகிதத்தையும் அதேபோல் மடித்து நடுவில் திணிக்கவேண்டி யிருக்கிறதென்றும் சொன்னேன். அச்சகத்தி லுள்ளவர்கள் பெரும் பகுதி வேலையைச் செய்துவிடுவார்கள் என்றும், ஊர்ப் பள்ளிக்கூடத்திலிருந்து மாணவர்கள் பள்ளிக்கூடம் விட்டதும் கூட்டமாக இங்கே வருவது வழக்கமென்றும், நாங்கள் சாதாரணமாக ஐந்தாறு மாணுக்கர்களை எங்கள் மடிக்கும் கூட்டத்தில் சேர்த்துக்கொள்ளுவோம் என்றும்,

அவர்களுக்கு அருந்த பானமும், ஊர் விவகாரத்தைப் பற்றி நிறைய பேச்சும் நாங்கள் அளிப்பது வழக்கமென் றும், வாரத்தில் இரண்டு நாட்கள் இது நடைபெறு கிற தென்றும் உள்ளதை உள்ளபடியே சொன் னேன்.

இந்த விளக்கத்தில் என் மனைவியும் என்னுடன் கலந்துகொண்டாள். "இது எல்லாம் தனிப்பட்ட முறையில் இயங்கும் ஒரு வாலிபர் சங்கம் போன்றது. அவர்கள் இங்கே இல்லாத சமயங்களில் தெருக்களில் குறுக்கும் நெடுக்கும் ஓடிக்கொண்டு பல இடைஞ்சல் களை விளைவிப்பார்கள். இங்கேயோ என்றால், அவர் களுக்குச் சிறிது பணமும் கிடைக்கிறது. அவர்கள் வேலையில் காட்டும் உற்சாகத்தைக் கண்டு, இந்த வேலை அவர்களுக்கு மிகவும் பிடித்திருந்த தென்றுகூட நான் நினைத்தேன்" என்றாள் என் மனைவி.

ஆனால், நமது அரசாங்க ஆராய்ச்சியாளர் நாங்கள் சொல்வதற்குச் செவிசாய்த்ததாகவே தெரியவில்லை. அருகாமையில் அவர் கைக்கெட்டிய ஒரு பையனைப் பிடித்துக்கொண்டு குறுக்கு விசாரணை நடத்தலானார். மற்றவர்கள் கதவைத் தள்ளிக்கொண்டு ஓட முயன்ற னர். அதிகாரி தன் கையை உயர்த்தி அவர்களைப் பய முறுத்தவே, அவர்கள் ஓர் பக்கத்தில் தங்கள் மானமே இழந்துபோனமாதிரி ஒதுங்கி நின்று விசாரணைக்குத் தங்கள் முறையை எதிர்ப்பார்த்திருந்தனர். அச்சுப் பாரத்தில் விரிவாக பெயர், வயது, விலாசம், பெற்றோ ரின் பெயர் என்று இன்னும் பல விவரங்களை அவர் சுறுசுறுப்புடன் எழுத ஆரம்பித்தார். அதைக் கண்டு அவைகளெல்லாம் எதற்காக என்று கேட்டேன். "அவர்கள்தான் தங்கள் வயதைத் தெரிவித்தார்களே, எதற்காக அவர்களுக்கு இம்மாதிரி பீதி உண்டாக்க வேண்டும்?" என்றேன்.

"இவை யெல்லாம் சட்ட விரோதம்" என்று அவர் முணுமுணுத்தார். எழுதுவதை நிறுத்தவில்லை. "பதினாறு வயதுக்குட்பட்ட பிள்ளைகளை வேலை செய்யச் சொல்லுவது சட்டப்படி குற்றம். அவர்களின் வயதைப் பதிவு செய்துகொண்டு அவர்கள் சொல்வது உண்மைதானா என்று சரிபார்த்துக்கொள்ள வேண்டும்" என்று அவர் மேலும் சொன்னார்.

"பதினாறு வயதுக்குட்பட்டவர் இங்கே வேலை செய்வது சட்ட விரோதம் என்றால் நாங்கள் நிறுத்தி விடுகிறோம். அதற்காக அவர்கள் பெயர், விலாசங்கள் எதற்காக?" என்று மேலும் கேட்டேன்.

"அவர்கள் சொன்ன வாக்குமூலங்கள் சரிதானா என்று பள்ளிக்கூடத்திலும், அவரவர்கள் வீட்டிலும விசாரித்துச் சரிதானா என்று தெரிந்துகொள்ளுவ தற்காக" என்று அதிகாரி பதிலளித்தார்.

இரண்டு நாளைக்குப் பின் பள்ளிக்கூடத் தலைவரிட மிருந்து எனக்கு டெலிபோன் வந்தது. பீதியடைந்த பிரின்ஸிபால், "நீங்கள் அங்கே என்ன வேலை செய்கி றீர்கள்? அரசாங்கத்திலிருந்து யாரோ ஒருவர்—அதி காரியாம்—என்னைத் தொந்தரவு செய்துகொண்டிருக் கிறான். நாள் முழுவதும் பள்ளிக்கூடச் சிறுவர்கள் எல்லோருடைய குறிப்புகளையும் புரட்டிக்கொண் டிருக்கிறார். வகுப்பிலிருந்து பிள்ளைகளைத் தனியே கூப்பிட்டுக கேள்விகள் கேட்கவேண்டு மென்றும் சொல்லுகிறார்" என்று அவர் குறைபட்டுக்கொண்டே கேட்டார்.

அவர் நிகழ்த்திய இந்த ஆராய்ச்சி இரண்டு நாட் கள் நடந்தது. எவ்வளவு மணிக்கணக்கு நடந்தது—பள்ளிக்கூடச் சிப்பந்திகளுக்கு எவ்வளவு மணி வேலை நஷ்டம்—பிள்ளைகளுக்கு எவ்வளவு மணிநேர பாடங்கள்

நஷ்டம்—இவைகள் ஒருவருக்கும் தெரியாது; கணக்கெடுக்கவுமில்லை.

இரண்டு நாள் எங்கள் முகத்தில் விழிக்கவில்லை. ஆனால், மூன்றும் நாள் எங்கள் காரியாலயத்திற்குத் திரும்பவும் வந்தார். இந்த முறை எங்களுடைய சில்லறைச் செலவுகள் குறிப்புகளைப் பரிசிலனை செய்தார். கை நிறைய சில குறிப்புச் சீட்டுகளை எடுத்துக்கொண்டு எட் ரஸ்ஸலிடம் இவைகளைப் பற்றி விவரம் தெரிந்துகொள்ளச் சென்றார். அக்குறிப்புகள் எல்லாம் மிகவும் சுருக்கமாக இருந்தன. ஒனறு "மூன்று டாலர்—புட்ச்" என்றிருந்தது. "75 செண்ட்—ரெட்" என்று மற்றென்றில் இருந்தது. இதே முறையில் மற்றவைகளு மிருந்தன. இம்மாதிரி இருபது அல்லது முப்பது சிட்டுகள் இருந்தன. தொழில் இலாகா ஸ்தாபன அதிகாரி "ஏதோ சூதாட்டம் சம்பந்தமாக இவைகள் எல்லாம் குறிப்புகள். அவைகளைக் கண்டு பிடித்துவிட்டோம்" என்று நினைத்திருக்கவேண்டும். எட் ரஸ்ஸல் மாதா கோயில் நிகழ்ச்சியை அச்சடிக்க விரைந்துகொண்டிருந்தார். அவர் வெகு சுலபமாக, "ஓ! அவைகள் எல்லாம் பத்திரிகை மடிக்கும் பையன்களுக்கு நாங்கள் பணம் கொடுத்ததற்குக் குறிப்புகள்" எனறு பதில் சொன்னார்.

இதிலிருந்து ஒரு புது முறை ஆராய்ச்சியே ஆரம்பித்தது. சம்பந்தமில்லாமல் புது விஷயங்களில் எல்லாம் ஆராய்ச்சி தொடங்கியது. எங்கள் மட்டில் எல்லாம் ருசிகரமாகவே இருந்தது. எங்களை ஒருவரும் தொந்தரவு செய்யவில்லை. யார் விசாரணைக்கு வந்தார்கள்—எப்போது வந்தார்கள்—என்ன விசாரித்தார்கள்—ஒன்றும் தெரியாது. ஒரு வருஷ காலம் எவரெவரோ வந்து போய்க்கொண்டிருந்ததாயும், இங்கொருவனையும் அங்கொருவனையும் கேள்விகள்

கேட்டதாயும் பின்னால் அறிந்தோம். இவர்களில் பலர் ஊரைவிட்டே மேல் படிப்பு முற்றி, தொழில் செய்து கொண்டிருக்கிறார். பலர் சைன்னியத்திலும், கப்பற் படையிலும் சேர்ந்துள்ளனர்.

எப்படி யிருந்தாலும், 'ஸாம் மாமா' அதிகார வர்க்கத்தினருக்கு எவ்வளவு கடினங்கள் ஏற்பட்டாலும் அவைகளைப் பொருட்படுத்துவதில்லை. எப்பாடுபட்டா லும் புலன் துலக்கியே தீருவார். பல பிள்ளைகளை நேரில் கண்டு பேசியதன் விளைவாக 'புட்ச்', 'ரெட்' இப்படிச் சீட்டுகளில் காணப்பட்ட சுருக்குப் பெயர்களுக்கெல லாம் முழுப் பெயர்கள் கண்டுபிடித்து வைத்துக்கொண் டார்கள். நேரில் கண்டு விசாரிக்க இயலாத மாணுக்கர் களுக்கெல்லாம் 'மிமியோகிராப்' செய்யப்பட்ட கேள்வித் தாள்கள் "ரகசியம், உன்னுடைய எஜமான ருக்குக் காட்டவேண்டாம்" என்ற எச்சரிக்கையுடன் அனுப்பப்பட்டன.

நான் ஒருநாள் உள்ளூர் மருந்துக் கடை ஒன்றின் பக்கமாகச் சென்றபோது அங்கே பள்ளிச் சிறுவர்கள் பலர் கூட்டமாக நின்றுகொண்டு வருவோருக்கு இடைஞ்சல் செய்துகொண்டிருந்தனர். அப்போதுதான் எனக்கு இந்தக் கேள்வித்தாளைப் பற்றிய விவரமே தெரியவந்தது.

"ஏய், பாப்! இதை நான் என்ன செய்யவேண் டும்?" என்று கதவுக்குப் பின்னுலிருந்து ஒரு குரல் என்னைப் பார்த்துக் கேட்டது. அந்தக் குரலை அணுகிய போது, என்னுடைய சில்லறைச் செலவுச் சீட்டில் "எழுபத்தைந்து செண்டு—ரெட்" என்று குறித் திருந்த அதே 'ரெட்'தான் அங்கே என்னைக் கூப்பிட் டான் என்று தெரியவந்தது. கையில் வைத்திருந்த கேள்வித் தாளை என்னிடம நீட்டினுன். நாற்பது கேள்விகளுக்குமேல் தாளில் இருந்தன. பிறந்த ஊர்,

தேதி, தாயாரின் கன்னிப் பெயர், வேலை செய்யும் காலம் (மணிக்கணக்கில்), எப்போது—யாருக்காக வேலை செய்தது—இப்படிப் பல விவரங்களைப் பற்றிய கேள்விகள் இருந்தன.

நாங்கள் இருவரும் கலந்து, 'ரெட்'டினுடைய பிறப்பைப் பற்றியும் தாயாரின் முன்னாள் பெயர் என்ன எழுதுவது என்பதிலும் கஷ்டம் ஏதுமில்லை. யாருக்கு எப்போது வேலை செய்தாய் என்பதற்கு விடையளிப்பது அவ்வளவு சுலபமாக இல்லை. முதலில் இந்த வேலை எப்படி ஆரம்பித்ததென்று சென்ற காலத்தை நினைவுக்குக் கொண்டுவர முயன்றான். ஒருநாள் மேல் வகுப்பு 'மானிட்டர்' நான்ஸீ என்பவன், தன்னைத் தெருவில் சந்தித்தபோது "ஆர்க்கைவ் பத்திரிகை ஆபீசுக்கு வா, காகிதம் மடித்துக் கொடுக்கலாம்" என்று முதன் முதலாகக் கூறினான். வாரத்தில் ஐந்து இரவுகள் மருந்துக் கடையில் வேலை செய்ததாலும், புதன்கிழமை மட்டும் பத்திரிகை மடித்துக் கொடுத்ததாலும், அவன் தன்னைக் கூப்பிட்டது புதன்கிழமையாகத்தானிருக்கவேண்டுமென்று எண்ணினான். அன்று அவனுக்கு மருந்துக் கடையில் விடுமுறை தினம் என்றும் நினைவுபடுத்திக்கொண்டான். பனிக்காலம் என்றும் நினைவிருந்தது. பூமியில் பனி பெய்திருந்தது. 'சம்பள விகிதம்' எழுபத்தைந்து செண்ட் என்பதில் சந்தேகமில்லை. சீட்டில்தான் எழுதி யிருக்கிறதே. ஆனால், எவ்வளவு காலம் வேலை செய்த நேரம் என்று எப்படிக் கணக்கிடுவது? தனக்கு ஊதியமாகப் பணம் கொடுத்ததே ஆச்சரியம் என்று அவன் எண்ணினான். ஏனெனில், அங்கே அரை மணி நேரமாவது ஒரு மூலையில் 'பாஸ்கட் பால்' (கூடைப் பந்தாட்டம்) விளையாடினோம். ஆட்டம் முடிந்ததும், பூமியிலிருந்து சந்திர மண்டலத்திற்கு எவ்வளவு 'ஒளி—வருஷங்கள்' என்று மும்முரமாக விவாதம் நடத்தினோம்.

வேலை செய்ததாகவே கவனமில்லை. இடையிடையே சில பத்திரிகைகளை மடித்திருக்கலாம். இவைகள் சிக்கல் நிரம்பி யிருந்தால், ஒரு சோடா ஆளுக்கொருவ ராக வாங்கிக்கொண்டு, இந்தப் பல அரிய விஷயங்களைப் பரிசீலனை செய்து முடிவு செய்து இரவு சாப்பாட்டுக்கு வீடு திரும்பியபோது ஒரு மணி நேரம் காலதாமதமாக இருந்தது.

அன்று மாலையும், பின்னால் பல நாட்களும் மாலை நேரங்களில் கேள்வித் தாள்களில் அவர்களால் பூர்த்தி செய்யாமல் விடப்பட்ட கேள்விகளுக்கு விடை எழுதுவ தில் என் காலம் கழிந்தது. சட்டப்படி நான் அந்தச் சமயங்களில் உபரி கால அளவுப்படி வேலை செய்து கொண்டிருந்தேன். எனக்கு மணிக்கு அறுபது செண்டுகள் வீதம், நான் பள்ளிச் சிறுவர்களுக்கு வழங்கிய ஆலோசனைப்படி எனக்குச் சம்பளமாக ஆறு டாலர்களாவது சேரவேண்டும். நான் இன்னமும் சம்பளம் வாங்கவில்லை.

நான்கு மாதங்களுக்குப் பின்னால்தான் நாங்கள் நடத்திய இந்த ஆராய்ச்சிகளின் முடிவு என்ன என்ப தைப்பற்றிக் கேள்விப்பட்டோம்.

நாங்கள் அதிகமாக வெளியில் சொல்லிக்கொள்ளா விட்டாலும், தொழில் இலாகா அதிகாரிகளின் அதிகப் படியான கவனிப்பு எங்களுக்கு உள்ளூர மிகுந்த அதிர்ச்சியைக் கொடுத்தது என்பதை ஒப்புக்கொள்ளத் தான் வேண்டும். நாங்கள் புது வீட்டிற்கு வந்து, எங்க ளுடைய சொந்த அச்சகத்தையே ஸ்தாபித்து, வாரந் தோறும் பத்திரிகையைத் தாமதமின்றி வெளியிட்டு, கொடுக்கவேண்டிய தவணைகளைத் தவறாமல் கொடுத்து நிலைமையைச் சமாளித்ததே மகத்தான சாதனை. இந்தச் சமயத்தில் நம்முடைய சொந்த அரசாங்கத்தினிட மிருந்தே—சிறுபான்மை தொழில் ஸ்தாபனங்களை

முற்றிலும் ஆதரிப்பது முக்கியமான நோக்கம் என்னும் கொள்கையை உடைய அரசாங்கத்தினிட மிருந்தே—எங்களுக்கு இம்மாதிரி இன்னல்கள் ஏற்பட்டது விதியின் கூற்று என்றேதான் சொல்லவேண்டும். சில சட்ட விதிகளை நாங்கள் மீறிவிட்டோம் என்பதை நாங்கள் உணர்ந்துகொண்டோம். அவ்வாறு சில விதிகள் இருந்தன வென்றே எங்களுக்குத் தெரியாது. தெரியாதது முட்டாள்தனம்தான். அதனுல் என்ன? இப்போது தெரிந்ததும், அவைகளின்படியே நாங்கள் தான் நடந்துகொள்ளுகிறோம் என்று பாப் அதிகாரிக்கு விளக்கமாகச் சொன்னுரே! எல்லாவற்றிற்கும் மேலாக, தெரிந்திருந்தும் வேண்டுமென்றே சட்ட ஷரத்துக்களை மீறுவதற்காக நாங்கள் இம்மாதிரி பள்ளிச் சிறுவர்களை நிச்சயமாக நியாயமான முறையில் வேலைக்கு வைத்துக் கொள்ளாமல், தெரிந்தும் தெரியாததுமாக வேலை வாங்குகிறோம் என்று அதிகாரி நினைத்தது எங்கள் மனத்தைப் புண்படுத்தியது. இதை நாங்கள் வெறுத்தோம்.

அரசாங்க அதிகாரியின் வரவால் எங்களுடைய அச்சகத்தின் தொல்லைகள் பெரிதாகி, பரிகாரம் தேட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. பத்திரிகை மடிக்கச் சிறுவர்களை வேலைக்கு வைத்துக்கொள்ளுவது சட்ட விரோதம் என்று தெரிந்தபின், இந்த வேலையைச் செய்ய் மிஷினை உடனே வாங்கி ஸ்தாபிக்கவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது.

நவம்பர் மாதக் கடைசியில், எங்களுடைய விநியோக விரிவுப் பரிசுப் போட்டியின் விளைவாக பத்திரிகையின் விநியோகமும் வாரத்திற்கு மூவாயிரம் பிரதிகளாக உயர்ந்துவிட்டது. கிறிஸ்துமஸ் வியாபாரத்தை எதிர்நோக்கி விளம்பரங்களும் நிறைய குவிந்து, ஒவ்வொரு வாரமும் அச்சடிப்பதற்கே அதிக நேரம்

பிடித்தது. மடித்து ஒழுங்குபடுத்தவும் அதேபோல் அதிக நேரம் தேவைப்பட்டது. பாங்கியின் கையிருப்புக் குறையக் குறைய, வருவாயை அதிகப்படுத்த வேறு இரண்டு வாரப் பத்திரிகைகளை எங்கள் அச்சகத்திலேயே கூலிக்கு அச்சடித்துத் தர ஒப்புக்கொண்டிருந்தோம். அவற்றில் ஒன்று வியாழக்கிழமை வரவேண்டியது; மற்றொன்று வெள்ளிக்கிழமை காலை பத்து மணிக்கு வரவேண்டியது. இந்த வேலையின் நெருக்கடியால் பத்திரிகை அச்சகமாகவே எங்கள் அச்சகம் மாறிவிட்டது. இரண்டிரண்டு பக்கமாகக் கையாலேயே அணைக்கப்பட்டு, வாரத்திற்கு இருபத்திநான்கு பக்கமுள்ள பத்திரிகையைக் கொண்டுவர வேண்டுமானால் எவ்வளவு கடினம் என்பதை யூகித்துக்கொள்ளலாம்.

'விற்பனைக்கு' என்று வியாபார சஞ்சிகைகளிலெல்லாம் வரும் விளம்பரங்களை ஒன்றுவிடாமல் பாப்பும் எட்டும் படித்தனர். அச்சு யந்திரங்கள் வாங்குவதில் அக்கறை யுடையவர்கள் என்று டிரங்கு டெலிபோனில் நகரங்களுக்குப் பேசினர். கடைசியில் வர்ஜினியா பிராந்தியத்தில் நார்பக் என்னும் நகரத்தில் தான் எங்களுக்குத் தேவையான சாமான் உள்ளது என்று பாப் கண்டுபிடித்து, அதைச் சோதிப்பதற்காக எங்களுடைய புதிய அச்சாளரும் பல விஷயங்களில் அனுபவமுள்ளவருமான பென் (Ben) என்பவரை அனுப்பினோம். "வாங்கலாம்" என்று அவர் அபிப்பிராயம் தெரிவித்ததும், டெலிபோன் மூலமாகவே ஐயாயிரம் டாலர்களுக்கு அந்தப் புது அச்சு யந்திரத்தை வாங்கிவிட்டோம்.

டெலிபோனை வைத்துவிட்டு, "வாங்கியாய்விட்டபடியால் இனி பணத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்; அவன் அடுத்த வாரத்திற்குள் பூரா தொகையும் ரொக்கமாக வேண்டும் என்கிறான்" என்று பாப் என்னிடம் சொன்னார்.

மறுநாள் காலே பாப் டௌனிங்டன் நேஷனல் பாங்கு மானேஜர் பால்டுவினேக் காணச் சென்ருர். அவரிடம் "எனக்கு ஆருயிரம் டாலர்கள் தேவை" என்ருர் சுருக்கமாக.

"எதற்காக?" என்று உதடசையாமலே கேட்டார் மிஸ்டர் பால்டுவின். அவர் பின் அறையில் வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த தடித்த பேரேடுகளை எடுக்கப் போய்க்கொண்டே இருந்தார்.

"ஒரு புது அச்சு யந்திரம் வாங்க" என்று பதிலளித்துக்கொண்டே என்ஜினே வண்டித் தொடருவது போல அவர் பின்னுலேயே சென்ருர் பாப்.

"போன வருஷம்தான் நீ ஒன்று வாங்கினுயே, இல்லையா?" என்ருர் மிஸ்டர் பால்டுவின், முகத்தைத் திருப்பாமலே. பின அறையிலிருந்து கையில் கத்தை பாண்டுகளுடன் முன் பக்கத்தை அடைந்து கிராதிக் கம்பிகளுககு வெளியே காத்திருந்த ஒரு வாடிக்கைக் காரரிடம் அவைகளைக் கொடுத்தார்.

"எங்கள் வியாபாரம் பெருகிவிட்டது. அது போதவில்லை. எங்களுக்கு இப்போது தேவைப்படுவது அச்சடித்து மடித்து எல்லா வேலைகளையும் தானே செய்து முடிக்கும் புது 'ஆடோமாடிக்' அச்சு யந்திரம்" என்ருர் பாப்.

இதற்குள் மிஸ்டர் பால்டுவின் பாங்கியின் இரும்பு அறையை அடைந்து அதன் கைப்பிடிகளைத் திருகிக் கொண்டிருந்தார். இன்னும் சில கேள்விகள் கேட்டுக் கொண்டே யிருந்தார். அங்கிருந்து கணக்கு இலாகாவுக்குப் போகும்போது, அங்கேயே உட்கார்ந்து தனக்கு வேண்டியவைகளை யெல்லாம் சரிவர எழுதி மனு தயார் செய்யும்படி பாப்புக்குச் சொல்லிப் போனுர்.

" பகல் பதினேரு மணிக்கு டைரக்டர்கள் கூடு கின்றனர். அவர்கள் பல கேள்விகளைக் கேட்பார்கள் " என்று சுருக்கமாக அவர் விளக்கினர்.

பகல் உண்டிக்குப் பின் பாப் மறுபடியும் பாங் கியை அடைந்து மிஸ்டர் பால்டுவினைப் பேட்டி காண முயன்ருர். அவர் கிராதிக்குப் பின் இப்படியும் அப்படியுமாக நடந்தவண்ண மிருந்தார். இது அவர் பழக்கம். பாப் வந்ததை அவர் கவனித்தார். எனினும், அவர் முகத்திலிருந்து டைரக்டர்கள் கூட்டத்தில் என்ன முடிவு செய்யப்பட்டது என்பதற்கு ஒரு குறிப் பும் கிடைக்கவில்லை. பாங்கியின் பின்புறம் செல்லும் பாதையில் பாப் மேலும் கீழும் உலவிக்கொண் டிருந்தார்.

சற்று நேரத்திற்கெல்லாம் மிஸ்டர் பால்டுவின் அந்தப் பக்கம் வந்தார். கையில் வைத்திருந்த காகிதங் களைப் பார்த்தபடியே, " அடைமானமாக என்ன ஈடு காட்ட முடியும்?" என்று குனிந்த தலையை நிமிர்த்தா மலே கேட்டார்.

" வாங்கப்போகும் மிஷினைத் தவிர வேறெதுவு மில்லை " என்ருர் பாப், அவரைத் தொடர்ந்தபடியே.

இரண்டு மூன்று முறை பேரேடு அறைக்கும் கஜாஞ அறைக்கும் நடந்துகொண்டும், இதர வாடிக் கைக்காரர்களுடன் சம்பாஷணை நடத்திக்கொண்டும் இடையிடையே ஒவ்வொரு வார்த்தைகளாக மிஸ்டர் பால்டுவின் சொன்னவற்றை யெல்லாம் கூட்டிப் பார்த்து பாப் புரிந்துகொண்டது என்னவென்ருல், தாம் வாங்கப்போகும் மிஷினை அடைமானமாக வைத்து மூவாயிரம் டாலர்கள்தான் பெற முடியுமென்றும் மற்ற மூவாயிரத்துக்கு வேறு ஏதாவது ஈடுகாட்டத்தான் வேண்டுமென்றும், இதற்கு என்ன வகை செய்வது

என்று ஒன்றும் தோன்ருமல் திகைத்து நிற்கையில், மிஸ்டர் பால்டுவின் "உங்கள் தாயார் தேசீயக் கடன் சேமிப்புப் பத்திரங்கள் என்று ஒன்றும் வைத்திருக்க வில்லையா? அல்லது உங்கள் மனைவி புத்தகம் ஏதாவது வெளியிடவில்லையா?" என்று ஆலோசனை கூறும் முறையில் கேட்டார்.

உண்மையில் நான் புத்தகம் ஒன்று எழுதித்தானிருந் தேன். எனக்கு அவகாசமே கிடைக்காத நிலையில், ஒழிந்த நேரங்களிலெல்லாம் ஒவ்வொரு பக்கமாக எழுதி யிருந்தேன. இப்போது அதனுல் பிரயோசனம்கூட ஏற்படலாம் போலத் தோன்றியது. ஜூனியர் இலக் கியக் கழகத்தார் என்னுடைய புத்தகத்தை வரப் போகும் வருஷத்திற்கு மாணவர்களுக்குப் பாடப் புத்தக மாக அங்கீகரித்திருந்தனர். அதற்கென நான் அச்சார மாக முன்பணமும் வாங்கி யிருந்தேன். அந்தப் புத்த கத்திலிருந்து ஆசிரியர் உரிமைக்காக எனக்கு எவ்வளவு வருமானம் கிடைக்கலாம் என்று மதிப்பிட்டு அதை ஈடாகக் காட்டி பாங்கிக்குக் கையெழுத்திட்டு அனுப் பினேன். எங்களுக்கு எலலாச் சமயங்களிலும் துணை நின்ற எங்கள் தாயார் அவளிடமிருந்த பத்திரங்களைத் தாமதமின்றிக் கொடுத்தாள். ஈடுகாட்ட வகை செய்தாயிற்று. ஸாம் மாமாவின் அதிகாரத்தின் விளை வாகப் பணம் இல்லாவிட்டாலும் எங்களைப் புது அச்சு யந்திரம் வாங்கத் தூண்டிவிட்டதால், அதற்கு முதல் தவணையாகக் கட்டவேண்டிய ரொக்கப் பணத்துக்கு இந்தமாதிரிதான் வழி செய்ய நேரிட்டது. பெண் அன்றிரவே ரயிலில் புறப்பட்டு நார்பக் சென்ருர். பாப்பும் எட்டும் மறுநாள் காலை மோட்டாரில் கிளம்பினுர்கள். அச்சாபீஸின் புது சரித்திரம் ஆரம்பமாயிற்று.

யுத்த அரங்கில் படைகளின் நடமாட்டங்களைத் திட்டமிட்டு நடத்தும் தளபதிகள்கூட நாங்கள் புது

அச்சு மிஷின் வாங்குவதில் போட்ட திட்டங்களை மிஞ்ச முடியாது. நார்பக் நகரத்துக்குப் பிரயாணம், அங்கே இருந்த அச்சு யந்திரத்தை அங்கம் அங்கமாகக் கழற்றி வைத்தல், அவற்றை வண்டியில் ஏற்றுதல், பத்திரமாக ஊர்கொண்டு சேர்த்தல், அதை ஸ்தாபிக்க ஐந்தடி ஆழமுள்ள சிமெண்டு செங்கல் அஸ்திவாரப் பள்ளம் அமைத்தல் முதலிய எல்லாவித வேலைகளும், வாரந்தோறும் மூன்று வாரப் பத்திரிகைகளைக் குறித்த காலம் தவருமல் வெளிக்கொண்டு வருவதற்காகச் செய்யவேண்டிய வேலைகளும் ஒன்றற்கொன்று முரண் படாமல் செய்து முடிக்கவேண்டும். இம்மூன்று வாரப் பத்திரிகைகளும் கணிசமான அளவுக்கு விளம்பரங் களைத் தாங்கி நின்றதால், காலந் தவருமல் அவைகள் வரவேண்டியது மிகவும் முக்கியமாயிற்று.

நார்பக் நகரத்தில் பாப், எட், பென், புதியதாக எங்களை வந்தடைந்த அச்சாளர் எவ் முதலிய எல்லோரும், தங்களுக்கு உதவிக்காக அவர்கள் அழைத்துச் சென்ற ஒன்பது பேர்களும்—இவர்களெல்லாம் யந்திரங்கள் இறக்குவதிலும் ஏற்றுவதிலும் மிகவும் தேர்ச்சி பெற்றவர்கள்—அச்சு யந்திரத்தை அக்கு வேறு ஆணி வேருகக் கழற்றி, அந்த யந்திரம் பூராவையும் பெரிய 'ட்ரக்' ஒன்றில் ஏற்றி, அடுத்த திங்களன்று இவை யெல்லாம் எங்கள் இடத்தை அடைந்து இருபதினுயிரம் சாமான்களும் தனித் தனியே பிரிக்கப்பட்டுக் கிடத்தப்பட்டன. பழைய குதிரை லாயம் பூராவும் இவைகள் சிதறிக் கிடந்தன.

"இவைகள் பூராவையும் கழற்றிப் போட்டது வீண் சிரமந்தானே? இவைகளை யெல்லாம் மறுபடியும் ஒன்றுசேர்க்கவேண்டுமே!" என்று நான் ஆச்சரியப் பட்டேன்.

அன்றிரவு பன்னிரெண்டு மணிக்குமேல் இருக்கும். ஒவ்வொருவரும் சோர்வின் மிகுதியால் கீழே விழுந்து விடுவார்கள் போலிருந்தது. "இதைவிட நார்பக் நகரத்தில் இந்த அச்சு யந்திரம் இருந்த கட்டிடத் தையே இடித்துத் தள்ளிவிட்டு, இங்கே புதிய கட்டி டம் ஒன்றை நிர்மாணம் செய்திருந்தால்கூட இவ்வளவு கஷ்டம் இருந்திராது" என்று பாப்கூட எண்ணெய்ப் பசை தோய்ந்த தம் கைகளால், துளிர்த்த வியர்வை யைத் துடைத்துக்கொண்டே சொன்னார்.

* * *

மூன்று வாரங்கள் இவ்வாறு எங்கள் எல்லோரை யும் பூரா வேலை வாங்கிய பிறகு, புது அச்சகம் கம்பீர மாக நின்றது—ஒரு பெரிய நீர் யானை போன்று 'ரூப் கோல்ட்பெர்க்' ஆடோமாடிக் அச்சு யந்திரம். அது இயங்குவதற்கு இன்னும் ஒன்று அல்லது இரண்டு பாகங்கள்தான் தேவை. இனிமேல் பத்திரிகைகள் தேவையானால் மணிக்கு ஐயாயிரம் வீதம் அச்சடித்து மடித்துக் கொடுக்கவும் தயாராக நின்ற அந்த ரூப்பைக் கண்டு மகிழ்ந்தோம். இரண்டிரண்டு பக்கங்களாக அச்சடிக்கவேண்டிய கஷ்டத்திற்கு முடிவு காலம் வந்தது.

புதன்கிழமை எட்டுப் பக்கங்களுக்குப் 'பாரங்கள்' தயார்செய்து அச்சுத் தட்டுகளைக் குழந்தையைத் தொட்டிலில் படுக்கவைப்பது போல் மிஷினின் அணைக் கல்லின்மேல் பொருத்தினோம். அதிலிருந்து பத்திரிகை வெளிவரும் வினோதத்தைக் கண்டு களிப்பதற்காக ஒரு கூட்டமாக எல்லோரும் அருகில் நின்று பார்த்துக் கொண்டிருந்தோம். யாரோ ஒருவன் மிஷினின் முன் புறத்தில் உடைக்க ஒரு 'ஷாம்பெயின்' புட்டிகூடக் கொண்டுவந்தான்.

மின்சார மோட்டார் 'விர்' என்று இயங்கிற்று. சக்கரங்கள் ஒன்றோடொன்று உராய்ந்து சுற்றின. பிறகு வெடியோசை போல் ஒரு சப்தம் உணடாயிற்று. பெரிய காகிதப் பையைச் சிறுவர்கள் கையால் வெடித்து விளையாடும்போது கேட்கப்படும் ஓசை போலக் கேட்டது. நியூஸ் பிரிண்ட்டுச் சுருளிலிருந்து வெளியே வந்த காகிதம் இந்த அச்சு யந்திரத்தினுட்புகுந்து செல்லும் பாதையில் எங்கோ ஒரு இடத்தில் துண்டித்துப் போயிற்று. மிஷினின் மூலை முடுக்குகளிலெல்லாம் ஆராய்ந்து பென், எவ், எட், பாப் மூவரையும் மறுபடியும் காகிதத்தை அதற்கு உரித்தான இடத்தில் பொருத்தும்படிக் கட்டளைகள் பிறப்பித்துக்கொண் டிருந்தார். முப்பது நிமிஷங்களுக்குப் பின், மறு முறை பரீட்சை பார்க்க எல்லாம் தயாராக இருந்தது.

இம்மாதிரி நான்கு முறை காகிதம் துண்டித்துப் போகவே, இரண்டு மணி நேரத்துக்குப் பிறகு நாங்கள் வெறுப்புடன் ஒரு முடிவுக்கு வந்தோம். அந்த வாரம் பத்திரிகை வரவேண்டுமானுல், நாங்கள் இதுவரையில் செய்தமாதிரி இரண்டு பக்கம் மீலி கை மிஷினில் அச்சடித்துத்தான் கொண்டுவர வேண்டும் என்று வெட்டவெளிச்சமாகத் தெரிந்தது.

அடுத்த வாரம் மறுபடியும் புது மிஷினில் அச்சடிக்கத் தயாரானோம். எல்லாம் ஒழுங்காகவே இயங்கின. காகிதங்கள் வெகு அழகாக மிஷினுக்குள் சென்று, அச்சடித்து, மடித்து வெளியே வந்து விழுந்தவாறு இருந்தன. இரண்டு முறைதான் காகிதம் அறுந்தது. நான் சந்தோஷத்தினுல் மிஷினைச் சுற்றி நின்றுகொண்டு அதற்கு வணக்கம் செய்து நன்றி தெரிவித்தேன்.

அச்சடித்த பிரதிகளைக் கண்டு மகிழ அவைகளைக் கையிலெடுத்தோம். அதைக் கண்டு திடுக்கிட்டோம்.

அதைவிட எந்தப் பத்திரிகையும் மோசமாக இருக்க முடியாது. சில பக்கங்களில் இங்கியே படாமல், அச்சுத் தட்டு அருகாமையில்கூட அந்தப் பக்கங்கள் சென்றனவா என்று ஐயத்தை ஊட்டின. மற்றும் சில பக்கங்களில் மசி காயாமல் கருமை திட்டுத் திட்டாகக் காணப்பட்டதோடு, நல்ல காகிதங்களைக்கூட கருப் பாக்கிக்கொண் டிருந்தன. ஓரங்கள் தங்களிஷ்டப்படி இருந்தன. ஒரு பக்கத்தில் மேல் பாதியி லிருந்துதான் ஓரம் விடப்பட்டிருந்தது. மற்றொன்றில் அடி பாதியி லிருந்து ஓரம் விடப்பட்டிருந்தது. ஆனால், காகிதம் மட்டும் ஒருமுறைகூட அறுபடவில்லை. பென் முகத் தில் வெற்றிச் சின்னம் நடமாடியது.

" இப்போது நாம் செய்யவேண்டியது பொருத்தங் களைச் சரி செய்வதுதான் " என்று அவர் அடித் தொண்டையிலிருந்து சொன்னார்.

அன்றிரவு நாங்கள் பரீட்சை பார்ப்பதிலேயே தொளாயிரம் பிரதிகள் வீணாயின. பக்கத்தின் ஓரக் கட்டைகள் சரிவர அமைவதற்கு இவ்வளவு நேரம் பிடித்தது. இன்னமும் சரியானபாடில்லை. இதற்குள் காலதாமதமாய்விட்டதாலும், வீணாய்ப்போன பத்திரி கைக் குவியல் உயர்ந்துகொண்டே போனதாலும், மேலும் காலத்தைக் கடத்தாமல் அப்படியே பிரதிகளை அனுப்பிவிடுவதென்று தீர்மானித்தோம். வாசகர்கள் விஷயத்தைப் புரிந்துகொண்டு அனுதாபப்படுவார்கள் என்று விட்டுவிட்டோம்.

ஒவ்வொரு வாரமும் மிஷினினுடைய வேலையில் முன்னேற்றம் காணத்தான் செய்தது. ஒரு முறை சேர்ந்தாற்போல ஆறு வாரம் ஒருதடவைகூட காகிதம் அறுபடாமல் மிஷின் ஓடிற்று. எனினும், எங்களுக்கு ஒரு வருஷம் வரையில் ஏதாவது சில்லறைத் தொல்லை

கள் இல்லாமலில்லை. மசி சரிவரப் படியாமல் சில பக்கம் அதிக மசியுடனும் சில பக்கம் குறைந்த மசியுடனும் வந்துகொண்டிருந்தன. இந்த நிலையில், மற்றவர்களுக்காக அச்சாகும் இரண்டு பத்திரிகைகளைப் புது மிஷினில் அச்சடிக்காது பழைய முறையிலேயே அச்சடித்துக் கொடுத்தோம். எங்கள் வாசகர்களும் விளம்பரதாரர்களும் எங்களுக்குக் கடைசி வரையிலும் பொறுமையுடன் ஆதரவளித்தனர். அடுத்த வாரம் பத்திரிகையில் சிறப்பு காணப்படும் என்று சொல்லிக் கொண்டே ஊக்கம் ஊட்டி வந்தோம். அடுத்த வாரம் முன்னேற்றம் ஒன்றையும் காணாது சிலர் எங்களைக் கைவிட்டதுமுண்டு.

மொத்தத்தில் ரூப்பினுடைய செயல் திறன் எங்களுக்குப் பூரண திருப்தி யளிக்கவில்லை. அதற்குக் கொடுத்த விலையுடன், கூலியாட்கள், வண்டிச் சத்தம், லாரி வாடகை, அஸ்திவாரம் தோண்டும் செலவு, புது பாகங்கள், அதை ஸ்தாபிக்க ஏற்பட்ட இதர மாறுதல்கள்—எல்லாமாகக் கூட்டி எட்டாயிரம் டாலர்கள் எங்களுக்குச் செலவாகி யிருந்தன. ஆறுயிரம் பாங்கியிலிருந்து கடன் வாங்கியது. இது எங்கள் அனுபவம். ஜோஸப் புலிட்ஸர் (Joseph Pulitzer) தம்முடைய பத்திரிகையை அச்சடிக்க 1871-ம் வருஷம் ஒரு 'ரோட்டரி' என்னும் சுருள் அச்சு யந்திரம் ஸ்தாபித்தபோது, அவர் அனுபவத்தைப் பற்றி "இந்த யந்திரத்தின் சபலங்களும மனப் போக்கும் என்னைப் பைத்தியமாகவே அடித்துவிட்டன" என்று கூறியதாகக் கேட்டிருக்கிறேன். அவரிடம் நான் முற்றிலும் அனுதாபப்படுகிற்றன்.

*    *    *

தொழில் இலாகா அதிகாரியின் விஜயமும் அதைத் தொடர்ந்து நிகழ்ந்த ஆராய்ச்சிகளும், விநியோக

விரிவுப் பரிசுப் போட்டி, புது அச்சகத்திற்குப் பணம் சமாளித்து அதை வாங்கிக் கொணர்ந்து ஸ்தாபித்தது— எல்லாம் சேர்ந்து ஆறு மாத காலம் நாங்கள் இரவு பகல் நரக வேதனையே அனுபவித்தோம். இருந்தாலும், விதி என்று ஒன்றுண்டல்லவா? எங்களுக்கு உற்சாகம் முற்றிலும் குன்றி மேலே செய்வது இன்னது என்று தோன்றாமல் உயிரையே விட்டுவிடலாமா என்னும் நிலைமைகளில் அந்த விதி ஏதாவது உற்சாக மூட்டும் சின்னத்தை எங்கள் பாதையில் விட்டெறியும். எங்கள் அனுபவத்தில் இதைக் கண்டிருக்கிறோம்.

இந்தச் சமயமும் அவ்வாறுதான் நிகழ்ந்தது. அரசாங்க ஆராய்ச்சி நடந்த ஒரு வாரத்துக்குப் பின், எங்கள் அனுபவங்களைப் பற்றித் தலையங்கங்களிலேயே விவரிப்பது என்று பாப் தீர்மானித்தார். அவைகள் சமூகத்தினிடையே ஒரு கிளர்ச்சியையே உண்டுபண்ணின. பல வியாபாரிகள் எங்களை நேரில் கண்டு அவரவர்கள் செயல்களையும், அவர்கள் அனுபவங்களைப் பற்றியும் சொன்னார்கள். டௌனிங்டனுக்கு வெளியில் மற்ற இடங்களிலும் கூட்டங்களில் பாப் தம் அனுபவங்களைப் பற்றி விவரித்தபோது அவர்களும் டௌனிங்டன் வாசிகளைப் போலவே இந்த இலாகா அதிகாரிகளிடம் மிகவும் கஷ்டத்திற்குள்ளாயினர் என்று தெரிந்தது. ஒரு நகர சஞ்சிகைக்கு முதல்தரமான கட்டுரைக்குப் போதிய விஷயம் இங்குள்ளது என்று எனக்கு விளங்கிற்று. ஒரு கட்டுரை எழுதுமாறு பாப்பை நச்சரித்துக்கொண்டேயிருந்தேன்.

என் கணவருக்கு எழுதுவதென்றால் வேறு வேதனை வேண்டியதில்லை. முனகுவார்; முணுமுணுப்பார்; காகிதத்தை வைத்துக்கொண்டு பார்த்துக்கொண்டேயிருப்பார்! புகைக் குழாயை எடுப்பார்; வைப்பார்; எல்லாம் செய்வார் எழுதுவது ஒன்றைத் தவிர.

பிறகு உணர்ச்சி வந்துவிட்டால்—கடைசி நிமிஷம் கடந்துவிடும் என்று ஏற்பட்டதும் உட்கார்ந்து வெகு சீக்கிரத்திலேயே எழுதி முடித்துவிடுவார்.

பரிசுப் போட்டியும் புது அச்சகமும் அவர் மனத்தில் மேலோங்கி நின்றபோது, நான் எவ்வளவு சொல்லியும் ஒன்றும் பலனில்லை. ஒரு சஞ்சிகைக் கட்டுரை எழுதுவதைக் காட்டிலும் இதர முக்கிய விஷயங்கள் பல இருந்தன. ஆனால், 1950-ம் ஆண்டு ஜனவரி மாதம் ஒருநாள் காலை படுக்கையைவிட்டு எழுந்திருக்கும் போதே, "இனிமேல் நீ நிம்மதியாக இருக்கலாம். நேற்று இரவு கட்டுரை எழுதி அனுப்பிவிட்டேன்" என்று கூறினார்.

"அனுப்பியாய்விட்டதா!" என்று ஆச்சரிய மிகுதியில் கத்தினேன் நான். "எப்படிச் செய்தீர்கள்? இரவு பன்னிரெண்டு மணிக்கு நான் காரியாலயத்தை விட்டுச் சென்றபோது, நீங்கள்தான் அச்சு யந்திரங்களுக் கடியில் தலையிலிருந்து கால் வரையில் எண்ணெய்க் கறையும் பசையுமாக இருந்தீர்களே" என்று மேலும் கேட்டேன்.

"நான் என் கைகளைக் கழுவிக்கொண்டேன் முதலில். பிறகு டைப்ரைட்டர் எதிரில் உட்கார்ந்தேன். புகைக் குழாயைக்கூடப் பற்ற வைக்கவில்லை. ஒன்றரை மணி நேரத்திற்குப் பின் நான் எழுந்திருந்தேன். டைப்ரைட்டரிலிருந்து வெளிவந்ததை ஒரு கவரில் போட்டு ஒட்டினேன். தபால் பில்லை ஒட்டி, வீட்டுக்கு வரும் வழியில் தபாலாபீசில் போட்டுவிட்டு வீடு வந்தேன். பிறகு ஸ்நானம் செய்தேன்" என்று அவர் இளித்தார்.

"என்ன, மறுபடியும் படிக்கக்கூட இல்லையா? டைப் பிழைகள், எழுத்துப் பிழைகளைத் திருத்தக்கூட இல்லையா?" என்றேன்.

"ஏன் கவலைப்படவேண்டும்? 'சனிக்கிழமை போஸ்ட்' (Saturday Evening Post) திருப்பி அனுப்பியதும் திருத்தினால் போகிறது" என்றார்.

இரண்டு நாட்களுக்குப் பின் மற்றொரு நெருக்கடி அச்சகத்தில். வழக்கம்போல பாப் மிஷினுக்கடியில் ஏதோ சரி பார்த்துக்கொண்டிருந்தார். அப்போதுதான் தபாற்காரன் கொடுத்துப்போன தபால்களை ஒவ்வொன்றாய்த் தள்ளிக்கொண்டே யிருந்தேன். 'சாட்டர்டே ஈவினிங் போஸ்ட்' என்று இடது பக்கத்து ஓரத்தில் அச்சிட்ட ஒரு கவர் என் கண்ணில் பட்டது. அதைத் தனித்து எடுத்தேன். அதை உற்று நோக்கினேன். சிறிய கவர்தான். கட்டுரை திரும்பி வரவேண்டுமென்றால், அந்தச் சிறிய கவருக்குள் அது இருக்காது.

"பாப்" என்று கத்திக்கொண்டே ஆபீசிலிருந்து அச்சகத்தை நோக்கி ஓடினேன்.

"இப்போது என்ன நடந்துவிட்டது?" என்று மிஷினுக்குப் பின்னாலிருந்தபடியே கேட்டார்.

"போஸ்டிலிருந்து கடிதம் வந்திருக்கிறது; பிரித்துப் படி" என்றேன்.

"இங்கிருந்துகொண்டா? முடியாது. நீயே திறந்து படி" என்றார் பாப். நான் கடிதத்தைக் கையிலேயே வைத்துக்கொண்டு தயங்கி நின்றதைக் கண்டு, "ஏன், என்ன சமாச்சாரம்? கவருக்குள்ளிருந்து புகை வரும் என்று எண்ணமா? படி" என்று மிஷின் உருளைகளின் கீழ் இருந்தவாறே கூறினார்.

விரல்கள் நடுங்க நான் கவரைக் கிழித்தெறிந்தேன். படித்தேன். என் கண்களையே நம்பவில்லை. சுருக்கமாக, ஒரு குறிப்பு இருந்தது. 'காலம் சம்பளம்' இலாகாவின் விஜயத்தைப் பற்றி பாப் எழுதி

யனுப்பிய கட்டுரையை அங்கீகரிக்க போஸ்ட் தீர்மானித்துள்ளது என்றும், அடுத்த தபாலில் அதற்குகந்த சன்மானத்திற்குச் செக்கு அனுப்பப்படும் என்றும் கண்டிருந்தது.

"அவர்கள் அதை விலைக்கே வாங்கிவிட்டார்கள்" என்று கத்தினேன். நான் போட்ட கூச்சலில் எல்லோரும் அச்சகத்திற்கு வந்துவிட்டார்கள்.

"என்ன?" என்று கேட்டார் பாப். குனிந்து வேலை பார்த்துக்கொண்டிருந்த அவர் நிமிர்ந்தபோது இரும்பு உருளையில் தலையை மோதிக்கொண்டார். ஒரு நிமிஷம் அந்த அதிர்ச்சியிலேயே இருந்தார். பிறகு அங்கிருந்து வெளியே வந்தபோதும், பசை தோய்ந்த கையாலேயே தலையைத் தடவிக்கொண்டிருந்தார். நாங்கள் அவரைச் சுற்றிச் சுற்றிச் சந்தோஷத்தினால் ஆடினோம். அந்த வாரக் கடைசியில், 'சாட்டர்டே ஈவினிங் போஸ்ட்'டின் கடாட்சத்தினால் வேலையாட்களுக்குச் சேரவேண்டிய சம்பளத்தைப் பட்டுவாடா செய்ய முடிந்தது.

"அரசாங்கப் பதுங்குக் கள்ளர்கள் என்னை வேவு பார்த்தனர்" என்னும் தலைப்புடன் பாப் எழுதிய தம்முடைய அனுபவங்களை 1950-ம் வருஷம் மார்ச்சு மாதம் 18-ந் தேதி இதழில் போஸ்ட் பத்திரிகை பிரசுரித்தது. அக்டோபர் மாதம் வெளிவந்த 'ரீடர்ஸ் டைஜெஸ்ட்' இந்தக் கட்டுரையை அச்சிட்டிருந்தது. எழுநூறு கடிதங்கள் உலகத்தின் பல பாகங்களிலிருந்து ஆசிரியருக்கு என்ற தலைப்புடன் குவிந்தன. எங்களுக்கே ஆச்சரியமாக இருந்தது. இவைகளில் முக்கால் பாகம் சிறிய பத்திரிகை ஆசிரியர்களிடமிருந்தும், வியாபாரிகளிடமிருந்தும், அமெரிக்காவில் ஒவ்வொரு பிராந்தியத்திலிருந்தும் வந்தன. தினசரிகளும், வாரப் பத்திரிகைகளும் இந்தக் கட்டுரை விஷயத்தைப் பற்றித்

தலையங்க வாயிலாக சர்ச்சை செய்தன. அரசாங்க நடவடிக்கையின் நன்மை தீமைகளைப் பற்றியும், சாதக பாதகங்களைப் பற்றியும் தேசம் முழுவதுமே விவாதிக்க முற்பட்டது.

எங்களுக்கென்னவோ உள்ளூர பயம்தான். பிலி டெல்பியாவுக்கு வரும்படி தாக்கீது அனுப்பி, குற்றங் கள் புரிந்ததற்குப் பதில் கூறுமாறு கூண்டிலேற்றி, சம்பளம் வழங்கப்படாமல் நின்றுபோன பாக்கிக்காக 744 88 டாலர்கள் கொடுத்தே ஆகவேண்டும். இதில் எங்களுக்குச் சேரவேண்டிய சம்பளம் மட்டும் 582 டாலர்கள் என்று தீர்ப்பும் கூறி எங்களுக்கு இன்னல் கள் மேலும் பல உண்டாகலாம். இவைகளின் பயம் ஒருபுற மிருந்தாலும், 'காலம் சம்பளம்' இலாகாவின் விஜயம் கடைசியில் நன்மையாகவே முடிந்தது. நூற்றுக்கணக்காக வந்த பாராட்டுக் கடிதங்கள் எங்க ளுக்குத் தைரியமளித்ததோடன்றி, பரந்த நோக்குடன் விஷயங்களை நோக்கும் பண்பையும் வளர்த்தது. இது தான் ஆர்க்கைவ் பத்திரிகையை எவ்வித இடையூறுகள் நேரிடினும் விடாது நடத்துவது என்ற உறுதியையும் இன்னல்களை எதிர்த்துச் சமாளிக்கும் சக்தியையும் அளித்தது.

* * *

எங்களுடைய பத்திரிகை வாழ்க்கையில் நாங்கள் இருவரும் தனித்து ஏக்கத்துடன் ஒருவர்க்கொருவர் ஆறுதல் சொல்லிக்கொள்ளும் சந்தர்ப்பங்கள் பல ஏற் படுவதுண்டு. இரவு நேரங் கழித்து ஆபீசிலேயே நானும் பாப்பும் எங்கள் டைப்ரைட்டர்களுக் கெதிரில் உட்கார்ந்திருப்போம். ஒரு பக்கம் பணம் பாக்கியுள்ள 'பில்'கள் குவிந்திருக்கும். மற்ருெரு பக்கம் பல கூட்டங்களின் நடவடிக்கைக் குறிப்புகள் அடுக்கி வைக் கப்பட்டிருக்கும். நடக்க விருக்கும் கழகக் கூட்டங்

களின் நிகழ்ச்சி நிரல்களும் நடந்தேறிய கூட்டங்களின் செயல் விவரங்களும் ஒரு குவியலிருக்கும். செய்தித் தாள்கள் ஒரு பக்கம் அடுக்காக இருக்கும். மூந்நூறு டாலர்கள் பெறுமான பிரசுரங்கள் அச்சடித்துப்போன ஒருவன் ஊரைவிட்டு எங்கோ காணுமல் போய்விட்டான் என்ற செய்தி வரும். அவரிடமிருந்து வரவேண்டிய பாக்கியை வசூல் செய்ய வகை ஒன்றும் இராது. விதைகள் 'கேட்லாக்' அச்சடித்துச் சென்ற ஜான் ஹிக்ஸ் என்பவர், தம் குழந்தை இளம்பிள்ளை வாதத்தினுல் ஆஸ்பத்திரியில் இருப்பதால், உடனே பணம் அனுப்பத் தாமதமாகும் என்று செய்தி சொல்லியனுப்புவார். மிஸ்டர் பீடர்ஸ் பாங்கிக்குப் பணம் அனுப்பியாகவேண்டும் என்று ஒரு துண்டுக் காகிதத்தில் குறித்து மேஜைமீது வைத்திருப்பார். ஸ்டீவுக்கு ஒரு ஜதை பூட்ஸ் வாங்கித் தருவதாகச் சொல்லியிருந்தது அப்போதுதான் கவனத்திற்கு வரும். மேஜையின்மீது இவ்வாறு பலதரப்பட்ட காகிதக் களேபரங்களுக்கிடையில், மேலே தொங்கிக்கொண்டிருந்த எலெக்ட்ரிக் 'பல்ப்'பின் மங்கிய வெளிச்சத்தில் நாங்கள் எங்களையே கேட்டுக்கொள்ளுவோம்: "எல்லாவற்றையும் உதறிவிட்டு மறுபடியும் பழையமாதிரி முதலிலிருந்து ஆரம்பிக்கலாமா?"—எங்கள் ஏக்கம் அவ்வளவு உச்ச நிலையை அடைந்திருக்கும்.

இந்தக் கேள்விக்கு விடை கூறத் தேவையில்லை. நியூயார்க் டைம்ஸ் பத்திரிகையில் ஆசிரியர் பதவி அளித்தாலும், அல்லது பெத்தல்ஹாம் ஸ்டீல் கம்பெனியின் நிர்வாகத் தலைவர் பதவியை அளித்தாலும், நானுவது பாப்பாவது எங்கள் ஆர்க்கைவ் பத்திரிகை ஆசிரியர்கள் பதவியைத் துறக்கத் தயாராக இல்லை. காலஞ்சென்ற அடால்ப் அக்ஸ் (Adolph Ochs) ஒரு சமயம "வாழ்க்கையில் வெற்றி யடைய வேண்டுமானல் மிகவும் சாதாரண குணங்களைக் கடைப்பிடித்துச்

செயல் புரிவதனுல்தான் முடியும். கடுமையான உழைப்பு, புத்திசாலித்தனம், ஊக்கம், தன்னம்பிக்கை, கடைசியாக உண்மை இதுபோன்ற சாமானிய குணங்கள்தான் வேண்டும்'' என்று எழுதியிருந்தார். தம்முடைய பத்திரிகை வாழ்க்கையைப் பற்றி எழுதுகையில் H. L. மென்க்கன் (H. L. Mencken) ''எனக்கு எப்போதுமே தூங்குவதற்குப் போதிய அவகாசம் இருப்பதாகக் கவனமில்லை'' என்று குறிப்பிடுகிருர். ஜோஸப் புலிட்ஸர் (Joseph Pulitzer) பிரசித்தி பெற்ற அவருடைய இலக்கிய வாழ்க்கையைத் தொடங்கும்போது, காலை 10 மணியிலிருந்து மறுநாள் காலை 2 மணி வரையில் வழக்கமாகவே வேலை செய்வாராம்.

ஆமாம், அவ்வித சலியா உழைப்புக்குப் பலன் கிடைக்கிறது; திருப்தி ஏற்படுகிறது. அவைகள் எதிர்பார்க்காத இடங்களிலிருந்து எதிர்பார்க்காத சமயங்களில் கிடைக்கலாம். பெயர் தெரியாத ஒரு வாசகரிடமிருந்து ஒரு தலையங்கத்தைப் பாராட்டி ஒரு கடிதம் வரும். வறுமையில் வாடும் ஒரு குடும்பத்திலிருந்து ஆர்க்கைவ் பத்திரிகை எடுத்துக்கொண்ட முயற்சியின் விளைவாகத் தங்களுக்கு உணவும் நிழலும் கிடைத்ததற்கு நன்றி தெரிவித்து ஒரு கடிதம் வரலாம். வீட்டில் நச்சரிக்கும் மனைவியிடமிருந்து தற்காலிகமாகச் சாந்தியைக் கோரி ஒருவர் ஆர்க்கைவ் ஆபீசில் சில நாழிகையாவது நிம்மதியாக கழிக்கலாம் என்று வரலாம். அடுத்த வீட்டு நண்பர் தம் வீட்டில் செய்த ருசிகரமான பலகாரத்தை நம்முடன் பகிர்ந்துகொள்ள அன்புடன் தட்டிலேந்தி அதைக் கொண்டு வரலாம். அல்லது அருகாமையிலுள்ள பழத் தோட்டக்காரர் தம் தோட்டத்தில் விளைந்ததென்று ஒரு கூடை ஆப்பிள் பழங்களை ஆபீசில் அன்பின் அடையாளமாக வீட்டுப் போகலாம். பத்து வயதுச் சிறுவன் பக்கத்து வீட்டுப்

பங்களாவில் கூலிக்குப் புல்வெளி சீர்திருத்தி, அந்தப் பணத்தைக் கொண்டு வீட்டோடு இருந்த தன் தாயாருக்கு ஆர்க்கைவ் பத்திரிகை ஒரு வருஷ சந்தாத் தொகை செலுத்தினுன் என்ற செய்தி வரலாம். அதுவே உள்ளங் குளிரச் செய்யும். இவைகள்தான் இந்தத் தொழிலில் கிடைக்கும் திருப்தி.

ஒரு சமயம் பாப் வாரக்கணக்கில் பள்ளத்தில் அச்சு யந்திரத்தடியில் வேலை செய்துவிட்டு வெளியே வந்து, "இப்போது ஸ்விட்ச்சைப் போட்டு மிஷினை ஓட்டுங்கள்" என்று சொல்லி ஸ்விட்ச்சைப் போட்டதும், சத்தமேயில்லாது எல்லாம் அசையாமலிருந்தது. நாங்களெல்லோரும் சிரித்தோம். அந்தச் சமயம் பார்த்துத்தான் மின்சாரம் நின்றிருந்தது. பாப்பின் மனநிலை அப்போது எப்படி இருந்திருக்கும என்று யூகித்துக்கொள்ள வேண்டுமே தவிர, விவரிக்க முடியாது. மற்ருெரு சமயம் இரவு காகிதம் மடிக்கும் சிறுவர்கள் வர்ணத் தண்ணீர் வைத்திருந்த ஒரு பெரிய வாளியில் தடுமாறி விழுந்து, உடம்பெல்லாம் சிவப்பும் பச்சையுமாகக் காட்சியளித்தனர். இதெல்லாம் ஏக்கத்தை அதிகமாக்கும் சம்பவம். மற்ருெரு சமயம் அச்சகம் சுறுசுறுப்புற்று, மிகுந்த ஓசையுடன் பத்திரிகையை வெகு அலட்சியமாக அச்சடித்து, மடித்து, தட்டித் தட்டி, "இதோ உனக்கு! இதோ உனக்கு!" என்று சொல்லிச் சொல்லி அனுப்புவதுபோல் வெளித் தள்ளும்போது, எங்களுக்கு இதயத்தில் மகிழ்ச்சி பொங்கும். கண் விழித்த பல இரவுகளுக்கும், ஓய்வில்லாத உழைப்புக்கும், பல சில்லறைத் தொந்தரவுகளுக்கும் இந்த முடிவு தான் நாங்கள் எதிர்ப்பார்த்தது. பத்திரிகை ஒழுங்காக வந்தது என்ருல், எங்கள் உழைப்புப் பலனடைந்தது; பலன் சித்தித்தது என்ற உணர்ச்சி எங்கள் மனத்தில் பொங்கும்.

எங்கள் உற்சாகம் குறையும்போதெல்லாம் பிஷர் ஏம்ஸ் (Fisher Ames) சொல்லியுள்ளதைக் கவனப் படுத்திக் கொள்ளுவேன். "அரசனுடைய ஆட்சி என்பது நல்ல நிலைமையிலிருக்கும் கப்பல் தன் எல்லாப் பாய்களையும் விரித்துக் கடலில் உல்லாசமாகப் போவதை ஒத்தது. அது கடலில் அசைந்து அசைந்து போகும் காட்சியே உன்னதமாக விளங்கும். எங்காவது ஒரு பாறையில் மோதிவிட்டால் கப்பல் உடைந்து மூழ்கிவிடும். குடியாட்சி என்பது ஒரு கட்டுமரத்தைப் போல. அது ஒருபோதும் கடலில் மூழ்காது. ஆனால், சனியன்பிடித்த அந்தக் கட்டுமரத்தில் உனது பாதங்கள் எப்போதும் தண்ணீருக்குள்ளேதான் இருக்கும்."

கிராமாந்திர வாரப் பத்திரிகையிலோ, கட்டுமரத்தைப் போல எனது பாதங்கள் எப்போதும் தண்ணீரில்தானிருந்தன. பல சமயங்களில் தண்ணீர் சூடாகவே தான் இருக்கும். ஆனாலும், நாங்கள் இன்னமும் மூழ்கவில்லை.

UNIVERSITY EXTENSION LIBRARY
18 OCT 1963
★ MADURAI ★

ஆனால், என்னுடைய அப்போதிருந்த உடல்நிலை எனக்கு உதவியிருக்கவேண்டும். இப்போது யோசித்துப் பார்த்தால், எனக்கு விளம்பரம் கொடுத்த பலர் என்னை எப்படியாவது அவர்கள் கடையைவிட்டு வெளியேற்றினால் போதும் என்றுதான் கொடுத்திருக்கவேண்டும் என நினைக்கிறேன். நிழலில் வெப்பம் 90 டிகிரி. கடை முதலாளியோ சிப்பந்தியோ ஒருவரும் மருத்துவம் பார்க்கத் தயாராக இல்லை.

மறுநாள் காலை பூராவும் அச்சகத்தில் கழிக்க வேண்டிய நாள். ஸடீவை என் மாமியாரின் பாதுகாப்பில் விட்டுவிட்டேன். படுக்கையி லிருந்தபடியே பாப் முனகிக்கொண்டே யிருந்தார். "நகரபரிபாலன சபைக் கூட்டத்தை மறந்துவிடாதே. வெளிநாட்டுப் போர்வீரர்கள் சங்கம், ரோட்டரி சங்கம், மாதர் சங்கம் ஒன்றையும் மறவாதே!"— இடையிடையே தன் நெற்றியை அழுத்திக்கொண்டார். "நீங்கள் எல்லாவற்றையும் இன்று கதம்பமாக அடித்துவிடப் போகிறீர்கள்!"

"எந்தத் தனி மனிதனும் அத்தியாவசியமானவனல்ல" என்று அவர் விட்டதைப் பூர்த்தி செய்துவிட்டு, அந்த இடத்தைவிட்டுக் கதவுப் பக்கம் ஓடினேன்.

அன்றிரவு நெடுநேரத்திற்குப் பின் பத்திரிகையெல்லாம் அச்சில் ஏறியதும், என் வேலை கொஞ்சம் ஓய்ந்தது. டௌனிங்டனுக்கும் ஹனிப்ருக்குக்கும், அங்கிருந்து யூனியன் வில்லாவுக்கும், மறுபடியும் ஹனிப்ருக்குக்குமாக கைப்பிடியே இல்லாத சைக்கிளில் ஒருவன் பறப்பதைப்போல் நாள் முழுவதும் ஓயாமல் போய்வரவேண்டி யிருந்தது. டௌனிங்டனில், கடைசி நடையில் கடைசி 'காப்பி', ஸ்டீவ், கடைசி நிமிஷச் செய்திகள் முதலியவற்றைச் சேகரித்துக்

முரமாக எழுந்தது. "ரத்தத்திற்குச் சிறப்பு எப்போதுமே உண்டு; டொமட்டோவிலும்கூட'' என்று அவள் தீர்ப்புக் கூறினாள். மற்றொரு சமயம் ஜப்பானிய மூட்டைப்பூச்சிகளின் குணாதிசயங்களைப்பற்றி வெளிக்கொணர்ந்து, தான் சொல்லியவற்றையெல்லாம் நிரூபித்துக் காட்டத் தொடங்கிவிட்டாள்.

காகிதம் மடிக்கும் வேலை தொடங்கியதும் பைத்தியக்கார ஆஸ்பத்திரியின் கதவைத் திறந்துவிட்ட மாதிரி அமளி தொடங்கும். அச்சாபீசின் மிஷின் சத்தத்திற்கு மேலோங்கி கேட்கவேண்டுமென்று. ரேடியோவை நன்றாகத் திறந்து வைப்பார்கள். இவ்வளவு ஓசைக்கும் மேலாக அத்தை பானின் தனிக் குரல் ஒலித்துக்கொண்டிருக்கும்.

அச்சாபீஸ் வேலை முடிந்ததும், சில வாண்டுப் பயல்கள் காகிதக் குவியல்களுக்கும் மிஷினுக்குமிடையில் சிக்கிக்கொள்ளுவார்கள். ரேடியோ எப்போதும் விவாதத்திற்கு ஒரு நிரந்தர காரணம். சிலர் சம்பிரதாய சங்கீதம்தான் வேண்டுமென்றால், சிலர் மாதாகோயில் சங்கீதம் கோருவர். பாப்புக்குச் செய்திகள் தான் முக்கியம். மற்றும் சிலருக்கு சில்லறை விஷயங்கள் ருசிக்கும். இவை யெல்லாம் அந்த இடத்திற்கு யார் முதலில் போய்ச் சேருகிறார்கள் என்பதைப் பொருத்தது. ஹனி ப்ருக்கி லிருந்த மற்ற சாமான்களைப் போலவே ரேடியாவும் மார்க்கோனியால் முதல் காலங்களில் செய்யப்பட்டது. ஒரு நாள் அதனுடைய எல்லா வால்வுகளும் எரிந்துபோய், அத்துடன் அது ஓய்வு பெற்றுக்கொண்டது. அதற்குப் பின் எங்களுடைய பேச்சு வார்த்தைகள்தான் எங்களை ரட்சித்து வந்தன. இடையிடையே சோளம், கடலைக் கொட்டை, அடைத் துண்டுகள், கேக் துண்டுகள் முதலியன உற்சாகம் குன்றாமல் பாதுகாத்தன.